213

-1-

(83 ...)

சதிபதிகளின் மர்மம்
அல்லது
மானிட ரகசிய சாஸ்திரம்

கோளம்பாக்கம்
அ. மதுரை முதலியாரவர்களால்
வெளியிடப்பட்டது.

ரிஜிஸ்டர்.
1925.

விலை ரூபா
1—0—0

உ

குகமயம்,

3

சதிபதிகளின் மர்மம்

அல்லது

ரிட ரகசிய சாஸ்திரம்.

1066
301.426

இது

செந்திருச் சென்னை

பாலகவி - பே. சூ. பாலராஜ பாஸ்கார்

அவர்களால் எழுதப்பட்டு,

கேளம்பாக்கம்

அ. மதுரை முதலியார் அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

ஷண்முகானந்த புத்தகசாலை

ந. 32, நைனியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன், மதராஸ்.

காபி ரைட்] 1925. [இதன் விலை ரூ. 1.

உ

வேலுமயிலுந் துணை.

முகவுரை. 4

பூமகள் மாண்பு பொலிந்து விளங்காநின்ற குணகடல், குமரி, குடகம், வேங்கடம் எனும் நாற்பால் எல்லை பரந்தவுலகிற் சிறந்து இலங்கும் ஓரறிவு முதல் ஐயறிவுள் ல்லுயிர்கட்கும் மேலாய பகுத்தறிவுள்ளதும், ஆறறிவால் பேரறிவுற்றுத் தெய்வ சம்பந்தமாயுள்ளதும் வீடு பேற்றை டியதுமான மானிடப் பிறவியைச் சிருட்டித்தாங்ஙனம் ன்னுக்குண்டான வித்தியாச விகற்பங்களைச் செவ்வனே த்தினன் எல்லாம் வல்ல பிரம்ம தேவன்.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்"

தெய்வப் புலவர் திருக்குறளின்படி, சபையறிந்தே வண்டுவ தணிபாதலான், முன்னோரால் வழங்கிவருகின்ற ஒழுக்கத்தினாலும், அறவற ஒழுக்கத்தினாலும் உண்டாகும் பொருள், இன்பம், வீடெனும் சதுர்வித புருடார்த்தங்களை ்கும் அரிய நூற்களின் வழியே தொகுத்தும், விரித்தும், சொல்லல் விளங்கவைத்தல்' என்ற அழகு புணர்ந்து நிற்ற

"அறந்தார்க்கும் அவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை"—என்றபடி,

பதிகளின் மர்மம்' அல்லது 'மானிட ரகஸ்ய சாஸ்திரம்' இந்நூற்கு மகுடந்தாலாயிற்று. இச்சிறு நூலினுள்ள புருஷ ம், மாது லக்ஷணம், குண லக்ஷணம், இன லக்ஷணம், மண ம், (ஜாதிவகை) வம்ஸ லக்ஷணம், சுகாநுபோகம், சதிபதி ம், கர்ப்ப லக்ஷணம், கலவிக் கிரமம், அமிர்த நிலை, அகத் , சித்திரக்கரணங்கள், ஒழுக்கம், குதுபலாபலன், கருப்பாசு ப்பஸ்திரீகள் சுகாதாரம், பிரசவம், சுவரக்ஷணை, சம்ஸாரபா தஸ்தானம், கலவியாரோகணம், விரகதாபம், காமதுட்டம், கமறுப்பு, தாதுவளர்ச்சி, ஆயுள்விருத்தி, சோகநிவர்த்தி, தேக நிலை, போகசத்துவநிலை, புணர்காலமறிதல், ஊடலாடல், கலி குணசாந்தமுள்ள புத்திரசந்தானம் உண்டாகுதல், மலடு தம் வகை, மலடுநீங்கும் வகை, ஆண் பெண் கரு உற்பத்தி, வாம், குதகப்பற்று, ஆண்மலடு, பெண்மலடு என்பதைப்பற்

றிய சந்தேகத் தெளிவு, சூதக வேறுபாடு, தகாத
வரும் கேடு, ஊழ்வினை சம்பந்தம், இகலோக வாழ்க்கை
தொடர்பு முதலான விஷயங்களை நிலைகண்ணாடியில் த
தைத் தெரிந்துகொள்ளுதற்போன்று எளிதிலறியக்கூடி
கின்றது.

இல்லறத்தில் ஒழுகும் ஒவ்வொருவரும் இதன் மு
புணர்ந்து வழுவாது நடப்பாராகில், நீடிய புத்திர ச
ஆனந்தமுற்று வாழ்வார்களென்பது திண்ணம். இல்லற
இன்பத்தையடைந்தாலன்றி, அவ்வின்பந் துன்பமாகக்
ஒளவை பிராட்டியாரும் "இல்லறமல்லது நல்லறமன்று'
வாய் மலர்ந்திருக்கின்றனர்.

தற்கால் புருஷர்களும் மாதுசிரோமணிகளும், வ
ரும் சம்ஸார விடயத்தில் மானிட இரகஸிய சுகபோக
ளைப் பெரும்பாலும் கவனியாதிருத்தலால், பற்பல
பீடிக்கப்பட்டு வருந்துவதை நோக்கியே இந்நூல் வ
தேன். ஆயினும் இவைபோன்ற பல நூற்களிருப்பினும்
வைக்கொண்டு வேறுபடுத்தி மானிட வகுப்பின் உத்தம
நிம ஜாதி, அதம ஜாதி, அதமர்தம ஜாதிகளின் இலக்ஷண
களைக் காட்டிய எட்டுவித காக்ஷிப்படங்களுடனும், ஸ்தி
சவகால விவரங்களையறிவிக்கும் கருப்பாசயச்சின்னங்கள்
பத்தி, சிசு ஜனன முதலான ஒன்பது காக்ஷிப்படங்களு
அமைக்கப்பட்டிருப்பதால் பிரசவ காலத்திலும், மற்றக்
வைத்தியர்களும், மருத்துவஸ்திரீகளும் இல்லாமலே
மருத்துவங்களைக் கற்பிக்கக்கூடிய கருவியா யிருக்கின்ற
யாவரும் முக்கியமாய் அநுபோகத்திலறிந் துணரக்கூடும்.

விவேகிகளிதனை அற்பமாக எண்ணுமல் மானிட ஒ
ஷியமென்றே மதித்து, மலிந்து கிடக்கும் குற்றங்களை
பறவையானது நீரையப்புறப்படுத்தி பாலைப்பருகுவதுபோ
நுண்ணிய பொருளைக் கண்ணியமாக எடுத்தாளுவதும்,
புடைய மனையகங்களிக்கவும், புத்தி சாதுரியமடைந்து பு
ளம் பெருகி இறைவனின் திருவருளால் இகபர சுகானந்
யடைவார்களாக என்றும் மனஸாந்தியடைகின்றேன்.

முதலில் வசந்தனும், சுலோசனைவும் சந்தவனத்தில் சம்பா
அழகிய ஆப்டோன் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பாலகவி. பே-சு. பாலராஜ பாஸ்

எருக்கர்

சிங்கார நந்தவனம் : சுசீலாசனுடை வசந்தனைச் சம்பாஷித்தல்.

சரஹணபவாயநம:

சதிபதிகளின் மர்மம்

அல்லது

மானிட ரகஸ்ய சாஸ்திரம்.

தெய்வ வழிபாடு.

அறுசீர் விருத்தம்.

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணீர்மா முனிவர்சித்த
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிர்போற்
கலந்தெந் நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம்.

வேறு.

அறுசீர் சந்த விருத்தம்.

பூமிசை மக்கட் பொருந்திய வின்ப புலவிய ருங்கணையான்
தாமிசை யன்பின் தலைவனைக் கட்டித் தழுவிசு கிக்குமதி
யாமிசை சந்த மிளிர்மனத் தில்லத் தனுபவங் கொண்டிடவே
தோமிசை யின்றி மறுதரு மத்தின் துறையிவைக் கண்டுணரே.

நூல் வரலாறு.

பூவார்ந்த திருமாலின் அருமைப்புதல்வனாகிய அனங்கன் தன் முழுபலத்தையும் திரிலோகங்களிலும் செலுத்தக்கூடிய இளவேனிற் காலத்து மன்மதகோலாகலமாக உலகத்தார் தங்களுக்குண்டாகிய வியர்வையைத் தீர்க்கும் தென்றற்காற்றுந் தனக்குமொரு இளந்தென் றற்றேடவும், மிகுந்த நன்மைபயக்கும் குளிர்ச்சிபொருந்திய விருஷுக்

களோடுள்ள சோலைகளும்தனக்குமொரு சோலைதேடவும், பிரிந்தகாத
லர்களுக்கு இனியவேட்கையை உதிக்கச்செய்யும் சந்திரனும் தனக்கு
மொரு திங்கள் தேடவும், மாமரங்கள் துளிர்க்கவும் பலா காஞ்சி
குங்குமம் செருந்தி காயா முதலான மரங்கள் மலரா நிற்கவுமாகிய
வசந்த தருவிலே காரிருளை ஒழித்து நின்றொளியை பரப்பி இவ்வ
ளவு காலமும் கீழ்த்திசைப் பாவையைக்கூடி யன்னவளுக்குச் சுகத்
தைக் கொடுத்துக்கொண்டிருந்தாயென்று மேற்றிசை மாதானவள்
கொதித்துப்பிணங்கி சினங்கொண்டு செம்பஞ்சூட்டப்பெற்ற தன்
பாதங்களைக்கொண்டு உதைக்கப்பெற்றதுபோல் சூரியனது வடிவம்
சிவந்த நிறத்தை அடையவும், தடாகங்களில் பகலவன் பிரிவாற்றா
மைக்காகத் தாமரை மலர்கள் குவியவும், ஒருதலைக் காமமுடைய மக்
கள் தன்மனம் நைந்து அதியாத்திரத்துடன் கூறும் வசைமொழி
களைப் பெற்றுக்கொள்ள வரப்போகும் சந்திரன் வரவிற்காக அல்லி
முகைகள் மலர்கின்ற மாலைநேரத்தில் தன் பதிமாரிடத்தே பிணங்
கின மாதர்கள் ஆபரணங்கள் யாவற்றையும் கழற்றிவிட்டாற்போல,
முன்னே இலைகள் எல்லாமுதிர்ந்து, பின்பு மணந்த பெண்களைப்
போல் தழைத்துப் பிரிந்த மங்கையைப்போல பசந்து, விழிநீர் ஒழு
கின மிகக் காமமயக்கம்கொண்ட காரிகையைப்போல அலறுண்டாய்
விளங்கவும், தன் பூமான்மெலியத் தானும்மெலிந்து மனங்குழைந்து
வாடுகின்ற மகா பதிவிரதையைப்போல பாற்கரன் கிரணத்தாலே
மரங்கள் தீயத் தாமும் தீய்ந்து பின்பு அந்த மரங்கள் தழைக்க,
சூழ்ந்த செடி கொடிகளெல்லாம் தழைக்கவுமாயுள்ள எல்லா
மரங்களும் நெருங்கி அதனின் அடர்ந்த இலைகள்மேல் யௌவனமும்
பசும்பொன்மேனியுமான அதிக அழகுவாய்ந்த ஓர் அணங்கு ஆலிங்
கனம் செய்வதுபோல தென்றல் மெல்லென விழுந்து அசைக்க
அசைந்தும் உத்தம குலத்துச்சீமான்கள் செல்வம் குறைந்தகாலத்து
வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் தன்னிடத்து அதுசம
யம் எஞ்சியிருக்கப்பட்டதை மகிழ்ந்து கொடுப்பதுபோல செவ்
வந்தியும் மகிழமும் மலர்ந்து முதிர்ந்து வாடியும் காய்ந்தும் கிடக்கு
மத்தருவாயில் வண்டுகள் மொய்த்து தேனை நுகர்ந்து மயங்கிக்கிடக்க
வும் குயில்கள் பாடவும் கிளிகள் பேசவும் மயில்கள் நிர்த்தனம் செய்
யவும் வண்டுகள் ரீங்காரம் சப்திக்கவும் மற்றப்பறவைகள் அங்குமிங்
கும் ஓடிஉலாவவும் தென்றற் காற்றானது அழகுவாய்ந்த உய்யான
வனத்திலே அன்னம் நடப்பதுபோல மெல்லென நுழைந்து ஜில்
லென வீசி வாவிகளிலே புகுந்து தாமரை மலர்களெல்லாம் துழாவி

இருவாக்ஷி முல்லை மல்லிகைப் பந்தலிலே உலாவிப் பலபல வாசனைத் திரவியங்களையும் கொள்ளைகொண்டு சஞ்சாரம் செய்துவந்தன.

இப்பொழிலினிடத்தே தாமரையிலைகளால் நிறைந்து ஆங்காங்கு தாமரைச் சுருளும் இடையிடையே தாமரை மலரும் அன்னப் பறவைகளும் சக்ரவாகப்புள்ளும் தங்கள் பேடைகளுடன் விளையாடுவதும் அதற்கவைகள் பிணங்குவதும் ஊடல் தீர்ப்பதுமான நல்விளையாட்டினை விளையாடிக்கொண்டிருக்கும்படியான அவ்வளவு ரமணீகரமான வாவியின் அருகாமையில் அதியூர்ஜிதமான புஷ்பச்செடிகள் நாலுதிக்கிலும் அடர்ந்திருக்கவும் தன்மேற்புறத்தே மல்லிகையினலே அதிவினோதமாகப் பந்தல் போடப்பட்டிருக்கவும் இரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டிருக்கவும் பூரண சந்திரனுடைய கதிர்கள் அப்பந்தலின் புழைகளின்வழியால் பிரகாசித்தவண்ணமாகவுமுள்ள சந்திரகாந்த மேடையொன்று அமைக்கப்பட்டிருந்தன.

மணந்த சதிபதிகளுக்கு குதூகலத்தை உண்டாக்கக்கூடிய அம்மேடையினின்று சற்றுதூரத்திலுள்ள வாவியின் ஓர் பக்கத்திலும் நீண்டு படிபடியாக பளபளப்போடுங்கூடிய மிருதுவான கூந்தலும், பூரண சந்திரனைப்போன்ற வதனமும், வெண்ணிறமமைந்து அகிழுப நெற்றியும், பிறைபோன்ற புருவமும், கரிவண்டுகளையொத்துச் சற்றுப் பெரிதாயுள்ளதும் மீன் கண்களைப்போல் மருண்ட பார்வையுடையதுமான கண்களும், வள்ளைத்தண்டுபோன்ற செவியும், புறத்தேயிருக்கும் வஸ்துவை தன்னகத்தே காட்டும் அவ்வளவு தேஜசுடைய கபோலமும், குமிழம்பூவைப்போன்ற நாசியும்; நோக்கிய தக்ஷணமே பறித்துச்சாப்பிட விழைவுறும் சிவந்த கோவைப் பழம்போன்ற இதழும், முத்துக்கள் ஒன்றோடொன்று நெருங்கியதைப்போன்ற வெண்ணிறம்வாய்ந்த பற்களும், மூங்கிலைப் பழித்த தோள்களும், தாமரை யரும்பையொத்த தனங்களும், நூலிழைபோன்ற இடையும், பாம்பின்படத்தைப்போன்ற குறியும், வாழைத்தண்டைப்போன்ற குளிர்ச்சிபொருந்திய தொடையும், மாந்துளிரைப்போன்ற பாதமுமுள்ள ஓர் யௌவனமங்கை தான் அணிய வேண்டிய ஆடையாபரணதிகளைச் செவ்வையாய் அணிந்துகொண்டும், தன் அழகுக்கும் வயதிற்கும் படிப்பிற்கும் ஆடையாபரணதிகளுக்கும் சிறிதேனும் குறைவுபடாமலும் மாறுபடாமலும் தனக்கு வந்த புருடனுடன் வீணை வாசித்தவண்ணமாகவும், நிதானமாகவும், ஒய்யாரமாகவும், தாமரையோடு தாமரைசேருவதைப்போல் தன் பத்

தாவின் பரந்த புயத்தின்மீது அடிக்கடி உராய்ந்தவண்ணமாக அன்னம் நடப்பதுபோல் நடந்து சோலையில் தங்களுக்குப் பிரியமான இடங்களிலெல்லாம் சென்று உலாவி மனதை ரம்மிக்கச் செய்யும் சில புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு அம்மேடையின்கண்ணே வந்து அம்மாதிடத்திலிருந்த புஷ்பங்களைச் சந்திரகாந்த கற்களால் நிருமிக்கப்பட்ட அம்மேடையின் இரத்தினகம்பளத்தின்மேல் வருஷித்தும் அவ்வாடவன் கொணர்ந்த மலர்களைத் தன் பிரிய காதலிக்குச்சூட்டி ஒய்யாரமாக அமர்ந்தார்கள்.

இப்படி அமர்ந்த விருவரும் சிறிதுநேரம் வீணை வாசித்துவிட்டுப் பக்கத்தில் வைத்துச் சற்றுநேரம் மௌனமாக இருந்து பிறகு வீட்டிலிருந்து புறப்பட்டதுமுதல் சந்திரகாந்த மேடையில் வந்து உட்கார்ந்தவரையில் தான் இடையில் கண்ட பலபல காக்ஷிகளும் தன் தேகம் புளகாங்கிதம் ஆகும்படியாய் மனையாட்டி வாய்ந்ததும் செவிக்கின்பமாயும் மிக்க வேட்கையை மென்மேலும் உதிக்கச்செய்யக்கூடியதுமான வீணை வாசித்ததும் தாங்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் புட்பங்களின் நறுமணம் கமகமவென்று வீசவும் தன் மனையாட்டி மருங்கே புட்பங்கள் நிறைந்த இரத்தினக்கம்பளத்தின் மேல் அமர்ந்திருப்பதும் கண்டு, இவைகள் யாவும் நினைவோ அல்லது கனவோ என்று ஐயுற்றுத்திகைத்து இவைகள் யாவும் உண்மைதான் என சித்தந் தெளிந்து பின்சந்தோஷமுடையவனாய் இக்காலத்தன்றோ நாம் அனுபவிக்கவேண்டிய லீலைகளையும் அனுபவித்தல் வேண்டுமென மனந்தேர்ந்து "மாதர்க்கினிமை" என்றபடி இனிமையாகவும் மிகவும் நிதானமாகவும் சாந்தமாகவும் கற்பினும் அழகினும் முதன்மைவாய்ந்த காதலியுடன் வசனிக்க ஆரம்பித்தான் வசந்தன்.

வசந்தன்:—என் பிரியத்திற்கு மாறுபடாத கற்பினில் மேம்பட்ட சுலோசனா! நாமிருவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டதுமுதல் இந்த மேடையில்வந்து உட்கார்ந்தது வரையில் யான் கண்ட காக்ஷிகளினாலும், புஷ்பங்களின் அழகிய வாசனைகளை முகர்ந்ததினாலும், என்னை மகிழச்செய்த உந்தன் வதனம்புய வர்ணனையாலும் என் பஞ்சேந்திரியங்கள் தடுமாறி தன்னிலை மயங்கி இன்பசாகரத்தில் மூழ்கச் செய்தது இதையல்லவோ மாரனின்பமென்று மொழியத்தகும். இக்காலத்தன்றோ மகிழ மாலையைத் தரித்த மன்மதன் கணையாகிய தாமரை, மாமலர், அசோகு, முல்லை, நீலோற்பலம் ஆகிய ஐந்தும் முறையே நினைப்பூட்டவும்,

பசலையுண்டாக்கவும், உணவுநீக்கவும், படுக்கையிடவும், கொல்லத்தருவனவுமாய்ச் சோகத்தை யுண்டுபண்ணவும் அச்சோகத்தைத் தணிப்பது ரதியின்பமல்லவோ? இனி என்னதாமதம் என்று நாக்குழிறிக்கொண்டு குறிப்பாகக் கேட்டான்.

வசந்தகாலம்:—சந்திரகாந்த மேடையில் சல்லாபத்துடன் சுலோசனையெனும் காதலியும், வசந்தனும் சம்பாஷித்தல்.

சுலோசனை:—சமயமறிந்து பூரண சுகத்தைத் தந்தருளும் நாதா! அடியேன் நெடுநாளாய்த் தங்களிடத்தில் சில சங்கதிகள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதாக விருந்தேன்; அவ்விடயம் இப்போது கவனத்திற்கு வந்துளது; இடமும் வசதியாக விருக்கிறபடியால் தங்கள் உத்தரவு பெறுவதாகக் கேட்கின்றேன் என்று குயிலினும் இனிய குரலினால் கேட்டாள்.

வசந்தன்:—எந்தெந்த காலங்களில் எதை யெதை கேட்கலாம் என்ற சமயோசித புத்திவாய்ந்த என் அருமைக் காதலீ! யானோ அதிகவிரகதாபங்கொண்டு உன் சம்மதத்தை எதிர்ப்பாராதவண்ணமாக இருக்கும் இக்காலத்தில்தானோ? நீயும் நெடுநாளாய்க் கேட்கலாமென்று சேமித்துவைத்திருந்த கேள்வியை, இடவசதியைக் கருதி என்மனப் பான்மையைக் கவனியாது கேட்க ஆரம்பித்து விட்டாய். சற்று நிதானமாய் நிலைமையை யோசித்துப் பதில் கூறுவாயாக?

சுலோசனை:—மதனுக்கு நிகராகியும் பூவையர்க்கு மிக்கோனாகிய என் பிராணபதி! ஆடவருள் உயர்ந்தவனுடைய குணம் எப்படியிருக்கவேண்டுமெனின்? அழகுவாய்ந்த ஓர் யௌவன மாதைத் தனிமையாகக் கானகத்தே கண்டு அவள் அழகினில் மையல்கொண்டு நேத்திரானந்த மடைந்து சமீபம் நெருங்கி கரத்தைப்பற்றி புளகாங்கிதமுடன் உரோமஞ்சிலிர்ப்ப நெட்டுயிர்ப்பு விட்டு ஆனந்த மேலிட்டுத் தன் இருகரங்களால் அவளைத் தூக்கி அவள் அதரத்தில் இதழைப் பொருந்தவைத்து முத்தமிட எண்ணங்கொண்டு அவள் முகத்தைத் தன் வதனத்திடம் கொண்டுபோகும் தருவாயில் அவள் குமுதம்போன்ற தன் வாயைத்திறந்து வீரத்தனமுள்ள ஆண்மகனே! யான்

காரியார்த்தமாய் வெளியூருக்குப் போகும் இத்தருவாயில் இவ்வித அக்கிரமத்தைச் செய்வது உனக்கு நீதியா? தருமமா? கடவுளும் உன்னை நல்வழிப் படுத்துவாரா? என்று தன் மானத்தைக் காப்பாற்றப் பல நீதிமொழிகளைச் சொல்லக்கேட்டு, நாம் செய்யும் காரியம் அநியாயம் அதர்மம்; நல்வழிவிட்டுத் தீயவழி புகுகின்றோம் என அறிவு தெளிந்து ஞானமுதயமாகித் தான் கருதிய கெட்ட எண்ணத்தை அறவே ஒழித்து அவளை யாதொரு அவமானத்திற்கு முள்ளாக்காமல் அவளை விட்டு விலகி நிற்கின்றவன் எவனோ அவனே புருஷனில் உத்தமன் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன் காமவலையில் அகப்படாத யோகி என்றும் சொல்லலாம். ஆகையால், தாங்களும் இப்பேர்ப்பட்ட பெருமை வாய்ந்த குணங்களை மேற்கொண்டு நடப்பீர்களென்றும் நீங்கள் தற்போது அடைந்திருக்கும் மயக்கங்களைச் சிறிது நேரம் ஒருபுறத்தே ஒதுக்கிவைக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

வசந்தன்:—சமயோசித யுக்திசொல்லி சீர்திருத்தி நல்வழிக்குக் கொண்டுவரும் மந்திரி மதியுடையாளே! உன்னை மெச்சினேன் மெச்சினேன். ஆ என்ன யுக்தி! என்ன வாய்மை! என்ன ஒழுக்கம்! இவ்வளவும் யான் இத்தனை நாட்கள் உன்னுடன் பழகியும் கண்டறியாது போனதற்குக் கவல்கின்றேன். இருந்தாலுமென்ன, இனி தெரிந்துகொண்டே னல்லவா? நல்லாய்,

நீர் சொன்னபடியே யான் கொண்ட ஆசையின் மயக்கத்தினை அப்புறப்படுத்தி விட்டேன். இனி நீ கேட்கும் கேள்விகளுக்கு உத்தரம் கொடுக்கத்தயாரா யிருக்கின்றேன் கேட்பாயாக.

சுலோசனை:—பிராணபதி தங்கள் உத்திரவின்படி யான் நெடுநாளாய் ஐயுற்றிருந்த விடயத்தைக் கேட்க சமயம் வாய்த்ததற்கும், தாங்களும் தகுந்த பதில் சொல்லுவதாக நவின்றதற்கும், எல்லாம் வல்ல இறைவனை என் மனப்பூர்வமாக வணங்குகின்றேன்.

எவ்விடத்தும் பரிபூரணமாய் நிறைந்து அவன் தானாய், தான் அவனாய், அபேதனாய், சாமாதிகளுக்கு அதீதனாய், மலரகிதனாய் விளங்கும் மெஞ்ஞானிகளின் இருதய கமலங்களில் எழுந்தருளி இருப்பவனாய் விளங்கும் சர்வேசுரன் உலகத்தின்கண் சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்திநான்கு லக்ஷ ஜீவராசிகளினும் மேம்பட்ட பேதாபேதங்களை அடியாள் உணரும் வண்ணம் உரை செய்வீர்களாக?

மானிடர்களின் மேன்மை.

வசந்தன்:—பிராணசகி! புல் பூண்டு மரம் முதலியவைகள் பரிசத்தை அறியும் ஓர் அறிவுயிரும், சங்குமுதலியவைகள் பரிசத்தோடு சுவையறியும் ஈரறிவுயிரும், எறும்பு முதலியன பரிசம் சுவை இதனோடு கந்தத்தை யறியும் மூவறிவுயிரும், தும்பி முதலியன பரிசம் சுவை கந்தம் இதனோடு உருவத்தை யறியும் நாலறிவுயிரும், விலங்கு பறவை, முதலியன பரிசம் சுவை கந்தம் உருவம் இதனோடு சத்தத்தை அறியும் ஐயறிவுயிருமாகிய எண்பத்து மூன்று லக்ஷ ஜன்மங்களைப் பார்க்கிலும் மகா விசேஷமானதும் பகுத்தறிவுள்ளதாகவும் மானுபிமானம் இன்னதென்றும் இது நன்மை இதுதீமை என்றுணரும் ஆறு அறிவுடைய மக்களாகிய மானிட ஜென்மத்தையும் உண்டாக்கித் தன்னிலை பெயர்ந்து போகக்கூடியதைச் சரமென்று உயர்த்தியும் தன்னிலைபெயாராது இருந்த விடத்திலேயே யிருக்கும் அசையாப் பொருளை அசரமென்று தாழ்த்தியும் அண்டசம் சுவேதசம் உற்பீசம் சராயுசமாகிய நால்வகைத் தோற்ற பேதமும் தேவர், மனிதர், நீர்வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம் முதலான முற்கூறிய எழுவகைப் பிறவிகளில் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதமும் அமைத்து அவரவர்கள் வினைக்கீடாகப் பிறப்புவித்துப் பிராப்தத்தைப் புசிப்பிக்கச் செய்கின்றனர். இதுவும் தவிர, சரவஸ்துக்களுள்ளே ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் முதலிய வகைகளால் மேன்மையடைந்த மானிடருள் பூணூல் தரித்துத் திரிகாலமும் ஸ்நானஞ் செய்து பிக்ஷாகாரமுண்டு கௌபீனந்தரித்து கிருஷ்ணாசனந் தண்டம் என்பவற்றைத் தாங்கி சிவாக்கினி பூசைசெய்து வேதத்தியயனம் பண்ணிக் குடுமியோடு இருப்பவன் பிரமசாரி என்றும், பருவகாலத்திலே மனைவியைப் புலந்து ஒழிந்த காலங்களிலே கலந்து தெய்வம் தென்புலத்தோர், விருந்தினர், யாசகர், சன்னியாசி முதலியோரை உபசரித்து சுற்றத்தாரைச் சூழ்ந்து எவர்க்கும் கருணைப்பாலிப்பவன் கிரகஸ்தன் என்றும், சடாதாரியாய் வனவாசஞ்செய்து பாரியோடுகூடி அத்தியயனஞ்செய்து கந்தமூல ஆகார முண்டு திரிகாலமும் ஸ்நானஞ் செய்து வற்கலை யணிந்து வாழ்பவன் வானப்பிரஸ்தன் என்றும், திரிகாலமும் ஸ்நானஞ்செய்து கௌபீனதாரியாய் நிஷ்கள சிவத்தியானஞ் செய்து தண்டம் பஞ்சம்

சடை என்பவைகளையுடையவனும் அக்கினியையும் பாரியையும் விடுத்து பிக்ஷாகாரஞ்செய்து கோத்திரம் சந்தானம் என்பவற்றையும் சர்வ கர்மங்களையும் சுக சுகங்களையும் விடுத்து அபோச்சிய அன்னம் தவிர்த்து சிவயோகஞ்செய்து தேகாவசானத்திலே சாயுச்சியத்தை அடைய விரும்புபவனே சந்நியாசி என்றும் நான்கு ஆச்சிரமமாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இன்னமும் இம்மானிட வர்க்கத்திற்கு 96-தத்துவங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தத்துவம் 96-ன் விவரம்.

முதற்றத்துவம்	30
இரண்டாந்தத்துவம்	30
மூன்றுந்தத்துவம்	36
ஆக தத்துவம்	96

முதற்றத்துவம் 30-ன் விவர்ம்.

பூதம்	5	கன்மவிஷயம்	5
பொறி	5	கரணம்	4
புலன்	5	அறிவு	1
கன்மேந்திரியம்	5		

ஆ—30.

இரண்டாந்தத்துவம் 30-ன் விவரம்

நாடி	10	சயம்	5
வாயு	10	கோசம்	5

ஆ—30.

மூன்றுந் தத்துவம் 36-ன் விவரம்

ஆதாரம்	6	தோஷம்	3
மண்டலம்	3	ஏடணை	3
குணம்	3	வினை	2
ராகம்	8	அவஸ்தை	5
மலம்	3		

ஆ—36

வேறுவிதம்.

ஆன்மதத்துவம்	24	விகாரம்	8
நாடி	10	ஆதாரம்	6
அவத்தை	5	தாது	7
மலம்	3	வாயு	10
குணம்	3	கோசம்	5
மண்டலம்	3	வாயில்	9
பிணி	3		
		ஆ.	96

ஆன்ம தத்துவம் 24-ன் விவரம்.

பூதம்	5	கன்மேந்திரியம்	5
புலன்	5	கரணம்	4
ஞானேந்திரியம்	5		
		ஆ.	24

மற்றோர் விதம்.

வாசல்	9	ஆகாசம்	6
பொறி	10	மண்டலம்	3
புலன்	10	நாடி	10
வாயு	10	குணம்	3
தாது	7	மலம்	3
இராகம்	8	வியாதி	3
கோசம்	5		
கரணம்	4	ஆ.	96
அவத்தை	5		

மூதற்றத்துவம் 30-ம் வருமாறு.

விவரம்.

(1) பூதம் 5.

1. பிருதிவு = மண்
2. அப்பு = நீர்

3. தேயு=அக்கினி
4. வாயு=காற்று
5. ஆகாயம்=சுத்தவெளி

(2) பொறி (அல்லது ஞானேந்திரியம்)-5.

1. சோத்திரம்—செவி (ஆகாயத்திடமாய் நின்று சப்தத்தை அறியும்)
2. தொக்கு—சரீரம் (வாயுவினிடமாகநின்று பரிசத்தையறியும்)
3. சட்சு—கண் (தேயுவினிடமாகநின்று ரூபத்தையறியும்)
4. சிங்குவை—நாக்கு (அப்புவினிடமாய் நின்று இரசத்தை அறியும்)
5. ஆக்கிராணம்—மூக்கு (பிருதிவியினிடமாய் நின்று கந்தத்தை அறியும்)

(3) புலன்-5.

(இதை தன்மாத்திரை என்றுஞ் சொல்லுவர்)

1. சத்தம்—கேட்கப்பட்டது (செவிக்குயிர்க்கூறு)
2. பரிசம்—சுகதுக்கவறிவு (உடம்புக்குயிர்க்கூறு)
3. உருவம்—காணப்பட்டது (கண்ணுக்குயிர்க்கூறு)
4. இரஸம்—அறுசுவையறிவு (நாவுக்குயிர்க்கூறு)
5. கந்தம்—வாசனையறிவு (நாசிக்குயிர்க்கூறு)

(4) கன்மேந்திரியம்-5; கன்மவிஷயம்-5.

1. வாக்கு—வாய் (விஷயம் வசனம்-வார்த்தை ஆகாசத்தினிடமாய் நின்று வசனிக்கும்) வாய்க்குயிர்க்கூறு.
2. பாதம்—கால் (விஷயம் கமனம்—நடை வாயுவினிடமாய் நின்று நடக்கவியலும்) காலுக்குயிர்க்கூறு.
3. பாணி—கை (விஷயம் தானம்-கொடுத்தல், வாங்கல் தேயுவினிடமாய் நின்று இடல் ஏத்தல் முதலியன செய்யும்) கைக்குயிர்க்கூறு.
4. பாயுரு—அபானம் (விஷயம் விசர்ச்சனம்-விடுதல் அப்புவினிடமாய் நின்று ஜலமலாதிகளை வெளிப்படுத்தும்) அபானத்துக்குயிர்க்கூறு.
5. உபத்தம்—குறி (விஷயம், ஆனந்தம்-மகிழ்தல். பிருதிவினிடமாய் நின்று ஆனந்திக்கும்.) குறிக்குயிர்க்கூறு.

தன்மாத்திரை (புலனும், கன்மவிஷயமும்) ஒடுங்கும் விதம்.

1. சத்தம்—ஆகாசத்திலும், செவியிலும் ஒடுங்கும்.
2. பரிசம்—வாயுவிலும், உடம்பிலும் ஒடுங்கும்.
3. ரூபம்—தேயுவிலும், கண்ணிலும் ஒடுங்கும்.
4. ரசம்—நீரிலும், நாவிலும் ஒடுங்கும்.
5. கந்தம்—பிருதிவியிலும், மூக்கிலும் ஒடுங்கும்.
6. வசனம்—வாக்கிலும், ஆகாசத்திலும் ஒடுங்கும்.
7. கமனம்—வாயுவிலும், காலிலும் ஒடுங்கும்.
8. தானம்—தேயுவிலும், கையிலும் ஒடுங்கும்.
9. விசர்க்கம்—அப்புவிலும், அபானத்திலும், ஒடுங்கும்.
10. ஆநந்தம்—பிருதிவியிலும், குறியிலும் ஒடுங்கும்.

ஆக பூதம் பொறி புலன் கன்மேந்திரியம், கன்ம விஷயம் முதலிய 25-க்கு முள்ள விவரங்கள் முற்றுப்பெற்றது.

இவைகளை அதிக கூர்மையாகக் கவனித்து சிந்திக்கின், தெளிவாய் அறிவோம்.

(5) கரணம்-4.

1. மனம்—ஒன்றை நினைப்பது.
2. புத்தி—ஒன்றை விசாரிப்பது.
3. அகங்காரம்—ஒன்றைக்கொண்டெழுப்புவது.
4. சித்தம்—(மூன்றுக்கும்காரணமாய்) ஒன்றைச்செய்துமுடிப்பது.

(6) அறிவு-1.

1. அறிவு—உள்ளந்தன்னைக்கண்டு மகிழ்ந்திருத்தல்.

ஆக முதற்றத்துவம் 30-ம் முற்றிற்று.

இரண்டாந்தத்துவம் 30-ன் வரலாறு

(1) நாடி-10.

1. இடைகலை—வலதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல்போல மாறலாக இடது நாசியைப்பற்றி நிற்கும். இதுவே வாதநாடி 16 - அங்குல பிரமாணம் இதற்கு மாத்திரை ஒன்று.

2. பிங்கலை—இடதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறலாக வலது நாசியைப்பற்றிநிற்கும். இதுவே பித்தநாடி 12-அங்குல பிரமாணம். இதற்கு மாத்திரை அரை.

3. சுழிமுனை — மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லாநாடிக்கும் ஆதாரமாய் நடுநாடியாய்ச் சிரசளவு முட்டிநிற்கும். இரண்டுநாசியிலும் உபாயமாகப்பகிர்ந்து ஓடும் அக்கினி அலி எனப்படும். இதுவே சிலேத்துமநாடி இதற்கு மாத்திரை கால். இம்மூன்று நாடிகளும் முக்கியமாம்.

4. சிங்குவை அல்லது உசா= உண்ணாக்கிலேநின்று சோறு தண்ணீர் இவைகளை விழுங்கப்பண்ணும்.

5. புருடன் — வலதுகண்ணளவாய்நிற்கும்.

6. காந்தாரி — நாபியிற்றோன்றி சத்தமேழுக்கு மேழுநாடியாய்க் கண்டத்துறுவி இடது கண்ணளவாய் நிற்கும்.

7. அத்தி— வலது காதளவாய் நிற்கும்.

8. அலம்புடை— இடது காதளவாய் நிற்கும்.

9. சங்கினி— குறியினளவாய் நிற்கும்.

10. குரு — நாபியுறைந்து அபானத்தினளவாய் நிற்கும்.

இவைகளில் இடைகலை பிங்கலை சுழிமுனை இம்மூன்றும் மூலாதாரத்தைத் தொட்டு ஆறுதாரம் ஆறிலும் மண்டலம்மூன்றிலும் ஊடுருவி முட்டிநின்று இடைகலை பிங்கலை இரண்டும் சுழிமுனையிலே இணங்கி கத்தரிக்கோல்போல மாறி வீணாத்தண்டுக்கு வில்லுநாணிட்டாற்போல கபாலத்தை முட்டி நாசியளவு பற்றி நிற்கும்.

இம்மூன்றும் இப்படிநிற்க, காந்தாரியானது நாபிஸ்தானத்திற்றோன்றி எழுவகையாய்ப்பிரிந்து இச்சாசொரூபமாய்க் கண்டத்தைப் பற்றி நிற்கும். அத்தி, உசா இவ்விரண்டும் பத்துநாடியாய்ப்பிரிந்து கண்களிரண்டிலும் பற்றி நிற்கும்.

அலம்புடை-பன்னிரண்டு நாடியாகப் பிரிந்து ஜடத்திலுண்டாகிய எலும்பு, நரம்பு, உரோமம் இவைகளில் பரவிபாகமாறி வலது இடது செவிகளைப்பற்றி நிற்கும்.

குரு-நாபிஸ்தானத்தில் தோன்றி குதத்தைப்பற்றி நிற்கும்.

புருடன்-சங்கினி யென்னும்நாடிகள் நாபியில் தோன்றி குய்யத்தைப்பற்றி நிற்கும்.

(2) வாயு-10.		உபவாயு-4.
1. பிராணன்	6. நாகன்	1. வயிரன்
2. அபானன்	7. கூர்மன்	2. முக்கியன்
3. வியானன்	8. கிருகரன்	3. அந்தர்யாமி
4. உதானன்	9. தேவதத்தன்	4. பிரவஞ்சனன்
5. சமானன்	10. தனஞ்சயன்	

1. பிராணன் — லலாடமத்தியிற் றோன்றிச் சித்திரநாடியில் விழுந்து ஓவ்-வென்று மூலாதாரத்திற் குதித்து அவ்-என்று நாபித் தானத்தில் முட்டி சவ்-என்று இடைபிங்கலைகளிலோடி கபாலத்தைச் சுற்றி நாசியிற் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலங் கழன்று எட்டங்குலம் மீண்டு தானின்றவிடத்திற்குக்கி உத்தமதேகிக்கு நாழிகை ஒன்றுக்கு 360—சுவாஸமாகக் கொல்லன் துருத்திக்குட்காற் றேறுவதுபோல ஏறும். இப்படி ஏறுகின்ற சுவாஸமானது இராப்பக லாய் 60-நாழிகையுள்ள நாள் ஒன்றுக்கு 21600-சுவாஸ மாகின்றது. இப்படியிணங்கியவற்றுள் 7200-சுவாசம் வெளிப்பட்டுப் பாழாகப் பாய்ந்து 14400-சுவாசம் உள்ளே புகும்.

இதற்கு விவரம்.

பிராணவாயு வெளியேறி வரும்போது பிங்கலையென்னும் சூரிய கலைபாய்ந்தால் 12-அங்குல பிரமாண சுவாஸமும், இடைகலையென்னும் சந்திரகலைபாய்ந்தால் 16-அங்குல பிரமாண சுவாஸமு மாகும்.

1. மூலாதாரத்திற்கு (விநாயகரிடம்) சுவாஸம்	600
2. பிருதிவில்—சுவாதிஷ்டானம் (பிரமாவினிடம்) சுவாஸம்	6000
3. அப்புவில்—மணிபூரகம் (விஷ்ணுவினிடம்) சுவாஸம்	6000
4. தேயுவில்—அனாகதம் (உருத்திரனிடம்) சுவாஸம்	6000
5. வாயுவில்—விசுத்தி (மயேச்சுரனிடம்) சுவாஸம்	1000
6. ஆகாஸத்தில்—ஆக்ஞை (சதாசிவனிடம்) சுவாஸம்	1000
7. நாதாந்தத்தில்—(தட்சணாமூர்த்தியினிடம்) சுவாஸம்	1000
ஆக நாள் ஒன்றுக்கு சுவாஸம்	21600

1. பஞ்சபூதியம்-எந்தமனித தேகத்தில் தொழில் மிகாமலும் குறையாமலும் ஒன்றோடொன்று நெருங்காமலும் தினமும் தங்க ளுடைய யதாஸ்தானத்தில் இருந்து தங்கள் தொழில்களை நிறை வேற்றுகின்றனவோ? அந்தமனிதனுடைய தேகத்தில் இது சரிவர நடந்துவரும்.

2. அபானன்—குதத்தையுங் குய்யத்தையும் பற்றிநின்று மல சலாதிகளைக் கழிக்கும்.

3. வியானன்—தோளிலே நின்று பரிசங்களை அறிவிக்கும்.

4. உதானன்—உதராக்கினியை எழுப்பி உண்ட அன்ன சாரத்தை 27000 நாடிநரம்புகளிலே கலப்பித்துச் சரீரத்தை வளர்ப்பிக்கும்.

5. சமானன்—எல்லாவாயுவையும் ஏறுதல் குறைதல் செய்ய வொட்டாமற் சமனுய்க் கீழ்க்கொண்டியக்கும்.

6. நாகன்—விக்கலும் கக்கலும் முக்கலும் சோம்பலும் திமிரும் வீங்கலு முண்டாக்கும்.

7. கூர்மன்—நகைப்பும் முகலட்சணமும் புளகமும் மயிர்க்கூச்சலு முண்டாக்கிக் கண்களிலே நின்று இமைக்கும்.

8. கிரிகரன்—புருவமத்தியத்தைப்பற்றி நின்று தும்முவித்தலும் அழுவித்தலும் செய்யும்.

9. தேவதத்தன்—விழித்திருக்கும்போது ஓடுவித்தலும் உலாவுவிதலும் யுத்தம் பண்ணுவித்தலும் செய்விக்கும்.

10. தனஞ்சயன்—பிராணன் உடம்பைவிட்டுப் போனாலும் தான் பிரியாமல் நின்று உடம்பை வீங்குவித்தலும், இரத்தத்தைப் புளிப்பித்தலும் செய்து மூன்றுநாட் பரியந்தமிருந்து மூன்றும்நாள் கபாலத்தைப் பிளந்தோடிப்போகும்.

முற்றும் துறந்தும் யோகசாதனம் கைவல்லியமான மகரிஷிகள் மறுஜென்மம் வராதப்படிக்கு இத்தனஞ்சயனை முதலிலே கபாலத்தைப்பிளந்தோடச்செய்வார்கள். பிறகு வீங்கல், விரித்தல், புளித்தல் என்னும் விகாரத்திற்கு உட்படாமல் தேகம் வற்றிப்போகும்.

உபவாயுக்கள் 4-ன் விவரம்.

1. வயிரன்—காலெலும்புங் கதிரெலும்புங் கூடிய விடத்தில் நின்று உடம்பில் அவஸ்தை யுண்டாக்கி வாதம், ஈளை, இருமல் முதலான நோய்களையுண்டாக்கும்.

2. முக்கியன்—கையெலும்பு இரண்டும் கதிரெலும்பும் கூடியவிடத்திலேநின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்கநிறுத்தும்.

3. அந்தர்யாமி, 4. பிரவஞ்சனன்—பிரணவத்திற் கிருப்பிடமாயிருந்து சரீரத்திற்கு அடை ஆணியாகவும், அச்சாணியாகவுமிருக்கும்.

(3) சயங்கள் - 5.

1. அமர்வாசயம்—உண்ட அன்னசாரம் அமருமிடம்.
2. பகிர்வாசயம்—அன்னம் பருகுமிடம்.
3. சலவாசயம்—சலக்குழியிறங்குமிடம்.
4. மலவாசயம்—மலக்குழியிறங்குமிடம்.
5. சுக்கிலவாசயம்—சுக்கிலம்பிரியுமிடம்.

(4) கோசம் - 5.

1. அன்னமயகோசம்—சட்பாக விகாரமாகத் தோற்றப்பட்ட தூல தேகம்.
2. பிராணமயகோசம்—பிராணனுங் கன்மேந்திரியமுங் கூடிநிற்பது.
3. மனோமயகோசம்—மனதுங் கன்மேந்திரியமுங் கூடிநிற்பது.
4. விஞ்ஞானமயகோசம்—புத்தியும் ஞானேந்திரியமுங் கூடிநிற்பது.
5. ஆனந்தமயகோசம்—பிராணவாயுவும் சுழித்தியுங் கூடி நிற்பது.

ஆக இரண்டாந்தத்துவம் 30-ம் முற்றிற்று.

மூன்றுந்தத்துவம் 36-ன் வரலாறு.

(1) ஆதாரம் - 6.

1. மூலாதாரம்—நாற்சதுரத்துக் குள்ளே முக்கோணமா யிருப்பது. இதனடுவேநிற்கும் எழுத்து ஓங்காரம். இதில்நிற்குந்தேவதை விநாயகர். இடம்-குதம்.
2. சுவாதிஷ்டானம்—நாற்கோணமாயது. இதனடுவே நிற்கும் அக்ஷரம் நகாரம். இதில்நிற்கும் தேவதை பிர்மா. இடம்-குய்யம்.
3. மணிபூரகம்—பிறைகோணமாயது. இதனடுவேநிற்கும் எழுத்து மகாரம். அதிதேவதை விஷ்ணு. இடம்-நாபி.
4. அநாகதம்—முக்கோணமாயது. இதனடுவே நிற்கும் எழுத்து சிகாரம். அதிதேவதை உருத்திரன். இடம்-இதயம்.
5. விசுத்தி—அறுகோணமாயது. இதில் நிற்கும் எழுத்து வகாரம். அதிதேவதை மகேசுரன். இடம்-அடிநாக்கு.

6. ஆக்ஞை—வட்டமாயிருப்பது. இதனடுவேநிற்கும் எழுத்து யகாரம். அதிதேவதை சதாசிவன். இடம்-நெற்றி

இவ்விதமாக ஆதாரம் ஆறிலேயும் ஆறெழுத்தும், ஆறுதெய்வமும், ஆறுவீடும் கண்டுகொள்க.

(2) மண்டலம் - 3.

1. அக்கினிமண்டலம்—மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்கு மேல் நாற்சதுரமாய் நடுவே மூன்றுகோணமாய் பிருதிவியும் அப்புவுங் கூடியவிடத்தே நாலிதழுடைய புஷ்பமாயிருப்பது.

2. ஆதித்தமண்டலம்—உந்திக்கு நாலுவிரற்கடைக்குமேல் இருதய கமலம், அறுகோணம் எட்டிதழுடைய புஷ்பமாய் வாழைப்பூப்போன்று கீழ் நோக்கியிருப்பது.

3. சந்திரமண்டலம்—கோடி சந்திராதித்த ருதயம் ஆனாற்போலச் சிரசு நடுவே ஓவ்என்ற அட்சரத்தை முன்னிட்டு அமிர்தமேனோக்கி, அக்கினி கீழ்நோக்கிச் சரியாய் நிற்கும். இதற்கு நடுவில் பராசத்தி எழுந்தருளியிருப்பாள். ஆதலால், இதை அமிர்தகலையென்று சொல்லப்படும்.

(3) மலம் - 3.

1. ஆணவம்—உடம்பை நானென்றிருக்கை.
2. காமியம்—கண்டதுக்செல்லா மாசைப்படுதல்.
3. மாயை—தனக்குவருவதையறியாமற் கோபங்கொண்டிருக்கை.

(4) தோஷம் - 3.

1. வாதம்—வாயுவின் கோபம்.
2. பித்தம்—அக்கினியின் கோபம்.
3. சிலேத்துமம்—அப்புவின்கோபம்.

இந்த மூன்றுகோபத்தாற் சகலவியாதியும் உற்பத்தியாகின்றன.

(5) ஏடணை (ஆசை) - 3.

1. அர்த்தவேடணை—திரவியத்தைத்தேடி ஆசைப்படுதல்.
2. புத்திரவேடணை—புத்திரனைத்தேடி ஆசைப்படுதல், இதை ஒழித்து களத்திரவேடணை என்றுங் கூறுவதுண்டு.

8. உலக எடணை—நிலம், ஊர், காணி முதலியவைகளைத் தேடி ஆசைப்படுதல்.

(6) குணம் - 3.

1. சாத்துவிகம்—ஞானம், அருள், தவம், பொறை வாய்மை, மேன்மை, மோனம் ஐம்பொறியடக்கமென எட்டும் பொருந்தி உத்தமகுணமுடைய நல்லறிஞனாயிருத்தல்.

2. இராசதம்—மனம், ஊக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென எட்டும் பொருந்தியும், அகங்காரமாய் மத்திம குணத்தனாயிருத்தல்.

3. தாமதம்—பெருவுண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொலை இப்பதினொன்றும் பொருந்தி, அதமகுணத்தனாயிருத்தல்.

(7) இராகம் - 8.

1. காமம்—ஆசை.

2. குரோதம்—கோபம், அல்லது பிணக்கு.

3. உலோபம்—பிடிபாடு, அல்லது உள்ளதை யொளித்தல்.

4. மோகம்—பிரியம். அல்லது தானல்லாதார் மரித்தால் தான்மரித்தாற்போ லிருக்கை.

5. மதம்—கருவம், அல்லது தானதரும பரோபகாராதிகளை விலக்குதல்.

6. மாற்சரியம்—நன்றைக்கண்டு மகிழ்தல், அல்லது உறவாயும் உதட்டில் நகைப்புமாயிருந்து உட்பகை விளைவித்தல்.

7. இடம்பை—உதாசீனம், அல்லது தானே சர்வாதிகாரியென் றெண்ணி யாவரையு மிகழ்தல்.

8. அகங்காரம்—நானென்ற அற்பமதியின் ஞானத்தால் தன்குற்றங்களை அறியாமல் பிறர்சொல்லக்கேட்டுங் கோபித்தல்.

(8) வினை - 2.

1. நல்வினை—புண்ணியஞ்செய்தல்.
2. தீவினை—பாவஞ்செய்தல்.

(9) அவஸ்தை - 5.

1. சாக்கிரம்—லலாடத்தானம். இதில் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இப்பதினான்கு கருவிகளும், காவலர்களைப்போல் தன்னுடைய சந்நிதியிற் சேவிக்கத் தக்கதாகப் பராசத்தியருளால் இராசாவும் படையும்போல நிற்கும்.
2. சொற்பனம்—கண்டத்தானம். இதில் மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என நான்கும் கனவுகண்டு மறந்துவிட்டேனென ஒடுங்கி நிற்கும்.
3. சுழுத்தி—இருதயத்தானம். இதில் சித்தம், அகங்காரம், இவ்விரண்டும் மனம் புத்தியுடன்கலந்து ஒடுங்கி நிற்கும்.
4. துரியம்—நாபிக்கமலம், இதில் சித்தமொடுங்கி நிற்கும்.
5. துரியாதீதம்—குறிப்பிடம். இதில் அகங்காரமொடுங்கி நிற்கும்.

ஆக மூன்றுந்தத்துவம் 36-ம் முற்றுப்பெற்றது.

ஆக பிரிவு 8-க்கும் தத்துவங்கள் 96-ம் கூடிய இம்மானிடசரீரத்தினால் முத்தி என்னும் பேரின்பத்தை அடைய இயலுமாகையினாலும், இம்மானிடவகுப்பே சிறந்ததாக உடையதென்று அறிந்த விடயம்.

சுலோசனை—ஆருயிரிற்சிறந்த அருமைநேசா! தாங்கள் இதுபரியந்தம் சொல்லிவந்த ஜீவாத்மாக்களின் பேதா பேதங்களையும் அவைகளுள் உயர்வான 96 - தத்துவங்களைக்கூடி இரேகமான மானிடவகுப்பையும்; பிரமசாரி, இல்லறஸ்தன்; வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நால்வகை ஆச்சிரமத்தையும் கேட்டுப் பரவசமா

னேன். தற்காலம் எண்ணிறந்த சாதிபேதம் ஏற்பட்டு இருப்பதை யாரால் எக்காலத்தில் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பவை என்றதையும், இதில் எவ்வளவு உண்மை என்பதனையும், கடவுளால் வாய்க்கப்பட்ட சாதிபேதத்தையும் அடியாருக்குச் சங்கையற உபதேசிக்க வேண்டும்.

இறைவன் ஏற்படுத்திய ஜாதி.

வசந்தன்:—ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றும், குரங்கைப்போல அலையும் என்மனதைத் தன் குட்டியைத் தன்வழியேகவ்வி அழைத்துச்செல்லும் பூனையைப்போல் ஒருவழியில் பிரவேசிப்பதைத் தடுத்து உனதுகேள்விகளுக்கும் அதற்குத்தகுந்த பதிலளிப்பதிலும், நுழையச்செய்த என் புத்தியைக் கொள்ளை கொண்ட அருமைக்காதலி! நீகேட்ட கேள்விகளுக்கு மெச்சினேன். திராவிடதேசமாகிய இவ்விந்தியதேசத்திற்கு ஆரியர் வந்தபிறகு தங்களை மேன்மைப் படுத்துவதற்காக வேதபுராண இதிகாசங்களில் சூதுமார்க்கமான சில யுக்திகளைப் புகுப்பித்தும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என நான்கு வகுப்பாகப் பிரித்துத் தங்களைப் பிரம்மகுலமென்று உயர்த்தியும், மற்றவர்களுடைய சுபா சுப அலுவல்களுக்கு அன்னவர்களே வந்து நிறைவேற்றினல்தான் கடவுளுக்குப்பிரீதி என்றும், அவர்கள் பிரம்மாவினுடைய முகத்திலிருந்து உதித்தவர்கள் என்றும், அவர்களைக் காப்பாற்றுவதும் சிறப்பாக நடத்துவதும், மற்ற மூன்று வகுப்பாருடைய கடமையென்றும், பிராமணர்களுடைய சொற்படி நடப்பதும், அவரவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஏனைய தொழிலை நடத்தவேண்டுமென்றும் மற்றவர்களை முறைப்படி தாழ்த்தியும், வஞ்சித்தும், பிராமணருக்குள் திருட்டு, பொய், காமம், பொறாமை, கொலை முதலியவைக ளிருப்பினும் தோஷமல்லவென்று சொல்லித் தன்னினங்களைத் தாழ்த்திக்கொள்ளாமல் பிறசாதிகளும் தங்களை வணங்கும்படியான தந்திரங்களைச்செய்துவிட்டனர். இங்ஙனம் சொல்லியசாதியோ நிலையற்றது. தெய்வப்பிரீதி எப்படி எனின், பிரம்மகுலத்திற் பிறந்த வொருவன் கருமத்தால் வைசியனாகின்றான். ஆரியப்பார்ப்பனரால் சூத்திரர்

எனச்சொல்லும் உத்தமர், தொழில் வேறுபாட்டால் க்ஷத்திரியனாகின்றான். இதற்கு திருஷ்டாந்தம் சாத்திரங்களில் படிப்பதும் அனுபவத்தில் கண்டும் கேட்டு மிருக்கின்றோம். ஆதலின், மானிட ஆரியப் பார்ப்பனரால் ஏற்படுத்தப்பட்ட சாதியோ நிலையற்றது. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்தல் எனப்படும் அறுதொழிலையுந் தாங்களேசெய்யவேண்டுமென்றும், ஏனையோர்செய்தால், மகா கொடியபாவம் வந்துறுமென்றும் அதனால் சிறப்பு வாய்க்காது இழிவு வந்துவிடுமென்றும் புராணாதிகளை இவர்கள் சொல்ல அவர்கள் கேட்கின் கேட்ட தங்கள் செவிகளுக்கு ஈயத்தை உருகக்காய்ச்சி ஊற்ற வேண்டுமென்றும் சூத்திரர்கள் அவர்களுக்கு எக்காலத்தும் அடிமைத்தனமாகவே இருக்கவேண்டுமென்று அவர்கள் நினைப்பதற்கும் சாத்திரங்களில் தங்கள்கொள்கையை வரைகடந்து வரைந்து இருப்பதற்கு யாவத்திரானையும் சமமாக ஆளக்கூடிய ஈசன் இதற்கு எப்படி சம்பந்தப்படுவார்? உண்மையாகவும் உறுதியாகவும் உபாயமாகவும் எக்காலும் சம்மதப்படாரென்று உனக்குத் தெளிவாக தெரிகின்றதல்லவா? கடவுளால் அநாதியாக ஏற்படுத்தப்பட்டதும் நிலையுள்ளதும் மற்றொருவராலும் மாற்றக்கூடாததும் உண்மையாக உள்ளதும் குணங்களுக்கும் தேக உறுப்புகளுக்கும் தக்கவாறு அமைந்து இருக்கக்கூடிய சாதி என்று சொல்லப்படும் வகுப்பை இனி சொல்லப்போகின்றேன், மிகவும் கவனமாகவும் மனதை ஒருவழிப்படுத்தி இதே சிந்தனையாகக் கேட்பாயாக.

உத்தமம், மத்திமம், அதமம்; அதமாதமம் என நான்கு சாதியாப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை ஒவ்வொன்றாகவும் விபரமாகயும் சொல்லுகின்றேன்.

உத்தமஜாதி புருஷன் லக்ஷணம்.

உத்தமஜாதி புருஷனும், பத்மினிஜாதி பெண்ணும்.

செவ்வரி பரந்த கண்ணும், வெண்மைபொருந்தியும் நெருங்கியும் முத்துக்களைப்போன்ற சிறிய பல்லும், களங்கமில்லாத பூரணச் சந்திரனைப் போன்ற வதனமும், தாமரை மலரை யொத்த மிருதுவான கையும், பருத்து விளங்குகின்ற கழுத்தும், சத்தியவாக்கும், அருமையுள்ள அன்னத்தை அற்பமாகப் புசித்தலும், நல்லொழுக்கமும், அற்பபுணர்ச்சியும், தாமரை மலர்மணத்தைப்போன்ற கந்தத்தை

யுடையதாலும்; ஞானம், தவம், வாய்மை, மேன்மை, அருளுடைமை, ஐம்புலனடக்கல் என்னும் சாத்துவிக குணமும் பொருந்தியவனாக தாய், தந்தை, குரு, தெய்வம் முதலியோரிடத்து அத்தியந்தபிரீதியுடையவன், பகவத்தியான முடையவன், பரோபகாரமுடையவன், மானத்தையே ஆபரணமாகப் பூண்டவன் சுந்தரமான நல்ல ரூபமுடையவன் அதிக உயரமும் அதிககுட்டையும் இல்லாமல் நடுத்தரமுடையவன், உத்தம அளவுள்ள (குறுகிய) கோசமும் உடையவன் இப்படிப்பட்ட இலக்ஷணங்களமைந்தவன் முதற் சாதிப்புருஷன் என்றும், முயல் சாதி ஆடவன் என்றும் சொல்லப்படும்.

பத்மினிஜாதி பெண்ணின் லக்ஷணம்.

முதல் ஜாதி.—இயற்கையிலே மணமும், மேனியும், வளமையும், அழகும், பொருநதி சுருண்டு தரையிற்படவிழும் நெடிப்போடிருக்கின்ற கரியகூந்தலும், கொவ்வைக்கனிபோன்ற சிவந்த வாயும், கருமையாக மான்போலும் மருண்ட பார்வையுடைய நேத்திரங்களும், சிறிது மூக்குத்துவாரங்களுடைய எள்ளிளம்போன்ற நாசியும், தாமரைபொத்த பிடியானைப்போன்ற சாந்தமானநடையும், மின்னற்கொடிபோற்றுவளும் இடையும், பம்பரம்போன்ற தனமும், செவ்வியநிதம்பஸ்தானமும், கலவித்தொழிலில் அதிவிருப்பமின்மையும், மிகுந்த தெளிவும், தாமரைமலரையொத்த மணம்பொருந்திய தாதும், நறுமணம் வீசுகின்ற சரீரமும், யானைதுதிக்கைபோலுந் திரண்டும் வாழைத்தண்டைப்போன்ற தொடையும், கோபஞ்செய்பவரிடத்துப் பொறுமையும், அன்பினுலுதிக்கின்ற அரியகோபமும், கற்புடைமையும், தன்கணவனையன்றிப் பிறரிடத்து முகம்நோக்காதிருத்தலும், தன்கணவனுேடு பிணங்குதலும், நீண்டழகுபெற்று வலம்புரிச்சங்கம்போன்ற கழுத்தும், குதலைவார்த்தையும் அற்பபோசனமும், மணம்பொருந்திய சண்பகமலரையொத்தச் சிவந்த மேனியும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணமும், பதிவிரதையும், புன்னகையோடு சாந்தமும், இன்பந்தரும் பார்வையோடும் கூடிய சந்திரனைப்போன்ற வதனமும், அறுசுவையில் ஒன்றான மதுரமான பதார்த்தங்களின்மேலதிப்பிரியமும், வெண்மையான ஆடை ஆபரணம் மலர் முதலானதுகளில் பிரீதியும், குயிலினுமினிய குரலும், தெய்வ பக்தியிலும் சங்கீதப்பிரீதியும், சிறுத்து ஒடுங்கிய மெல்லிய தேகப்பான்மையும், மதசம்பந்தமான விஷயங்களைப்பேசப் பிரியமும், உயர்ந்த வைரமுதலிய ஆபரணங்களில் பிரியமும், குளிர்ந்த பானங்களில்

விருப்பமும், நல்ல வாசனையுள்ள புஷ்பங்களால் நிரம்பப்பெற்ற மஞ்சத்தில் நித்திரை கொள்பவளும், நடுத்தரமான வாசனை புனுகு சவ்வாது சந்தனம் பன்னீர் முதலானதுகளைச் சந்தோஷமாய் அணிந்துகொள்வதும் மஞ்சள், குங்குமம், விபூதி முதலியவற்றால் சிறப்பித்துக்கொள்ளும் மகிழ்ச்சியும், திருத்தீர்த்த ஸ்நானமுடிப்பதும், கூடுதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்களிலே விடியற்காலம் சேர மனமுடைய இலக்ஷணத்தையுடையவளை உத்தமசாதிப் பெண்ணென்றும், பத்மினிசாதிப்பெண்ணென்றும், முதல்வகுப்பென்றும் சொல்லப்படும்.

மத்திமஜாதி புருஷன் லக்ஷணம்.

மத்திமஜாதி புருஷனும், சித்தினிஜாதி பெண்ணும்.

அகன்ற நெற்றியும், உயர்ந்த தலையும், நீண்டு பருத்த புன்சிரிப்போடுகூடிய உதடும், தசைபருத்த செவியும், பருத்துவிளங்கிய கழுத்

னும், ஆமை முதுகுபோலுயர்ந்து வட்டமாயிருக்கின்ற வயிறும், ஸ்தூல சரீரமும், பருத்ததோளும், செவ்வரிபரந்தகண்களும், சிவந்த கையும், மதயானைப்போன்ற நடையும், மனிதரிடத்தில் பொறுமையும், மேகத்தைப்போல் பிரதிபலன் வேண்டாது கொடுக்குங் கொடையும், பாம்பு உறக்கமும், பசிதாளாமையும், சுண்ணாம்பு போன்ற துவர்காற்றமுடைய தாதும், சிலேத்தும சரீரமும், தானம், தவம், மெய்மை, தருமம்பேணல், ஞானம், கல்வி, கேள்வி முதலிய இராசத குணமும், விசாலமான மார்பும், வலிமையான தேகமும், கஷ்டப்படுபவன் மத்திம அளவுடைய கோசமும் உடைய இலக்ஷணங்களை வாய்ந்தவன்; இவனை இரண்டாம் சாதி புருஷன் என்றும், மான் சாதி ஆடவன் என்றும் சொல்லப்படும்.

சித்தினிஜாதி பெண்ணின் லக்ஷணம்.

குழிந்தும் உயர்ந்தும் இருக்கின்ற உச்சந்தலையும், தாமரைமலர்போல விளங்கி கோபதிருஷ்டியோடு மருண்டிருக்கும் விழியும், பருத்து மிகவும் நீண்ட மயிர்களையுடைய கூந்தலும், பருத்த நீண்ட முகமும், இடைவெளியாயிருக்கின்ற வெண்பல்லும், உயர்ந்து நீண்டிருக்கின்ற சிவந்த அதரமும், மூன்றுரேகைகளையுடைய கழுத்தும், வரையையிகர்த்த குவிந்த கொங்கையும், திரண்டதோளும், ஒடுங்கிய வயிறும், தாமரைமலர்போன்றகையும், தேர்த்தட்டுப்போன்று சிறிது விசாலப்பொருந்திய மருங்கிலும், பணைத்துத் திரண்ட தொடையும், அன்னமென்று சொல்லத்தக்க நடையும், ஆழ்ந்த சுழியினையுடைய உந்தியும், போசனத்திலும் நித்திரையிலும் மிதமான பிரியமும், தன்னைக்கூடும் நாயகரிடத்தில் நீங்காத சிந்தையும் புலால் நாற்றமுடைய மிகுந்ததாதும், சிந்தூரமூட்டி செம்பஞ்சினைபொத்து விளங்குகின்ற பாதமும், பசும்பொன்னிறத்தையுடைய பளபளப்பானதும் மிருதுவானதுமானசரீரமும், மை, சந்தன முதலிய வாசனைத்திரவியங்களில் அதிகப்பிரியமும், சிற்றின்பகதைகளிலபேக்ஷையும், ஆலிங்கனாதிகளில் மிகுந்த இஷ்டமும், நற்குண நடவடிக்கையுள்ள இராசத குணமும், அறுசுவைகளில் ஒன்றாகிய புளிப்புப் பதார்த்தங்களிலும் பலவித வஸ்தராபரணங்களிலும் வாசனாதிகளிலும் விருப்பமுள்ளவளும், பேராசையற்றவளும், அழகுவாய்ந்தவளும் இனிமையான பேச்சுகளிலும் சரசவார்த்தைகளிலும் மனதை மயக்கக்கூடிய கதைகளிலும் அதிகஆசையுள்ளவளும், தனக்குநேரான ஆடவரோடு உல்லாசமாயிருக்கும் பிரீதியுள்ளவளும், தன்மேல் ஆடவர் இச்சையுறும்படி

புன்னகை செய்பவளும், வாசனை வஸ்துக்களால் நிறையப்பட்டுள்ள இலவம்பஞ்சு மஞ்சத்தின்மேல் துயிலுறப் பிரியமுள்ளவளும், துவிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, அஷ்டமி, தசமி, துவாதசி முதலிய திதிகளில் இரவு முதற்சாமத்தில் கூடப்பிரியமுடையவளும், மத்திம அழகுடைய கடிதடமும் உடையவள். இவளை மத்திமசாதிபெண்ணென்றும், சித்தினிசாதி பெண்ணென்றும், இரண்டாம் வகுப்பென்றும் கழறுவர்.

அதமஜாதி புருஷன் லக்ஷணம்.

அதமஜாதி புருஷனும், சங்கினிஜாதி பெண்ணும்.

செவியும், முகமும், கழுத்தும், உதடும், பல்லும் ஆகிய இவைகள் சேர்த்து நீண்டிருத்தலும், மிருதுவும் நீண்டு கவிந்த தலைமயிரும், கபடத்தை யுடையமனமும், விரல்களும், நகங்களும், காலும் ஆகிய

இவைகள் அழகின்றி நீண்டிருக்குந் தன்மையும், அதிகவுறக்கமும், உருண்டு வட்டமாயிருக்கின்ற கண்களும், முடை (புலால்) நாற்றம் பொருந்திய மிகவும் பெருகுகின்ற தாதும், பேருண்டி, ஒடுங்கல் சோம்பு, பூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தனியாக்கோபம், வஞ்சகம், புலாலுண்ணல் முதலிய தாமதகுணமும், பெருந்திண்டி உண்பவனும், மாதர்களைக் கொடூரமாகப் பார்க்கும் பார்வையுடன் பானங்களைச்செய்யமனமுடையவன், மானாபிமானமில்லாதவன், சதாபுணர்ச்சி விருப்பமுடையவன், அழகுடையவன், கட்டுவாய்ந்த திரேகமுள்ளவன், அதம அளவுள்ளவன், அதம அளவுள்ள கோசமுடையவன். இவனை மூன்றாஞ் சாதிபுருஷன் என்றும், விருஷபசாதி ஆடவன் என்றும் சொல்லப்படும்.

சங்கினிஜாதி பெண்ணின் லக்ஷணம்.

நெற்றி, கன்னம், செவி, மூக்கு இவைகள் மிதமின்றி பருத்திருக்குந் தன்மையும், குறுகிபருத்த கைகளும், கால்களும் பருத்த தோளும், விம்மியிருக்கின்ற கழுத்தும், சிவந்தகண்ணும் பிரகாசமாய் இடைவெளியாயிருக்கின்ற பற்களும், கற்றையாய் மிகச்சுருண்டு சிறிது சிவந்திருக்கும் கூந்தலும், இரவும், பகலும் கலவியிலேயே வாஞ்சையாகிய மனமும், யானைவீறிடுவதுபோன்ற வார்த்தையும், விரிவுதோன்றி மிகவும் பருத்துக் கீழே தொங்கிய உதடும், களிப்பினால் செருக்கடைந்து மிகுதியும் பெண்களுடனே வீண்சண்டை செய்தலும், கருத்து ஒளியிழந்து பொன்னிறமாயிருக்கின்ற கண்களும், யானைமதம்போலும் மணத்தையுடைய வேட்கை நீரும் வெறுக்கத்தக்கப் பாவங்களை அடக்கமாய் தினமும்செய்து முடித்தலும், முறையின்றி யாவரோடும் கூடிப்புணர்தலும், தன்னுடைய நற்குலத்தினொழுக்கத்தைச் சொல்லினும் அதை அங்கிகாரம் பண்ணாமையும், தலைமயிரைப் பிடித்திழுத்துத் தடிகொண்டடித்தாலும் தான் அடங்காதத் தன்மையும், சிவப்புவஸ்திரம், சிவப்புபுஷ்பம் முதலியவைகளில் பிரியமும், கடைக்கண் பார்வையும், அடிக்கடி கோபமும், கற்றாழைநாற்றமும், சரீரம்நிரம்ப ரோமமும், பருத்ததொந்தியும், தாமதகுணமும், தன்புருஷன்முதல் யாவத்திரானையும் அலக்ஷியமாகக்கருதுபவளும், அன்னியரைவலியப்புணர்பவளும், உஷ்ண சரீரமும், ஆடவராடலிற்பிணங்கி இருப்பவளும், பரியாசவார்த்தைகளால் ஆடவரைப் பராக்ஷித்துள்ளவளா யிருப்பவளும், அறுசுவையில் ஒன்றாகிய காரமான பதார்த்தங்களில் பிரியமுடையவ

ளும், உயரமான சரீரமுடையவளும், பலவித ஆபரணாதிகளாலும் ஆடைகளாலும், சகக்குறிகளாலும் திருப்தியுடையவளும், பார்ப்பதற்கு அழகாயும், வழவழப்பானதும், மிருதுவானதுமான வெண்ணிறமான படுக்கையில் நித்திரைகொள்ள இஷ்டமுள்ளவளும், பிரதமை, திரிதியை, ஏகாதசி, திரயோதசி ஆகிய நான்கு திதிகளில் இரவு மூன்றாஞ்சாமத்தில் கூட இஷ்டமுள்ளவளும், அதம மருமத்தை உடையவள். இவளை அதமசாதிபெண்ணென்றும் சங்கினி சாதிபெண்ணென்றும், மூன்றாவது வகுப்பென்றுங் கூறுவர்.

அதமாதமஜாதி புருஷன் லக்ஷணம்

அதமாதமஜாதி புருஷனும், அத்தினிஜாதி பெண்ணும்.

உறுதியான அழகில்லாத பருத்தத் தேகமும், கறுத்தமேனியும், அதிக உயரமும், உதடு, பல், காது, கழுத்து முதலானதுகள் நீள

டிருத்தலும், சதா மங்கையர்களிடத்திலேயே மனமும், துர்க்குணமும், துர்நடக்கையும், பேருண்டியுண்பவன், பயபக்தி யில்லாதவன், கண்ட ஸ்திரீகளிடத்தில் ஆசைகொள்பவன், உண்மையான வார்த்தை யில்லாதவன், பெருந்தூக்கமுடையவன், அதிகவேகமாய் நடக்கப்பட்டவன், பேருண்டி, ஒடுங்கல், சோம்பு, மூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தனியாக் கோபம், வஞ்சகம், புலாலுண்ணல், மதுப்பிரியம், அஞ்சாமை முதலியவைகள் அதிகப்பட்ட தாமதகுணமும், அதமாதம அளவுள்ள கோசமும், உடையவன். இவனே நான்காவது சாதிபுருஷன் என்றும், அசுவசாதி ஆடவன் என்றும் சொல்லப்படும்.

அத்தினிஜாதி பெண்ணின் லக்ஷணம்.

எல்லாவற்றிலும் தாழ்ந்தவளாய்த் துர்க்குணம், துர்நடக்கையால் மிகுந்திருப்பாள். இவளின் லக்ஷணமற்ற அங்க அடையாளம் எப்படியெனின்? யாவருக்கும் பிடிபடாத நடைத்தை யுள்ளவள், ஒழுக்கீனமுடையவள். சிற்றின்பசெய்கையுள்ளவள், பலபுருடரை யிச்சிப்பவள், வீண்சண்டைசெய்பவள், காமநோயால் தணியாது தன்குலத்துக்குக் கெட்டப்பேரையும் அவமானத்தையும் செய்பவள், புருஷனுடன்வாழாமல் நாடோடியாய்த்திரிபவள்; மிகக்கோரமும், அகந்தையுமுள்ளப் பழிக்கத்தக்க பாவச்சொற்களை எந்நேரமும் அச்சமின்றி பேசித்திரிபவளும், பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலியவைகளை முற்றுந்துறந்தவள், நீளமில்லாத செம்பட்டைமயிரும், அழகின்றியமைந்த நீண்டநுதலும், பருத்தஉதடும், சிறுத்தகழுத்தும், பெரியபுயங்களும், இடைவிடாது வீசும் கற்றாழைநாற்றமும், அறுசுவையில் ஒன்றாகிய உப்புபதார்த்தத்தில் பிரியமும், பலவர்ணபுஷ்பத்தின்மேல்பிரியமும், ஆடையாபரணாதிகளில் விருப்பமும், தான்கொண்ட செய்கையைமுற்றும்தணிய ஆசையுள்ளவளும், வெட்டவெளிகளில் பயங்கரமில்லாமல் துயில்கொள்வதற்கு அதிகவிருப்பமுள்ளவளும், எவ்விதவிரதநாட்களிலும் இரண்டாஞ்சாமத்திலுங் கூட ஆசையுள்ளவளும், அதமாதம

கொடியப்பிணியுள்ள நிதம்பமுடையவள். இவள் அதமாதமசாதி பெண்ணென்றும், அத்தினிசாதி பெண்ணென்றும், நான்காவது வகுப்பென்றும் அறிஞர்கள் கவிலுவர்.

பூங்கொடியே! இங்ஙனம் எல்லாம்வல்ல இறைவனால் செவ்வனே அமைக்கப்பட்ட சாதிவகுப்பை உனக்கு உபதேசித்தேன்.

சுலோசனு:—என் ஆருயிர்ச்செல்வ! தாங்கள் எடுத்துமொழிந்த நான்கு ஜாதிகளின் இலக்ஷணங்களை வெகு இனிமையாயும், ஆழ்ந்த அறிவுடைத்தாய் உவமானங்களை அணிவகுத்தும் என் மனம் புளகாங்கிதங் கொள்ளுமாறு உபதேசம் செய்யப்பெற்றீர். ஆயினும், எந்தெந்த சாதிபுருஷனுக்கு எந்தெந்த சாதி பெண் வதுவைக்கு உகந்தவளாவாள் என்பதை விளக்கவைத்தல் வேண்டும் பிராணபதி?

சதிபதிகளின் பொருத்தம்.

வசந்தன்:—கேளும் பிராணநாயகி! முயல் சாதி ஆடவன் பத்மினி சாதி பெண்ணையும், மான்சாதி ஆடவன் சித்தினிசாதி பெண்ணையும் விருஷபசாதி ஆடவன் சங்கினி சாதி பெண்ணையும், அஸ்வசாதி ஆடவன் அத்தினிசாதி பெண்ணையும் தக்க பருவ காலம் பார்த்து விவாகம் செய்துகொள்வதே மநுதருமநெறியாகும். இவ்விதமான நெறியை முறையே வழங்கும் மக்கள் நாளுக்கு நாள் அபிவிர்த்தி அடைவதுதவிர, குடிபழிப்பின்றி திடகாத்திர தேகத்தையுடைய புதல்வரைப் பெறுவதில் பின்னடையாதும்; சதிபதிகள் மனம் ஒருமைப்பட்டு இல்லற தருமத்தை வெகு மேன்மையாக நடத்திவருவார்களென்பதற்கும் சந்தேகமில்லை. கற்குணப் பொருத்தமின்றி முறண்பாடாயும், வயிற்றுப்பொருத்தம் வயிற்றுப் பொருத்தம்மாத்திரம் பார்த்து இதுவே போதுமான தென்றெண்ணி விவாகத்தை முடிப்பது மக்களின் வாழ்க்கையல்ல; பெண்ணும் மனமொத்து வாழாமல் தங்களின் வாழ்க்கையிழந்து விடுவது சாதிலட்சணங்களை யறியாமையால் விவாகம் நடத்திக்கொள்ளும் தன்மையே யென்றறிவாயாக. இவர்கள் வாழ்க்கை குதிரைக்கொம்பாக முடியும். இவையாவும் பெரியோர்கள் அறிந்து சதிபதிகளுக்குண்

டான லட்சணப் பொருத்தங்களைச் சரிவரப்பார்த்துத் திருமணம் செய்வதே உத்தமம்.

அன்றியும், குற்றமற்ற குலத்திலுதித்தவளாயும், புருஷன் வயதுக்குச் சிறியவளாயும், புருஷனுக்குகந்தவளாயும், மணங்கொண்டு தன்னுரிய புருஷன் வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவளாயும், உண்மைபேசுபவளாயும், எப்போதும் கோபமில்லாதவளாயும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனும் நான்கு குணங்களைப் பூஷணமாகத் தரித்தும், காலை, மாலை, பகல் ஆகிய முக்காலத்தும் முகமலர்ச்சியோடு தன் கணவனைத் தொழுது வணங்குபவளாயும், நல்ல இலட்சணங்களையுடைய புத்திர பாக்கியங்களைப் பெற்றுப் பெருந்தன்மை வாய்க்கப்பெற்றவளாயும், ஆடவனும் தன்னைப் பிரியாமலிருக்கும் வண்ணம் ஆசை மிகுந்தவளாய் மஞ்சள் மணம்போன்ற மாங்கல்யம் ஓங்கி வளரும்படி தூய்மையான ஆடைகளால் தன்னை அலங்கரித்துக்கொள்பவளாயும், பத்தாவுக்கேற்றப் பதிவிரதை யிவளென்று சொல்லக்கூடிய வாசுகி, அருந்ததி, இந்திராணி முதலான பத்தினிகளை யொப்பிட்டவளாயும், அன்னை தயையிலும் மேம்பாடுற்றவளாயிருத்தலும்.

இவ்வித லட்சணங்கள் வாய்ந்த பெண்பால் தன் புருஷனுடையஏவலின் குறிப்பறிந்து ஏவாமுன்னங் கருதியதைச் செய்து முடித்துத் தன் விஷயத்தில் புருஷனுக்குமிகுந்த கருணைசுரக்கும்படி பிரயாசைப்படுவதும், புருஷன்மேரில் தனக்கிருக்கும் அன்பின் பெருக்கை விளக்கிக்காட்டுமாறு தன் கைகளினாலேயே கணவனால் ஏவப்பட்டதைச் சாந்தமாகவும் கூர்மையாகவும் தீவிரமாகவும் செய்து முடிப்பாள்.

(மனைவியானவள் ஆடையாபரணத்தால் விளங்காமற்போனால் கணவனைச் சந்தோஷமுள்ளவனாகச் செய்யமாட்டாள். கணவனுக்குச் சந்தோஷமில்லாமற்போனால் தன்னைக் கூடி சுகித்திருக்க மனமில்லாதவனாயிருப்பான். அதனால் புத்திர விர்த்தியில்லாமலே போய்விடுமென்று மநுதர்ம சாஸ்திரம் மூன்றாவதத்தியாயம் 61-வது சுலோகம் விளங்கவைப்பதால்) பெண்கள் தன் தேகத்தை மணக்கும்படி சுத்திசெய்து மலர்சூடி தனக்குண்டான வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு நெற்றியில்திலதமிட்டுத் தாம்பூலந்தரித்துப் புன்சிரிப்புடன் அன்னமெனத் தன் புருஷன்முன் நடந்து ஆசையை அதிகரிக்கச் செய்துகொள்ளதுமாகிய நடையும் இலக்குமியன் அழகுபோலும்.

புருஷன் சதா சாந்தமுடைமை, பொறுமையுடைமை, இரக்கமுடைமை பச்சாதாபமுடைமை முதலிய நற்குணங்கள் சிறிதுமில்லாமல் துர்க்குணங்கள் வாய்ந்தவனாயும், அற்ப குற்றங்களை ஆதாரமாகக்கொண்டு மனைவிக்கு என்னேரமும் கஷ்டத்தை விளைவித்துக்கொண்டிருக்கிறவனாயிருந்தாலும் இத்தனைக்கும் எதிர்ப்பேசாமலும், சௌக்கியத்தைக் குறைக்காமலும் மனங்கோணாமல் அவரிஷ்டப்படி நடந்து, சாந்தத்தோடு பொறுத்துக்கொண்டு பூமியைப்போல் மௌனம் சாதிப்பதும், தலைவன்யாதாமொரு காரணத்தைப்பற்றி வெகுளிகொண்டு தூஷிக்கினும் அல்லது தண்டனைவிதிக்கினும் அவைகளைச் சகித்து எதிர் நிற்காதவளாய் கணவன் வைத சொற்களை ஆசிகூறியதாகவும், அஸ்தத்தால்மோதலைப் பஞ்சணையின்கண்ணே புறத்தொழிலில் ஒன்றாகிய தாடனம் செய்வதைப்போல் சந்தோஷத்தால் தாடனம் (தட்டல்) செய்ததென்று அகமகிழ்ந்து அவனை அனுகிக் குயிலின் குரலைப்போல மெல்லிய ஓசையுடன் அவன் தோளைப்பற்றிப் பங்கயத்திற்கு நிகராகிய நின்பாணி என் காத்திரத்தைக் கொட்டினால் பாதையுற்றனவோ எனச் செப்பித் தன் அதரத்தால் கைத்தலத்தை முத்தமிட்டு அவன் கோபத்தை தணியச்செய்து முன்னிருந்த அன்பைக் காட்டிலும் மிகுதியான அன்பை உண்டாக்கச்செய்தும் அவனை நல்வழிப்படுத்தும் சாந்தமுடைய பெண்ணைப்போலும்—(புவிப்பொறையும்.)

தன் மணாளன் அறைக்குள் வந்த உடன் முகமலர்ந்து புன்னகையுடன் கொழுநன் வதனத்தைத் தன் இருகரங்களால் தழுவித் திருஷ்டி பரிகாரஞ் செய்து நெட்டிமிட்டுக் குதலை மொழிகள் வசனித்து முத்தமிடுவதுபோல் அதரத்தைப்பற்றிச் சுவைத்து முகத்தோடு முகம் சேர்த்து இரண்டு பயோதரங்கள் புருஷன் மார்பில் தோயும்படி நெருங்கவணைத்துச் சேர்த்து மையல் விளைத்துச் சோகந்தீர உபசரித்து விளையாடும்—(பரத்தையர் காதல் துயிலும்.)

தன் கோமான் சில காலங்களில் விஷயாதிகளில் தளர்ச்சியுறுங்கால் கூர்மையாகிய தந்திரங்களைச் சொல்லி தேற்றுவித்தல் முதலான யுக்தி மந்திரோபசாரத்துடனும் இத்தியாதி சிறப்புவாய்ந்த பெண்களாகவும் கவனித்து வதுவையைவிரும்புதல் மிகுதியும் நன்று என்பதை யுணர்வாயாக.

சுலோசனு:—என் அருமைக்காதல! மணவாழ்க்கையில் நடக்கும் இத்தியாதி குணங்களையும் கன்னிப்பருவத்தினளா யிருப்பவளிடத்தில் எந்த விதத்தினுல் தெரிந்துகொள்ள முடியுமென்பதை விவரித்தல் வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றனன்.

வசந்தன்:—மாசிலாக் குலத்திலுதித்த நங்குல சுலோசனு! 'தாயைப் பார்த்துப் பெண்ணைக்கொள்' என்ற மூதுரைப்படி கோரிய பெண்ணின் தாய் தந்தைகளின் ஒழுக்கவழக்கங்களையும், கல்வி கேள்விகளில் மேன்மையுடையவரா என்றும், சாந்தமுடைமை அடக்கமுடைமை அறிவுடைமை பொறுமையுடைமை உண்மையுடைமை வாஞ்சையுடைமை முதலிய நற்குணங்கள் வாய்ந்தவர்களா என்றும் கவனித்தல் முக்கிய கடமை. அன்றி

யும் சண்டைச்சரவுமுதலிய துற்குணங்களில்லாதவர்களாகவும் பார்த்து, அக்கம்பக்கம் வீடுகளில் செவ்வையாய் விசாரித்துப் பெண்ணின் அங்க அடையாளங்களில் முதல் இரண்டு சாதியாகிய பத்மினி சித்தினியினுடைய அங்க அடையாள குணாதிசயங்களும் உள்ளவளா? என்றும் கவனித்து முடிவு செய்யவேண்டும். நிச்சயமாய் முதலிரண்டு சாதிபெண்களை அடைபவன் மேலே சொல்லிவந்த குணங்களையுடைய மாதை அடைந்தவனாவான் இவனன்றோ புண்ணியவான். இவன் குடும்பமன்றோ நாளுக்கு நாள் விருத்தியடைந்து சீர்ப்பட்டு ஓங்கி யாவத்திராளும் மதிக்கத்தக்கதாகவிருக்கும். இவனையல்லவா பூர்வத்தில் பெருந்தவம் செய்தவன் என்று சொல்லக்கூடும். மணம் முடித்தபிறகு அன்றோ சீரும் சிறப்பும் மதிப்பும் வருகிறது. இஃதியாவும் மனைவியாலல்லவா? இவனும் நல்வழிப்பட்டு முன்னிருந்த துற்குணங்களெல்லாம் ஒழிந்து சன்மார்க்கமுள்ள பெரியோர்கள் கூட்டத்துடன் சேர ஆரம்பித்துவிடுகிறான். இவனுடைய வாழ்வன்றோ வாழ்வு. ஆதலின் தந்தை, தாயார், அண்ணன், தம்பி முதலியவர்களின் நன்னடைக்கை குணாதிசயங்களையும் பெண்ணின் அங்க அடையாள குணாதிசயங்களையும் பார்த்து அழகுவாய்ந்த பெண்ணை மணத்தல் சாலவும் மேன்மை. இதுபோலவே பெண்ணுக்கும் மணவாளனைத் தேடுங்கால் சம்பாதிக்க வல்லமையுடையவனையும் குடிவெறியாட்டம், வேசியாட்டம், சூதாட்டம் முதலிய தீவினைபோகத்திற்கு உள்ளாகாதவனாகவும் பார்த்தல்வேண்டும்.

சுலோசனா:—என் மனதிற்கும் மனவாழ்க்கைக்கும் சம கலவிக்கும் பொருந்திய காதல்! இவ்விதமாகத் தேர்ந்தெடுத்தவர்களை எத்தனை விதமாகச் சேர்த்துவைக்கக் கூடுமென்றும், அவைகளில் எவ்வளவு உத்தமம் என்றும் தற்காலத்தில் எவைகள் நடைபெறுகின்றதென்றும் தெளிவிக்கவேண்டுகிறேன்.

விவாக பேதம்

வசந்தன்:—ஆண் பெண் இருவரையும் ஒன்றுசேர்த்து வைப்பதற்கு விவாகம், மணம், வதுவை, மன்றல், திருமணம், கடிமணம், கலியாணம் எனப் பல பெயரால் வழங்கிவருகின்றனர். இவ்விதமான

விவாகத்தில் 8-விதமாகச் சுருதிகளுள் சொல்லப்பட்டிருக்கிறது. அவை வருமாறு:—

1. பிராமம், 2. தெய்வம், 3. ஆரிடம், 4. பிரசாபத்தியம், 5. அசுரம், 6. காந்தருவம், 7. இராக்ஷதம், 8. பைசாசம், இவ்வித எண் வகை மணத்தில் முதல் ஐந்தும் உத்தமம், கடை மூன்றும் அதமமென்றும் இருகூறுடையது.

விவாகங்கள் 8-ன் விவரம்.

1. பிராம விவாகம்:—வேதமோதல் முதலிய நல்லொழுக்கமுள்ளவனும், 48-ஆண்டு பிரமசாரியத்தனுமாகியவனைத் தானாகவே அழைப்பித்து நூதன வஸ்திரத்தால் அலங்கரித்து 12-ஆண்டு பிராய கன்னிகையை ஆபரணத்தால் சிங்காரித்து அவனுக்குத் தானஞ்செய்வது.

2. தெய்வவிவாகம்:—யாகத்தின்முன் தனக்குப் புரோகிதனை விருப்பவனுக்குத் தன் பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பது.

3. ஆரிட விவாகம்:—தான் செய்யவேண்டிய யாகாதி கர்மத்துக்காக வரனிடத்தில் நின்றும் ஒரு ரிஷபம், ஒரு பசுவும், பொற் கோட்டும், பொற்குளம்பின் அளவாகச் செய்து அவற்றிடை நீரிற்கொடுப்பது.

4. பிரஜாபத்தியம்—ஒரு பிரமசாரியைப் பூசித்துத் தன்பெண்ணைத் தானம் பண்ணும்போது நீங்களிருவருமாய் அறநெறிதவறாது தருமங்களைச்செய்யுங்கோளென்று சொல்லியும், மைத்துனக் கோத்திரமாக மகள்வேண்டிச்சென்றால் மாறாது கொடுப்பது.

5. அசுரம்—பெண்ணின் தகப்பனுக்குக் கேட்கும் பணத்தைக்கொடுத்துப் பெண்ணுக்கும் பூஷணங்களைப் பூட்டிப் பெண்ணைவாங்கி விவாகம் செய்துகொள்வதும் கொல்லேறுகொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினன், திரிபன்றிஎய்தான், மாலைசூட்டப்பட்டான், இவளை எய்தும் என்று சொல்லிக் கொடுப்பது இவை ஐந்தும் உத்தமம்.

6. காந்தர்வம்—ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் புணர்ச்சி ஆசையால் கொடுப்பாரும், கொள்வாருமின்றி தாமாகவே நேர்ப்பட்ட காலத்து மனமொத்துச் செய்தல்.

7. இராக்ஷதம்—ஒருவன் தன்பலத்தினலே ஒரு கன்னிகையைக் கண்டு மோகித்தும், அவள் இணங்காமல் அழும் போது அவள் வீட்டில் நின்றும், அவளின் பந்துக் களை அடித்தும், கொன்றும், போரிட்டுத் தன் ஆவே சந்திரச் சமயம் பார்த்துப் பெண்ணைத் தூக்கிச் சென்று பின் களவாடிக்களிப்பது.

8. பைசாஸம்—ஒருகன்னிகை தூங்கும்போதும், குடியினல் மயங்கி யிருக்கும்போதும், பித்துக்கொண்டவளாயிருக்கும் போதும் அவளுடனே கலவிசெய்வது இவை மூன்றும் அதமவிவாகம். தற்காலத்தில் உத்தம வகுப்பில் ஐந்தாவதாகிய அசுரமே பெரும்பாலும் நடைபெறுகின்றது.

சுலோசனை:—நீவிர் திருவாய் மலர்ந்தவற்றைச் செவியானந்த முறக் கேட்டுணர்ந்தேன். ஆயினும் சாதிபேதத்தில் முறண்படாமலும், உத்தமவிவாகம் செய்தவர்களும், மற்றவர்களும், எந்தக்காலங் களில் மணவாழ்க்கையின்பலனை அடையவேண்டுமென்பதைப் பற்றி அருள்புரியுமாறு வேண்டுகிறேன்

கர்ப்பந்தரிக்குங் காலம்.

வசந்தன்:—இன்பத்திலின்பமான வேந்திழையே! மாதர்கள் இரஜஸ் வலையான நாள்முதல் 16-நாள்வரைக்கும் சேர்க்கைக்குரிய காலம். இவற்றுள் எட்டுநாளைநீக்கி மற்ற எட்டுநாட்களில் நாயகி விரும்பினலன்றி நாயகன் வலிதிற் சேரலாகாது. ஏனெனில், இரஜஸ்வலையான 16-நாட்கள் வரையிலும் கருப்பையி லிருக்கும் கமலந்திறந்திருக்கும். அந்தப்போதே கலத்தலால்

வீரியசுதந்தரம்பெற்று புத்திரபாக்கியத்தையுண்டாக்கும். அஃதின்றி கமலம் மூடிக்கொண்டபிறகு கலந்தவீரியம் பழுதாய் முடியும். ஆகையினால், கமலம் மூடிக்கொள்ளும் பதினாறுதினங்களுக்குமேற்படில் நாயகிக்குக் கர்ப்பம்தரியாமலும், இன்பமில்லாமலும் போய்விடும். மற்ற எட்டுநாட்களைத் தள்ளவேண்டியதின் காரணம் என்னவெனின்;

மாதர்கள் பக்குவத்திற்கு வந்தபிறகே சேர்க்கைக்குரிய காலமாகும் பக்குவதிசை வந்ததற்கு அடையாளமே சூதகம் என்று சொல்லப்படும். முதல் முதல் சூதகம் காண்கிறதிலிருந்து மக்களைப் பெற்றெடுக்கிறகாலம். இப்படிப்பட்ட சூதகம் எந்தக் காலங்களில் கொஞ்சமேனும் வெளிக்காணமல் பற்றற நின்றுவிடுகிறதோ அக்காலத்திலே மக்களைப்பெறுந்தன்மையும் நின்றுவிடுகிறது. அதற்குமேல் அவளை விருத்தை என்றும் சொல்லப்படும். அந்த சூதகம் தேசங்களுக்கு ஏற்றவாறும் சீதோஷ்ணத்திற்குத் தகுந்தவாறும் 10-வயது முதல் 12 வயதுவரையிலும், 13 வயதுமுதல் 16 வயதுவரையிலும், 17 வயதுமுதல் 20 வயதுவரையிலும், சீதளம் அதிகப்படவயதேறியும், உஷ்ணம் அதிகப்பட வயதுகுறைந்தும் தேகத்திற்குத் தகுந்தவாறு பூப்பாவதுமாம். நமது இந்தியநாட்டில் பெண்கள் 12 முதல் 16 வயதுவரையில் சூதகமாகின்றார்கள். சூரியபாதைக்கு (ஈக்வாட்டருக்கு) சற்று தூரத்திலிருப்பதினால் மிதமான உஷ்ணத்திற்குத் தக்கவாறு என்று காண்க. இவ்விதமான சூதகம் 25 நாள் முதல் 35-நாளைக்குள் தேகத்திற்குத் தக்கவாறு கெட்ட இரத்தத்தை மாதத்தீட்டாக வெளிகண்டுகொண்டேயிருக்கும். இப்படி வரும் அசுத்த குருதிநீரானது சற்றேறக்குறைய 4 தினம்வரையில் வெளிப்படும். இப்படி 4 தினம்வரையில் சூதகம் வெளிப்படும் ஸ்திரீயின்சரீரம் மிகவும் சௌக்கியமாயிருக்கும். சூதகம் கண்டும் காணாதவர்களுடைய சரீரம் அதிசீக்கிரத்தில் அசௌக்கியமடையும். இதுவுந்தவிர, குருதி வெளியாகும்போது வாந்தியும், அதிக பாதையும், சகிக்கமுடியாத தலைவலி, வயிற்றுவலி, அடிவயிற்றுவேதனை காணும். இவ்விதமான சூதகநோயுள்ள மாதர்கள் அனேகமாய் மலடிகளாகவே யிருப்பார்கள். இப்படிப்பட்டமாதர்களுக்கு குருதிநீர் சரீர ஆரோக்கியமுள்ள பெண்களுக்குச் சிவந்த அல்லது மஞ்சள் நிறத்தைப்போலல்லாமல் கறுப்புநிறமாகவும், கலங்கலாகவும் தோற்றப்படும். இவைகளிலும் கண்டும் காணாமல் வெளிப்படுவதினாலும் வியாதிகள் பலவிதப்பட்டுக் கடைசியாக ஜன்னிநோயைக் கொண்டுவந்து விடுமாகையால், தகுந்த

வைத்தியர்களைக் கொண்டு தாமதிக்காமல் சிகிச்சைசெய்வது மிகவும் உத்தமத்திலும் உத்தமம். இங்ஙனம் சொல்லிவந்த சூதகத்திற்கே இராஜஸ்வலை என்று பெயர்.

அகாலசேர்க்கையின் விபரீதம்.

இராஜஸ்வலையான முதல்நாள்சேர்வதால் நாயகன் சண்டாளத் துவேஷத்தை அடைந்து நாசத்தையடைவான்; இரண்டாம்நாள் சம்பந்தப்படின் புருஷனுக்கு பிரம்மஹத்தி தோஷமும், நாயகிக்கு நாசமுமுண்டாம்; மூன்றாம்நாள் நாயகனுக்குக் கிராமசண்டாளத்துவ தோஷமும், கர்ப்பத்துக்கு நாசமும் பொருந்தும்; நாலாம்நாள் மங்கள ஸ்நானம்செய்தபிறகு சுத்தமாயிருக்கினும் கலவியில்வீரியம் கருப்பையில்போய்ச் சேராது. அப்படிச் சேர்ந்தாலும் கர்ப்பந்தரிக்கின் அது அற்ப ஆயுளாய்ப்போகும். பூர்ணாயுளாயிருக்கின் தரித்திரத்தையும், பிதாவின் பிந்துக்கு நாசத்தையு முண்டாக்கும். ஆனால் இந்த நாலாம் நாள் அவசியம் தன்மனைவியைச் சேரவேண்டுமென்றும், சேராதுவிடுப் பின் பிரம்மஹத்திதோடத்தையடைகுவன் என்றும் மநுஸ்மிருதிகள் சொல்லுகின்றன. வியாதியால் பீடிக்கப்பட்டவனையும், ஊருக்குப் புறத்தே போயிருப்பவனையும் இத்தோடம் அணுகாதென்றும் இருடிகள் பகர்ந்திருக்கின்றனர். இதனால் இல்லறத்தோன் இங்ஙனஞ் சொன்ன இடையூறுகள் யாதுமில்லாதிருக்கின் தன் இல்லாளுடன் நாலாம்நாள் நுகர்தல்வேண்டும்.

சுலோசனை:—மதன தந்திரங்களைப் பரிபூர்ணமாய்க் கற்றறிந்தபிராண நேச! தாங்கள் சொல்லியபடி தாதடக்கிக் கலப்பதற்கு யாரால் கூடும்; அப்படிக்கலப்பதால் யா குணம்; வீரியம்விடாமல் இருப் பதன் தந்திரம் ஏதேனுமுளதோ இவைகளை விரிவாய் எடுத்துக் கூறுவாய்.

நாதடக்கிப் போகிக்குந் தந்திரம் (உபாயம்).

வசந்தன்:—சந்தர்ப்பம் எங்கு அகப்படுமோ என்று எதிர்பார்த்துத் தக்க கேள்விகேட்கும் பிராணசகி! இரஜஸ்வலையான நாலாம் நாள் சேரின் குழந்தை வெளிப்படும் புழைக்குள் குதூகலமாயிருந்த அணுக்கள் இறக்குமாதலின், மாதர்களுக்கு ஆசைமிகுதி முற்றுமடங்கும் அந்நாளில் அவசியம் கலத்தல்வேண்டும். மனதை சுவாசத்தின்கண்ணிருத்தி பிராணவாயுவை அகத்தே கும்பகம் செய்யாமலும், புறத்தே நெட்டுயிர்ப்பு விடாமலும், (சோ) என்னும் மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லாமல் நெஞ்சில் கமனஞ்செய்து வாயுவை உள்ளுக்கிழுத்தும் (ஹம்) என மனதில் நினைத்தவண்ணமாய் வெளிக்கு விட்டும், இராஜயோகத்தால் நடுவே யுலாவச்செய்து மகிழ்ச்சிதரக் கூடினால் மனம் மூச்சியில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் வீரியம் வெளிப்படாது. இவ்விதமாக யாவனொருவன் இன்பம் விடாது சுகிக்கின்றானோ அவனே இல்லத்திற்குரிய புருஷன். அவனுடைய வயதும் வளரும். நரை, திரை, மூப்பு என்றவைகளுக்கு அதிகசீக்கிரத்தில் அகப்படாமல் சுகமாய் வாழ்வான். நாலாம் நாளும் புத்திர சந்தானத்திற்குத் தகாதமற்றய நாட்களிலும் மேற்சொன்னபடி இன்பம் நுகர்தல்வேண்டும்.

இராஜஸ்வலையான பதினோராம், பதின்மூன்றும் நாட்களிற் கூடிடில் பிறக்கும் பெண், குலத்துக்கீனமான நடத்தையுள்ளவளாயும், துஷ்டையாயும், தாசித்தனத்தை மேற்கொண்டவளாயும், அவதூறுக்குப் பாத்தியப்பட்டவளாயும், தான்மணந்த புருஷனை விட்டு அயலானைக்கூடி வாழ்பவளாயும், அதம அதமாதம சாதியாகிய சங்கினி, அத்தினிசாதியின் லக்ஷண குணங்களை நிரம்பப்பெற்றவளாயு மிருப்பாள். பூரணை அமாவாசைகளில் கலவியை விரும்பினால் தேகத்தில் மிகுதியான ஜலம் அந்நாட்களில் சேர்ந்திருக்கிறபடியால், சாதாரணத் தினங்களில் உதிக்கும் தாதுவைக்காட்டிலும், அதிகமான தண்ணீர் சம்பந்தப்பட்டதாக (நீற்றுப்போன) தாதுவெளிப்படும். ரேதசு பலவீனப்படும். இதனால் கருதரிக்கின் பலக்குறைவானதும், அங்கம்பழுதானதும், சிறிதுநாளில் உயிர்த்துறக்கக்கூடியதுமான பிள்ளைகளைப்பெற நேரிடுமாகையால், இவ்வெட்டுத்தினங்களை நீக்கி மற்றைய எட்டுத்தினங்களைக் கொள்ளவேண்டும். ஆகலின், பின்வரும் செய்யுளை கவனித்தல் வேண்டும்.

கலவிக்கு உபயோகமாகாத நாட்களும் காலங்களும்.

வருடசங்க ராந்தியிற் றிங்கண்முன் பின்னிலும்
வளர்பிறைப் பிரத மையிலும்
மதிவிளங்கும் பூரணத்திலும் பிதுர்தலை
வாய்க்கிடுஞ் சிரார்த்தத் திலும்
இருணிறைந் திடும்மமா வாசையொடு ஜென்மநா
ளியல்பொடு பிறந்த நாளும்
இனியமங் கையர்பூ மலர்ந்தநாண் மூன்றுதவ
மேற்கின்ற விரத நாளும்
அரிவையுட னேகூட லாகாது கூடினு
லதிக பாவங்க ளேனரும்
ஐசுவரிய மில்லாது திருவகலு மதுவலா
லாயுளுங் குன்றுமென்றே
தரைமிசையின் முன்னோ ருரைத்தனர்க ளாகையாற்
சாற்றினே னுலக மறியத்
தருமேவு மருணகிரி யீசர்பா லுறையுலகு
தாயுண்ணா முலையம் மையே. (சதகம்)

இந்த எட்டுத்தினங்களிலும் பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்த்தசி இந்ததிதிகளும் ரோகணி, அஸ்தம், அனுஷம், சுவாதி, ரேவதி, மூல , உத்திரம், சதயம் இந்த நக்ஷத்திரங்கள் நீக்கலாக மற்றய நக்ஷத்திரங்களையும், மாசப்பிறப்பு, வருஷப்பிறப்பு, விரததினம், விரததினத்திற்கு முந்திய பிந்தியதினங்களும், சிரார்த்ததினம் சிரார்த்ததினத்திற்கு முந்திய பிந்திய தினங்களும், ஆசௌசதினங்களையும், ஆதிவாரம், பிரயாணகாலம், சூரிய சந்திர கிரஹணகாலமாகிய இக்காலங்களில் கூடினால் உற்பத்தியாகும் புத்திரர்கள் சன்மார்க்கமாயில்லாமல் துன்மார்க்கர்களா யிருப்பார்கள் என்றும், கல்வி அறிவு அறநெறி ஒழுக்கமில்லாமலும், துராக்கிரதமாகவும், வியாதியுள்ளவர்களாயும் போய்விடுவதால், பிதுர்காரியத்திற்கு ஏதுவில்லாமலும், வம்சவிருத்திக்கு உதவாமல் க்ஷீணிப்பை அடைவிக்குமென்று ஸ்மிருதிக்காரர்கள் நவிலுகிறபடியால், அந்நாட்களைநீக்கி ஏனையநாட்களில் பண்டுபலாதி அன்னம் முதலியவைகள் நிரம்ப உண்ட உடனேயும், உண்ட உணவு ஜீரணமாகாதிருக்கும்போதும், அஜீரணப்பட்டிருக்கும்போதும், ஸ்நானம் செய்தாலி

லும், க்ஷவரம்செய்தநாளிலும், இரவில் முதல் இரண்டுஜாமத்திலும், அதிகாலையாகிய நாலாம்ஜாமத்திலும் கலத்தல் கூடாவாம். ஏன் எனின் முறையே பலவிதரோகங்களுக்கும் பிதிர்களுடைய சாபத்திற்கும் இலக்காகாதிருப்பதற்காகவும், இதுவுமன்றி மாதர்கள்மனோ வியாகூலமாயிருக்கும்போதும், அதிகதூரம் நடந்தபிறகும், உழைப்பிலிருந்தபிறகும், தாகமாயிருக்கும்போதும், பசியாயிருக்கும்போதும், ஸ்நானம்செய்தவுடனேயும், சுகிப்பதால் ஸ்திரீகளின் நீர்க்கழிவு ஏற்படாது. அப்படி சுரதநீர் வெளியாகாவிடில் இன்பமில்லை. ஆதலின், இங்ஙனம் சொல்லிவந்த நாட்களையும், காலங்களையும் நீக்கி மற்றைய நாட்களிலும் காலங்களிலும், சதிபதிகள் கலவி யணுகாதிருத்தலே சாலநன்று.

சுலோசனு—கவிஞர் துதிக்கும், நற்றமிழ் நாயகமணியே! இரஜஸ்வலையான மூன்றுநாட்களும் தம்பதிமார்களுக்குப் பழியும், தோஷமும், சேதமும் உண்டாக்குவதாலும், கர்ப்ப கமலம் மூடிய பின்னும், பதினன்கு தினங்களும்போக எஞ்சிய தினங்களில் கூடிடில் பிறக்கும் சந்தானங்களின் பேதாபேதங்களை விவரித்து உரைக்க வேண்டுகிறேன்.

12-நாட்களில் பிறக்கும் புத்ர சந்தானங்களின் விவரம்.

வசந்தன்:—மடவனம்போல் நடைபயிலும் ஆரணங்கே! சூதக தினங்களாகிய மூன்று நாட்களும் கருதரிக்க யோக்கியதையல்லாத நாலாம் நாளையும் நீக்கியபிறகு, ஐந்தாம் தினத்தன்று சேருவதால் உற்பத்தியாகும் பெண், தன் கால திசையிலே யாதொரு குற்றமுமில்லாத சன்மார்க்கமாயும், கீர்த்திவாய்ந்து குலத்தை விருத்திசெய்து மேன்மைக்குக் கொண்டுவருவாள். ஆறாந் தினத்தில் கூடுவதால் பிறக்கும் புத்திரன் காலமுழுதும் தரித்திரனாகியும், பிச்சையேற்று உண்பவனும், வறுமையையே குடிகொண்ட ஆண்மகனாகவுமிருப்பான். ஏழாந் தினத்தன்று கூடிப்பிறக்கும் பெண் வாய்மை உடையவளாயும், குயிலைப் போன்ற இனிய மிருதுவான குரலோடு வசனிப்பவளாயும், நீண்ட ஆயுளோடு கற்பையே பூஷணமாகக் கருதி வாழ்வாள்.

எட்டாம் நாள் கலந்து உதிக்கும் ஆண்மகன் தன் புத்தகாலத்திலே மகா செல்வந்தனாகவும் பாக்கியவானாகவும் ஈஸ்வர பக்தியில் மேம்பட்டவனாகவும் சிறப்புமிருந்த பெருந்தன்மைவாய்ந்தவனாகவுமிருப்பான். ஒன்பதாவது நாளிலே தரிப்பது கற்புநிலைதவறாதும் பரிபூரண வயதும் நற்காரியங்களிலே பிரியமும் தெய்வபக்தியுமுடைய பெண்ணாகவுமிருப்பாள். பத்தாம்நாளில் சம்பந்தம் செய்துதிக்கும் ஆண்மகன் தன்ஜீவகாலமுழுதும் சுகமாகவும் கெம்பீரத் தோற்றமுடையவனாகவும் மேலாகச் சம்பாதிக்கும் குணமுடையவனாகவும் விருத்தியாகும் செல்வமுடையவனாகவும் யாவத்திராளும் சிரேஷ்டன் என்றும் அமைச்சனைப்போல் மதியூகனென்றும் புகழத்தகுந்தவனாகவும் விளங்குவான். பதினோராவது நாளில் பிறக்கும்பெண் தாசித்தனத்தை யுள்ளவளாயும், அவதூறுக்குப் பாத்தியப்பட்டவளாயு மிருப்பாள். பனிரண்டாவது நாள் தரிக்கும் புத்திரன் பிதாவுக்கு மேன்மையுடையவனாகவும், பெண்களின் வேட்கையிலே அலையாத ஸ்திரமான புத்தியுள்ளவனாகவுமிருப்பான். பதின்மூன்றாவதுநாள் கருவமையும் பெண்பால் தான்கொண்ட மணாளனை விட்டு அயலானுடன் வலிதிற்கலந்து சுகித்து வாழ்பவளாயிருப்பாள். பதினான்காவது நாள் சுகித்து ஜனிக்கும் ஆண்பிள்ளை, நற்குணம், நன்னெறி, நன்றிஅறிதல், தருமம், தத்துவ ஆராய்ச்சி, ஞானம், யாவத்திராளையும் அடக்கியாளும் தன்மைமுதலிய செல்வத்தை உடையவனாகவுமிருப்பான். பதினைந்தாவது நாள் சேர்க்கையினாலுதித்த நங்கை இலக்குமியைப்போல் பேரழகு வாய்ந்தவளாயும், குபேரனைப்போலொத்த செல்வந்தனுக்கு வாழ்க்கைப்படுபவளாயும், அனேக புத்ர சந்தானங்களை உண்டாக்குபவளாயும், கற்பு நிறைந்தவளாயும், நல்வாழ்க்கையுள்ளவளாயுமிருப்பாள். பதினாறாவது தினத்தின் சேர்க்கையால் உண்டாகும் ஆண்குழந்தை இலக்கியம், இலக்கணம், கல்வி, கேள்வி, வாய்மை, சாந்தம், யோக சாதனத்தால் ஐம்புலனடக்கல் முதலிய சற்குணங்களை அடைந்தும், சகல வேத சாஸ்திர ஆகம பாண்டித்தியனாகவும், அநேகரைக் காப்பாற்றும் மனமுள்ளவனாகவுமிருப்பான் எனவே ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களும் விளக்கிக்கொண்டிருக்கின்றனவென்பதை யுணர்வாய்.

சுலோசனை:—நாதா! தாமிதுவரையில் சொல்லிவந்த புத்ர சந்தான விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தேன் ஆனல்

ருதுகாலமான 16 தினங்களுள் குற்றமான நான்கு தினங்களையும் நீக்கிச் சுத்தமான ஐந்தாம் நாள் தொடங்கி பன்னிரண்டு தினமே கருத்தரிக்கக்கூடிய காலமெனவும் இப்பனிரெண்டு தினங்களில் ஒற்றைப்படை நாட்களில் சேர்ந்தால் பெண் என்றும் இரட்டைப்படை நாட்களில் சேர்நதால் ஆண் என்றும் இவைகளின் குறைகுணங்களையும் தங்கள் திருவாயினால் சொல்லக் கேட்டறிந்தேன்; ஆனால் மாதமொன்றுக்கு எத்தனைமுறை நுகர்தல் வேண்டுமென்பதைப்பற்றி விரித்துரைக்கவேண்டுகின்றேன்.

மிதச் சேர்க்கை.

வசந்தன்:—தற்போது நம் இந்திய நாட்டில் அநேகர் பெரும்பாலும் பகல் இரவு இந்த இரண்டுவேளைகளிலும் அநேக ஏக்கமாய் ஒவ்நாளும் தவறாது நினைத்தபோதெல்லாம் சுகித்து அதனால்

தேகம் வெளுத்து வாடிவருந்தி வலுவற்று சோம்பலுற்று விழிகள் உட்குழிந்து யாதொரு வேலையும் செய்யச் சக்தியற்றுக் கூடிய சீக்கிரத்தில் தம்முயிரையும் இழந்துவிடுகின்றனர். பகற்காலத்தில் ஒருக்காலும் நுகர்தல் கூடவேகூடாது அதனால் வீரியபங்கம் உண்டாகுமென்பதை யறிவிக்கும்பொருட்டு நமது இராமலிங்கஸ்வாமிகளின் கூற்றைப் பின் கூறுகிறேன்.

நம்மை நஷ்டஞ் செய்வது நான்கு அவையாவன:—ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம். ஆதலால், இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்த நான்கினும் முக்கியமானவை ஆகாரம், மைதுனம் என்பதே. இவ்விரண்டிலும் முக்கியமானது மைதுனம். ஆதலால், இவ்விஷயத்தில் எல்லாவற்றைப்பார்க்கிலுமதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இவ்வாறு இராவிடில் தேகம் அதிசீக்கிரத்தில் கூற்றனுக்கிரையாகிவிடும். முத்தியடைவதற்கு இம் மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தாலதை யடைவது அரிதாயும் இருப்பதால் எவ்விதத்தாலாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்.

தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம். அகல்-தேகம், எண்ணெய்-உதிரம், திரி-சுக்கிலம், பிரகாசம்-ஆன்மா, இவ்வித பிரமாணமுள்ள தீபத்தின் திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ளவிடத்தில் வைத்தாலும், காற்றில்லாவிடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும் விட்டில், பிரமம், மூஷிகம், மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையால் மேற்படி தீபம் நஷ்டமாகின்றது. புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச்சொன்னால் புத்தி விசாலத்தால் மேற்குறித்த அஜாக்கிரதையின்றி தகளிக்குச் சூடேறாமலும் எண்ணெயில் அழுக்கேறாமலும், திரிக்குத் தூசு இறுகல் தளர்ச்சி பெருமன் இவைகளில்லாமலும், சிறுதிரியிட்டு அடிக்கடி தூண்டாமல் தீபத்தை மற்றொரு தினமுமிருக்கச் செய்விப்பான். மேற்குறித்த குற்றங்களோடு தீபமேற்றினால் பதினைந்து விநாடி அல்லது கணம் இதில் சிட்டம் கட்டுவது இயற்கை; தூசு போக்கிவைத்தால் பதினைந்து நிமிஷத்திற்கொருதரம் சிட்டம் கட்டும். விசேஷ அறிவுடையவன் மேற்குறித்த லோகம் முதலியதில் தீபம் வையாது வயிரப்படிகங்களில் அமைத்த தீபத்தகளியின் மேற்குறித்தத் தீப்போய் காரணங்களைத் திராவகமாக்கிச்

சுத்தாக்கினியால் பிரகாசமுண்டாக்குவன்; அப்போது சிட்டமும் பிரகாசநஷ்டமும் நேரிடாது. ஆதலால் நம் தேகத்திற்குப் பழுதுவராமலும், தாதுகெடாமலும், ஆயுளை வளரச்செய்வதானக் காரியாதிகளை உணர்ந்தவனாயிருத்தல்வேண்டும். சுக்கிலமாகியத் திரியை விசேஷமாகத் தூண்டி அடிக்கடி வீணே செலவு செய்துவிட்டால் திரி மாய்ந்துபோய் ஆயுளாகிய பிரகாசத்தைப் பாழ்ப்படுத்திவிடும். ஆனால் சிட்டத்தைமாத்திரம் நீக்கவேண்டுமாதலால், தொளாயிரத்து அறுபது (960) நாழிகைக்கொருதரம் தேக சம்பந்தஞ் செய்து ஆயாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை வெளிப்படுத்திவிடவேண்டும். இது மந்தனுக்கு அதிதீவிர பக்குவியராய் மேற்குறித்த வண்ணம் கடவுளிடத்தில் லக்ஷியமும், ஜீவர்களிடத்தில் தயவுமுடையவனுக்குச் சிட்டம்போன்ற சுக்கிலாபாசம் நேரிடாது தேகமும் நீடிக்கும். சொற்ப ஆயுள் உள்ளதும், கெட்ட நடத்தை கெட்ட சகவாசமும், இடையிடையே ஆபத்துக்குட்படுவதான புத்ர சந்தானமுண்டாவதன்றி, அனந்த வியாதிகளுக்கு உட்பட்டு க்ஷீணிப்படையவும் ஏதுவாகின்றன; ஆதலின், அதிகமான போகத்தை நீக்கி "மாதத்திரண்டுவிசை மாதரைப் புல்குவதும்" என்ற குமரேச சதக வாக்கியத்தின் பிரகாரம் மாதம் இருமுறை நன்மனையாளை மருவுதல் வேண்டும். அதற்கு மேற்படின் பல பிணிகளுக்கும் உட்படுவன் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சுலோசனா:—எனது பிராண ரக்ஷகா! இவ்விதமான கட்டுக்கு அடங்காமல் காமுகனாய் அத்துமீறி போகிப்பானாயின் எவ்விதமான வியாதிகளால் பீடிக்கப்படுவன் என்பதை விவரமாக விளக்கமுறல் வேண்டும்.

வரைகடந்த சேர்க்கையால் வரும் கெடுதி.

வசந்தன்:—பெண்களுக்கு நாயகமாய் விளங்கிய சுலோசனு! மனமகிழ்ந்து கேட்கக்கடவாய். ஒருவன் அளவுகடந்து போகிப்பானுகில் (சுத்த இரத்தம் 60-துளிக்கு ஓர் துளி விந்து வாகின்ற சப்ததாதுக்களுக்கு ஆதாரமாயும், ஜீவாதீனமாய் ஏற்பட்டிருக்கும் எவ்விதமான) வீரியம் ஓர்முறையில் வெளிவருமாயின் எவ்வளவு இரத்தம் குறைந்திருக்குமென்பதை அவன் அறியக்கூடும். இவ்வாறு அபரிமிதமான இரத்தம் குறையவே, ஜீவாக்கினி குறைகின்றது. ஜீவாக்கினிகுறையவே, தேகவுறுப்புகளின் சுபாவத்தொழில்கெட்டு அதனுல் தேகம் கலகலத்துத் தளர்ந்து முகம் வெளுத்துக் கண் குழிஅடைந்து பார்வைகெட்டு ஜீரணசக்தி குறைந்து மலச்சிக்கலடைந்து ஞாபகசக்தியின்றி பலவீனமடைந்து கைகால் நடுக்குற்றுப் போகசக்தியற்றுத் தளர்ந்து சோர்ந்து பிரயோசனமில்லாத மனிதனுய்விடுவான். வேண்

செய்யவும் மனமிராது; சொப்பனஸ்கலிதமும் உண்டாகி, உலகத்தில் அனுபவிக்கவேண்டிய சுகா சுகங்களையே யிழக்கவேண்டியவனாகிப் பலகொடிய சொகிஸ்ரந்திமுதலிய ரோகங்களுக்கும், இலக்காய் விடுகின்றான்.

சுலோசனா:—சர்வானுபவங்களையும், அகத்தடக்கி யான் கேட்கும் போதெல்லாம், அரியவிஷயங்கள் சுரந்துகொண்டேயிருக்கும் மதிவல்லப! போகிக்கத் தகாதனவற்றையும் அதனாலுண்டாகும் தீங்குகளைப்பற்றியும் கேட்க ஆவலுள்ளவளாயினேன். தயவளிப்பீராக?

சேர்க்கைக்குத் தகாதவைகள்

வசந்தன்:—என்மனதைக்களிக்கச் செய்யும் மதிவதனாளே! கவனிப்பாய், விதவைகளிடத்திலும், விழுப்புக்காரிகளிடமும், வயதுமீறியவர்களிடமும், பிறர்மனைவிகளிடமும், ருதுவாகாப்பெண்களிடமும், நோயுள்ளவர்களிடமும்; குரு, சீடன்முதலான பத்தினிகளிடமும், தாயார், தமக்கை, தங்கை, தாம்பெற்றபுதல்வி, தமையன்மனைவி முதலான இரத்தக்கலப்புள்ளவர்களிடமும், தரித்திரர், அங்கவீனர்முதலான ஏழைகளிடமும், மருந்திடும் வேசிகளிடமும், பாபத்தொழி லுள்ளவளாய்ப் பிள்ளையைப் பெற்றுக் கழுத்தைமுறித்தெறியும்கள்ளச்சண்டாளிகளிடமும், தன்புருஷனை மருந்திட்டுக்கொல்லும் பாதகிகளிடமும், அனைவக்கஞ்சாத அரவப்படையுள்ள அகங்காரிகளிடமும், மலடிகளிடமும், ஆணுமன்றி பெண்ணுமன்றியிருக்கின்ற பேடிகளிடமும், எந்தக்காலத்திலும் எந்தவகையிலும் சேரத்தகாது. இவைபறியாது மீறிநடப்பவர்களுக்கு மரணகாலமும், வறுமையிற் சிக்குண்டு அகாலமரணமும், அறிவின்மையும், தேகமெலிவும், பிணி மூப்புக்கூடிய விகாரத்தன்மையும், நடுப்பிராயத்தில் கைகால் குறைவும், குஷ்டரோகமும், சனரும் வெறுக்கத் தக்கதாகத் தேகமுழுமையும் ஆறாப்புண்குழிச்சீழ் நாற்றமும், எங்கனும் பாதகனென்று சொல்லக்கூடிய பழிப்பும், தனக்குண்டாகும்பிள்ளைகள் செவிடு, ஊமை, முடமை, குருடு, பேடிமுதலான ஈனத்தையுடையதாகவும், சண்டாளத்தன்மை யுடையதாகவும், சோம்பேறித்தனமுடையதாகவும், தலைமுறை தலை

முறைமட்டும், பாபகர்மஜென்மனைப் மீளா நரகவேதனைகளை யநுபவிப்பார்களென்று தர்மசாத்திரங்கள் முழங்குகின்றன.

அன்றியும், தம்மனையோடுகூடி சுகிப்பதெனினும், வயிற்றில் குழந்தையுருபற்றியக் கற்பகாலத்தும், குழந்தை பிரசவித்தப்பின்பு சூதகம் வருமளவும் சற்றுக் கிரமக்தவறி கழிவுநீர் அடைப்புண்டு வழுப்புற்றிருக்குங்காலத்தும், மாதவிலுவை காலங்களிலும், ஸ்திரீ சம்பந்தமின்றி பிரிவுற்றிருத்தல் அவசியமேயாம். இவற்றினும், மீறி முாண்பாடாகக்கலக்க முயல்வோர், வயிற்றுக்கடுப்பு, வயிற்றில் கட்டி உண்டாகுதல், வயிற்றில் குழந்தை இறந்துபோதல், சீதளக்கிரந்தி, ஜன்னிநோய், யோனிப்படை, கிராணிமுதலியனவும், பிள்ளைஜனிக்கும் காலத்தும், தாய் அகாலமரணம், நெடுநாள்சீதளம், புத்திரரின்மை, இரத்தக்கழிவு, துர்நாற்றம், தேகத்தளர்வு, சோம்பல் நரம்புபற்றிய நோய்முதலான வியாதிகளால் வருந்துவார்கள். பின்னும் ஸ்திரீகளில் ஜெனனேந்திரியம் பக்குவத்துக்கு வராமலிருப்பதால் மிக்கபலவீனம் ஏற்பட்டுக் கஷ்டத்தையடைகிறார்கள். ஆகையினால் கூடாவாம். சூதகம்வரா நீடிக்குமாயின் மூன்றுமாதத்திற்குமேல் கூடும். இப்படி மூன்றுமாதத்திற்கு மேற்கூடும். ஆடவர் சுமார் ஏழு எட்டு மாத காலம்வரையில் ஜாக்கிரதையுள்ளவராய் வீரியக்கழிவேற் படாது நுகர்தல்நன்மைபயக்கும். குழந்தைக்கும் பால்குறைவு படாமலிருக்கும் என்பதையுணர்ந்து விதியின்படி நடத்தல்வேண்டும்.

சுலோசனை:—தீஞ்சொற்றிளைத்த நேசதுரையே! ஆடவர்கள்மனையாளிடத்தில் எவ்வளவு காலம்வரையில் சல்லாபங்களை அடைய யோக்கியமுண்டு. என்பதைத் தெரிவிக்கவேண்டுகின்றேன்.

நுகரும் கலவியின் காலஅளவும் ஸ்திரீகளின் பருவமும்.

வசந்தன்:—மின்னாலைகர்த்த திருநுதலாளே! வாலை, தருணி, பிரௌடை, விருத்தையென மாதர்ப்பருவம் நான்காக வகுக்கப்பட்டிருக்கிறது. குழவிப்பருவமுதல் 16 வயதளவும் வாலைப்பருவம் 17-முதல் 30-வயதளவும், தருணிப்பருவம்; 31-முதல் சூதகிற்கும் காலமாகிய 50, 55. வயதளவும், பிரௌடை; அதற்கு

மேல் முடிவுகாலவரையில் விருத்தையுமாம். இவ்விதமான பருவமுடைய மாதர்களிடத்தில் வாலருதுவான இரண்டு வருஷங்கள் கழித்தும், தருணியில் சற்றுக்கூடியும், பிரௌடையில் சற்றுக்குறைத்தும்,இரண்டுபருவங்கள் பூர்த்தியாகவும்,சரசசல்லாபங்களே அனுபவிக்கக்கூடுமான கால அளவு எனத்தெரிந்து கொள்வாயாக. இதைப்போலவே ஆண்மக்களும், 25 வயதுக்கு மேல் ஸ்திரீசம்பந்தம் ஏற்படுத்தல் கூடும். இதற்குக் குறைவுபடின் பிறக்கும் குழந்தைகள் தேரை, தேவாங்கு, எலிக்குஞ்சு, பூனைக் குட்டியைப்போல வலிவற்ற தேக முடையவர்களாயும், அற்ப ஆயுளாயும், அடிக்கடி பற்பல பிணிமுதலான ரோகிகளாயும், வருத்தத்தோடு கூடிய சீக்கிரத்தில் அகாலமரணத்திற்கும், ஏதுவாகின்றனர். இவ்விஷயத்தை ஜனங்கள் முக்கியமாய்க் கனிக்கவேண்டும். அநேகர் "கண்ணிருக்கும்போதே மகனுக்குக் கலியாணஞ் செய்துவிட" வேண்டுமென்று காலமில்லாக் காலத்திலும் சுக்கிலம் முதிராத வயதுள்ள ஆண் பிள்ளைகளுக்குத் திருமணத்தைச் செய்துவிடுகிறார்கள். ஆகையால் நடுத்தரத்தில் சக்தியற்று சுக்கிலபங்க மேற்பட்டுக் கூனி "இடுப்பொடிந்த கோழியைப்போலாகிவிடுகிறதுமன்றித் தாங்களும் தம் மக்களும் பிணியினால் பிணிக்கப்பட்டுச் சீக்கிரத்தில் உயிரிழந்தும் விடுகிறார்கள்.

சுலோசனா:—புகழ் பெருகிய எனதருங்காதல! பருவமாதர்களே எந்தெந்தகாலங்களில் எங்ஙெந்த விதமாக அவர்களைத் திருப்தி செய்து நடத்தவேண்டு மென்பதை அடியாள் உணரும்விதம் தெரிவித்தருள்க.

பருவமாதர்களைத் திருப்திசெய்யுமுறை.

வசந்தன்:—மாதர்களினும் நன்ன அறிவிற்சிறந்தகாதலி! ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை முதலிய முதுவேனிற்காலம் ஆகிய இந்நான்கு மாதங்களில் நறுமலர்சூடி, களபச்சேரணிந்து, பன்னீர் தெளித்து, தென்றல்உலாவச்செய்து, இனிய கனிவர்க்கங்களை உண்ணச்செய்து, ஏலம், தக்கோலம்முதலிய பஞ்சவாசங்களையும் சேர்த்துத் தாம்பூலங்கொடுத்துக் களிக்கச்செய்து, பாலைப்பருவத்தையுடைய கன்னிகையை மணக்கத் தெள்ளிய மனக்குதூக

லமும், புருஷனிடத்தில் அதிகவாஞ்சையும், உல்லாசமான வாய்மொழியும், தேகாரோக்கியமும், நீடிய அன்பும், வலிவுமுதிர்ச்சியும், நல்வாழ்வும், பிரியாவின்பமும், புஷ்டியும், இதனால் தேஜசும், புத்திரப்பற்றும், உஷ்ணசரீரமும், உடையவளாயிருப்பாள்.

தருணிப்பருவத்தினளை மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய முன்பனி பின்பனி காலங்களில் அவள் மனதுக்கேற்ற ஆபரணங்களால் அலங்கரித்துச் சித்திரக்காணங்களால் மணக்கச்செய்தால் எக்காலும் இடையறாப்பிரியங் கொண்டவளாயிருப்பதும்தவிர தேக சௌக்கியமும், புத்திரசோகமும், சல்லாபங்களால் பஞ்சேந்திரியங்களுக்கு இன்பமும், வாதபித்த தேகியாயுமிருப்பார்கள்.

பிரௌடையைச் சித்திரை, வைகாசி, ஆவணி, புரட்டாசி முதலிய இளவேனிற் கார் ஆகிய காலங்களில் சாஸ்திரோக்தமாய் ஆலிங்கனம், சம்பனம், நகக்குறி, பற்குறி, தாடனம்முதலிய ஆடலின் சம்போகக்கிரமப்படி மகிழச்செய்தலால், எக்காலும் பிரியமனமுடையவளாயிருப்பதும், இல்லறத்தில் இன்பமும், சந்தானப்பெருமையும், ஞானமும், குடும்பவாழ்க்கையில் விருத்தியுமுண்டாகும்.

விருத்தைப் பருவமுடையவள் போகப்பிரீதியை நீக்கியிருத்தலும், பிரியப்படாத வேட்கையுற்றிருப்பதும், எக்காலத்தும்குன்றிய வீரியத்தால் பழமைபாராட்டித் தளர்ந்த சோகத்தையுடையவராய்ச் சலித்து வாழ்வார்கள். புத்திரபாசமும் உண்டு.

கலோசனு:—எனது கேள்விக்கிசைந்து மறுமொழிபுகலும் அறிவிற்சிறந்த நாயகனே! மாதர்கள் புருஷசம்பந்தத்திற்குப் பக்குவகால ருதுவானபிறகும், பெண் இரண்டுவருடகாலம் தாமதிக்கவேண்டுமென்பதை விளக்கியருளல்வேண்டும்.

ருதுகால போகத்தால்வரும் கேடுதி.

வசந்தன்:—பொற்பாவையை யொத்தமாதே! பெண்கள் ருதுவான பிறகு இரண்டுவருடம் தாமதிக்கவேண்டிய தவசியம். ஏதற்கெனின் 25-வயதுக்குட்பட்ட ஆண்பாலர் கலவிக்குட்படில் அவர்களுக்குளவ்விதத்தீங்குகள் சேரிடுகின்றனவோ அதைப்போலவே பெண்களுக்கும் மேற்கூறிய கர்மபாப விதியின்படி தோஷம்,

தேவாங்குமுதலிய குழந்தைகளைப் பெறுவதும், தேகமும் பல வீனமடைந்து அதிசீக்கிரத்தில் திரையென்னும் திரேகத்தளர்ச் சிக்கும், அகாலமரணத்திற்கும் ஆளாவார்கள். இதுபற்றியே முதியோர்கள் ஆடவனுக்கு 25-வயதுக்குமேலும் பெண் களுக்கு வாலைப்பருவ அந்தியிலேயும் மணமுடிக்கின்றனர். ஆங் கில நாட்டார் பெண்களுக்கு 25, 30 க்கு மேலும், ஆண்களுக்கு 35, 40க்கு குறைவுபடாமல் விவாகம்செய்துகொள்வதால் மிக்க வலிவுள்ளவர்களாயும், நீண்டவயதுள்ளவர்களாயும், பிணியில் லாததுமான பிள்ளைகளைப் பெற்றெடுப்பவர்களாயு மிருப்பதைக் கண்ணுறக்காண்கின்றோமல்லவா?

கலோசனு:—எனக்குகந்த மணவாளா! தாங்கள் இதுவரையில் உணர்த்திவந்த சாதிபேதத்தையும் விவாக விவரத்தையும், வாழ்க்கைத்துணைவியின் குணகுணங்களையும், சேர்க்கையினின் பம், சேர்க்கையில்துன்பம், மாதர்களின் மாதகால பிரயாண மும், வயதளவும், ருதுகாலசந்தானவிவரங்களும் மற்றும் ஐயந் திரிபறக் கேட்டறிந்தேன். ஆனால் சாஸ்திரோக்தமாய் ஆலிங் கனம், சும்பனம், நகக்குறி, பற்குறி, தாடனம்முதலிய சம் போகக்கிரமப்படி கூடவேண்டுமென்றும், காரணமென்று சொல் லாமல் சித்திரக்கரண மென்றும் சொல்லியதின் விவரத்தை முறைப்படி அடியாள் உணரும்படி விளக்குதல்வேண்டும்.

கலவிக் கிரமம்.

வசந்தன்:—மயில்போன்றசாயலுடைய மடமாதே! நீகேட்கும் கேள் விக்குமெச்சினேன். இனி யான் சொல்லப்புகும் விஷயத்தில் அதிககவனம் செலுத்துவையேல் மிகப்பெருமை யுடைத்தா யிருக்கும். முன்கூறியபடி நீக்கவேண்டிய தியநாட்களை நீக்கி நன்மையுள்ள மற்றதினங்களில் தம்பதிகளிருவரும் தித்தித்தல், புளித்தல், உவர்த்தல், துவர்த்தல், உறைத்தல், கைத்தல் முத லிய அறுசுவையோடு கலந்த இரவுபோஜனம் செய்தபிறகு சிறிதுநேரம் தென்றல்பட உலாவிக்கொண்டிருந்து பின்பு தங் களைப் புதுவஸ்திரா பரணங்களால் அலங்கரித்துக்கொண்டு சுத்தமான காற்றுவரக்கூடியதும், மலர்ந்தபுஷ்பச்செடிகளருகி லிருக்கக்கூடியதும், இருபக்கங்களிலும் ஜன்னல்களுள்ள சயன

அறைக்குள் கண்கூசப்படாத விளக்குவெளிச்சம் இருக்கக் கூடியதும், பரிசுத்தம்பொருந்திய வாசனைத்திரவியங்கள் வீசிக் கொண்டிருக்கும் இலவின்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத்தூவிமுதலான பஞ்சசயனத்தின்மீது உட்கார்ந்து சிற்சில வர்ணனைகள் வீணையுடன்பாடும் பாடல்களோடு ஆரவாரங்கள் செய்து மனதை ஒருமைப்பட வுருவகப்படுத்தித் தக்கோலம் முதலிய தாம்பூலந்தரித்துச் சிறிதுநேரஞ் சரசவார்த்தைகளைப் பேசியவண்ணமாய் ஆடவன் தன்முகம் நோக்கக்கண்டு நாணிச் சிறுபார்வையுடன் புன்சிரிப்புள்ளவளாய்த் தன்னிரு விழியி லும் குளிர்ச்சிகாணத் தனக்குகந்த நாயகனை நோக்குங்கால் ஆடவன் முகத்தைக் கீழ்நோக்கியவண்ணம் மயங்கி வேட்கை மிகுந்தவளுய் மருவிணைந்து வாடுவதை மனையாளறிந்துவெறுக் கத்தக்கதான பிணக்குகளையுடவிட நாயகன் மலர்ச்செண்டு களால் மோதி செவ்விய கபோலந்தடவி முத்தமிட்டுக் கல விக் கேற்ப விளையாட்டுகளை முறைமைப்படி வழங்கி பேரியா வின்ப சாகரத்தில் மூழ்கியவர்களாய் "ஊடுதற்காமத்திற்கின்ப மதற்கின்பங்கூடி முயங்கப்பெறின்" எனும் ஆன்றோர்கருத்தின் படி மருவிசுகித்தல்வேண்டும்.

பின்னும் கலவிக்கு அங்கமாகிய புறத்தொழில், அகத்தொழில், அகப்புறத்தொழில் என மூன்றில் முதற்பகுதியாகிய புறத்தொழில் ஆரம்பிக்கவேண்டும். இப்புறத்தொழில் பலவிதப்படும். அவை வருமாறு:

"புல்லுதல் சுவைத்திடல் புணர் நகக்குறி
பல்லுறன் மத்தனம் பயிலுந் தாடனை
மொல்லொலி கரணமோ டுவகை யாதிய
வெல்லையில் புணர்விலச் கியைந்த னென்பவே." (கந்தபுராணம்)

"ஆலிங்கன மைந்துமிதழ் சும்பனம் பதினொன் று
மயிர்தம் பதினாறு முகிரெழுதாங் குறியெட்டுங்
கோலம்புனை தந்தக்குறி யெட்டுங் குரலெட்டுங்
குலிதாடன மிருநான்கொடு கூடுங் கலவிக்கே." (மதனதந்திரம்)

ஆலிங்கனம் 5. சும்பனம் 11. அயிர்தமிலை 16. நகக்குறி 8. தந்தக்குறி 3. குரல் 8. தாடனம் 8. மத்தனம் அல்லது அங்குலியோகம் 8. ஆக கலவிக்குரிய புறத்தொழில் எட்டுவகைப்படும். இதில் ஆலிங்கனம் 5-வகை என்பதின் விவரம் கூறுவாம்.

ஆலிங்கனம் 5-ன் விவரம்.

"உறுத்தலே நெருக்கன் மெல்ல வுரோசுத லூறுகன் மூன்று
மறுத்தவிர் தருவு சூழ்ந்த வல்லிபோ மரமேற் கோடல்
செறித்தவெள் ளரிசிபாலார் நீம்புனல் செயிரதீர் காட்சிப்
புறத்திலா குறுப்பு றுத்தல் புணர்ச்சியிற் புல்லற்பாலே."

(கந்தபுராணம்)

முதலாவது, கொடிபோலச் சுற்றித்தழுவுதல். இரண்டாவது, மரத்திலேறுவதுபோ லேறித் தழுவுதல். மூன்றாவது, எள்ளும் அரிசியும் கலந்த கலவைபோல கலவாது கலந்து தழுவுதல். நான்காவது, பாலும் நீரும்போல ஒன்றுபடத்தழுவுதல். ஐந்தாவது, இடையால் நெருக்கித்தழுவுதல்.

சும்பனம் 11-ன் விவரம்.

சும்பனம் என்பது சுவைத்தல் என பொருள்படும்.

"வைத்தலே துடித்த லொற்று மாமொப்பு விலங்கு சுற்றே
யுத்தர மதுக்க லுள்ளீ டோங்குசம் புடாதி தன்னாற்
பத்துட னொன்று மேனைப் பல்வகை யுறுப்பு நாடி
முத்திறத் தமிர்த முண்டன் முன்மொழி சுவைத்தலாமே."

(கந்தபுராணம்)

வைத்தல், துடித்தல், ஒன்றுதலிரண்டும், சமமுறபிற்றல், விலகிற்றல், சுற்றுதல், மேலுதடதுக்கல் முதலியவையாயுயர்ந்த சம்புடாதிகள் பதினொன்றும், பிறவும் விழி, கபோலம், கொங்கை, நெற்றி, கைமூலம், நிதம்பம், இதழ், உந்தி, மார்புமுதலானஉறுப்புகள் நாடி மூணிதமாக மாறி மாறி அமிர்த முண்டல்.

நகக்குறி 8-ன் விவரம்.

சுரிதக மென்னுட் டிங்க டேமண் டலமே மஞ்ஞை
யிரலடி முயலின் புன்கா னெய்தலி னிதழே வேங்கை
யுருகெழு நகவி ரேகை யுருவலே முறைப்பி லெங்கும்
வரன்முறை நகத்தாற் றீட்டல் வள்ளுகிர்க் குறிய தன்றே.

(கந்தபுராணம்.)

கைமூலம், மார்பு, தோள், பிடர், கழுத்து, விலாப்புறம், கபோலம், ஸ்தன்யம், கடிதடம், வாய், தொடை முதலிய 11 இடத்தில் நகத்தைப் பலபல விதமாக அந்தந்தஸ்தானத்திற்கு தக்கமாதிரி அதாவது நகத்தை வளைத்தும், எதிரெதிராக நகங்களைச் சேர்த்தும் முதலிய எண்வகைகளால் மேற்கண்ட உறுப்புகளில் பொருந்தும்படி அழுத்துதல் வேண்டும். பலவிதமாக அழுத்துவதற்கு அர்த்த சந்திரன், மண்டலம், புலிநகம், மயூரபதம், முயலடி, உற்பலம் முதலான பேர்களுடன் வழங்கப்படும்.

தந்தக்குறி 8-ன் விவரம்.

துவர்படு பவள மாலை சுனதழு டிகமே யேனக்
கவரடி பணிபோழ் வட்டக் கண்டப் பிரத முற்று
மிவைபல பிறவும் போல வின்னமு துண்ட தான
மவைதயி னெறியாற் றந்த மழுத்தல்பற் குறிய தம்மா.

(கந்தபுராணம்.)

சும்பனுதி ஸ்தானங்களில் விழிநீக்கிய மற்ற ஸ்தானங்களில் பற்களால் அழுத்திப்பற்குறி தோன்றும்வண்ணம் கடிப்பதற்கு தந்தக்குறி என்று பெயர். இவ்வித பற்குறி தோன்றியும் தோன்றாதும் அந்தந்த ஸ்தானத்தில் வைக்கும் குறிக்கு மூஷிகம், அனுச்சூனகம், பிரவாள மணிபிந்து, மணிபிந்துமாலை கோசலவிதம் எனப் பலவித பெயரும் சொல்லப்படும்.

குரல் 9-ன் விவரம்.

மயில்புறா வன்னங் காடை வண்டுவா ரணஞ்செம் போத்தக்
குயிலென விசைக்கு மெட்டின் குரலினை பயின்று காம
ரியலுறு மகளிர் பாங்க ரெய்துழி யிவையில் வேண்டுஞ்
செயல்வகை புரியு மாறு சிறந்தவின் கார மாமே.

மேற்கண்டவாறு ஆலிங்கனம், சும்பனம், நகக்குறி, தந்தக்குறி முதலியவைகள் செய்துவருங்கால் தலைவியானவள் ஆசையில் மதி மயங்கி கண்கள் சிவந்தும், வார்த்தைக் குழறியும், பாற்கும்பம் பாரிக்க மயில், புறா, அன்னம், காடை, கோழி, குயில், சகோரம்,

வண்டு ஆகிய எண்விதப்பட்ட சுரலோசனைகளைக்காட்டி மோகவழு க்கைத் தோன்ற தலைவனை இறுகத் தழுவ வருவாள். அதுசமயம் அறிந்து தாடனம் செய்தல் வேண்டும்.

தாடனம் 8-ன் விபரமும் அங்குலியோகம் 8-ன் விவரமும்

உரமுதலைந்தி லைம்பா லுணர்தொழின் முறையா லேற்பப்
பொருவரு புணர்ச்சி வேலை புடைத்திடல் புடைப்பதாகும்
கரிகர மாதியாய கனக்குழை மகளிர் வெலிகை
மருவிய வழியா டன்றே மத்தன மென்ப வல்லோர்.

(கந்தபுராணம்)

உச்சி, மார்பு, சகனம், முதுகு, கபோலம், நெற்றி, இடை முதலிய ஸ்தானங்களில் முறையே கைவிரல், குவித்துத்தட்டல், குட்டல், அகங்கையால் தட்டல், மெல்லெனக் குத்தல், தர்ஜனியா லூன்றல், தர்ஜனியாலும், மத்திபத்தாலு நெருக்கல். மேற்படி விரல் களை மடக்கிப் பற்றுக்குறடுபோலப் பிடித்தல், தர்ஜனியால் தருவு தல் முதலிய விதமாகச் செய்து தொடர்புறவே அகப்புறத்தொழி லாகிய அங்குலியோகம் செய்தல் வேண்டும்.

சுரோணித சம்பந்தமாய் வாதுமைப் பிளவைப்போன்ற உச்சி யில் லிங்கம்போன்ற நாடி ஒன்று தோன்றும் அதற்கு யோனிலிங்க மென்றும், பிறவிப்பந்தன லிங்கமென்றும்பெயர்பெறும். இதுஸ்பரிச நரம்புகளால் நிரம்பப்பெற் றுளதாதலால் அதைவிரலால் மெல் லெனச் சுற்றிடின் தேகம் புளகாங்கிதமடைந்து மிக்க இன்பத்தை பூர்ஜிதப்படுத்தும். மறைவிடத்தில் கைவிரலழுத்தப் படுவதால் மனம் வெறுப்படையாது. சுகபோகசாரத்திலே மகிழ்ச்சி ஏற் பட்டிருக்கும் அவ்வகையே அகத்தொழிலை நிறைவேற்ற வேண்டும். இவற்றுள் அங்குலியோகமேசிறந்ததாகும். அன்றியும், மாதர்க ளுக்கு எந்தெந்தகாலங்களில் எந்தெந்த விடத்தில் அமிர்தநிலை யிருக்கு மென்பதை அறிந்து, அந்தந்த ஸ்தானத்துக்குரிய சும்ப னம், நகக்குறி, தந்தக்குறி, தாடனம், அங்குலியோக முதலியவைக ளைச்செய்து அமிர்தத்தைத் தத்தமிடத்தை விட்டெழச்செய்து முறையேலீலைகளைச் செய்து இருவர் போகமும் ஒருசமயத்தில் விட வேண்டும். இப்படி இருவரும் ஓரேசமயத்தில் மகிழ்வதால் மனைவிக் கும் புருஷன்மீது அதிக அன்பு ஏற்படக் கருவுபற்றிப் புத்ரசம்பத்

துண்டாகும். புருஷன் வார்த்தைக்கு எதிர்பேசாது அவர் சொற்படி அடங்கி ஒடுங்கி நடப்பாள். கர்மத்திற்கேற்பவாய்த்த மனைவி, தன் சாதிக்கு மாறுபட்டவளாயினும், அதமகுண குணங்களையும் அங்க அடையாளங்களையுமுடையவளாகிய சங்கினி, அத்தினி முதலியகீழ்த்தரமான ஸ்திரீகளைத் தன்வயப்படுத்தி நடத்தவும் கூடும்.

சுலோசனை:—நாதா! அமிர்த நிலை பதினாறு என்றும், அவை காலத்திற்குத் தக்கவாறு மாறிக்கொண்டே இருக்குமென்றும், அதை அறிந்து நடக்க வேண்டுமென்றும் பகர்ந்தீர். ஆயினும், அமிர்த நிலை தங்குமிடமாகிய 16-ஸ்தானத்தின் விவரத்தையும் எந்தெந்த காலங்களில் எவ்வெவ்விடத்து இருக்குமென்பதையும், அவ்வமிர்தத்தை எந்தெந்த விதமான தொழிலியற்றி வருவிக்க வேண்டுமென்பதையும் அடியாள் அறியும்படி விளக்கவேண்டும்.

வசந்தன்:—மானைப்போன்ற அழகிய நோக்கத்தை உடையவளே! நீ கேட்டக் கேள்விக்கு விடைசெய்கின்றேன், அதியூக்கமாய்க் கேட்டு மகிழ்வாயாக.

அமிர்தநிலை 16-ன் விவரம்.

அமிர்தம் நிற்குமிடங்கள். பெருவிரல் 1. புறந்தாள் 2. பரடு 3. முழந்தாள் 4. நிதம்பம் 5. நாபி 6. மார்பு 7. தனம் 8. கைமூலம் (அக்குள்) 9. கழுத்து 10. கபோலம் 11. வாய் 12. கண் 13. நெற்றி 14. உச்சி 15. ஆக இதில் அரையைச் சேர்த்து 16 என்றும் சொல்லப்படும். இஃது ஆராய்ச்சியில் பூர்வபக்ஷத்தில் இடப்புறமாக பெருவிரலிலிருந்து ஏறியும், அமாபக்ஷத்தில் வலப்புறமாக உச்சியிலிருந்து இறங்கும் தொழிலை உடையது. மாதர்கள் மாதருதுவான காலந்தொட்டு கருக்கமலம் வாய்மூடுங்காலம் வரையில் பூர்வபக்ஷமென்றும், அதன்பிறகு மாதவிடாயாகும் காலம் வரையில் அமாபக்ஷமென்றும், இவ்விரண்டும் சேர்ந்ததே மாதர்களுக்கு ஒரு மாதமென்றும் கருதவேண்டும். சிற்சிலர் கூறும்படியான வளர்பிறை தேய்பிறை கணக்கு இங்கு உதவாது அவைப் பிரயோசனமின்மையாகும். மாதர்கள் தலைமுழுக்கு ஆனதிலிருந்து வீட்டுக்குத் தூரமாகும் நாள் எத்தனைப்படுமோ அதனில் ஒருநாள் முன்பின்னாக பாதிநாள் வரையில் கருக்கமலம் வாய்திறந்திருக்கும் மாதர்களுக்கு

வீட்டு விலக்கம் சரிவர கிரமமாய் ஆகாமல் 25-நாளைக்கு ஓர் முறையும், 35-தினங்களுக்கு மேற்படாமலும் ஆகும். இதனால் அமிர்தநிலை மாறுபடுகிறது. இப்படி மாறுபட்ட அமிர்தநிலையைக் கண்டுபிடிப்பதின் மார்க்கம் எப்படியெனின்; வீட்டு விலக்கமாகும் காலம் எத்தனை நாள் செல்லுகிறதோ அத்தனை நாட்களையும் மணிகளாக்கி 30-நால் பாகித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக:

அமிர்தநிலை கண்டுபிடிக்கும் வழி.

ஆவணி மாதம் 5-தேதி மாலை 3-மணிக்கு இராஜஸ்வலையான ஓர் பெண், புரட்டாசி மாதம் 9-தேதி காலை 9-மணிக்கு மறுதரம் வீட்டு விலக்கமானால், ஆவணி மாதம் 25-தேதி முதல் புரட்டாசி மாதம் 9-தேதி வரையில் (ஆவணி மாதம் 3-தேதி ஆனபடியால்) 35-தினம். இந்த 35-நாட்களையுமணியாக்குவதற்கு (ஒருநாளைக்கு 24 மணியானபடியால்) 24-ஆல் பெருக்கி விடவேண்டும். 35+24=840 மாலை 3-மணிக்கும் காலை 9-மணிக்கும் 6-மணிநேரம் குறைவுபட்டிருந்தால் 840-ல் 6-ஐக் கழித்து விட்டால் 834-மணி ஆகும். இந்த 834-மணியை நாள் ஆக்குவதற்கு (ஒருமாதத்திற்கு 30-நாள் ஆனபடியால் 30-ல் வகுக்கவும். 834÷30=27-மணி, 48 நிமிஷம், இதுவே இப்பெண்ணின் ஒருநாளென்றறிந்து மேற்படி புரட்டாசி மாதம் 24-தேதி மேற்படி பெண்ணுடன் புருஷன் சம்பந்தப்படவேண்டியிருக்கின், அமிர்தநிலை எவ்விடத்திருக்குமென்பதைக் கவனிக்கவும். அதாவது, சாதாரணமாக ஒரு நாளைக்கு 24-மணிநேரம் இப்பெண் இராஜஸ்வலையான 15-நாள் சேருகிறபடியால் 15-நாளை 24-மணியில் பெருக்கவும், 15+24=360 மணியாகிறது. இப்பெண்ணுக்கு 27-மணி 48-நிமிஷம் ஒரு நாள் ஆகிறபடியால் 360 மணி இந்த பெண்ணுக்கு எத்தனை நாள் ஆகும் என்பதைக் கவனிக்கல் வேண்டியபொருத்தமாக 13-நாளால் பெருக்கவும், 27—48+13=361—24 நிமிஷம். மேற்படி 25-தேதி காலை 10-மணி 24-நிமிஷம் வரையில் 13 நாளாகிறபடியினால் அதற்கு மேற்பட்டு இரவில் கூடுகின்றபடியால், 14-வது ஸ்தானமாகிய நெற்றியில் அமிர்தமிருக்கிறதென்று தெரிந்து அதற்குத் தகுந்த தொழிலேற்றி வேட்கையைப் பெருகச்செய்து அகத்தொழில் புரியவேண்டும்.

அமிர்தம் நிற்குமிடத்திற்குத் தக்க தொழில்.

உச்சி:—(உச்சியில் அமிர்தம் இருப்பதாக மேல்கண்ட அந்த வகையில் தெரியவந்தால்) உச்சிமயிரைப் பின்னுக்கு வாங்கி அவ்வுச்சியிலே நகத்தாலூன்றிக் கோதுதல். (உச்சியிலேயற்றுந் தொழில் நகக்குறி.)

நெற்றி, கண்:—கனிபோல் சுவைத்து நாவினாற்றடவுதல். (நெற்றி, கண்—சும்பனம்.)

வாய்:—இதழைச் சுவைத்து நாவினிற் பல்லினாற் றடவுதல். (வாய்—சும்பனம் தந்தக்குறி.)

கபோலம்:—இனிய மாம்பழம்போல் சுவைத்திடல். (கபோலம்—சும்பனம்.)

கழுத்து, கைமூலம்:—கனிபோலச் சுவைத்துப் பல்லினால் அழுத்திக் கூர்மை பொருந்திய நகத்தினால் , ஊன்றுதல். (கழுத்து—சும்பனம், தந்தக்குறி, நகக்குறி.)

ஸ்தனம்:—குழையும்படிபற்றிக் கண்ணை நெருடுதல். (ஸ்தனம்—தாடனம்.)

நெஞ்சு அல்லது மார்பு:—கூரிய நகத்தாலூன்றி வாயினால் கௌவுதலும், இரண்டுகையும் சேர்த்து அகங்கைத்தாடனம் புறங்கைத்தாடனம் முறையே செய்தல். (மார்பு—நகக்குறி தாடனம்.)

நாபி:—நாவினாலும், விரலினாலும் சுற்றுதல். (நாபி—சும்பனம், தாடனம்.)

நிதம்பம்:—கரிகரங்கை அதிலிருக்கின்றமணியை (யோனிலிங்கத்தை) சுவைத்தலும், நெருடுதலும், (பிறப்பிடம்-அங்குலி யோகம் சும்பனம்.)

முழந்தாள், புறந்தாள், பாடு, காலின்பெருவிரல்—கையினால் பிசைந்திடுதல். (முழந்தாள் முதலியவைகளுக்கு—தாடனம்.)

இவ்விதமாக அமிர்தம் நின்ற இடத்திற்கு 7-ம் இடத்தில் விஷமிருக்கும். அவ்விடத்தில் கலவிக்குரிய புறத்தொழிலைச் செய்யக் கூடாது. அப்படிச்செய்யின் அபாயத்திற்கிடமுண்டாகும். ஏழாமிட

மென்பது சந்தேகத்திற்கு இடமாகிறது. ஆனால் 5-ம் இடமென்றே கருதவேண்டியிருக்கிறது. எப்படிஎனின், மாதவிடாயான அன்று, அமிர்தநிலை இடதுகால் பெருவிரலில் இருக்கிறதாகையால் சமது சொற்பிரகாரம் அதற்கு 5-வது ஸ்தானமாகிய நிதம்பத்தில் விஷம் இருக்கிறது. இதனால்மாதவிலக்கான முதற்றினத்தில் ஆடவன்சம்பந்தப்படின் அங்ஙனமிருக்கும்விஷம்தாக்கி ஆடவன் உயிரைக்கொள்ளை கொண்டு அந்தகன் நகருக்கு அழைத்துச் சென்று விடுகிறது. இது அநுபவத்தில் திட்டமாகக் காணலாகும். நாள்களிலும் அதனால் வரும் தீங்கும் நன்றாய் வரையப்பட்டிருப்பதாலும், அமிர்தம் நின்ற இடத்திற்கு 5-வது ஸ்தானத்தில் விஷமிருக்கும். 7-ம் இடத்தில் கலவிக்குரிய புறத்தொழில் செய்யாததைப்போலவே இவ்விடத்தும் வெகுஜாக்கிரதையாகவே இருத்தல்வேண்டும். இவ்விதமாகச் சுகித்தாலன்றி சமகலவிக்கும் இன்பத்திற்கு மிடமிராது. இவையறிந்தபின்னர் கலவித்தொழில்செய்தல்வேண்டும். இவற்றையே சித்திரக்கரணமென்று சொல்லப்பெறும். இனி அகத்தொழிலாகிய சித்திரக்கரணத்தைச் சொல்லுவோம்.

அகத்தொழில்.

சித்திரக்கரணங்கள் 48-ன் விவரம்.

பாரியில் கிராமி யஞ்சேர்ப் பவுத்திக நாக பாச
மோரிய ஞக ரீக மிந்திரா ணிகமே கூர்மஞ்
சாரித மர்ய்த மூர்த்தஞ் சங்கிரா ணிகமண் டேகம்
பாரிசம் பிடிதஞ் சூலஞ் சுரும்பிதம் பதும பீடம்.

எண்டகுஞ் சம்பு டம்வேட் டிதம்விசும் பிதமுற் புல்லம்
பிண்டிதம் பிடிதம்மே பிரேங்கை யதுபதந்தான்
பண்டிதங் கடக மத்த பத்மவா சனஞ்ச மூர்த்தங்
தண்டக. லளிதம் வேனுச் சாரிதஞ் சமவே சன்னம்.

ஆடவஞ் சம்பு டத்தேர டமர்புரி வத்த கஞ்சங்
காடகந் தேனு கம்பழ் கடகமைம் பதமே சானு
மாடமர் அகிலம் பீன மாத்திக மேகூர்ப் பன்னம்
பீடிதோ ருகமம் பீதம் பீடிகை யோடு பின்னும்

ஓட்டுவிக் கிரம மேகோ பூதக மென்னு நாற்பா
னெட்டெனத் திறத்தி னாலு மிவைபல பிரிவாற் றாலு
மட்டமர் குழலி னார்கள் மகிழ்தர மதனா னேருஞ்
சிட்டர்கள் புணரும் பான்மை சித்திரக் கரண மாமே.

இப்பாட்டுகளுள் சொல்லப்பட்ட கிராமியமாதியாகியுள்ள சித்திரக்கரணங்கள் ௪௮-ம் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை செய்யாது தன் சாதிக்கும் (குறிக்கும்) மனைவியின் சாதிக்கும் (குறிக்கும்) ஒவ்வாததைத் தள்ளிப் பொருத்தமுள்ளதைத் தேர்ந்து எடுத்து அவைகளைச்செய்து வேட்கையைத் தணிக்கக்கடவன். இவ்விதம் எவனொருவன் செய்கின்றானோ அவனே ஆடவருள் முதன்மையாக மதிக்கப்படுவதும் தவிர, தானும் தன்மனைவியும் உலகத்தில் அனுபவிக்க வேண்டிய சுகத்தைப் பூரணமாய் அனுபவித்து, விருத்தைப் பருவமின்றி இல்லறம்நடத்தி வாழ்வார்களென்பதே.

சுலோசனை:—வண்டுகளானது தேனைக்குடித்து உமிழ்கின்ற பூமாலையையுடைய மார்பனே! நீவிர் இதுபரியந்தம் சொல்லி வந்த கலவிக்கு அங்கமாகிய புறத்தொழில், அகத்தொழில், அகப்புறத்தொழில், இவை யாவும் சங்கையற உணர்ந்தேன். ஆனால் இவைகளுக்கு முக்கிய காரணமாயிருக்கும் காதல், அல்லது மிக்கவேட்கை என்பதைப்பற்றியும், அவை எப்படி உற்பத்தியாகின்றது என்பதைப்பற்றியும், அதனால்உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் அடியாள் விரும்பிய வண்ணம் சொல்ல வேண்டும்.

காதல் உற்பத்தியும் குணமும்.

வசந்தன்:—நேர்மையாயுள்ள பூங்கொடியாய்! காதல் என்பது ஆசை எனப் பொதுப் பெயராகும். சிறப்புப் பெயராக நோக்குங்கால் காமம் என்பது மனைவியின்மேல் ஏற்படும் ஓர்வித ஆசையின் நிகழ்ச்சியாகும். கண்ணுக்குப்பிடித்தமுள்ள ஒரு மாதை நேத்திரம் நோக்கியமாத்திரத்தில், கண்களில் உள்ள நரம்புகளின் உதவியால் அந்தக்ஷணமே தான் அறிந்து இருதயத்திற்குத் தெரிவித்துவிடுகின்றது. இருதயம் அறிந்தவுடனே புத்தியும் அறிவும் சித்தமும் அவயவங்களும் அதற்கு உடன்பட்டு வெண்ணரம்புகளின் நெறியே ஆவியும் நாடிநரம்புகளின் மார்க்க

மாய் ஆத்மாமசத்தும், புழைகரம்புகளின் வழியாய் இரத்தமும் லிங்கஸ்தானத்தில் பிரவேசித்து அதிக இச்சையை உண்டாக்கிவிடுகின்றது. இச்சையின் அதிகரிப்பால் சுத்த இரத்தமாகிய மூலலிங்கு பீஜத்தினிடையே நின்று வெளிப்படும். அன்றியும்வேட்கைக்குரிய பற்பலகலவிக்கிரியாதிகளாலும், சிற்றின்ப ஆடல்பாடலாலும், பதுமைமுதலிய பாவனைகளாலும், கண்டுங்கூடாத மனப்பித்துக்களாலும், நினைவின் முயற்சியாலும், கனவிலுறும் உருவத்தாலும், நடுக்கத்தாலும், உணவதிகரிப்பாலும், கொழுப்புள்ள மாம்ச உணவாலும், இன்பமான வஸ்துக்களை முகர்வதினாலும், பலவினைத்தாலும் விரகச்சுவையையூட்டிக் குதூகலிக்கும் இவையே காதல் எனப்படும். இவ்வித விரகமே சந்தானவிருத்தி படைவதும் உலக விருத்திக்குக் காரணமா யிருப்பதுமாம்.

அதிக போகத்தால் வரும் கெடுதியைப்பற்றி முன்னமே சொல்லிய விஷயங்களை இவ்விடத்து காமத்தால் அடையும் பலனையும், போகம் அற நீக்குவதால் அடையும் கெடுதியும், மிதமாகவிருத்தலால் அடையும் சரீராரோக்கியத்தையும் கூறுவாம்.

மிதபோக விருத்தி.

மைதுனம், ஊற்றுக்கேணி நியாயத்தை ஒத்திருக்கின்றது. அதாவது, ஊற்றுக்கேணியை இடைவிடாமல் இறைத்துக்கொண்டிருந்தால் அதில் ஜலமில்லாமற் போய்விடும். அன்றியும் இறைச்

காத வெற்றுக்கேணியிலுள்ள நீரிலமுக்கேறி அதின் வருவாய் அடைப்பட்டு அதின் சரப்புநின்றுவிடும். பின்பு அந்தக்கேணியிலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தினால் கிரகிக்கப்பட்டு ஒன்றுமில்லாமற் பாழாய்ப் போய்விடும். இதுபோல் இடைவிடாது மைதுனஞ்செய்வதால் சுக்கிலத்தின் வருவாய் குறைந்து, அருமையாகக் கிடைத்திருக்கின்ற தேகம் குன்றி அதிசீக்கிரத்திற் போய்விடும். மைதுனம் எந்தக்காலத்தும் இல்லாதிருத்தலினாலும் மேற்குறித்த வெற்றுக்கேணி நியாயத்தால் கேடுண்டும், இந்திரியத்தின் தன்மை கெட்டும்; வருவாய் அடைப்பட்டு மிகுந்திருந்த சுக்கிலம் உஷ்ணத்தினால் வற்றி தேகத்தைப் பாழ்ப்படுத்தி யுயிரை எமன் நகருக்குள் சேர்த்துவிடுமென்று நமது இராமலிங்க சுவாமிகள் திருவாக்கின்படி அதிகபோகத்தினால் வரும் கெடுதியும், போகத்தை அறவே நீக்குவதினால் உண்டாகும் கெடுதியையும் அறிந்தாய். ஆனால் வீரியம், போகத்தால் வெளிப்படாமல் அடைப்படும்போது மறதி, புத்தி, தெளிவின்மை, மயக்கம், காக்கை வலி, பைத்தியம் முதலியன உண்டாகி அந்தியகாலம்வரையில் தேகத்தை வாட்டுமென்பதாம். ஆகையால் ஸ்திரீசங்கமம் அறவொழிக்காமல் மிதமாக வைத்திருந்தால் நற்சந்தானமும் அதனால் முத்தி அடைவதற்கு குடும்ப விருத்தியாவதற்கும் ஏதுவுமுண்டாகி இகபரத்தில் வேண்டிய சுகங்களைப் பூரணமாய் அனுபவிப்பன்.

சுலோசனை:—இந்திரபோகங்களையுடைய செல்வ! தாங்கள் சொல்லி வந்த யாவற்றையும் செவியாகந்தங்கொண்டேன். நீவிர் திருவாய்மலர்ந்தவண்ணம் இல்லறவாழ்க்கையை யுவந்து நடாத்தும் தம்பதிகளுக்குச் சந்தான உற்பத்தி யில்லாமல் போவதற்குக் காரணம் யாதெனை விரித்துரைக்க வேண்டுகிறேன்.

மலடு (புத்திரபாக்கிய வின்மை.)

வசந்தன்:—பார்ப்பவர்கள் மனங்களைக் களிப்புறச் செய்யும் வள்ளி யிலைபோன்ற நீட்சி பொருந்திய செவியாளே! இல்வாழ்வோர்க்குச் சந்தான மில்லாமற் போவதற்கு மலடு, வந்தி என்னும் பெயராலழைக்கப்படும். இதில் ஆண்மலடு, பெண்மலடு என இருவகைப்படும். ஆண்மலடைப்பற்றி முற்கூறுவாம்.

ஆண்மலடு

வித்துப்பாழேயன்றி நிலப்பாழ் கிடையாததுபோல முதலிலே ஆண்மலடேயன்றி பெண்மலடுகிடையாதென்பதனால் சொத்தை முதலிய புழுத்த விதைகளைச் சத்துள்ள நிலங்களில் நட்டாலும் ஒன்றேனும் பயன்படாமற் பாழாய்ப்போகுமோ? அதற்கொப்ப தேகத்தில் சுத்த ரத்தமில்லாததாலும் அஸ்தப் பிரயோகத்தாலும் ஆசனசேர்க்கையாலும் ஸ்தூலதேகத்தாலும் நெடுநாள் ஸ்திரீ சம்பந்தமில்லாதிருந்ததனாலும் அதிகமாய் மனைவாழ்க்கையில் ஈடுபடுவதினாலும் மேகரோகத்தினாலும் மெலிந்த திரேகத்தினாலும் ஆடவர் குறி நரம்புகள் குன்றி, வியாதிகண்டு போகசக்தி அற்றுப் போவதாலும், இயற்கையாய் தாது இனிப்பில்லாததினாலும், சூடுண்டாகிய வெந்நீரில் விட்டால் கரைந்து மிதப்பதினாலும், தாது அதிக உஷ்ணப்பட்டு விட்டாலும், பூதக்கண்ணாடியைக் கொண்டு பார்க்கின் பிராணனற்ற வித்துக் கிருமிகள் தோற்றப்பட்டாலும் அவ்வித்து நாசத்தால் கருதரிக்காது. ஆதலின், இவர்களைப் (பாழான வித்தைப்போல) ஆண்மலடுகள் என்று சொல்லப்படும்.

பெண்மலடு.

மாதர்கள் புருஷன்மேல் அளவுகடந்த ஆசைவைத்து எப்பொழுதும் காமித்துவம் ததும்பிய பேச்சுகளையே பேசிக்கொண்டு கட்டுக்கடங்காது அத்துமீறி போகித்து வருவதாலும், அடுத்தடுத்துக் கலவிக்குரியவைகளில் ஈடுபடுவதாலும், இன்பம் நசுக்குண்டுப் போகப் புரண்டு விடுவதாலும், எழுந்து உட்கார்ந்து சோர்வதாலும், கடினமான வேலை செய்வதாலும், கூச்சத்தினாலும், பயத்தினாலும் சாதிகளும் குறிகளும் பேதப்பட்டிருப்பதாலும், கருப்பையானது தன்னிலையை விட்டுப் பிரிந்து வெளியே தள்ளிக்கொண்டிருப்பதாலும் கருக்கமலத்தின் வாய் மருங்கேயிருக்கும். ஜவ்வு பிளவாதிருப்பதினாலும், சதை வளர்ந்து கருப்பாசயத்தின் வாயை மூடிக்கொள்ளுவதாலும், மேகப்பிணியின் வலையில் அகப்பட்டவர்களுக்கு சொஸ்தமடைந்தபிறகு கருப்பையின் வாய் சுருங்கிப்போவதாலும், சினைப்பையிலிருந்து கருப்பைக்குச் சினைக்கருவை எடுத்துவந்து சேர்க்கும் சினைக்குழலானது கிழிந்து போவதாலும், மேகவியாதியால் சினைப்பை தன் காரியத்தைச் செய்ய சக்தியற்றுப்போவதாலும், இயற்கை

யிலேயே கருப்பை, சினைப்பை முதலியவை இல்லாமற்போவதாலும், கருதரியாது போகின்றது. இப்படிப்பட்டவர்களுக்குக் கருவு முடிவு காலம் வரையில் தரிக்கவே தரிக்காது. ஆனால் சிலமாதர்களுக்கு உஷ்ணம், குளிர்ச்சி, வாதம், பித்தம், சிலேத்துமம் இருக்கவேண்டிய அளவுக்கு அதிகரிப்பதனாலும், சூதகவாய்வினாலும், கெர்ப்பகுலைகளினாலும், உண்ணும் உணவின் மாறுபாட்டினாலும், பேய், பிசாசுகளினும் பயத்தினாலும், கருக்குழியில் கிருமிகள் நிறைந்திருப்பதினாலும், கருப்பம் தரியாமற்போய்விடுகின்றது. மேற்படி தேகபலவீனத்தை யடைந்த இவர்கள் தக்க அவுஷதங்களாலும் மந்திரங்களாலும் சந்தான விருத்தி யடைவது முண்டு.

இன்னுஞ் சிலர் இரண்டொரு குழவிகள் ஈன்றபிறகு கருப்பையின் வாய் கிழிந்துபோவதால் சந்தான மில்லாமலும் போவதுண்டு. இன்னவர்களுக்கு அதிக பாதையோடு சூதகம் வெளிப்படும். வெள்ளையெனும் வியாதியும் அதிகப்படும். மற்றும் கண்டவருடன் கூடும் விலைமாதர்களுக்கே பெரும்பாலும் சம்பவிப்பதுண்டு. சிலர் சமகலவி யில்லாததினாலும் மலடாவார்கள் எனவே அறிவாயாக.

கலோசனு:— ஆடவர்களிலும் மிகப் பொறுமை வாய்ந்த என் தலைவ! சதிபதி யிருவர்களும் சங்கமம் ஆனபிறகு யாதுசெய்தல் வேண்டும் என்பதைப் பற்றியும் சொல்ல வேண்டுகிறேன்.

தேக ஸ்நான முறை.

வசந்தன்:— அல்லிமலர்போன்ற சிவந்த வாயையுடையவளே! சங்கம சதிபதிகள் கூடியபிறகுத் தங்களால் கூடுமான வரையில் தேக சுத்தஸ்நான முதலியதைச்செய்து கொண்டும், புதுவஸ்திரங்களால் தங்களை யலங்கரித்துக்கொண்டும் பசும்பாலுடன் சிறிது தேனைச்சேர்த்து அருந்திவிட்டுதுயின்று காலை நாலரை மணிக்கு மேலும்சூரிய உதயாதிக்குமுந்தியும் எழுந்து காலைக்கடனை ஒன்றேனும் விடாமல் செய்து முடித்தல் வேண்டும். பின்னும் இருவர் சுகித்த உடனே ஸ்நானம் செய்துகொள்ள முடியாமற் போனாலும் அதிகாலையில் முறைப்படி ஸ்நானம் செய்துகொள்ளலாம். கருதரித்த காலையும், குழந்தை பிரசவித்த நான்றும், ஆசௌச மானபடியால் இந்த இரண்டு வேளைகளிலும் ஸ்நா

னம் அத்தியாவசியமானதே. அன்றேல் பலதோஷங்களுக்கும் பிணிகளுக்கும் இலக்காவார்கள். கருதரிப்பது எந்தநாட்கள் என்று தெரியாததால் சங்கமம் ஆன ஒவ்வொரு நாளும் ஸ்நானம் செய்யவேண்டும். அன்றியும் சங்கமம் செய்தால்தான் ஸ்நானம் செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் அவசியமில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். அஃது கூடாவாம். ஸ்திரியினுடன் கூடினவராயினும் கூடாதவராயினும் காலை ஸ்நானம் செய்வதே உத்தமம். வைகறை துயில் விடுத்து முகத்தையும் கை கால்களையும் சுத்தி செய்து சிறிது நேரம் இறைவனைத் தியானித்த பிறகு மலசல வுபாதைகளைக் கழித்து சுத்தி செய்து கண், நாசி, வாய், கை, கால் இவைகளையும், நகங்களையும் ஜலத்தால் சுத்தியாக்கி, ஆலம் விழுது, வேலங்குச்சி, மாங்குச்சி, பூலாக்குச்சி, விளாங்குச்சி, நாயுருவி, கர்சலாங்கணி இவைகளைக் கொண்டு தந்தசுத்தி செய்து பிறகு குளிர்ந்த ஜலத்திலே ஸ்நானஞ் செய்து தங்கட்குரிய தெய்வங்களின் சின்னங்களை அணிந்து பூசைசெய்து முடித்துவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

ஒழுக்கம்.

இன்னும் பகலவன் கீழ்த்திசை உதயமாகுமுன் ஐந்து நாழிகைக்கு அதாவது, 4-மணிக்கு நித்திரை ஒழித்து சுகாசனமாக, செவ்வையாக, கஷ்டமில்லாமல் உட்கார்ந்து, எங்கும் பூரணமாய் நிறைந்திருக்கும் ஈசனை மனதால் தியானித்து, வாயால் அவனுடைய திருப்புகழையும் அருட்பாக்களையும் புகழ்ந்து பாடி, சரீரத்தால் வணங்கி கும்பிட்டு எழுதல்வேண்டும். பின்பு கொஞ்சமேனும் தாமதியாமலும், யாவருடன் பேசாமலும் மௌனமாக வெளியே போகவேண்டும். அப்படிப் போகும்போது எவ்விடத்தில் மலசல வுபாதை நேரிடுகிறதோ அதேயிடத்தில் வடதிசை நோக்கி, மாலையாகில் தென்திசை நோக்கி அக்கணமே அதே சிந்தனையாய் உட்கார்ந்து மூக்கின் முனையின்மேல் விழிநாட்டங்கொண்டு, அவசரமின்றி நிதானமாய் இருந்து மலஜலங் கழிதல் வேண்டும், மலசலவுபாதை கண்ட உடனே நீக்காது தாமதிக்கின் மலவியாதிகளும் கண்பார்வை மங்கலும் ஏற்படும். மலங்கழிக்கும்போது வலதுகையால் இடது அடிவயிற்றைப் பிடித்து பிசைந்து மலம் அறவிட்டும், இடதுகையால்

வலது அடிவயிற்றைப் பிடித்திருத்தி சிறுநீர் மூத்திர விசர்ச்சனம் செய்து எழுந்து ஜலமுள்ள இடத்திற்குப்போய் ஜலத்தில் உட்காரா மல், தண்ணீருக்கு ஒரு ஜாண் தூரத்தில் உட்கார்ந்து முறைப்படி குறி தன்கையிற்பட குதத்தைச் சுத்திசெய்தல்வேண்டும். பின்னும் வேறு சலக்கரை அடைந்து கண், நாசி, வாய், காது, நகங்கள் முத லானதுகளையும் சுத்தி செய்து பிறகு, மேற்கூறியபடி தந்த சுத்தி செய்தும் மஞ்சள் கரசலாங்கணி, கரசலாங்கணி இவைகளில் யாதாயி னும் ஒன்றைக்கொண்டு கொஞ்சம் ரசம் உள்ளேபோகும்படி தந்த சுத்திசெய்து வாய், முகம், கை, கால்களை யாவும் கழுவி, உணர்ந்த வஸ்திரத்தால் சுத்தம் செய்து, நெற்றி முதலான விடங்களில் திரு நீறு திருமண் முதலானதுகளைத் தரித்து தங்கள் காரியார்த்தங் களுக்குப் புகுதல் வேண்டும். கரசலாங்கணியில் தந்தசுத்தி செய் தால் முக தேஜசும் கபம் பித்தம் இவைகளை போக்கடித்துச் சரீ ரத்தை நீடிக்கவும்செய்யும். கரசலாங்கண்ணியைப்பச்சையாகவும் சமை யல் பாகமாகவும் செய்து ஒவ்வொருநாளும் தவறாது இல்லறஸ்தன் சாப்பிட்டு வந்தால் தேகம் நீடிக்குமென்பதிலும், வசீகரமும் கூர்மை யான பார்வையும் உண்டாக்குமென்பதிலும் யாதொரு சந்தேகமு மில்லை. தவிர, பகல் சத்தோடும் கூடிய பச்சரிசிசாதம் (சத்தில்லாதது புழுங்கலரிசி சாதம்) பீர்க்கங்காய், கலியாண பூசணிக்காய், புடலங் காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், கத்தரிக்காய், வெண்காயம், முள்ளங்கி இன்னும் இல்லறத்தனுக்கு வேண்டிய காய் வர்க்கங்களும் சேர்த்து நெய்க்குழம்பிட்டு நல்லுணவுசெய்து சிறிது நேரம் ஜீரணிக்கும்படி உலாவவேண்டும், பிறகு (உண்ட இளைப்பு தொண்டருக்கு முண்டு) என்பதற்கிணங்க, ஆயாசம் தீர சற்றுப் படுத்தெழுந்து பஞ்சவாசங் கலந்த தாம்பூலம் தரித்து, ஆகசாந்தி யாக முதலில் இரண்டுதரம் ஊறியஜலத்தையும், கடைசி ஊறிய ஜலத் தையும் வெளியே உமிழ்ந்து, மற்ற சலத்தை உட்கொள்ளவேண்டும். பிறகு, காரியார்த்தங்களை கவனித்தல் வேண்டும். அமுதுண்ணும் போது இடையிடையே ஜலம் அருந்தக்கூடாது. கிரைவஸ்துக்களில் யாதாயினும் ஒன்று ஒவ்வொருநாளும் தவறாது இருத்தல் மிகவும் நன்று. இதனால் வயிற்றில் கிருமிகள் சேராது. முக்கியமாய் மாமிச பதார்த்தங்களை அறவேயொழித்தல் வேண்டும். அவைகளால் தேகத் தில் கிருமிகள் உண்டாகிச் சுத்த ரத்தங்களிற் பரவி விஷத்தைக் கக் கும், விஷமானது அறிவின் மூல அதிகாரிகளைப்பற்றி அறிவை மங் கப்படுத்திக் கோபத்தை மூட்டிவிடும். அதனால் தேகம் வீணாயழி யும் தானனையை ஒருவாரத்திற்கு ஒரு தரமேனும் அவலியம் சேர்த்

துக்கொள்ளுதல் வேண்டும். இதனால் புத்தி தெளிவும், ஞாபகசக்தியும், கடவுளிடத்தில் பக்தியும், ஞானமும் உண்டாகு மென்பதில் யாதொரு தடையுமில்லை. தூதுளை உஷ்ணம் அதிகமாக உண்டாகிவிடுவதால், தாராளமாய் நெய்யை ஊற்றிக்கொண்டு சாப்பிடல் வேண்டும். இத்தூதுளையைப் பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகளும் புகழ்ந்து பேசியும் உண்டுமிருக்கிறார். கதிரவன் சாயுங்காலம், மாலைப் பொழுது வெய்யில்படும்படி சிறிது மந்தமாருதம் அடிக்கும் படியான இடத்தில் போதுமான அளவு உலாவுதல்வேண்டும். இதனால் திரேகாரோக்கியம் அவவலியம் ஏற்படும். பனிகாலத்தும், மழைகாலத்தும், அதிக வெய்யில் திரேகத்தில் படும்படியாயும் உலாவப்படாது. உலாவி வந்தபிறகு கை, கால், முகம் சுத்திசெய்து திருச் சின்னங்களணிந்து, கடவுளை வழிப்படத் தோத்திரஞ் செய்து சாப்பிடல் வேண்டும். இராப்போஜனம் மிதமாகவும் தயிர், கீரை, வாயு குளிர்ச்சியான பதார்த்தங்கள் நீக்கலாகவும், பெரும்பாலும் சூடானபதார்த்தங்களாகவு மிருத்தல்நன்று போஜனம் அரைபங்கும், தண்ணீர் கால்பங்குமாக முறையே உண்டும், அருந்தியும்; கால்பங்கு தாராளமாய் பிராணவாயுவை உலாவச் செய்தல் வேண்டும். இவ்விதம் இராப்போஜனம் செய்தபின் சிறிது நேரம் உலாவுதல் வேண்டும். பகல் போஜனம் செய்தபிறகு தூங்காமல் படுத்தெழுதலும் வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் வைக்கத்தக்கது. இப்படிக்கன்றி, இக்காலத்து பகல்போஜனம் செய்தபின்னர் கடினமான வேலைசெய்வதும், இரவு போஜனமான பிறகு உடனே நித்திரை கொள்வதுமான முறன்பாடு பெரும்பாலும் நடக்கிறது. இப்படி ஒருக்காலும் செய்தல் கூடவே கூடாது. மேல்கண்டவாறு கூடுமான வரையிலாகிலும் செய்தல்வேண்டும்.

இரவு போஜனமுண்டு உலாவியபிறகு புராண இதிகாசம் பிரசங்ககாலக்ஷேபம் முதலானதுகள் கேட்பது உசிதம். பிரசங்க காலக்ஷேபம் எங்கும் நடைபெறுதிருக்குமாயின், வீட்டிலிருந்தபடி தாம் பூலம்தரித்து நித்திரைகொள்ளல்வேண்டும். இரவுகாலங்களில் சுழுத்தி அவஸ்தையிலிருக்கவேண்டிய தவசியமாகையால் அதிகமாகக் கண்விழிக்கத்தகாது. மிதமிஞ்சிய சுமார் இரவு 12-அல்லது 1-மணிக்குமேல் விழிக்கத்தகாது. அதற்குமேல் யந்திரங்கள் கெட்டுப் போகும். மனைவேட்கைக் குட்படுவாராயின் இரவு முன் பங்காகிய இரண்டுஜாமம்கழித்து பின்பங்காகிய இரண்டுஜாமத்தில் இரண்டாம்ஜாமம் பிதுர்க்கள் காலமாகியபடியால் அது காலத்துக் கலப்ப

தால் பிதுர்க்கள் சாபத்திற்கு இலக்காகவேண்டி வருமானகையாலும் அதையும்நீக்கி, இரவு மூன்றாம் ஜாமத்தில் அதாவது இரவு 12-மணி முதல் 3-மணிவரையில் சேர்தல் உத்தமம். கலவி நுகருங்கால் தேகத்தில் சூடு தோன்றுவாறு மிகவும் நிதானமாகவும் புத்திரனைக் கோரிய காலத்தன்று மற்றையகாலத்தும் சாந்தமாக நடத்தல்வேண்டும். வீரியத்தை எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவுதேகம் வலிவுள்ளதாயும் நீடித்துள்ளதாயுமிருக்கும். வீரியம் கெடாதபடியும், மலசலாதிகளை அடக்காமலும் இருத்தல்வேண்டும். நித்திரை யதிகங்கொள்ளலாகாது மிதமாக விருக்கவேண்டும் உரத்துப்பேசல், வேகமாகநடத்தல், வீண்வழக்கிடல், சண்டைபோடல், அதிபோகத்தடைதல் முதலிய மற்றெந்தவிதத்திலாயினும் பிராணவாயு அதிகமாக செலவாகாமற்படி மிகவும் சாக்கிரதையா யிருக்கவேண்டும். மேற்கூறிய தொழில்களால் தீங்குக ளெவ்விதம் வருமெனின் கூறுதும்.

வசனத்தால் 12-அங்குலசுவாசம் வெளியாகி 8-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும், மற்ற 4-அங்குல சுவாசம்வெளியாகி மனிதன் ஆயுட்பாகத்தை குறைத்துவிடுகிறது.

நடத்தலால் 16-அங்குலசுவாசம் வெளியாகி 10-அங்குலசுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 6-அங்குல சுவாசம் வெளியாகி நஷ்டம் செய்விக்கும்.

வேலைகள் செய்வதால் 20-அங்குல சுவாசம் வெளியாகி 12-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 8-அங்குல சுவாசம் வெளியாகி நஷ்டம் செய்விக்கும்.

சண்டையால் 24-அங்குல சுவாசம் வெளியாகி 14-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 10-அங்குலசுவாசம் வெளியாகி நஷ்டம்செய்விக்கும்.

துயில்வதால் 48-அங்குல சுவாசம் வெளியாகி 28-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 20-அங்குலசுவாசம் வெளியாகி நஷ்டம் செய்விக்கும்.

ஓடுவதால் 54-அங்குல சுவாசம் வெளியாகி 27-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 27-அங்குல சுவாசம் வெளியாகி நஷ்டம் செய்விக்கும்.

புணர்ச்சியால் 64-அங்குல சுவாசம் வெளியாகி 20-அங்குல சுவாசமாத்திரம் உட்சென்றுவிடும். மற்ற 40-அங்குல சுவாசம் வெளியாகி கஷ்டம் செய்விக்கும்.

குறிப்பு:— ஓடும்போதும் புணர்ச்சி நுகரும்போதும் சுவாசம் மிகவும் அதிகமாயும் நெட்டுயிர்ப்பாகவும், சண்டையிடும்போதும் துயில் கொள்ளும்போதும் சற்று குறைந்த நெட்டுயிர்ப்பான சுவாசமும், மற்றவைகளுக்கு முறையே குறைந்து குறைந்து மிருப்பதும் தெரிந்தவிடயமே. சாதாரணகாலத்தும் மௌனமா யிருக்கும்போதும் 12-அங்குல சுவாசம் வெளிப்பட்டு சற்றேறக்குறைய 8-அங்குல சுவாசமும் உட்சென்று கடவுளால் கொடுக்கப்பட்டவயதை குறைவு செய்துகொள்ளாமல் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆதலால் மேற்கூறியபடிசுவாசம் அதிகமாய்கஷ்டமாகும். விஷயாதிகளில் மிருதியாய் பிரவேசிக்காமல் கூடுமானவரையில் குறைத்துத் தேகத்தை நீடிக்கச் செய்துகொள்ளுதல் வேண்டும். கொலைசெய்தல், புலால் உண்ணல், சினங்கொள்ளல், சோம்பலாயிருத்தல், கடுஞ்சொல்சொல்லல், பொய்பேசல், பொறாமையோடிருத்தல், காதல் கொள்ளல், சூதாடல், கள், சாராயம், கஞ்சா முதலிய போதைகளைக்குடித்தல், சவதை விலக்கல் முதலான தீமைகளை எப்போதும் செய்யாதிருக்கவும் வேண்டியது. தன்னைப்போலவே பிரவற்றையும் கருதி ஜீவகாருண்யத்தை மேற்பூண்டு அஹிம்சாதருமத்தை நிலைநிறுத்தலும், பேராசைப்படுதல், பெருநினைப்பு பெருஞ்சிரிப்பு, பெருந்துயர், கூர்மையானபார்வை அதியூக்கமாய் ஊன்றிக்கேட்டல் நற்கந்தம், துற்கந்தம், முகர்தல், சுவைவிரும்பல், பேருண்டி மிதத்துக்குமீறி வேலைசெய்தல், பெருமுயற்சி விளையாடல், மலசலமடக்கல், வீரியத்தை அடிக்கடி விடுதல், தாகமடக்கல், பெருநீர்குடித்தல், பயப்படுதல், டம்பம், அகங்காரப்படுதல், லோபம்செய்தல், மோகப்படல், மதங்கொள்ளல், இளவெயில், கடுவெயில், மழை, குளிர், பனி, காற்று முதலானவைகளினும் தாக்காமலிருத்தல், வாரத்திற்கொருதடவையாவது கூடுமானால் 2-தடவையாவது தைலந்தலைக்கிட்டு அப்பியங்கனஸ்நானம் செய்தல் திரேகத்திற்கு தக்கவாறு மாதத்திற்கு 2. 3. 4-தரம் நிதானமாகவும், சற்சந்தானத்தைக் கோரியவண்ணமாகவும், மனதைபலவிடயங்களில் சங்கற்பியாமல் ஒரேமனதாய் இருவரும் மனமொத்து அதிர்ச்சியில்லாமலும், மேல்மூச்சி வாங்காமலும், மெல்லெனக் கூடுதலும், ஆறுமாதத்திற்கொருமுறை மிதமான விரேசன மெடுத்துக் கொள்ளுதலும், மானிடர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டிய அத்தியாவஸ்

யமான விடயங்கள் ஆதலின் இம்மானிட ஒழுக்கத்தை தவறாமல் கையாண்டுவருதல் மேன்மையிலும் மேன்மையேயாம்.

கலோசனு:— சதாகாலமும் அக்கத்திலிருக்கின்ற மனமானது தம்மை நோக்குமிடத்து அளவில்லாத சந்தோஷத்தை யுண்டாக்கும்படி செய்யும் வதனத்தையுடையீர்! தாங்கள் என்மீது தயவுகூர்ந்து உமக்குண்டாகிய மயக்கத்தினையும் நீக்கி யான் கேட்கும்கேள்விகளுக்கு யாதொருதடையின்றி கோபியாமலும் வெறுப்புகொள்ளாமலும் சந்தோஷ சித்தமுடையவராய் இதுபரியந்தம் சொல்லிவந்தீர்கள். இனியுமப்படியே சில கேள்விகளுக்கும் தயவுகூறுமாறு வேண்டுகிறேன்.

வசந்தன்:— மகரந்தம் நிறைந்த அல்லிமலரைப்போலும் தீஞ்சுவையும் சிவப்பு நிறத்தையுமுடைய பவளக்கிண்ணத்தை நிகர்க்கும் வாயை யுடையாளே! நீகேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ரத்தினங்களுக்கு ஒப்பாக இருக்கிறபடியாலும், இல்லறத்தோர்கள் அவசியம் தெரிந்துக் கொள்ளக்கூடியதாகவுமிருப்பதால் நீ கேட்கும் கேள்விகளுக்கு அதிருப்தியடையாது விடைபகரத் திருப்திகரமான நெஞ்சமுடையவனாக விருக்கிறேன். இன்னும் உனக்கு எந்தெந்த விடயங்கள் கேட்க அபேக்ஷயாக விருக்கின்றதோ அவைகளையும் கேட்டுச்சந்தேகம்தெளிந்து கொள்வாயாக.

கலோசனு:— காந்தர்வர்களும் வெட்கப்படும்படி இசைபாட வல்லோனாகிய இன் சுவையோனே! நீர் கூறிவந்தயாவும்உணர்ந்து மகிழ்ந்தனன். இனி கருப்பத்தைப்பற்றி முறைப்படி கேட்க விருப்புற்றிருக்கின்றேன். ஆதலின்பெண்கள் ருதுவாகும் நாள், திதி, வாரம், மாசம், பலாபலன்களைக் கூறும்படியாகக் கோருகின்றேன்.

ருதுபலன்.

வசந்தன்:—வெண் முத்துக்களைப் போன்ற பிரகாசம் பொருந்திய தந்த வரிசையுடையாளே! சொல்லக் கேளாய்.

உத்திராட மாதியா மாறுமாறு முத்தமம்
பித்தனார் பிறந்தநாள் பின்னையாறு மத்திமம்
அத்தமோடு சித்திரை யமைந்தவாழ்வு குன்றிடும்
மற்றையாறு தன்னிலே மங்கைநா ளிழப்பளே.

ருது நக்ஷத்திரப் பொதுப்பலன்.

உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, பூரட்டாதி, ரேவதி, அசுவனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம், முதலான பன்னிரண்டுநக்ஷத்திரத்திலும் ருதுவானுல் உத்தமம். ஈஸ்வரன் பிறந்தநாளாகிய திருவாதிரை முதல் புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், முதலான ஏழுநக்ஷத்திரத்திலும் ருதுவானுல் மத்திமம். அஸ்தம் சித்திரை ஆகிய இரண்டு நக்ஷத்திரத்திலும் ருதுவானுல் தரித்திரதிசைக்கு கொண்டு வந்துவிடும். சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், முதலான ஆறு நக்ஷத்திரத்திலும் ருதுவானுல் திருமாங்கில்யத்தையே யிழக்க வேண்டி வந்துவிடும்.

ருது நக்ஷத்திர சிறப்பு பலா பலன்.

அசுவனி:—தன் பத்தாவினிடத்தில் அந்தியகாலம் வரையிலும் யாதொரு குறைவுமின்றி சுகமாயிருந்து ஈற்றில் விதவையா யிறப்பாள்.

பரணி:—சந்தான முடையவளாயும் தன்னைக்காட்டிலும் மேன்மை யுடையோரைப் பார்க்க மனமில்லாதவளுமா யிருப்பாள்.

கிருத்திகை:—ஏகபுத்திர பாக்கியமுடையவளாயும்எவ்வளவிருந்தும் தரித்திரமாய்க் காண்பிக்கும் குண முடையவளாயு மிருப்பாள்.

ரோகணி:—யாவத்திராளுக்கும் நன்மை புரிபவளாயும் அதிக அழகு வாய்ந்த பிள்ளைகளையும் பெற்றெடுப்பவளு மாவாள்.

மிருகசீரிடம்:—மிகவும் சுத்தியாகவிருந்து தன்புருஷனுக்கு எப்போதும் சந்தோஷம் கொடுப்பவளாயு மிருப்பாள்.

திருவாதிரை:—அபாக்கிய வதியாயும் தனக்குப் பிடித்தா மில்லாத புருஷனை அடைந்து வாழ்பவளாயு மிருப்பாள்.

புனர்பூசம்:—புருஷன் வார்த்தைக்கு மறுவார்த்தைப் பேசாமலும் பதிவிரதா தருமத்தையே பூஷணமாகத் தரிப்பவளும் சுகத்தை அனுபவிப்பவளுமா யிருப்பாள்.

பூசம்:—தனக்குவாய்த்த தன்புருஷனிடத்தில் அதிகப் பிரியமும் அதனுல் சீர் அடைபவளுமாவாள்.

ஆயில்யம்:—கபடமான மனமுடையவளாயும் போஜனப் பிரியம் அற்றவளாயும் இருப்பாள்.

மகம்:—புருஷனுக்கு நல்லவளாக நடக்கவும் புத்திரபாக்கியவதியா யிருந்தும் பெற்றெடுத்த குழந்தைகளை எமனுக்குக் கொடுத்து விடும் அபாக்கியவதியா யிருப்பாள்.

பூரம்:—சகலசம்பத்து மிருந்தும் புத்திரபாக்கிய மில்லாத மலடியா வாள்.

உத்திரம்:—கிலபாக்கியமும் செல்வபாக்கியமும் நிரம்பப்பெற்று அதிக வேலை செய்பவளு மாவாள்.

அஸ்தம்:—தங்களைச் சூழ்ந்த பந்துக்களையும் விருந்தினரையும் முகங் கோணுது உபசரித்து யாவரிடத்தும் நல்லவள் என்ற பெயர் எடுப்பவளுமாவாள் இதனுல் சகல சம்பத்துக்களும் குறையும்.

சித்திரை:—வறுமை வந்தகாலத்தும் புருஷன்மீது சலிப்புக்கொள் ளாது புருஷனையே தெய்வமாகப் பாவித்துப் பதிவிரதையுடை யவளா யிருப்பாள்.

சுவாதி:—மக்களைப் பெறுபவளாயும் குடும்பத்தைக் காப்பாற்றுபவ ளாயு மிருந்து சீக்கிரத்தில் திருமங்கிலியத்தை இழந்துவிடுவாள்

விசாகம்:—யாதொரு சுகமும் அனுபவியாது மங்கிலிய மிழப்பாள் இதனுல் இவள் பார்வைக்கு விகாரமாயிருப்பதும் தவிர புரு ஷன் இறந்தத்துக்கத்தால் தன்தேகத்தைச் சுத்திசெய்து கொள்ளாமலு மிருப்பாள்.

அனுஷம்:—புருஷனுடன் இல்வாழ்க்கையை நடத்தும் வரையில் புருஷன்மனதுக்கு ஒத்தவளாயும் ஒருகாலும் விட்டுப் பிரியாத வளாயும் வாழ்ந்து சதாகாலமும் போகத்திலாழ்ந்து இருப் பதால் கடைசியில் பிணியுடையவளாவாள்.

கேட்டை:—குடும்பத்துக்கு அவதூறன நடைத்தையுள்ளவளாயும் சாதிபிரஷ்டையுடையவளாயும் வேற்றிடம்வசிப்பவளுமாவாள்.

மூலம்:—நல்ல குழந்தைகளைப் பெறுபவளும் பெற்றெடுத்த குழந் தைகளுக்குப் பால் தாராளமாய் கொடுப்பவளுமா யிருப்பாள்.

பூராடம்:—சதாகாலமும் துக்கக்கடலில் அமுழ்ந்திகிடப்பாள்.

உத்திராடம்:—திரண்ட திரவியமுடையவனுக்கு வாழ்க்கைப்படுப வளும் அச்செல்வத்தை வீணில் செலவு செய்யாது தருமம் செய்பவளு மாவாள்.

திருவோணம்:—செல்வந்தனுக்குமனைவியாகி அவ்வீட்டில்லக்ஷுமியை எக்காலும் குடியிருக்கும்படி குறையாத செல்வவதியா யிருப்பாள்.

ஆயிலியம்:—பொருட்செல்வம் புத்திரபாக்கியம் முதலியனவும் பெற்று யாதொரு குறைவுமின்றி வாழ்வாள்.

சதயம்:—வயது நீடித்தவளாயும் தனக்கு இருக்கும் செல்வத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் செலவு செய்து விடுபவளுமாவாள்.

பூரட்டாதி:—காமவியாதியால் கஷ்டப்படுபவனுக்கு வாழ்க்கைப்படுவதும் தீர்க்க மலடியுமாவாள் சகல சம்பத்தும் நிரம்பப் பெற்றிருப்பாள்.

உத்திரட்டாதி:—வறுமையாளனுக்கு வாழ்க்கைப்பட்டாலும் சந்தோஷ சித்தமுடையவளாயும் உற்சாகமாகவும் வாழ்வாள்.

இரேவதி:—மேன்மையாயும் பெரும்பாலும் சகல சுகங்களும் சிறுபான்மை உரோகியாயு மிருப்பாள்.

ருது திதி பலன்.

பிரதமை:—புருஷன் அல்லாத மற்றவர்களிடத்தில் சேரப் பிரியமுடையவளும் மகாபாபகரமானத் தொழிலை யியற்றுபவளுமாவாள்.

துவிதியை:—சகல பாக்கியங்களும் நிரம்பப்பெற்றவளாயும் மகா சௌந்தரியம் வாய்ந்தவளாயு மிருப்பாள்.

திரிதியை:—மதனுகமப்படி இன்பமனுபவிப்பவளும் சந்தான விர்த்தியுள்ளவளு மாவாள்.

சதுர்த்தி:—கண்டவர்களிடத்தில் ஆசைவைப்பவளும் இதனல் சத்துருத்வமுடையவளுமாவாள்.

பஞ்சமி:—சகல விதத்திலும் நஷ்டமடையாமலும் துன்பப்படாமலும் லாபமும் நன்மையு மடைந்து புத்திரபாக்கியமும் பெற்றவளாவாள்.

சஷ்டி:—வலிய சண்டை யிழுப்பவளாயும் போஜனப்பிரிய முடையவளாயு மிருப்பாள்,

சப்தமி:—புத்திரர்களைப் பெற்றெடுக்கும் புத்திரபாக்கியவதியா யிருப்பாள்.

அஷ்டமி:—மகா துஷ்டையாயிருந்து பலரும் இராக்ஷஸி என்று சொல்ல நடந்துக் கொள்வாள்.

நவமி:—சதாகாலமும் துக்கமுடையவளாய் இருப்பாள்.

தசமி:—தன்னை நாடிவந்த ஐயம் ஏற்போற்கு இல்லை என்று சொல்லாத தர்மிஷ்டையாயும் மதலையூர்ப் போளாயு மிருப்பாள்.

ஏகாதசி:—பலசாலியாயும் நோயில்லாதவளாயும் சுகமாய் வாழ்பவளாயு மிருப்பாள்.

துவாதசி:—அற்பகாரியத்திற் கெல்லாம் கோபித்து தூஷிக்கும் முன் கோபக்காரியா யிருப்பாள்.

திரயோதசி:—நல்ல அழகுவாய்ந்த முக தேஜஸ் உடையவளாயும் புருஷன்வார்த்தைக்கு மறுவார்த்தைப் பேசாத உத்தமியாயு மிருப்பாள்.

சதுர்த்தசி:—தீயகாரியங்களைச் செய்ய மனமுடையவளும் சோரத்துவம் போவளுமாவாள்.

பௌர்ணமி:—எப்போதும் அண்டை அயல்வீடுகளுக்குப் போவளுமாயும் அடிக்கடி சங்கடங்களுக்கு உட்படுபவளு மாவாள்.

அமாவாசை:—தீராத தரித்திரமுடையவளு மாவாள். இதில் வளர்பிறை திதிகளுக்கும் தேய்வுபிறை திதிகளுக்கும் ஒரே பலன் என அறிவாயாக.

ருது லக்கினப் பலன்.

மேஷம்:— தரித்திரமுடையவளாயும் பரஸ்திரியுமாவாள்.

ரிஷபம்:— இரண்டொரு குழந்தைகளை உடையவளும் விபசாரியு மாவாள்.

மிதுனம்:— தானடைந்த புருஷனிடத்தில் பிரியமுடையவளாயும் பிறகு துரோகம் செய்பவளாயு மிருப்பாள்.

கடகம்:— புத்திர பாக்கியமுடையவளாயும் அருசியுள்ளவளாயு மிருப்பாள்.

சிங்கம்:— தருமநெறியேநடந்து பிறகு புருஷனை நீங்கிவிடுவாள்.

கன்னி:— பதிவிரதை தன்மையுடையவள்.

துலாம்:— தனபாக்கியமிருந்தும் தரித்திரியா யிருப்பாள்.

விருச்சிகம்:— விபசாரம் போவாள்.

தனுசு:— பெண்களுக்குரிய ஒழுக்க வழக்கங்களிலும் மிதமாயிருப்பாள்.

மகரம்:— கற்புவாய்ந்தவள் புருஷன் விஷயாதிகளில் மானுபிமான முடையவன்.

கும்பம்:— பொய் செல்வமுடையவள்.

மீனம்:— குற்றமும், புத்திரரையுமுடையவள்.

ருது லக்கின ஏழாமிடப் பலன்.

எந்தவீட்டில் ருது லக்கினாதிபதி அமர்ந்திருப்பானோ அந்த வீட்டிற்கு ஏழாம்வீட்டில் யார் இருக்கிறார்களோ அவர்களின் பலாபலன்.

சூரியன்:— விதவையாவாள்.

சந்திரன்:— மக்களை யிழப்பாள்.

அங்காரகன்:— வேசையாவாள்

புதன்:— மலடியாவாள்.

குரு:— பாக்கியமில்லாதவளா யிருப்பாள்.

சுக்கிரன்:— வெளித்தாண்டிப் போவாள்.

சனி:— பிணியுடையவளா யிருப்பாள்.

இராகு:— அடைந்த புருஷனையும், ஈன்ற மக்களையும் இழப்பாள்.

கேது:— உறவினருடன் பகைத்துக்கொள்வாள்.

மேல்கண்ட கிரகாதிபதிகள் இல்லாமல் ஏழாமிடம் சுத்தமா யிருக்கின் உத்தமம், என அறிவாயாக.

H2

ருது காலப்பலன்.

வைகறையில்:— நீண்டகாலம் புருஷனுடன் வாழ்வாள்.

முற்பகல்:— யாத்திரைசெய்வாள்.

நடுப்பகல்:— சகல போகபாக்கிய முடையவள்.

பிற்பகல்:— பிறருடன் களவாகச் சேர்ந்திடுவாள்.

சாயுங்காலம்:— புத்திரபாக்கிய முடையவள்.

அஸ்தமனம்:— வேசித்தொழிலை மேற்கொள்வாள்.

இரவு முற்பங்கில்:— தீர்க்காயுளுடனிருப்பாள்.

நடுநிசியில்:— மாங்கில்ய மிழப்பாள்.

இரவு பிற்பங்கில்:— சுகமிழந்தவளாவாள்.

ருது வாரப்பலன்.

ஞாயிறு:— கொடிய பிணிக்குள்ளாகி தேகம் மெலிந்தும் தான்பெற்ற மக்களையும் எமன்கை யொப்பிப்பாள்.

திங்கள்:— அருந்ததிக் கொப்பான பதிவிரதையாவாள்.

செவ்வாய்:— மாங்கில்யமிழந்து சதாகாலமும் துக்கமுடையவளாவாள்.

புதன்:— பொருள் பாக்கியமும், சந்தானபாக்கியமும், அடக்கம் வாய்மையோடும், புத்தி, புகழோடும் வாழ்வாள்.

வியாழன்:— எப்போதும் குறைவுபடாத செல்வமுடையவளாயும், போகபாக்கியங்களை அனுபவிப்பவளு மாவாள்.

வெள்ளி:— புருஷன் சொல்லும் வார்த்தைப்படி அவர் வேலையைத் தானே தன் கைகளால்செய்து அவர் தயவை மென்மேலும் சம்பாதித்து மிகுதியான போகத்தை அனுபவிப்பாள்.

சனி:— சகிக்கவொண்ணாத வியாதி உடையவளாயும், சதா தரித்திரதிசை உடையவளுமாவாள்.

ருது மாதப்பலன்.

சித்திரை:— புருஷனுக்கு ஆகாது எதிர் மாறாயிருப்பாள்.

வைகாசி:— நிம்மதியாய்ச் சுகமாய் வாழ்வாள்.

ஆனி:— சந்தான பாக்கியவதியா யிருப்பாள்.

ஆடி:— தாங்க ளடைந்தபுருஷன்மீது பிரியமாயிருப்பாள்.

ஆவணி:— மேலான வாழ்வுடையவளாயும், பலரும் போற்றப் பெருமையோடு வாழ்வாள்.

புரட்டாசி:— விவேக முடையவளாயும், கற்பில் வழுவாதவளாயு மிருப்பாள்.

ஐப்பசி:— சந்தான பாக்கியமடைந்து மாங்கல்ய மிழப்பாள்.

கார்த்திகை:— முன் கோபியாயிருப்பதும் தவிர பலரையும் தூஷித்து கெட்டவள் என்ற பெயருமெடுப்பாள்.

மார்கழி:— அழகும், குணமும், நன்னடக்கையு முள்ள நற்சந்தானத்தை யடைவாள்.

தை:— செல்வமுடையவளாயும், தருமிஷ்டியாயும், ஜீவகாருண்ய முடையவளாயும், பலரும் போற்ற வாழ்பவளாயு மிருப்பாள்.

மாசி:— திரவிய முடையவளாயும், அத்திரவியத்தால் சுகமுடையவளாயு மிருப்பாள்.

பங்குனி:— நீண்ட வயதுடையவளாயும், குழந்தைகளைப்பெறச் சலியாதவளாயு மிருப்பாள்.

ருது ஸ்தானப் பலன்.

தன் வீட்டிற்குள்ளும், ஸ்திரீகள் கூட்டத்தின்மத்தியிலும், பசுத் தொழுவத்திலும், தண்ணீர்க்கரையிலும், வனமத்தியிலும், நிற்குந் தருவாயிலும், போஜன முண்ணும்போதும், குதிரையின்மேலும், கொல்லையிலும் ஸ்திரீ ருதுவானல் உத்தமப்பலன்.

கோயிலிலும், படுக்கையிலும் ஸ்திரீருதுவானல் மத்திமப்பலன்.

வீட்டிற்கு வெளியிலும், அயல்வீட்டிலும், கிராமமத்தியிலும், வெறும்வயிறாய் நித்திரை செய்யும் போதும், நிர்வாணமா யிருக்கும் போதும் ஸ்திரீ ருதுவானல் அதமபலன்.

ருது தரிசனப்பலன்.

கலியாண மாகாதப்பெண்கள், மங்கிலியஸ்திரீ, வேசி முதலானவர்கள் முதல்பார்க்கில் சுபம்.

அமங்கிலிய ஸ்திரீ, பிணிஉள்ள ஸ்திரீ, ஸ்நானம்செய்ய எண்ணெய் தலையில் தடவின ஸ்திரீ, அபிமான ஸ்திரீகள் முதல்பார்க்கின் அசுபமாகும்.

சுலோசனை:— கெம்பீரமான தோற்றமும், உத்தகுணமும் வாய்ந்த எனது நேசநாயக! தாங்கள் சொல்லிவந்த ருது பலாபலன்களை விவரமாய்க் கேட்டறிந்தேன். ருதுவான மூன்றுநாளும் சுரோணிதப்பெருக்கு உண்டென்றும், அது காலத்து அவர்கள் புருஷனுடன் பேசவும், மற்ற வீட்டுக்காரியங்கள் செய்யவும் கூடாதென்றும் முன் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அக்காலத்தில் அவர்கள் எவ்விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதை விவரமாகச்சொல்லி யருளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றனன்.

தீண்டத்தகாத மூன்றுநாளு மிருக்கவேண்டிய விதி.

வசந்தன்:— குயிலைப்போலும், கிளியைப்போலும், கொஞ்சிக் குலாவும் மொழியாளே! சொல்லக்கேளாய்; வீட்டு விலக்கமான மூன்றுநாட்களும் புருஷனைப் பார்க்கவும் பேசவுங்கூடாது. வாசனைத் திரவியத்தைப் பூசவுங்கூடாது. தாம்பூலந் தரிக்கப்படாது. மாம்சாதிபோஜனம் உண்ணக்கூடாது. பகற்காலங்களில் உறங்கக்கூடாது. கண்களுக்கு மைதீட்டுவது அறவே ஒழிக்கவேண்டும். பூமியை நகத்தால் கீறவிடவுங் கூடாது. வழிப்பிரயாணம்போவதும், வெளியூருக்குப்போவதும், அண்ணாந்து பார்ப்பதும் கூடாது. அதிகமாய் பேசாமலும், உறக்கப் பேசாமலும், உடம்பில் எண்ணெய்ப் பூசிக்கொள்ளவும் கூடாது. வீட்டுக்குள் மறைவான இடத்தில் தாழ்ந்த ஸ்திதியிலுள்ள பெண்களைப்போல் ஒரேவஸ்திரம்தரித்து நாணமுடையவளாய்த் தேகமுழுதும் மூடிக்கொண்டு யாருடனும் பேசாமலும் பூமியைப் பார்த்தவண்ணமாகத் தலைகுனிந்து உட்கார்ந்திருக்க வேண்டும். கைகால்களை அதிகமாய் அசைக்கக்கூடாது. மிருதுவான ஆகாரத்தைப் புசிக்கவேண்டும். உடைந்த பீங்கானிலும் பாத்திரங்களிலும் சாப்பிடப்படாது. ஜலத்திலிறங்கி குளிக்கக்

கூடாது. இரவில் கண்விழிக்கக்கூடாது. அதிகமாய்ச் சிரிக்கவுங் கூடாது. மனதைப் பலவிதமான விஷயாதிகளில் நுழைத்து விடக்கூடாது. தேகம் கஷ்டப்பட வேலை செய்யக்கூடாது. இப்படி மூன்றுநாளும் கழித்து நான்காவதுநாள் காலையிலே ஸ்னானம்செய்து தண்ணீரில்நனைத்து உலர்த்தியஆடையைக் கட்டிக் கொள்ளவேண்டும்.

சுலோசனை:— மாசூஷிமைநிறைந்த மணவாள! தாங்கள் கூறியவண்ணம் மூன்றுநாளும்கழித்து நாலாம்நாள் ஸ்நானம்செய்தபிறகு யார் முகத்தைப் பார்க்க வேண்டுமென்பதைப்பற்றி யுரைசெய்தல்வேண்டும்.

ருது சம்பந்த ஸ்நான தரிசனம்.

வசந்தன்:— இலக்குமிபோன்ற சர்வமங்கள காமுடைய மாதே! ருதுபத்தியமாகிய அல்லது தீட்டமென்று சொல்லக்கூடிய மூன்று நாளையும் நீங்கி நாலாம்நாள் ஸ்நானம்செய்து சத்தியானபிறகு கருக்கமலம் மாசற்றக் கண்ணாடியைப்போ விருப்பதால் அப்போது யார் முகத்தில் விழிக்கின்றாளோ அதைப்போன்ற மக்களைப்பெற நேரிடுமாகையால் அப்போது தன் புருஷன்முகத்தையே பார்க்கவேண்டியது. அப்படி நேரிடாதபக்ஷத்தில் தன்னால் கூடியவரையில் தன் புருஷனை மனக்கண்ணால் தரிசிக்க வேண்டும். அல்லது தன் முகத்தையாகிலும் கண்ணாடி மூலியமாகத் தரிசித்தல்வேண்டும். இவ்விதம் தன் முகத்தையாகிலும் தன் புருஷன் முகத்தையாகிலுந் தரிசிப்பதால் பளிங்கைப்போலிருக்கும். கருக்குழியில் அம் முகங்கள்பதிந்து தாக்கும். குழந்தைகளும் தாய் தகப்பனைப்போலு மிருக்கும். இல்லையேல் மாறுபட்டுவரும். இதுவும் கூடாதபக்ஷத்தில் சூரியதரிசனஞ் செய்தலும் உத்தமம். சூரியனைத்தரிசித்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மிகவும் சௌந்தரியமுள்ளதாயும் தைரியமுள்ளதாயும் பலசாலியாயு மிருக்குமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை என அறிவாயாக.

சுலோசனை:— இன்னது வேண்டுமென்று கேட்காததற்கு முந்தியே குறிப்பறிந்துகொடுக்கும் உத்தம தருமியே! சந்தான விருப்பமுடைய சதிபதிகள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை அடியாள் உணரும்வண்ணம் சொல்லவேண்டும்.

சந்தானத்தைக்கோரிய போகநெறி.

வசந்தன்:— இளமையானதும் மிருதுவானதுமான கரியகூந்தலை யுடைய காதலி! சந்தானத்தைக்கோரிய சதிபதிகள் இரவுபோஜனமுண்டு சற்று உலாவி உண்டஉணவு ஜீரணமாகும் பரியந்தம் உறங்கி பிறகு நல்ல அழகானபடங்கள் மாட்டினவீட்டில் தீப மேற்றிவைத்து கோபம், பயம், அச்சம், சோம்பல், இவைகள் யாவுமின்றி முகங்கழுவி ஆயில் மயக்கத்தை அறவொழித்து இருவர்மனமும் ஒருமித்திடவே படுக்கைக்குள்ளாகி வலது இடதுபக்கங்களில் சாயாமலும், கைகால்களை முடக்காமலும், சமக்கலவியாகச் சிறிது நேரமட்டும் ஆழ்ந்த நித்திரையி லிருப்பதைப்போ லிருந்தால் ஓர்வித புளகாங்கிதத்துடன் இன்பமானது கருப்பைக் கிடமாகித் தன் வளர்ச்சிக்கு உரித்தாய நிலைமையை யடையும். வீரியம் சோர்வடையாது.

“அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு
பாக மாகியோர் பால ரூபமாய்”

என்று அருணகிரிவள்ளல் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதால் அதன்படி சுமார் பதினைந்து நிமிஷமிருக்கவேண்டும் பிரியுங்காலை தலைவி உடனே எழுந்திருக்காமலும், கவிழ்ந்துபடுக்காமலும், சாய்ந்துபடுக்காமலும், மல்லாந்தபடியே சுமார் பத்துநிமிஷ மிருக்கவேண்டும். பிறகு அங்க சுத்தம் செய்துகொள்ளவேண்டும். மறுபடியும் கலவாமற்படி நித்திரைக் கொள்ளல்வேண்டும். சந்தானங் கோரியகாலங்களில் சித்திரக் கரணங்கள் செய்யப்படாது. அப்படி செய்தால் கருக்குழியில் சுக்கிலம் போய்ச்சேர ஏதுவில்லாமல் போய் விடும். கருக்குழியில்போய் விழுந்த சுக்கிலமானது பிசினைப்போல் திடத்ததாயிருந்தால் வலிவுள்ள குழந்தையாயும் இளகி இருந்தால் வலிவில்லாததும் அற்பாயுளாயு மிருக்குமென்பது திண்ணம். இவ் விதமாகக் கருக்குழியில் செல்லும் சுக்கிலமானது புல்லின் நுனியி லிருக்கும் பனித்துளியின் பாதி அளவு சேர்ந்தவுடன் கருக்கமலத் தின்வாய் உடனே மூடிக்கொள்ளும் மற்றவை யாவும் வீணாகும் ஆதலால், வீரிய நஷ்டம் ஏற்படாதபடி கவனித்து இன்பம் நுகர்தல் வேண்டும். கருக்குழியானது விந்துவை யிழுக்குந்தன்மை யுடையது. சுக்கிலமும் சுரோணிதமும் சேர்த்து கருவை வளர்க்கும் இவ் விதம் கருக்குழியில் இழுக்கப்பட்ட விந்துவில் விந்துக் கிருமிகள்

எத்தனை இருக்கிறதோ அத்தனை சிசுக்கள் உண்டாகும். பெரும்பாலும் பனித்துளியின்பாதி அளவுள்ள விந்துக்கு ஓரேவொரு விந்துக் கிருமிதா னிருக்கும் ஏகதேசத்தில் இருபான்மை இரண்டு கிருமிகளு மிருப்பதுண்டு. இதனால்தான் இரட்டைப்பிள்ளைகள் உண்டாகின்றது கருக்குழியில் விந்துபோய்ச்சேர்ந்தவுடனே கூர்மையாய்க்கவனித்தால் சில பெண்களுக்கு புழு நெளிதலைப்போலத் தோன்றப்படும். சுக்கிலமானது சுரோணிதத்துடன் சேர்ந்து இயங்கும்போது சுக்கிலமானது அதிகப்பட்டிருந்தால் ஆணாகவும் சுரோணிதம் அதிகப்பட்டிருந்தால் பெண்ணாகவும் இரண்டும் சமமாக இருந்தால் ஆணும் பெண்ணு மல்லாத அலியாயும், விந்துவில் இரண்டு விந்துக் கிருமிகளிருந்தால் இரண்டாகப்பிரிந்து இரட்டைப் பிள்ளையாயும் பிறக்கும். சுரோணிதம் வெளிப்படுவது நமக்கு விந்து வெளிகாணும்போது தெளிவாய்த் தெரிவதைப்போல் ஏன் தெரியவில்லை என்றால் குழாவில் வரும் ஜலத்திற்கும் கேணியில் ஊறும் ஜலத்திற்கும் ஒப்பிடல் கூடும். குழாவில் வரும் ஜலம் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. கேணியில் ஊறும் ஜலம் அதைப்போல் தெரியாது. ஆதலினால் பட்டிணத்தடிகளும்,

"ஒழுகிய விந்து ஊறு சுரோணித
மீது கலந்து"

என்றும் சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆண்மக்கள் போகித்து ஆனவுடனே அலுத்துப்போவதும் பெண்மக்கள் அவ்விதம் அலுத்துப்போகாமலிருப்பதற்கு காரணமென்ன வென்றால், விந்துப்பையின் வாய் திறந்திருப்பதைப்போல் சுரோணிதப்பையின் வாய் (அண்டநாளமென்ற காதக்குழல் திறவாமல் சுரோணிதம் வரும்வழிகள் மெத்தவும் சிறிய துவாரமா யிருப்பதால் போககாலத்தில் விந்துவைப்போல் ஒருமுறையில் அபிரிமிதமாய் கொடாமல் கொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்படும். ஆதலின் ஆண்மக்களைப்போல் பலக்குறைவு அடையாமலிருக்கிறார்கள், போககாலத்தில் கண்களை மூடிக்கொண் டிருக்காம லிருப்பதும், தீபங்கள் ஏற்றிவைப்பதும், அழகான சித்திரப்படங்கள் மாட்டப்பட்டிருக்கவும் வேண்டும். இதனால் பிறக்கும் குழைந்தைகள் நல்ல தேஜசோடும், அழகாயும், பார்வை உள்ளதுமான குழந்தைகளையும் பெற்றெடுப்பார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை என்று அறிவாயாக.

சுலோசனா:—மாலைகள் புரண்டுக்கொண்டிருக்கும் படியான புயங்களையுடைய பிரியா! போககாலத்து விந்துவை இழுத்து கருக்கூடுவிலக்கும் கருப்பாசயத்தைப்பற்றிய விஷயமும் அடியேன் தெரிந்துகொள்ள விருப்புற்றிருக்கிறபடியால் அது எவ்விடத்திலிருக்கிறது என்றும் எவ்விதம் சுரோணித விந்துவைக் கூட்டுவித்து கருவாகி வளர்கிறதென்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

கருப்பாசயம்.



1. நாதபீஜம். 2. அண்டகாணம். 3. கருப்பையின் உச்சி. 4. கருப்பையின் கழுத்து (கமலம்) 5. ஜனனபாதை. 6. தசைநார்கள். 7. தசைநார்கள் புறப்படுமிடம்.

வசந்தன்:—இளமையாகவும் அழகாகவும் சந்தனக்குழம்பு பூசப்பட்டதாகவும் ஒன்றோடொன்று நெருங்கியதாயும் தடாகங்களில் நீந்த ஆசைப்படுவோர் கரத்திடத்தே பற்றும் குடங்களைப்போலும்! அச்சலத்தில் வாழும் சக்கிரவாகப் பறவைகளை நிகர்க்கும் பயோதரமுடையாளே! நீகேட்டகேள்வியில் கருப்பாசயம் கருப்போற்பத்தி என்ற இரண்டு கேள்விகள் அடங்கியிருப்பதால் முதலாவதாகிய கருப்பாசயத்தைப்பற்றி முதற் கூறி இரண்டாவதாகிய கருப்போற்பத்தியைப் பற்றி பின் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

கருப்பையானது குறுக்கே ஓடுகின்ற தசைநார்களால் சூழப்பெற்றதும், ரப்பரைப்போன்ற நீளவும் குறுகவுமான தசையாலானதும், மலசலப்பைகளுக்குஇடையேயும் இறைப்பைக்கு சம்பந்தம்ஏற்பட்டார்போலும் உள்ளது. கருப்பை சினைகொண்டிருக்கும்போது சுமார் 280-நாள் வரையில் வளரக்கூடியதும் அதற்குமேல் சிசுவை வெளியாக்கி முன்னிருந்த நிலைமையில் சுருங்கக்கூடியதும் ஒன்றுக்கொன்று குறுக்கே போகின்ற தசைநார்களானவை கருப்பை சூல்கொண்டு வளருங்காலத்தே அதற்கு தடைகளேற்படாமலிருப்பதற்காகவும் சிறிது உதவிக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கருப்பையானது கெட்ட குருதிநீரை வெளிப்படுத்தவும் வெளிப்படுத்தும் நாளிலிருந்து சுமார் 16-தினம் வரையில் அதன்வாயாகிய கமலம் விந்துவானது உள்ளேபோகக்கூடிய அவ்வளவு சிறியதாக திறந்திருக்கவும் விந்து மேற்கூறிய 16-தினத்திற்குள் உட்செல்லுமாயின் அப்போதே வாயை மூடிக்கொள்ளவும் விந்துவை உறிஞ்சவும் இயற்கையாய் அமைந்திருக்கிறது. இந்தவிதமான கருப்பையானது பார்ப்பதற்குத் தட்டையாயும் மேல்பாகம் அகன்றும் கீழ்பாகம் சிறுத்து வட்டமாயும்கருமான்பலகைகளால் செய்யப்பட்ட துருத்தியைப்போலும் பூரணமாயிருக்கும்போது சுரக்காயைப்போலும் காணப்படும் அகன்றமேற்புறத்தே இரண்டுபக்கங்களிலும் சுரோணித பீஜங்கள் என்று சொல்லக்கூடிய அண்டாசயம் நாதக்குழல் என்று சொல்லக்கூடிய அண்டநாளத்துடன் சேர்ந்து வந்து கூடுகின்றது. கருப்பிலமானது முக்கோணவடிவமாயும் அதன் கீழ்ப்புறம் ஜனனபாதையில் செலுத்தப்பட்டிருக்கும் இந்தக் கருப்பையை மூன்றுபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேல்பாகத்தை உச்சி என்றும், மத்தியபாகத்தை உடல் என்றும் ஜனனபாதையில் செலுத்தப்பட்டிருக்கும், அடிபாகத்தை கழுத்து என்றும் சொல்லப்படும்.

என அறிவாயாக; இனி கருப்போற்பத்தியைப்பற்றிக் கூறுவோம், வெகு கவனம்வைத்து கேட்பாயாக.

கருப்போற்பத்தி.

போககாலத்தில் வெளிப்படும் தாதுவை இழுத்து கருக்கமலமாகிய கருப்பையின் கழுத்துத் தன்வாயை மூடிக்கொள்ளும் அதன் பிறகு விந்து வெளிப்பட முடியாமல் கருப்பையின் மேற்புறமாகிய

சிகரத்தை நோக்கி விந்துத்துளியானது சென்றுக்கொண்டிருக்கும். நிற்க. கருப்பையின் வலதுபுறமொன்றும் இடதுபுறமொன்றும் விபூதி உருண்டையைப்போல வெண்ணிறமமைந்தும் வாதுமைக்காய் அளவுள்ளதுமான அண்டாசயம் என்றும் நாதபீஜமென்றும் கருப்பமூலம் என்றும் சொல்லக்கூடிய சினைப்பையிலிருந்து மாதவிலகத்தின் இறுதியில் யாதாயினுமொரு பக்கத்திலிருந்து சோணிதம் பக்குவப்பட்டு முட்டையாகி அண்டநாளமென்றும் நாதக்குழல் கருப்பநாடி என்றும் சொல்லக்கூடிய சினைக்குழலின் கோளவடிவமாக கிண்ணி போன்றிருக்கும் முகத்துவாரத்தில் வந்து சேர்ந்திருக்கும். போககாலத்தில் உணர்வுகலங்கி பீஜத்திலிருந்து நாதம் உதயமாகி சினைக்குழலின் வழியாய் (சினைக்குழலின் தாரைகள் சிறியதாயிருப்பதால்) திவலை திவலையாக கருப்பப்பையுக்கு வந்துக்கொண்டிருக்கும்போது சினைக்குழலில் தங்கியிருக்கும் சினையை மெல்ல மெல்லவாக நகர்த்திக்கொண்டு சினைக்குழலின் நுனியில் கொண்டுவரும் இவ்விதமாகக் கொண்டுவந்த சினையுடன் மேற்கூறியது மேல்நோக்கி வந்துகொண்டிருக்கும் விந்துவானது போய்ச்சேர்ந்து கருப்போற்பத்திக்கு ஏதுவாக விகாரப்பட்டு கருப்பிலத்தில் சென்று அதன் உள் சிறு சிறு மடிப்புகளாக விருக்கும் தோலில் ஒட்டிநிற்கும் இதுவே கருப்போற்பத்தியாம்.

போகாந்தியத்தில் சரேலென்று எழுந்து விடுவதாலும் புரண்டு விடுவதாலும் தாதுவானது சலனப்பட்டு வெளியாகிவிடும். சினையும் கருப்பையின் திரவத்தில் கலந்து வெளிவந்து விடும். ஆதலின் கருக்கூடஏதுவாகாமல் போகிறபடியால் சந்தானத்தைக் கோறிய போகநெறி என்ற தலைப்பின் கீழ் வரும் விஷயங்களை கவனித்து நடக்க வேண்டும். அதாவது விந்து நாதத்தை முன்பின்னாக விடாமல் ஒரே காலத்து வெளிப்படுத்தி சிறிது நேரம் ஒன்று இரண்டு நாழிகை பரியந்தம் அசையாமலிருந்தால் கருக்கூடுமென அறிவாயாக.

கருப்பையின் கழுத்திலிருக்கும் வாயானது பிரசவகாலந்தவிர மற்றக்காலங்களில் திறப்பதில்லை என்றும், வீரியமானது அதினுட்பமாயிருப்பதால் சுலபமாய் அதனுள் பிரவேசிக்குமென்றும், உள்பிரவேசித்த விந்தானது நாதச் சினையுடன் கூடி வளர்கிறபடியினால் வாயானது திறக்காமல் வெளிவரமுடியாமற் போகிறதென்றும், நாதபீஜத்திலிருந்து சினை வெளிப்பட்டு நாதக்குழலில் வந்துவிழுந்துநாதக்குழலில் ஒவ்வொரு நாளும் வளர்ந்து அவ்வழியாய் மெல்ல மெல்ல நகர்ந்து வந்துக்கொண்டிருக்கும் (அவ்வழியில் கண்ணுக்குத் தோற்

றப்படாத சிறிய ரோமங்களிருப்பதால் அந்த ரோமங்களால் தள்ளப்படும்) இந்த விதமாக வந்துக்கொண்டிருக்கும் போது விந்துவிலிருக்கும் ஜீவரேணுக்கள் சந்திக்கின் கருதரிக்குமென்றும் போகத்திற்குப் பிறகு சிலது நாட்கள் பொறுத்தும் நாதவிந்து கலந்து கருதரிக்குமென்றும் சிலர் கூறுவர்.

கருப்பையின் வாயானது பிரசவகாலந்தவிர மற்ற காலங்களில் திறவாது என்றும் போககாலத்திற்குப் பிறகு சிலது நாட்கள் சென்றும் சினையும் ஜீவரேணுக்களும் கூடி கருதரிக்குமென்றும் கூறுவது கீழ்வரும் நியாயத்தால் ஒப்பத்தகுந்ததா யில்லை. கருக்கமலம் (கருப்பாசயத்தின் கழுத்தின் வாய்) வீட்டு விலக்கமான நாள் முதல் 16-தினங்கள் வரையில் திறந்திருக்குமென்றும், அந்த 16-தினங்களில் தான் கருக்கூடும் காலமென்றும் சொன்னது நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ருதுகாலமான இந்த 16-தினங்களில் கூடினால் திறந்திருக்கும் கமலமானது விந்துவையிழுக்கும் மற்றய காலங்களில் அதாவது கமலமானது மூடியகாலங்களில் விந்துவை யிழுக்கும் சக்தி அற்றுப்போகிறது. ஆதலின், ருதுகாலங்களில் சூதகத்தை வெளிப்படுத்தவும் விந்துவை யிழுக்கவும் (கருக்கமலம்) கருப்பை கழுத்தின் வாய் சிறிது ஜனனபாதை மார்க்கமாய் விரிந்திருக்கு மென்று சொல்லலாம். போககாலத்திற்குப் பிறகு சில தினங்கள் பொறுத்தும் கருக்கூடுமாயின் கருப்பையின் வாய் திறவாதபோது இலகுவாய் கருப்பகோசத்தில் சென்ற விந்துவானது போனமாதிரியே வெளி வந்துவிடவுங்கூடும். கருக்கமலம் ருதுகாலங்களில் விந்து உள்செல்லக்கூடிய அவ்வளவு சிறிய துவாரமாக் திறந்திருக்கு மென்றும் விந்து உட்சென்ற உடன் மூடிக்கொள்ளுமென்றும் உறுதியாகச் சொல்லலாம். போககாலத்தில் சமக்கலவி செய்தால்தான் கருக்கூடுமென்றும், சில தினங்கள் பொறுத்துக் கருக்கூடுமென்பது நம்பத்தகுந்ததா யில்லை என்பதைப்பற்றி கூறுவர்ம். கூடுங்காலத்தில் புருஷன் வீரியத்தை முன்னுக விட்டு விடுவானுயின் சக்தி அற்று ஸ்திரீ சமத்துவமும் நின்றுவிடும் ஆதலினுல் (அண்டாசயத்தினின்று சோணிதம் வெளிப்படாது) வெளிப்படாதுபோனுல் புருஷனுக்குண்டாகும் இன்பத்தைப்போல் ஸ்திரீக்கு இன்பமில்லாது போகின்றது; இன்பமில்லாவிட்டால் கருக்கமலமும் விந்துவை இழுக்காது விட்டுவிடும். பின்னுக வீரியத்தை விட்டால் (நாதம் உதித்து வெளிவந்தபிறகு) கருக்கமலம் நாதத்தை வெளியாக்கிக் கொண்டிருப்பதாலும், அப்படி கருக்கமலத்திலும் ஜனனபாதையி னிறுதியிலும் திவலை திவலையாக

வரும் நாதம் ஊறிக்கொண்டிருப்பதாலும் விந்து உட்செல்ல முடியாமல் வெளிவந்து விடும். ஏகமுறையில் விந்து நாத முதயமானால் யாதொரு தடங்கலுமில்லாமல் நாதம் வெளிவருவதற்கு முன் விந்து கருக்கமலத்தா லிழுக்கப்பட்டு கருப்பிலத்தை யடைந்து மேல்நோக்கி போய்க்கொண்டிருக்கும், இதற்குள் நாதமும் சிறிது சிறிதாக கருப்பை வந்து சேரும். இதுகாலத்து எழுந்திருத்தல் ஒருக்கணித்தல் அலங்கல் குலுங்கல் முதலாகிய செய்கையின்றி யிருப்பார்களாயின் விந்து துளியும் நாதச் சினையும் ஒன்றுகூடிவிடும் ஒன்று கூடியபிறகு கருப்பிலத்தின் மேல்பாகத்தில் சிறு சிறு மடிப்புகளாக இருக்கும் உள் தோலில் ஒட்டி நின்று கருவாகி வளரும் ஆதலின் வீரியத்தை முன்பின்னாக விடாமல் ஒரே சமயத்தில் விடவேண்டும் இப்படிச் செய்வதால் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் இன்பம்பெருகி கருவுண்டாகி புத்திரபாக்கியமடையலாம்வீரியத்தைபின்னாகவிடாமல் அதுகாலத்து ஏற்படும் இன்பத்தைமாத்திரம் இருவரும்அனுபவிக்கலாம். முன்னாக விட்டால் புருஷனுக்கு இன்பமும் மனைவிக்கு இன்பமில்லாது போவதும் தவிர ஸ்திரீக்குவேட்கையும் அதிகரிக்கும். ஆதலின்,போககாலத்தில் வீரியத்தை முன்னாக விடாமல் நாதமுதயமானபிறகும் உதயமாகுங்காலத்தும்விட்டுப்போகத்தைமுடிக்கவேண்டும். போகாந்தியத்தில் எழுந்திருத்தல் முதலியதுகள் நடந்துவிடுமாயின் கருப்பிலத்தில் சேர்ந்த விந்துவானது மேல்நோக்க முடியாமல் சலனப்பட்டுவிடும். ஆதலின் போககாலத்திற்குப் பிறகு இரண்டொரு நாழிகைக்குள் கருதரித்தாலொழிய அதன்பிறகும் சில தினங்களுக்குப்பிறகும் கருதரிக்குமென்பதை (விந்துக்கிருமியும் 15-நாழிகைக்கு மேல்உயிர்பெற்றிராது) நம்ப இடமில்லை.

ருதுகமாவதற்குமுன் போகம் ஏற்பட்டிருக்கின் விந்துகருப்பாசயத்தில் சென்றிருந்து பிறகு உற்பத்தியாகிவரும் சினையுடன் கலந்து கருக்கூடுமென்றும் சொல்லுவர். இது எவ்விதத்திலும் நம்பக்கூடாததா யிருக்கிறது. ருதுகத்திற்குமுன் கருக்கமலம் மூடிக்கொண்டிருக்கும் அது காலத்து விந்து உட்செல்ல முடியாது. இப்படிக்கன்றி இலகுவாய் உட்சென்று கருப்பாசயத்தில் சினையுடன் கலக்க தங்கி யிருக்குமாயின் பிறகுவரும் ருதுகவெள்ளத்தில் தள்ளுண்டு வெளியாகிவிடும். ருதுகவெள்ளத்தை எதிர்நோக்கிப் போய் சினையுடன் கலக்க விந்துவுக்கு ஒருக்காலும் கூடாதகாரியம் இஃது ஒப்பத்தகுந்ததுமன்று. சினையும் ருதுகயிறுதியில் தோன்றுவது. ஆதலின் ருதுகத்திற்குமுன் நடந்த சம்போகத்தால் கருதரிப்பது என்பது ஒருக்காலும் கூடாத விஷயமாகுமென அறிவாயாக.

சுலோசனு:—இரகஸ்ய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாய் விளக்கி கிருபைபாலிக்கும் புருஷர்சிரேஷ்டரே! அடியேன் கேட்டபிரகாரம் கருப்பாசயத்தைப் பற்றியும் கருப் போற்பத்தியைப்பற்றியும் கேட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கினேன் ஆனால், இவைகளுக்கு மூலாதாரமா யிருக்கப்பட்டதும் நீர் சுருக்கமாயும் மறவிடமாயும் சொன்ன அண்டாசயத்தைப்பற்றியும், அண்டநாளத்தைப் பற்றியும் ஜெனனேந்திரியத்தைப்பற்றியும் நாதவிந்துவைப் பற்றியும் ஸ்திரீ புருஷர்களுக்கு அமைந்திருக்கும் விஷயத்தை அடியாள் செவ்வையாயுணரும்படி சொல்லி அருளல்வேண்டும்.

புருஷ ஜெனனேந்திரியம்.

வசந்தன்:—நூலைக்காட்டினும் அதிகமாய் அசைகின்ற இடையானது உடையாதிருக்கும்பொருட்டு மன்மதனால் மெல்லியதாயிணைக்கப்பட்ட இரும்புக்கம்பியைப் போன்ற வயிற்றின் மயிரொழுங்குடையாளே! புருஷ ஜெனனேந்திரியமானது (ஆண்குறி) இஃது தசைகள் சிறுபான்மையும் நரம்புகள் பெரும்பாலும் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்பரிச நரம்பு புழை நரம்பு வெண்ணரம்பு துடிநரம்பு ஆகிய நான்கு நரம்புகள் சேர்ந்துளது, நரம்புகள் நான்கையும் ஒன்று கூட்டுவதற்கு சிறிது மாமிசமாகிய தசையும் சேர்ந்திருக்கிறது. இந்த விதமான குறிக்கு தண்டு என்று பெயர். இத்தண்டின் முனையில் மிருதுவான தோலால் மூடப்பட்டிருக்கிறது. இத்தோலுக்கு லிங்ககோசம் என்று பெயர். மணவாழ்க்கை காலத்து இத்தோலால் அதிக இன்பம்பயக்குமாகையால் லிங்கத்திற்கு மேல்காட்டிய காரணத்தால் கோசம் என்ற சிறப்பும் பெயரும் அமைக்கப்பட்டிருக்கிறது. தண்டின் முனையிலிருக்கும் சிறிய வெடிப்பைப் போன்ற ரந்திரத்திற்கே நீர்த்தாரையின் முடிவு என்று சொல்லப்படும். உச்சியின் பெருமூளையின் அடிபாகத்திலிருந்து புறப்பட்டு முள்ளந்தண்டின் வழியாய் மேல் கூறிய நான்கு நரம்புகள் கீழேக்கிறங்கி பீஜத்திற்கு மேலாக வெளியாகி தசைகளுடன்கூடிநிற்கும். ஆதலினால்தான் ஞானகருவிகளாகிய கண், மூக்கு, வாய், காது இவைகளால் போகத்திற்குத்தகுந்த விஷயாதிகளை கவனித்தமாத்திரத்தில் மூளைக்கும்

ராஜக்கருவிகளுக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதால் மூளையறிந்து இருதயத்திற்கு தெரிவிக்கிறது; இருதயம் அறிந்த அந்த நிமிஷமே மூளையும் மற்ற அவயவங்களும் உடன்பட்டு மூளையிலிருந்து உற்பத்தியாகிவரும் வெண்ணறம்புகளின் வழியாய் ஆவியும், துடிநரம்புகளின் வழியாய் ஆத்மசத்தும், புழை நரம்புகளின் வழியாய் இரத்தமும் லிங்கத்திற்கு செலுத்தப்படுகின்றன. இதனால் தண்டு நீளவும் விம்மவும் அசையவும் முதலான காரியாதிகள் நடைபெருகின்றன. ஸ்பரிசநரம்பினால் ஸ்பரிச உணர்ச்சி உணர்ந்த உடன் விந்துவை வெளியாக்குகின்றன. வெண்ணரம்பு துடிநரம்பு புழை நரம்புகளால் ஆசை உற்பத்தியாகில் பரிசநரம்பு ஒன்றாய் ஆசை வெளியாகி தணிந்துவிடுகிறது. மேல்கூறிய நான்கு நரம்புகளில் இரண்டு நரம்புகள் லிங்கத்திற்கு இருபக்கத்திலும் பக்கத்திற்கு ஒவ்வொன்றாக சேர்ந்திருக்கும். இந்த நரம்புகள் இரண்டுந்தான் போககாலத்தில் நீண்டு விரைத்துப் பருத்து விடுகின்றன இதனால் தான் ஸ்கலிதக்குழல் நீர்த்தாரை முதலியன விசாலமாகின்றன. அது காலத்து விந்துவும் எளிதாய் ஸ்கலிதமாக வசதியாயிருக்கிறது. மற்ற இரண்டு நரம்புகளும் லிங்கத்தின் அடிபாகத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது இந்த இரண்டு நரம்புகள் பிதுவடையும் போதுதான் குறி எழுச்சி அடைகின்றன இதை அனுபவத்திலும் கண்டிருக்கலாம். குறியில் இரத்தம் குறைவு படுமாயின் விம்மலடையாது தளர்ச்சி பெற்றுபோகும் புத்திரோற்பத்தியாவதற்காக தாதுவை கருப்பைக்கு அனுப்பவேண்டியிருப்பதால் குறிவிம்மலடைய வேண்டிய அவஸ்யம் இவ்விதமான விம்மலால் புத்திரபாக்கியமும் இன்பமும் ஆடவர் அடையப்பெருகின்றனர்.

பீஜம்.

ஆண்குறியின் அடிபாகத்தில் பக்கத்திற்கொன்றாக இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. இது நுட்பமாயும், சிறிதுநீண்டும் விசேஷமான மிருதுவாகிய மெல்லிய தாதுக்குழல்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சுத்தமான ரத்தமானது உச்சியின்சிறிய மூளையிலிருந்து, இருகாதுகளுக்குப் பின்புரமாய்க் கீழிறங்கி முள்ளந்தண்டின் சாரமாய்வந்து குண்டிக்காய்வழியாய் பீஜத்திற்குவந்து சேர்

கிறது. இப்படிவந்து சேர்ந்தஇரத்தத்தை பீஜமானது, தாதுக்குழல்களால் பக்குவப்படுத்தி ஒன்றோடொன்று சேர்ந்து இறுதியில் தாதுவாகி என்றகுழலின் மார்க்கமாய் அடிவயிற்றுக்குச்சென்று இததாது தங்கியிருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தாதுக்கமலத்தில்போய் தங்கியிருக்கும். ஆண்குறியில் பிணைக்கப்பட்டிருக்கும் ஸ்பரிசநரம்பு எப்போது உணர்ச்சியடைகிறதோ, அதுபோது, மற்ற நரம்புகளும் விகாரமடைந்திருக்கும். ஸ்கலிதக்குழலும் நீர்த்தாரையும் விசாலமாயிருப்பதால், தாதுக்கமலத்தில் தங்கியிருக்கும் தாதானது, அது வழியாய் வெளிவந்து ஆனந்தத்தைக் கொடுக்கும். பீஜமானது, மேல்கூறியவாறு சுத்தரத்தத்தை தாதுவாக்கும் பண்பை உடையது இவ்விதமான பீஜத்தால் ஆண்தன்மை உண்டாகிறது.

தாது

இத்தாதுவைப்பற்றி தாதுஉற்பத்தி தாதுபயன் தாதுகுணமுதலானதுகளை முன்னமே கூறிவிட்டிருக்கிறபடியால் சிலமுக்கியமானவிஷயத்தைப்பற்றிகூறுவாம். பெண்களுக்குசூதகம் காலத்திற்கு ஏற்றவாறு வருவதுபோல் ஆண்களுக்கும் அவ்வாறே யுக்தவயதுவந்தபிறகுதான் தாதுஉற்பத்தியாகும் நமது இந்தியநாட்டில் சுமார் 15-அல்லது 16-வயதில்உற்பத்தியாகும் அதுகாலத்துஅத்தாதைசெலவிடாமல் சுமார் 25-வயது வரையில் இருப்பானாயின் மிகவும் கட்டுவாய்ந்து தேஜசோடுக்கூடி நல்ல அழகுவாய்ந்தவனாயிருப்பான் அதன்பிறகு கலியாணம் செய்து, நியாயமானவழியில் மிதமாகச் செலவு செய்வானாயின் அவன் நீண்டவயதோடும் கட்டுத்தளராமலும், தேஜசோடுமிருப்பதும்தவிர தன்னைப்போன்றமிகவும் கட்டுவாய்ந்தும் புஷ்டியாயும்தேஜசோடும் நீண்டவயதுள்ளதுமான, அழகானமதலைகளைப்பெற்றெடுப்பதில்பின்னடையார்கள். மேல்கூறியகாலத்து தாதுவைசெலவிடாமல் நிறுத்தி வைப்பதால் யாதொருகெடுதியும் ஏற்படாது. இதைப்போலவே நாதமும் ஸ்திரீகளுக்கு ஒத்ததாயிருக்கின்றது என அறிவாயாக.

ஸ்திரீகள் ஜனனேந்திரியம்.

(பெண்குறி) இஃது இருகால்களுக்கும் இடையில் இரண்டுவிதமான உதடுகளால் மூடப்பட்டிருக்கிறது வெளிபக்கமிருக்கும் உதடு

ரோமங்களால் நிரம்பப்பெற்றதாயும் நீண்டுமெடிந்துள்ளதுபோன்று சேர்ந்து மேல்பக்கம் சற்றெழும்பிபக்கத்திற்கொன்றாயிருக்கும். இதற்கு பெரிய உதடென்றுபெயர். உள்பக்கம் இருக்கும் உதடு ரோமங்களில்லாமலும் ஸ்பரிசநரம்புகள் நிரம்பியது இதற்கு சிறிய உதடுகளென்றும் பெயர். இதன்நாப்பண் வாதுமைப்போன்றபிளவிற்கே நிதம்பம் என்று பெயர். இப்பிளவின் மேல்முனை கோதுமையைப் போல் சிறிது நீண்டுதொங்கும் இதற்கு யோனிலிங்கமென்று பெயர். இஃது ஸ்பரிச நரம்புகளால் நிறம்பப்பெற்றிருக்கிறபடியால் தான் போககாலத்தில் அதிக இன்பத்தைக் கொடுத்து சுரதநீரைவெளிக்குக் கொண்டு வரும் இதைப்பற்றி அங்குலியோகம் என்ற தலைப்பின் கீழும் சொல்லப்பட்டிருக்கிறது நிற்க. இவ்விதமான பிளவின் சற்றுமேற்புரம் வட்டமாய் ஓர் ரந்திரமிருக்கும் இதற்குநீர்த்துவாரம் என்று பெயர். மேல்கூறிய பிளவானது பிரசவகாலத்து விரிந்தும் மற்றக்காலங்களில் சுருங்கியுமிருக்குமாதலால் இரப்பரைப்போன்ற தசையாலானது என்றுசொல்லாமலே விளங்கும். இப்பிளவின்புழையானது திரேகத்திற்குத் தகுந்தவாறும் ஜாதிக்குததகுந்தவாறும் 12-இஞ்சி வரையில் நீண்டும் 4-இஞ்சி வரையில் குறைந்துமிருக்கும். கன்னிப்பருவமுள்ள ஸ்திரீகளுக்கு இப்பிளவானது மெல்லிய ஜவ்வினால் மூடப்பட்டிருக்கும். சூதகம் வெளிவருவதற்கும் சிறியதுவாரமும் இச்சவ்வினிடமாயிருக்கும். இச்சவ்வானது சிலருக்கு இயற்கையாயில்லாமலிருப்பதுமுண்டு முதல்முதல் புருஷ சம்மந்தத்தால் சவ்வானது கிழிந்து இருந்த இடந்தெரியாமல் யேகிவிடும்.

அண்டகாளம் அண்டாசயம்.

அண்டகாளமென்பது நாதக்குழல் இதைப்பற்றி கருப்பாசயம் என்ற தலைப்பின்கீழ் சொல்லியிருப்பினும் இன்னும் சில விஷயங்களைக்கூறுவாம். அண்டகாளமானது 4-இஞ்சிநீளமுடையது இதன் ஒருமுனை மலர்போல விரிந்தும் மற்றோர்முனை கருப்பாசயத்தின் மேல்புறம்சேர்ந்துமிருக்கும் கருப்பாசயத்தில் சேருவதற்கு சிறிதுதூரத்தில் அண்டாசயம் சேர்ந்துமிருக்கும். இதன்துவாரம் மெத்தவும் சிறியதாயும் சனைகளால் நெருக்குண்டு மிருக்கும் இதன்மூலமாய் நாதமும் சினையும் வரும் அண்டாசயமானது நாதத்தை உற்பத்திசெய்யும் ஓர்கருவிஇதைச்சார்ந்த மற்றவிஷயங்களெல்லாம் முன்பேசொல்லியிருக்கிறபடியால் இத்துடன் நிறுத்திவிடுகிறேன்.

சலோசனா:—பங்கயவதனா! தாங்கள் சொல்லிவந்த யாவற்றையும் உணர்ந்தேன் மனங்களித்தேன் இன்னும் சிலது கேட்கவிருப்புற்றேன் மனந்தளர்வு கொள்ளாமல் அடியாள் அதிக சிரமம் கொடுப்பதற்கு மன்னிப்பு கொடுத்து வரந்தரல்வேண்டுமாய்ப் பிராத்திக்கின்றேன்.

வசந்தன்:—அடித்தலங்களை ஊன்றி ஏறுவதற்காக வேதனால் அமைக்கப்பட்ட படிகளை நிகர்த்த வயிற்றின் ரேகைகளை உடைய பெண் பாவாய், நீகேட்கும் கேள்விகளுக்கு யான் மனத்தளர்வு கொள்ள யாதொரு காரணமுமில்லை யாதலாலும் இன்னும் உனக்கிருக்கும் ஐயத்தை வினவி சங்கையற நீ கேட்டுத் தெளிய எனக்கு மென்மேலும் அபா உதிப்பதாலும் யாதொன்றுக்கும் சிந்தையுறாது கேட்டுத்தெளிவாயாக.

சலோசனா:—சாத்துவிகத்தைக் கையாண்டுவரும் தன்மையுடைய பதியே! ஆண், பெண், உற்பத்தியைப் பற்றி விவரமாய் சொல்லக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆண் பெண் சிசு உற்பத்தியும் அவைகளின் பலவிதமும்.

வசந்தன்:—அரவத்திற்கு நிகராகிய அல்குல் என்னும் தேர்தட்டின் மேல் அமர்ந்திருக்கும் அனங்கனை நிகர்த்த இடையினாளே! ஆண் பெண் உற்பத்தியைப்பற்றி முன்னோர்கள் ஒருவகையாகவும் யோகிகள் ஒருவிதமாகவும் ஆங்கிலவயித்தியர் ஒரு மாதிரியாகவும் கூறுகின்றனர். இதில் முன்னோர்கள் கூறும் விதத்தைப் பற்றி முன்னமே (சந்தானத்தைக் கோறியபோக நெறி என்ற தலைப்பின் கீழ்) சொல்லியிருப்பதால் இப்போது யோகபுருஷாள் சொல்லும் வழியையும் ஆங்கிலநாட்டார் கூறும் கூற்றையும் கீழ்ச்சொல்லி ஒன்று படுத்திக்காட்டுவோம்.

யோகிகள் சொல்லும் வழி:—போககாலத்தில் ஆடவனுக்கு வாசியானது மூக்கின் வலது ரந்திரத்தின் வழியாய் (சூரிய கலையில்) நடந்துக்கொண்டிருக்குமாயின் வெளிவரும் விந்துவானது கருப்பையில்சென்று நாதச்சிரோயுடன்கூடிகருதரிப்பது ஆணாகும். அன்றி வாசி மூக்கின் இடது ரந்திரத்தின் வழியாய் (சந்திரகலையில்) நடந்துக்

கொண்டிருக்குமாயின் வெளிவரும் விந்துவானது கருப்பையில் சென்று நாதச்சினையுடன் கூடிகருதரிப்பது பெண்ணாகும். இரண்டு நாசிரந்திரத்தின்வழியாய்வாசிப்பகிர்ந்து (சுழிமுனையில்) ஓடும்போது விந்துக்கிருமிகளுக்கு தக்கவாறு இரட்டைப் பிள்ளையாயும் அல்லது அலியாயும் பிறக்கும் என்று கூறுவர்.

ஆங்கிலர் கூறுமார்க்கம்:—ருதகயிறுதியில் பக்குவப்பட்டுவரும் சினையானது வலது அண்டாசயத்தினின்று வெளிவந்த சினையுடன் வலது பீஜத்தின் தாதுசேர்ந்து கருதரிக்கின் ஆண் என்றும், இடது அண்டாசயத்தினின்று வெளிவந்த சினையுடன் இடது பீஜத்தின் தாதுசேர்ந்து கருதரிக்கின் பெண் என்றும் இவைஒன்றுக் கொன்றுமாறுபடில் கருக்கூடாதென்றும் அப்படிக்கருக்கூடின் அலியாய்ப்பிறக்குமென்றும் கூறுவர்.

சம்பந்தப்படுங்காலத்தில் சூரியகலை ஓடின் வலது பீஜத்தில் பக்குவப்பட தாதுவே பெரும்மாலும் வெளிவரும் இதற்கு ஒப்ப பெண்களது வலது அண்டாசயத்தில் பக்குவப்பட்டு வந்த நாதச்சினையும் ஒன்றாகூடின ஆணாகும் அன்றி சந்திரகலை ஓடின் இடது பீஜத்தில் பக்குவப்பட்ட தாதுவே பெரும்பாலும் வெளிவரும் இதற்குதகுந்தாப்போல் பெண்களது, இடது அண்டாசயத்தில் பக்குவப்பட்டுவந்த நாதச்சினையும் சம்மந்தப்படின்பெண்ணாகும் அப்படிக்கன்றி ஒன்றுக்கொன்றுமாறுபடின் கருத்தரிக்காது போகும், அப்படித்தரிக்கின் அலியாகும் இந்த அலிப்பிறவிலும் நாதவிந்துவின் சக்திக்குத்தக்கவாறு பேடன் பேடியாகவும் பிறக்கும், இதுவுமன்றி ஏகதேசத்தில்வலதுஇடது அண்டாசயத்தினின்று, ருதகயிறுதியில் நாதச்சினை பக்குவப்பட்டு வருவதுமுண்டு. இப்படிவந்த சினையின் தாதுவானதுசேரின் தாதுவில் இருக்கப்பட கிருமிகளுக்குத்தக்கவாறு இரண்டு கருப்பமும் அல்லது ஒன்றுவீணாய், ஒத்தைகருப்பமும் உண்டாகும் இந்த இரட்டைக்கருப்பத்தில் சினைக்குத்தகுந்தவாறும் தாதுவுக்குத்தக்கவாறும் வாசிக்குத்தக்கவாறும் ஆண்பெண் சிசு உற்பத்தியாகும், இந்தரகஸ்யத்தை எல்லாம் வல்ல இறைவனே சொல்லக்கூடுமல்லாது மற்றவரால் சொல்லவியலாது. அப்படி சொன்னாலும் அவர்கள் சொல்லும் பொருத்தங்கள் முறண்பட்டு இறந்துபோம் வலது பீஜத்திலும் அண்டாசயத்திலும் பக்குவப்பட்டுவரும்; விந்துக்கிருமியும், நாதச்சினையும், வலுவுள்ளதாயிருக்கிற படியால் இடகாத்திரமாயிருக்கக்கூடிய ஆணாகவும், இடது பீஜத்திலும்அண்டாசயத்திலும் பக்குவப்பட்டுவரும் விந்துக்கிருமியும்வலதுபக்கத்தி

விருந்து வரும் நாதவிந்துவுக்குச்சற்று சக்திகுறைவாயிருப்பதால் மிருதுவாயிருக்கக்கூடிய பெண்ணுகவும் பிறக்கும்.

எப்பொழுதும் எக்காலத்தும் நாசியின் வலது ரந்திரத்தின் வழியாய் வாசியானது நடந்துகொண் டிருக்குமாயின் அப்போது எந்தவேலைசெய்தாலும் அல்லது செய்யயோசித்தாலும் யாதொரு இடையூறின்றி நடைபெறும். இடது ரந்திரத்தின்வழியாய் நடந்துக் கொண்டிருக்குமாயின், ஒருபிரயோஜனமுமில்லாது போகும் ஆத லால் வாசியை எப்போதும் சூரிய கலையிலேயே வைத்திருக்கப் பழகவேண்டும் யோகநூல்களில் இதன் விவரம், தெரிந்துக்கொள்ள லாம்.

சுலோசனு :—கோமகனே, ஆண்பெண் உற்பத்தியைப்பற்றி யாவும் விவரமாய் அறிந்தேன். ஆனல், கருப்பாசயத்தில் கருதரித்து விட்டது என்று நாம் எவ்விதமான வழிகளில் அறிந்துக்கொள் ளலாம் என்றதைப்பற்றி தெளிவுபட உரைத்தருள்வீர்.

கருப்பச் சின்னங்கள்.

வசந்தன் :—ஞாயிறு, தன் ரதத்தை ஒரு சக்கரத்தால் போவதைப் போல் இல்லறம் என்னும் ரதத்திற்கு ஓர் சக்கரத்தைப்போலி ருக்கும் கற்பு உடையாளே! கருப்பம் நின்றதற்கு முதல்முத லாக அறிகுறியாக சூதகம் நிற்கும் அதிகாலையில் வாந்தி யெடுப் பார்கள் வாயில் உமிழ்நீர் சுரக்கும் சிறுநீர் இறங்குதல் இவை கள் கருநின்றதற்கு சின்னங்களாமென முதலிலே அறியலாம் பிறகு, ஸ்தனங்கள் முன்னிலும் பருக்கும் காம்புகள் கருத்து விடும், பிசுபிசுப்போடுகூடிய நீர்போன்ற பால் வெளிப்படும் சுமார் ஐந்தாம் மாதத்தில் பிண்டத்தின் அசைவு தோன்றப் படும். யோனிப்புழையானது முன்னிருந்த சிவப்புநிறம் மாறி நீலநிறமாகிவிடும். சிற்றுண்டிகளில் அதிகப் பிரியப்படல் வசீக ரத்தோற்ற முண்டாதல், யோனிப்புழையில் தர்ஜன விரலை புகுத்தி சோதித்தால், குழவியின் தலை நன்ருய்த் தோன்றுதல் வயறுவளர்தல் முதலிய சின்னங்களாலும் பரிசைக்ஷயாலும் கண் டறிதல்கூடும். இதனைச் சற்று விரித்து விவரமாய் சந்தேகம் வரும்இடத்து தெளிவுபடவும் கூறலாம்

சூதகம் நின்றுவிடுதல்=சூதகம் கருக்கூடிய உடன்நின்றுவிடும். மற்றும் பல வேறு காரணங்களாலும், சூதகம் நிற்பதுண்டு. இவ்வி தம் சரீர ஆரோக்கிய மில்லாதவர்களுக்கே பெரும்பாலும் நடைப் படும் ஆரோக்ய நிலைமையி லிருக்கும் பெண்களுக்கு சூதகம் நிற்கு மாயின் கருப்பவதியானள் என நிச்சயமாய் நம்பலாம். கருப்பவதி யான பிறகும் சில பெண்களுக்கு சூதகம் வெளிப்படுவதுண்டு. அத ஞல் யாதொரு தீங்கும் நேரிடாது. அதை பொருட்படுத்துவதனுவ சியம்.

கலைவாந்தி=சூதகம்நின்ற இரண்டொருவாரத்தில் தூயில்விட் டெழும்போது வாந்தியும் இருமலும் உண்டாகும். கருப்பாசயத்திற் கும் ஜீரணக் கருவிக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் இஃது நிகழ்கின்றது. பெரும்பாலும் முதல் இரண்டொரு கருப்பத்திற்கே நடக்கும் பிறகு, சிறிதுசிறிதாக குறைந்துவிடும்.

நீரிறங்குதல்=கருப்பை வளருங்காலத்தில் அதற்கு முன்னுலிரு க்கும். நீர்ப்பையானது கருப்பையால் பாதிக்கப்பட்டு நீரைத் தங்க வொட்டாமல் அடிக்கடி வெளியாக்கிக்கொண்டே யிருக்கும் சில மாதங்களுக்குப் பிறகு, கருப்பையானது வளர்ந்து வயிற்றின்மேல் எழும்பிவிடும் அப்போது நீர்ப்பை கீழ் தங்கிவிடுகிறபடியால் கருப் பையால் நீர்ப்பை பாதிக்காம லிருக்கும். இதுகாலத்து நீர் அடிக்கடி இறங்குதல் நின்றுவிடும்.

குறிநிறமாறுதல்=கருப்பையானது கருவளர்ச்சிக்குத் தக்கமா திரி அதிசீக்கிரமாய் வளரவேண்டி யிருப்பதால் அந்த வளர்ச்சிக்குத் தக்க (போதுமான) ரத்தம்தேவையாயிருக்கிறது. இரத்தம்ஏகமுறை யில்வந்து கூடுகிறபடியால் குறியானது இரத்தப்பெருக்கால்நிறமாறி மேலெழுந்து காணப்படும் இரத்தம் எந்த இடத்தில் அதிகமாய் சேருகிறதோ அந்த இடம் நீலநிறமடையும்.

கருப்பைவளர்தல்=கருப்பையானது. சுமார் 3-மாதங்கள்வரை யில் கூபக எலும்புகளுக்குள் அடங்கியிருப்பதால் அதற்குள் (3-மா தங்களுக்குள்) கருப்பையை யுணரமுடியாது. அதற்குமேல் கருப்பை யானது நாளுக்குநாள் விருத்தி யடைந்து அடிவயற்றிலிருந்து மே லுக்கு வருவதை நன்றாய் அறியலாம் ஒன்பதாம் மாதமுடிவில் மார் பினுடை குழியின் வரையில் வளரும் பிறகு பிரசவமாவதற்கு சில தினங்களுக்குமுன் இரண்டு விரற்கடை அவ்வளவு இறங்கிவிடும்,

ஸ்தனங்களின் வேறுபாடு—கருநின்ற மூன்றுமாதமுதல் ஸ்தனவேறுபாடு காணலாம் முதலாவது பருக்கும் பிறகு கெட்டிப்படும் காம்பைச்சுற்றி சென்னிறம் வாய்ந்த தோலானது கருநிறமடையும் பயோதரக் காம்பை விரல்களால் அழுத்தினால் சிறிது வெண்ணிறமமைந்த திரவத்துளிகள் வெளிப்படும் இவையாவும் மதலையின் போஷணைக்கு முக்கியமாய் வேண்டியிருப்பதினால் எல்லாம் இறைவனருளால் கருப்பகாலத்திலேயே இவைகள் யாவும் சரிப்பட்டுவிடுகிறது இறைவன் திருவருட்சக்தியை நாம் எடுத்து கூற எம்மாத்திரம்.

கருவினசைவு—அனேகமாய் ஐந்தாம் மாதக்கடைசியில்பெரும்பாலும் வுறுப்புகள் யாவும்பக்குவப்பட்டுவிடுவதால் கருப்பாசயத்தில் குழந்தையானது உலாவும் அதனால்கருப்பசலனம் ஏற்படும் இதுவே கருவினசைவு சிலபிள்ளைகளைப் பெற்றவர்களுக்கு திட்டமாய் கருப்பசலனம் தெரியும் முதல் கருப்பமுடைய ஸ்திரி இதனை திடமாய் சொல்ல ஏலாது இவ்விதமாக கருப்பக்குறியாவும் தெரிந்தவுடன் ஐந்தாமாதத்தில் தர்ஜனவிரலை யோனிப்புழையில் செலுத்திப் பார்த்தால் குழந்தையின் தலை நன்றாய் தோற்றப்படும் இன்னும் கருப்பிணியின் வயற்றின் மேல் காதைவைத்துக் கவனிக்கின் பிண்டத்தின் இருதயத்தினது துடிதுடிப்பும் கண்டறியலாம் அன்றியும் சிலசமயங்களில் வயிற்றின்மேல் கையைவைத்துப் பார்க்கின் கருவினசைவும் நன்றாய்க்காணலாம்.

கருதரித்தமுதல் கருப்பை வளர்கிறதினால் சிலசின்னங்கள் உண்டாகின்றது கருப்பையானது வளர்ந்து அன்னமய கோசத்தை முட்டுவதால் அஜீரணமும் குடலை அழுத்துவதால் மலச்சிக்கலும்நெஞ்சிக்குழியை யெதிர்ப்பதால் பெருமூச்சும் இரத்தக்குழாய்களை உராய்வதினால் மூலப்பிணியும் கால்களில் இரத்தக்குழாய்களின் வீக்கமும் காணும்.

சுலோசனு:—பிரிய! நீவிர் இதுபரியந்தம் நவின்றுவந்த விடயாதிகளை உணர்ந்தேன் ஆயின் இவையாவும் கருப்பமுறாத மங்கயர்கட்கு தோற்றப்படாதா.

பொய்கருப்பம்.

வசந்தன்:—காதலி! திரேகாரோக்கியமுள்ள ஸ்திரீகட்கு யான்கூறி வந்த கருப்பச்சின்னங்கள் கண்டால் யாதொரு தடங்கலுமில்லாமல் கருப்பவதியாயிருக்கிறாள் என திட்டமாய் நம்பலாம் ஆரோக்கிய மில்லாத ஸ்திரீகட்குச் சின்னங்கள்காணின் சந்தேகப்படவேண்டியதவசியம். ருதகக்கட்டியினாலும் சிலருக்குச் சின்னங்கள் ஏற்படுவதுண்டு. ஆனாலும் ஐந்தாம் மாதத்திற்கு மேல் அங்குல பரிசைஷயாலும் பிண்டத்தின் இருதயத்துடி துடிப்பாலும் அசைவாலும் பொய் மெய் கருப்பத்தை நிக்ஷபமாய் கண்டறிந்து விடலாம்.

சுலோசனா:—பிராணேசா! கருப்பவதியாயிருக்கும் ஸ்திரீகள் எந்தெந்த வகையில் மிகவும் சாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பதைப் பற்றியும் அவர்களின் சுகாதாரவிவரத்தையும் தெளிவாய் உரைப்பீராக.

கருப்பஸ்திரீகளின் சுகாதாரம்.

வசந்தன்:—மங்கையர் கற்பகமே ஸ்திரிகள் கருப்புற்றிருக்கும்போது வெகு சாக்கிறதையாயிருத்தல் மெத்தவும் நன்மையை உண்டாக்கும். அவை பின்வருமாறு.

ஆகாரம் = மிகவும் மிருதுவானதும் விரைவில் ஜீரணமாகக்கூடியதும் வலிவைத்தரக்கூடியதுமான உணவை மிதமாகவும் நிதானமாகவும் மனப்பிரியமாகவும் உண்டுகளிக்கவேண்டும் உணவில் உப்பு அதிகமாயும் காரம் சற்று குறைந்து மிருத்தல் மிகவும் நன்மையாகும்.

தண்ணீர் = குளம், கிணறு, குட்டை, ஏரி முதலிய நீர் நிலைகளில் துணிகளை தோய்ப்பதாலும் குளிப்பதாலும் தண்ணீர் கெட்டு பலவித கொள்ளை நோய்களை உண்டாக்கிவிடுவதால் அவைகளில் எடுக்கும் தண்ணீர் நன்றாய்க்காய்ச்சி வடிகட்டி குளிர்ந்த ஜலத்தைக் கொட்டி ஆறவைக்காமல் அப்படியே ஆறவைத்து குடிக்கவேண்டும் குழாய் ஜலத்தையும் ஆற்றுஜலத்தையும் ஊற்றுஜலத்தையும் கூட இவ்விதமே பக்குவப்படுத்தி அருந்துதல் வேண்டும்.

இல்லம்=கருப்பவதி குடியிருக்கும் வீடானது சுத்தமாயும் கெட்ட நாற்றங்கள் வீசாமல்படிக்கு சாக்கடைகள் அப்போதைக்கப் போது சுத்திசெய்தவண்ணமாயும் நல்ல காற்று அடிக்கக்கூடியவித மாக ஜன்னல்கள் வைக்கப்பட்டும் இடுக்கான வீடாயில்லாமல் சற்று உலாத்தப் போதுமான வீடாயுமிருக்க வேண்டும். மலஜல உபாதை கழிக்குமிட மிருந்து காற்று உட்புறம் வீசாமல் படிக்கும் போதிய அளவு சூரியனுடைய கதிர்கள் படும்படிக்கும் இருள் குடிகொள்ளா திருக்கும்படிக்கு மிருத்தல் மெத்தவும் நலம்.

ஸ்நானம்=கருப்ப ஸ்திரி சாதாரணமாக அதாவது வழக்கம் போல் ஸ்நானம் குளியல் முதலானதுகள் செய்துவரவேண்டும் இவைகளில் தண்ணீரைமிதமாக காயவைத்துத் திரேகம் சிவந்து போகாதவண்ணம் பொறுக்கவேண்டிய அளவில் உபயோகப்படுத்த வேண்டும்.

ஆடை=கருப்பவதிகள் எப்பொழுதும் சுத்தமான ஆடையை யணிந்துகொண்டிருக்க வேண்டும் வஸ்திரங்களை யணிந்துகொள்ளும் போது முறையே மார்பு, இடுப்பு, வயிறுமுதலியவைகளை இறுக்கா மலும் சுருக்காமலும், பிராணவாய்வு தாராளமாய் போகக்கூடிய விதமாக ஆடைகளை அணிதல்வேண்டும் கருப்பஸ்திரீகள் தங்கள் திரேகத்தைச் சூடாகவே வைத்திருக்கவேண்டும் ஆகையால் சூட் டைத்தரக்கூடிய பிளானல்களையே தரித்திருக்கவேண்டும்.

படுக்கை=கருப்புற்றமாது கண்ட இடங்களில் படுத்துறங்கு தல் கூடாது. கரடுமுரடு மேடுபள்ளமில்லாத, சமமான இடத் தில் மெத்தையைவிரித்துக் காற்றுவருவதற்குச் சன்னல்களைத்திறந் தும், அப்படிவந்தகாற்றைக் கெட்டகாற்றாக்கி விடாமல்படிக்கு மண் ணெண்ணெய் தீபத்தைவையாது விளக்கெண்ணெய் தீபத்தைவை த்து மல்லாந்தபடி படுக்காமல் ஒருபக்கம் சாய்ந்தவண்ணமாக படு த்துறங்குதல் வேண்டும்.

மலம்=கரு தரித்த மங்கையர்கள் மலச்சிக்கலாகயிருப்பது, மிக வும் கஷ்டத்தைத்தரும் இதுவிஷயத்தில் வெகுஜாக்கிரதையாக இரு க்கவேண்டும் இவ்விதமாக சொன்னேமென்று பேதிக்கெடுத்துக் கொள்ளக்கூடாது தினமிரவில் படுக்கைக்குப் போகும்போது மலம் சிக்கலின்றி வருவதற்கு நல்ல பழதினுசுகளைப் புசிப்பது நலம்.

தேகப்பயிற்சி=சில தனவந்தர்களுடைய குமாரத்திமார்கள் கருப்புற்றபிறகு தங்களால் யாதொரு வேலையும் செய்யமுடியா

தென்று வேலையாட்களை நியமித்துவிட்டு தாங்கள் எந்த வகையிலும் தங்கள் திரேகத்திற்கு கஷ்டம் கொடுக்காமல் காப்பாற்றி வருகிறார்கள் அவர்கள் பிரசவிக்கிறகாலத்தில் அந்தோ! படுந்துயரம் நம் வாயால் சொல்லமுடியாது ஏன் இவ்வித கஷ்டம். கருப்பகாலத்தில் தங்களால் கூடியவரையில் கஷ்டப்பட்டு வீட்டு வேலைகளைத் தாங்களே செய்திருப்பின் யாதொரு கஷ்டமின்றி பிரசவித்திருப்பார்கள் அன்றோ தாழ்ந்த குலத்தினராகிய குறத்திமக்கள் தாங்கள் செய்யும் கஷ்டமான வேலைகளினால் யாதொரு கஷ்டமுமின்றி பிரசவித்தும் பிரசவித்த சில தினங்களுக்குள் குழந்தையை மடியினில் கட்டிக் கொண்டு வெளிவந்துவிடுவதும் தவிர முன்மாதிரியே கடினவேலைகளை செய்வதும் கண்கூடாய்ப் பார்க்கின்றோமன்றோ ஆதலின் கருப்பப்பெண்கள் தங்கள் திரேகம் அதிக கஷ்டத்திற்குட்படாமலும் சுகத்திற்குட்படாமலும் வீட்டுவேலைகள் யாவும் தாங்களே செய்ய வேண்டும் கறடுமுறடான நிலங்களில் நடப்பதும் தூக்கமுடியாத பளுவைச் சுமத்தலும் இறைச்சலிட்டுப் பேசுவதும் ஓடுவதும் உயரமான இடங்களில் ஏறுவதும் பள்ளமான இடங்களில் இறங்குவதும் பெருமூச்சு வரும்படி உழைப்பதும் ஒருபோதும் கூடாது.

அச்சம் = கருப்பமாதர்கள் அச்சம் என்பதே யில்லாமல் தைரியமாயும் பயமின்றியும் யாதொருகாரியத்தைச் செய்தாலும், சந்தோஷமாகவும் வியசனப்படாமலும் இருக்கவேண்டும். மாதர்கள் எந்த விதமான வகையில் மனதைச் செலுத்துகிறார்களோ அந்தவிதமாகத்தான் தாங்கள் பெற்றெடுக்கும் மதலைகளுக்கும் படிந்திருக்கும் குழந்தைகளை கருப்பகாலத்திலேயே அவர்களை ஜீவியகாலத்தில் நல்ல வழியில் நடக்கும்படிக்கும் கல்வியிலும் புத்தியிலும் மேன்மையாயிருக்கும்படிக்கும் பழகிவிடலாம் எல்லாம் மாதர்களின் மனோநிலைமைப்படியே நடக்கும் கருப்பகாலம் சிசுக்களின் கல்லூரிபோலும் அந்தகாலத்தில் பெண்கள் எந்தவிதமாக நடக்கின்றார்களோ அவைகள் யாவும் குழந்தைகளுக்குப் படிந்துவிடுகிறபடியால் கருப்பகாலத்தில் அச்சம் பயம் வியசனம் மனத்தளர்வு பொய்பேசுதல் கெட்ட சாகவாசம் முதலிய துர்க்கிருத்தியங்களை ஒழித்து தைரியம் சந்தோஷம் பொறுமை உண்மைபேசுதல் நல்ல சாகவாசம் நல்ல புஸ்தகங்களைப் படித்தல் முதலிய நற்கிருத்தியங்கள் செய்யவேண்டும் சாதாரணமாய் செல்வந்தர் வீட்டில்பிறக்கும் குழந்தைகள் அனேகமாய் கல்வித்திறமை உடையதாய் இருப்பதை நாம் பார்க்கின்றோமன்றோ ஏன் கருப்புற்றிருக்கும் காலத்தில் அவர்கள் மன நிம்மதியுடன் புஸ்

தகங்களை வாசிப்பதினால் தான். ஏழை குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் அனேகமாய் கல்வியில் தேற்சி அடைவது அசாத்தியமாகும், இதுவும் நாம் பார்த்திருக்கிறோமன்றோ உத்தியோகஸ்தருக்குப் பிறக்கும் குழந்தைகள் உத்தியோகஞ் செய்கிறது உழைப்பாளிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் உழைப்பாளியாகவே யிருக்கும் ஏதோ சிறுபான்மை மாறுதல் அடைவதும் உண்டு இஃது விளக்கிடாகவும் கருப்பகாலத்தில் ஏற்படும் மனவேற்றுமைக்குத் தகுந்தவாறும் மாறுதல் அடையப் பெறும்.

இறைவன் வழிப்பாடு=கருப்பமாதர்கள் எல்லாம்வல்ல இறைவனை எப்போதும் துதித்தவண்ணமாக இருக்கவேண்டும் தனக்குயாதொரு இடுக்கண்வராதபடிக்கும் தன் சிசுவுக்கும் பங்கமேற்படாமலும் பிரசவிக்கிற காலத்தில் கஷ்டமில்லாமல் சுகப்பிரசவமாகும்படிக்கும் தான் ஈன்றெடுக்கும் குழந்தைக்குக் கல்வி, கேள்வி, புத்தி, உண்மை, பொறுமை, தைரியம், விஸ்வாசம், அழகு, வபது இவைகள்யாவும் நிரம்பப்பெற்றதாயு மிருக்கவேண்டுமென்று பயபக்தியோடு மனம் நெக்கு நெக்குருக தளர்ந்து மன்றாடி இறைவன் கழலை வணங்குதல் வேண்டும்.

சுலோசனா:—சுந்தரா! கருதரித்தமுதல் பிரசவகாலம் வரையில் கருவானது எந்தெந்த மாதங்களில் எவ்விதமாக வளருகிறது என்பதைக் கூறவும்.

கருப்பாசயத்தில் பிண்டம் வளரும் கிரமம்.



வசந்தன்:—சுந்தரி! கருதரித்த முதல்தினமுதல் ஏழுநாள்வரையில் தண்ணீரும் எண்ணெயும்போல கூடியும் கூடாதுநின்று அதற்குமேல் 7-தினம்வரையில் சுக்கிலமும் சுரோணிதமும் ஒருமைப்பட்டு மெழுகுபதமாய்த்திரண்டு 21-ம் நாள் அண்டாசயம் போலுருண்டு முதல்மாதம் மாமிசமும் இரத்தமும் உண்டாகி சற்று ஏறக்குறைய அரையங்குல பிரமாணமாகும்.

இரண்டாவது மாதத்தின் முதலில் தலை, கழுத்து, பிடரி, தோள் உண்டாகி இரண்டங்குல பிரமாணமாய் எலுமிச்சம்பழமளவுள்ளதா யிருக்கும்.

மூன்றுமாத முடிவில் உடல், கை, விரல், அரை, கால், சிரசு முதலியன உண்டாகி கூபக எலும்பின் மேட்டிற்குச் சரியாய் வளர்ந்து கிச்சிலிக்காய் பிரமாணமுள்ளதா யிருக்கும்.

நான்காமாத முடிவில் முகம், மூக்கு, காது, கண், வாய், முதுகு, ஈரல்கள், இரப்பை, குடல், முள்ளந்தண்டு உண்டாகி நாபிக்கு ௨-அங்

குலம் தாழ்வாகவும் கூபக எலும்புக்கு மேற்பட்டும் வயற்றினில் சரிந்து மிருக்கும்.

ஐந்தாமாத முடிவில் நாக்கு, நகங்கள், வாய், ஆசன முதலிய திறப்பும் ஆண் பெண் என்ற குறியும், நாபிக்கு ஒன்றரை அங்குலம் தாழ்வாகவும் வளர்ந்திருக்கும், இம்மாதம் உறுப்புகள் யாவும் சரிப் பட்டு விடுவதால் பிண்டம் அசையும்.

ஆறுமாத முடிவில் பல்வீறு முதலியவை உண்டாகி வளர்ச்சி யடைந்து நாபிக்குச் சரியாயிருக்கும்.

ஏழாமாத முடிவில் தலைமயிர், மூளை, நரம்பு, நாடி, பரந்த கால் கள், கரங்கள், உண்டாகி கண் இமைகள் திறந்திருக்கவும் நாபிக்கு மேல் மூன்று விரற்கடை உயர்ந்து மிருக்கும்.

எட்டாமாத முடிவில் உறுப்புகள்யாவும் சரிவரவளரும் நகங் கள் கை ரேகைகள் மூளையின் வரிகள் முதலியன சரிப்படும் நாபிக் கும் நெஞ்சுக்குழிக்கும் நடுஅளவில் உயர்ந்திருக்கும்.

ஒன்பதாமாத முடிவில் தேகம் சிவப்பு நிரமடைந்து ஆத்மக் கியான முண்டாகி தன்னை மலமூத்திராதிகள் நிறைந்த கிருமிகளு டன் கூடிய கருப்ப நரகத்திலிருந்து ஜடராக்கினியினால் இம்சைப்படு தலிலிருந்து விடுவிக்கச் செய்யவேண்டு மென்று சர்வவல்லவனை பிரார்த்தனை செய்யும் நெஞ்சக்குழியி னெலும்பிற்குச் சமதையா யிருக்கும்.

பத்தாமாதத்தில் பிண்டம் வெளிப்படுவதற்கு இரண்டுவாரத் திற்கு முன் நெஞ்சுக்குழியி னெலும்புக்கு கீழ் இரண்டு விரற்கடை பிரமாணம் இறங்கும்.

சுலோசனு:—பிராணேசா! கருப்பத்தில் சிசு வளருங்கிரமத்தை தாங் கள் சொல்லிவந்ததை செவ்வையாயுணர்ந்தேன் ஆனல் கருப் பையில் பிண்டம் எந்தவிதமான நிலைமையிலிருந்து வளர்ந்து வருகிறது என்பதை கூறுவீராக.

பிண்டம் கருப்பையிலிருக்கும் விதம்.

வசந்தன்:—பிண்டத்தின் தலையானது உடலைக்காட்டிலும் பளுவாயிருப்பதால் தலைகீழும் கால் மேலுமாக யிருக்கின்றது இரண்டுகைகளும் மார்போடணைத்து பிணைக்கப்பட்டிருக்கும் கால்களோ மடக்கி பாதங்கள் ஒன்றின்மே லொன்றாய் குருக்கிட்டார்போ லமைத்து மேல்பக்கமா யிருக்கும்.

சுலோசனை:—பிராணபதி! பிண்டமானது கருப்பபையி லிருக்கும் போதே ஆண் என்றும் பெண் என்றும் எவ்விதம் அறிந்துக் கொள்ள முடியும் என்பதை விவரமாய்ச் சொல்லுவீர்களாக.

ஆண் பெண் அறியும் விதம்.

வசந்தன்:—சுந்தரீ! 1. நாயகி யுட்காருகையிலும் எழுந்திருக்கையிலும் இடது கையை பார்க்கிலும் வலது கையை அடிக்கடி ஊன்றிக் கொண்டால் ஆண் என்றும் இடது கையை ஊன்றிக்கொண்டால் பெண் என்றும்.

2. வயறு அதிக உயரமாகியும் வட்டமாகியு மிருந்தால் ஆண் என்றும் வயறு சரிந்தும் மட்டமாக யிருந்தால் பெண் என்றும்.

3. பிண்டம் கருப்பத்தின் வலது பாரிசத்திலிருப்பதாக நாயகிக்கு தோன்றின் ஆண் என்றும் இடது பாரிசத்திலிருப்பதாக தோன்றின் பெண் என்றும்.

4. கருப்பம் பளுவாயில்லாமல் இலேசாயிருக்குமாயின் ஆண் என்றும் பளுவாயிருக்குமாயின் பெண் என்றும்.

5. இடதுபயோதரத்தைக் காட்டிலும் வலது பயோதரம் மிகவும் முகங்கருத்து விம்மியிருக்கின் ஆண் என்றும் வலது பயோதரத்தைக்காட்டிலும் இடது பயோதரம் மிகவும் முகங்கருத்து விம்மியிருக்கின் பெண் என்றும்.

6. ஒருபாத்திரத்தில் தெளிந்த நல்ல ஜலத்தில் நாயகியின் பாலை இரு துளிவிட அது பரவி மிதக்குமாயின் ஆண் என்றும் பரவாமல் அப்படியே யுள்ளமூழ்குமாயின் பெண்ணென்றும்.

9.11.38

7. மனச் சந்தோஷமாகவும் திரேகம் பசுமையாகவு மிருக்கின் ஆண் என்றும் ஏகதேசத்தில் மனம் வியசனமாகத் தோன்றப்படு தலும் திரேகம் கருமையாகவு மிருக்கின் பெண் என்றும் அறிவா யாக.

சுலோசனா:—காதல! குழந்தை பிறந்த உடனே குழந்தைக்கும் தாயு க்கும் சம்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாபிக்கொடியின் விஷயத் தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாபிக்கோடி

வசந்தன்:—காதலி! நாபிக் கொடியானது அணையம் என்றும் மாயை என்றும் நஞ்சு என்றும் சொல்லக்கூடிய மிருதுவான பஞ்சுபோல் ரத்தநரம்புகளால் கருப்பகோசத்திற்கு உட்புறத் தில் ஒட்டி யிருக்கும் ஜவ்வுடன் சேர்ந்திருக்கும் இந்தநாபிக் கொடி மூலமாய்த்தான் சிசு போஷிக்கப்படும் இந்த நாபிக்கொ டியில் மூன்று மெல்லிய நாளங்கள் இருக்கின்றன இரண்டு நாளங்கள் வழியால் சுத்தரத்தம் சென்று பிண்டத்தை வளர் க்கும் மற்ற ஒருநாளத்தின் வழியால் கெட்டரத்தத்தை நல்ல ரத்தமாக்கும் இந்த நாளங்கள் வழியாய் ரத்தம் போகாதபடி நிறுத்திவிட்டால் பிண்டம் மறித்துவிடும் சிசு வெளிவந்தவு டன் சில நிமிஷங்களுக்கெல்லாம் அதன் தொழில் தடைப்பட்டு விடும்அதன் பிறகு கொடியினால் சிசுவுக்கும் ஆபத்தும் போஷ ணையுமில்லாததால் அதை துண்டித்து விடுகிறார்கள். இத்தொ ப்பிழ்க்கொடியானது சற்றேறக் குறைய ஒரு கெஜநீளமுடை யதாக விருக்கும்.

சுலோசனா:—புருஷோத்தமா! தாங்கள் நாபிக்கொடி விஷயமாக சொ ல்லிக் கொண்டு வரும்போது மாயை என்றும் அணையம் என் றும் நஞ்சு என்றும் பலபேர் படைத்த வஸ்துவை நவின்றீர் களே அதன் விவரத்தையும் அதனால் சிசு அடையும்பலனையும் விபரமாக சொல்லி அருளுவீர்களாக.

மாயை.

வசந்தன்:—ஸ்திரீகள் ரத்தினமே! தாய் சாப்பிட்ட அன்ன பானாதிகள் சத்தும் அசத்துமாகி பிரிந்து அசத்தாகிய திப்பி மலமூத்திராதிகளாக வெளியே வந்து விடும் சத்தாகிய ரசம் இரத்தமாக மாறி உதிர நாளங்கள் வழியாய் சென்று உறுப்புகளை வளர்க்கும் மாயையும் ரத்தக்குழாய்களால் நிறைந்திருக்கின்றன இதனால் மாயையில் வரும் ரத்தங்கள் சிசுவின் நாபிக்கு கொடிவழியாய்ச் சென்று பிண்டத்தை வளர்க்கும் ஆனதால் சிசுவைபோஷிப்பதற்கு இந்த மாயையே பிரதானமானது சிசுவை போஷிக்கக்கூடிய இந்த மாயையானது கருப்பகோசத்திற்கு தக்கவாறு ஓட்டி அமைந்திருக்கும்.

சுலோசனா:—புருஷரேறே பிரசவத்திற்கு முந்தி பனி நீர் உடைகிறது என்று சொல்லுகின்றனரே அஃது கருப்பாசயத்தில் எவ்விதம் எவ்விடத்திருக்கிறது அதனால் சிசுவிற்கு என்ன பலன் என்பதை கூறும்படி கேழ்கின்றேன்.

பனிநீர்

வசந்தன்:—பெண்மணியே! முட்டைக்கு ளிருக்கும் ஜவ்வைப் போல் கருப்பைக்குள் இரண்டு ஜவ்வுகள் பையைப்போல் அமைந்திருக்கும் இவ்விதமானபையில் நீர் உண்டு இந்தநீருக்கே பனிநீர் என்று பெயர் சிசு பிரசவமாவதற்கு முந்தி மேற்படி நீர் ஜனன வழிகளைத் திறந்துகொண்டு உதயமாவதால் இதற்கு உதயஜல மென்றும் பெயர்படும் சிசுவானது எவ்விதமான அழுத்தலும் மோதலும் அடியும்படாமலிருக்கும்படி இந்த ஜலத்தில் மிதந்துக் கொண்டிருக்கும் அதுவும் தவிர உஷ்ணத்தை மிதமாக வைத்துக்கொண்டிருக்கிறது திரேகத்திற்கு தக்கவாறு இந்த உதய ஜலமும் அதிகமாயும் குறைந்து மிருக்கும் இதில்உப்புகளுமுண்டு.

சுலோசனா:—கோமகனே! தாங்கள் சொல்லியதெல்லா முண்மையே ஆனால் சிசு கருப்பத்திலேயே மறித்திருந்தால் அதை எப்படி அறியமுடியும் அப்படி அறிந்தபின் அதை எப்படி வெளிக்குக் கொண்டு வரவேண்டுமென்பதை விவரம் கூறுவீராக.

சிசு கருப்பத்தில் மறித்திருப்பதை அறிதல்.

வசந்தன்:—கோமகளே! சிசுவானது கருப்பத்தில் மறித்திருக்கு மாயின் வயிறு கனமாயும் குளிர்ச்சியாயு மிருக்கும்.

2. வயிற்றில் பாறையும் ஓர் கல் யிருப்பதைப் போலும் ஆாட் டல் உருட்டல் புரட்டலு முண்டாகும்.

3. ஜுரம் குளிரும் நடுக்கமும் பயமும் தலைவலியும் தோன்றி தாக முண்டாகும்

4. மயக்கமுண்டாகும் மேல் மூச்சு வரும் ஸ்தனங்கள் தளர்ந் துவிடும் மார்பு தளர்வு உண்டாகும்

5. வாயினின்று கெட்ட நாற்றமும் மூச்சுவிடுவதில் துர்க்கந்த மும் வீசும்.

6. அடிவயறு தளர்ச்சி உண்டாகும் சிசுவின் உலாவல் நின்று விடும், இவ்விதமான அறிகுறிகளினால் சிசு கருப்பத்தில் மறித்து விட்டதென்று அறிந்துக் கொள்ளலாம்.

கருப்பத்தில் மறித்த சிசுவானது சாதாரணமாய் பிறசவமாவது முண்டு அவ்விதமில்லாமல் கஷ்டப்பிரசவமானால் கைதேர்ந்த டாக் டர்களைக் கொண்டு ஆயுதப்பிரயோகத்தால் வெளிப்படுத்த வேண்டும்.

சுலோசனா:—பிரியநாயக கருவான துஎந்தவிதசங்கடங்களுக்கும் உட் படாமல் வளர்ந்து வந்தால் எத்தனைமாதங்களில் சிசு வெளி வரும் அதை நாம் முன்கூட்டியே எந்த வகையில் தெரிந்துக் கொள்ள முடியும் அதை விவரமாய் செப்பி அருளுக.

சிசு கருப்பையில் தங்கியிருக்கும் கால அளவு.

வசந்தன்:—பிரிய நாயகி! கருப்பையானது இரண்டொரு தினம் முன்பின்னாக சுமார் 280- நாட்கள் வரையில் வளரும் அதற்குமேல் சுருங்க ஆரம்பிக்கும் இவ்விதம் சுருங்க ஆரம் பிக்கும் காலமே பிரசவகாலம் வீரியமானது கருப்பாசயத்தில் நாதச்சினையுடன் கூடி கருக்கூடிய அந்த நாள்முதலே கருப்பை யானது கருவளர்ச்சிக்குத் தக்கனமாதிரியே அதற்கு யாதொரு

கெடுதலும் நேரிடா வண்ணம் வளர்ந்து வரும் கருப்பந்தரித்த மாதர்கள் தாங்கள் எந்த காலத்தில் பிரசவிப்போம் அதை நாம் எப்படி முன்கூட்டியே அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற அபா (ஒவ்வொருவருக்கும்) இருப்பதினுல் அதை கூறலாம்.

கருப்பஸ்திரீகள் கடைசியாக வீட்டு விலக்கமான தினத்திலிருந்து மூன்றுமாதம் பின்னுக்கு கணக்கிட்டு 7-தினங்களை அதனோடு சேர்த்துக்கொள்ள எந்தமாதந்தேதி குறிக்கப்படுகிறதோ அதேதினமாம் பிரசவதினமென அறிவாயாக. உதாரணம் கருப்பமாதானவள் கடைசியாக கார்த்திகை மாதம் 20-உ வீட்டுவிலக்கமானுல் அதற்கு பின் மூன்றுமாதம் எதுவென்று பார்க்க ஆவணிமாதம்ஆகும்ஆதலால் ஆவணிமாதம் 20 ஆகும் இந்த 20 தேதியோடு 7-நாட்களை சேர்க்க 27 தேதியாகும் ஆதலின் கருப்பஸ்திரீ கடைசியாக கார்த்திகை மாதம் 20 தேதி வீட்டுவிலக்கமாயிருந்தால் ஆவணிமாதம் 27 தேதி பிரசவிப்பார்கள் என அறிவாயாகஇவ்விதமே மற்றவைகளையும் கணக்கிட்டு அறிந்துக்கொள்ளவேண்டும். இன்னொரு சுலபமான வழி= அதாவது, கார்த்திகை மாதத்திற்குமுன் ஒன்பதாமாதம் எதுவென்று பார்க்க ஆவணி மாதமாகும் நாள் 20-ம் நாளானபடியால் அதனோடு 7-நாள் சேர்க்க 27-ம் நாளாகும் ஆதலால் ஆவணி மாதம் 27 தேதி என முன்கூட்டியே தெரிந்துக்கொள்ள வேண்டும். இந்தப்படி கணக்கிட்டு தெரிந்த நாட்களிலும் 5-தினம் முன்பின்னுக பிரசவிப்பது முண்டு நிட்சயமாக பிறசவிப்பதை தெரிந்துக்கொள்ள மற்றுமோர் வகை—பிரசவகாலத்துக்கு ஓர் சுமார் 10-தினங்களுக்கு முன்னிட்டு வெண்ணிறமமைந்த திரவம் வெளிப்படும் இதைக்கொண்டும் பிரசவதினம் இன்னும் 10-தினமிருக்கிறதென்று தெரிந்துக்கொள்ளலாம் இந்த வெண்ணிறமான திரவம் ஜனனபாதையை சிசு உதயமாகும் போதும் சிக்கில் படாமல்படி விளக்கெண்ணை தடவிய வாழையிலையில் உரித்தவாழைப்பழம் நழுவுவதைப்போல் சுலபமாய் வெளிவருவதற்கு எல்லாம்வல்ல இறைவனுல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சுலோசனு:—விவேகபானு தாங்கள் கூறியதையுணர்ந்தேன் ஆயினும் கருப்பவதி பிறசவகாலத்தை முன்கூட்டியே தான் அறிந்துக் கொண்டபின் எவ்வித சாக்கிரதையில் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி கூறுதல் வேண்டும்.

பிரசவ காலத்தை எதிர்நோக்கிய ஸ்திரீ இருக்கவேண்டிய வகை.

வசந்தன்:—லக்ஷ்மியை நிகர்த்த வதனு! பிரசவகாலம் நெருங்கிய கருப்பஸ்திரீகள் இராக்காலங்களில் படுக்கை யறைக்குப் போகும்போது தாராளமா யிருக்கும்படி உடுத்திக்கொள்ளும் உடைகளை (அவைகள் சூட்டைத்தரக்கூடிய கம்பளியாகயிருப்பின் மிகவும் நலம்) சலவை செய்து தயாராய் வைத்திருக்க வேண்டும். பிரசவம் செய்யும் படுக்கை நனையாமலிருக்கும் பொருட்டு மெழுகு துணி ஒன்றை தயாரித்திருக்கவேண்டும் அநேகம் பேருக்கு மருத்துவம் செய்து நல்ல கைதேர்ந்த மருத்துவச்சியை சுமார் ஒரு வாரத்திற்கு முந்தியே எச்சரிக்கை செய்து அடிக்கடி வீட்டிற்கு வந்து பார்த்துபோகச்சொல்லியும் அல்லது வீட்டிலேயே இருக்கும்படி செய்யவும் வேண்டும். மருத்துவச்சியை அனுசரித்து பிரசவத்திற்கு வேண்டிய மருத்துவ சாமான்களும் யாதொரு தடையின்றி தயாராய் சேகரித்து வைத்திருக்க வேண்டும். பிரசவம் செய்யும் அறையானது மந்தமாருதம் வீசக்கூடியதாயும் அக்கம்பக்கம் தெருவில் நடக்கக்கூடிய விடயாதிகள் அவ்வறையில் கேட்கக்கூடாததாயும் இவ்வறையில் நடக்கும் சத்தமுதலானதுகள் புறத்தே கேட்கக்கூடாதவிதமாகவும் விசாலமாகவும் ஓதமில்லாமலும் இருப்பது மிகவும் நன்மை பயக்கும் சுகபேதி ஒன்று எடுத்துக் கொள்ளவும் வேண்டும். பிரசவம் நெருங்கியதே என்று பயப்பிராந்தி யடையாமல் எறும்பாதிய ஊர்வன பறப்பனவைகளுக்கும் பவவினை முட்டைகளினும் அனுவாதியசிறிய ஜந்துக்களுக்கு வியர்வையினும் அமைத்து மானிடர்களுக்கும் மிருகாதியவைகளுக்கும் சூல்மார்க்கமாயும் அவையவைகளுக்கு தக்கன மாதிரியாக மக்கள்மேல் செந்தன்மை பூண்டு ஒழுகும் பரம்பொருளின்பேரில் பாரத்தைச் சுமத்தி இறைவனே இப்போது நான் அடைந்திருக்கும் கருப்பமோ பூரணமாகிவிட்டது பிரசவமோ இப்போதோ அல்லது இன்னும் சற்று நேரத்திலோ என்று சொல்லக்கூடிய தருணத்திலிருக்கிறேன் கடவுளே இக்கஷ்டமானது எனக்கு யாதொரு இக்கட்டுந் தராமல் மலைபோல் வருவதை பனிபோல் ஆக்கி பறந்துபோக

அருள்சுரக்க வேண்டும். ஈசா, சர்வவல்லபா, எங்கும் நிறைந்தவா பரம புருஷா, உமது அடியார்கள் சொல்லும் வார்த்தைக்குச் செவி கொடுக்கும் பரமேசா, என்று பரம்பொருளை தியானிக்கவும் வேண்டுவதும் தவிர எப்போதும் சந்தோஷமாகவுமிருத்தல் வேண்டும். இதற்காகவே மருத்துவச்சிகளை கருப்ப ஸ்திரீயை சந்தோஷப்படுத்தக்கூடியவளாயும் பயங்கரமான விஷயாதிகளைச் சொல்லி பயமுறுத்தாம லிருக்கிறவளாயும் தேர்ந்தெடுத்தல் பெரியோர்கள் முக்கிய கடமையாகும்.

சுலோசனை :—வீரக்கழல் அணிந்த பதியே! பிரசவத்திற்கு முந்திய விஷயங்கள் யாவும் செவ்வனே அறிந்தேன். இதுபோது சிசுவானது கருப்பத்தை விட்டு ஜனனபாதை மார்க்கமாய் வெளிவரும் பிரசவத்தைப்பற்றிக் கூறுவீர்களாக.

பிரசவம்

வசந்தன்:—கதலித்தண்டை நிகர்த்த குறங்கையுடையாளே! தனஞ்சயனென்னும் வாயுவானது ஈஸ்வரதியானமாய் தலைகீழாய் திருப்ப உல்லாசங்களின்றி முன்னிருந்த ஆத்மக்கியானத்தைப்போக்கடித்தவனாய் இரத்தத்தில் புரண்டதேகியாய் மலத்திலிருக்கும் புழுவைப்போல நிற்க அப்போது வெக்கதியான கருக்குழியில் வளர்ந்தபிண்டத்தை இடைகலை பிங்கலை சுழிமுனை யென்னு முக்கிய நாடிகளும் காந்தாரி அத்தி அலம்புடை குகூ சிங்குவை யென்னும் துணை நாடிகளும் வெளியேற்றும்படியாய் உபாயங்கள் செய்வதுமன்றி பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் கூர்மன்என்றவாயுக்கள் இந்நாடிகளோடு

ஏகமாய்க்கூடி முன்னும் பின்னுமாக பிழுக்க இதுகாலமாய் அப்பிண்டத்தை வளர்த்துவந்த தேவதத்த னென்னும் மூலவாயுவின் சக்தியை தனஞ்சயன் என்னும் வாயுவானது தடுத்து தன்வசமாக்கிக் கொண்டு மேற்கூறிய ஸ்தானத்திலிருந்து சுழிமுனை என்னும் நாடியின் மூலத்தில் கொண்டுவந்து உபாதை உண்டாக்கி அப்பிண்டத்தை பிரசண்டமாருத அட்டகாச வேகத்துடன் உதைத்து முக்கோணமென்னும் மக்கச் சிக்கச் சக்கரத்தின் வழியாய் பூமியில் விழச்செய்யும் இஃது நமது முன்னோர்கள் சொன்ன கூற்றும். இதுகாலத்து அனுபோகத்திலும் பரிக்ஷைகளினாலும் சொல்லும் மார்க்கம் கூறுவாம். பிரசவம் என்பது கருப்பாசயமானது தன்னகத்தே வளர்ந்துவந்த சிசுவை வெளியேதள்ளி சுருங்கிவிடும் இதற்கே பிரசவம் இருப்புவலி எனக்கூறுவது. கருப்பாசயம் தான் எத்தனை நாள் வளரவேண்டுமோ அத்தனை நாட்கள் வளர்ந்து அதற்குமேல் சுருங்க ஆரம்பிக்கும் எப்படியெனின் கருப்பாசயத்தின் உடல் பாகத்திய தடித்த சதை கழுத்துப்பாகத்து உள்வாயை மேலே யிழுப்பதினால் கருப்பையின் வாய் திறக்கிறது அப்படி சிறிது சிறிதாய் திறக்கும்போதெல்லாம் ஒரு மனிதன் கதவைத் திறந்து திறந்தசந்தில் காலைவைத்து மறுபடியும் தள்ளுவதைப் போல பனிக்குடம் உள்ளுக்குச் செலுத்தப்படுகிறது. கழுத்து பாகம் சற்றேறக்குறையவாகிலும், அல்லது பூரணமாக ஆகிலும் திறந்தபிறகு பனிக்குடம் உடையும் பனிக்குடமுடைந்த பிறகு கமலமானது மூடிக்கொள்ளாமலிருக்கும்படி சிசுவின் தலை கீழேதள்ளப்படுகிறது. பிரசவத்தை மூன்றுபாகமாக பிரிக்கப்பட்டிருப்பதில் இஃது முதல்பாகம் கருப்பாசயம் சுருங்குவதாலும், கமலம் திறப்பதாலும் பிரசவநோயானது மேலிருந்து கீழுக்கிரங்கிபரவும் பனிக்குடம் உடையும் வரையில்படும் அவஸ்தை முதல்பாகம் என்று சொல்லப்படும் இதன் பிறகு நோய் கொஞ்சநேர மில்லாமலிருக்கும்.

இரண்டாம்பாகம்—பனிக்குடமுடைந்த பிறகு சிறிது நேரம் சுகமாயிருக்கும் பிராணவாயு தாராளமாய் உலாவும் பிறகு நோய் ஆரம்பிக்கும் (பிரசவத்தில் இது தான் பலமான நோய்) நோயுடன் கூடவே மலவிசர்ச்சனம் செய்யும்போதுவரும் முக்கலைப்போல் முக்கலும் அதிக பலமா யிருக்கும் கருப்பாசயத்தின் கழுத்தி லுள்வாய் திறந்த உடன் வெளிவாய் திறக்கும் கழுத்திலுள் வழியும் ஜனன

பாதையும் ஒரேவழியாகி விடும் இவ்வழியில் சிசுவின் தலையானது நுழைந்து மெய் சிதறும் படியான நோய் கண்டு மூச்சிக்கு இடங் கொடாத முக்கலுண்டாகி தலை வெளிவரும் தலைவெளிவரும்போது அந்தோ? அவர்கள் படுந்துயரம் சொல்லமுடியாது அந்த ஒரு கஷ்டத்திற்கு சிசு வளர்ந்து தன் காலத்தில் எந்த விதமான நன்றி மகிழ்ச்சி செய்தபோதிலும் சிறிதும் அதற்கு யீடாகாது தலைவந்த பிறகு சிறிதுநேரம்நோய் நிற்கும் நின்ற இரண்டொருநிமிடத்திற்கெல்லாம் கொஞ்சம் நோயுண்டாகி மற்ற அவயவங்களாகிய உடல் கை கால்கள் வந்துவிடும். சில மருத்துவச்சிகள் பிறர் தன்னை மெச்சும் படிக்கு தலைவந்த உடனே தான்பிறவேசித்து மற்றபாகங்களை இழுக்க ஆரம்பிக்கின்றனர் இது ஒருபோதும் கூடாவாம். பிரசவம் பூரணமான பிறகே மருத்துவச்சிகள் தங்கள் மாமூலான வேலைகளை செய்ய வேண்டியதே ஒழிய மேற்கூறியபடி செய்வது கருப்பவதிக்கே பெரிய ஆபத்தாகிவிடும் கருப்பாசயமும் சீக்கிரத்தில் சுருங்காமல் இரத்தப்பிரவாக முண்டாகிவிடும். தலை வந்த பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் நோய் ஆரம்பித்து மற்ற பாகங்களை வெளியே தள்ளாதும் குழந்தை மூச்சு திணரும்படியாகவும் முகம் இரத்தத்தால் கன்னிப்போவதா யிருந்தால் மருத்துவச்சிகள் மற்றபாகங்களை நிதானமாகவும் மெள்ளமாகவும் வெளிக்குக்கொண்டுவரலாம் சிசு பூரணமாய் வெளிவந்த உடன் நோய் நின்றுவிடும்.

மூன்றும்பாகம்=சிசு வெளிவந்த சில நிமிஷத்தில் நோய் மறுபடியும்காணும் (இது மிகவும் அற்பமாயிருக்கும்) இந்த நோயுடன்பிரசவ வேதனை முடிந்துவிடும் அதாவது அழுக்கு என்று சொல்லக் கூடியமாயைவெளிவரும் வெளிவந்த மாயையை உடனே அப்புறப்படுத்தி புதைத்துவிடவாவது கொளித்திவிடவாவது வேண்டும்.

கருப்பாசயத்தின் கழுத்து பாகம் திறந்த பிறகு சிசுவின் தலை கழுத்து பாகத்தைத் தாண்டி ஜனன பாதையில் வந்த பிறகும் பனிக்குடம் உடையாம லிருந்தால் நகத்தால் கிறி நீரை வெளியாக்கி விடவேண்டும். நீர்வெளிவந்தவுடன் சிசு தடங்கலின்றி பிரசவமாகும் பிரசவமானபிறகு நாபிக்கொடியை கவனித்து கழுத்தில் சுற்றி யிருந்தால் அதை எடுத்துவிடவேண்டும் சிசு வெளிவந்தவுடன் அழ ஆரம்பிக்கும். இப்படி அழ ஆரம்பித்தவுடன் நாபிக்கொடியின் நாடி ஓட்டம் நின்றுவிடும். நாபிக்கொடியின் நாடி ஓட்டம் நின்ற பிறகு குழந்தையின் நாபியிலிருந்து நான்கு விரற்கடை அளவுவிட்டு நூல்கயிற்றால் மிகவும் உறுதியாய் கட்டுத் தளராமல் முடியிட்டு அக்கட்டுக்கு

மேல் ஒரு விரற்கடை அளவுவிட்டு மேற்கூறியவிதமே முடியிட்டு
கத்தி அல்லது கத்திரியினுல் துண்டித்து தாயையும் குழந்தையும்
வேறுபடுத்திவிட வேண்டியது. மாயை தானுக வெளிவராமற்போ
னுல் மருத்துவச்சி இடது கையால் அடிவயிற்றைச் சேர்த்து கருப்
பாசயத்தை பிடித்து வலதுகையால் ஜனன பாதையின் மூலமாய்
தொங்கிக் கொண்டிருக்கும் கொடியைபற்றி முரட்டுத் தனமா யிழுக்
காமல் மெதுவாக யிழுத்து மாயை வெளியாக்கவேண்டும். முரட்டு
த்தனமாய் இழுத்தால் அழுக்கு சரிவரவாமல் போய்விடும். இதனுல்
அனேகம் கெடுதிகள் சம்பவித்துவிடும் இவைகள் யாவும் முடிந்த
பிறகு பிரசவித்த ஸ்திரீ யாதொரு சேஷ்டையுமின்றி அசையாமலும்
எழுந்து உட்காராமலும் பேசாமலும் அதிக ஜாக்கிரதையா யிருக்க
வேண்டும். பிறசவமானது ஈசன் ஆணையில் இயர்க்கையாய் பிறசவ
மாய்விடுகிறது பிறசவித்தபிறகு நம்முடைய கடமையாய் மெத்தவும்
கவனித்தல் வேண்டும், அதன் பிறகு நம்ம பொருப்பாகிவிடுகிறது
பிறசவ ஸ்திரீயிக்கு 3-நாள் பரியந்தம் ஒன்றுமே ஆகாரம் கொடாம
லிருப்பது நம்மவர்களுக்கு பெரும்பாலும் வழக்கமாக யிருக்கிறது.
அந்த பழக்கம் ஒருபோதும் கூடாது பிறசவதினத்தன்றே தேயிலை
பானத்தை அருந்தக்கொடுக்கலாம். மாயை இயர்க்கையாகவோ அல்
லது மருத்துவச்சியின் சகாயத்தாலோ மாயை வெளிவந்த உடன்
தாமசிக்காமல் அடிவயற்றைத்தடவினுல் சின்ன பொம்மளிமாஸ்பழத்
தைப் போல் கருப்பாசயம் கைக்ககப்படும் அதன்மேல் மிருதுவான
துணியை சில மடிப்புகள் மடித்து அதன் மேல்வைத்து கச்சையினு
லாவது குட்டையினுலாவது நன்ருய் கட்டிவிடவேண்டும். இவ்விதம்
கட்டாமல் விட்டுவிட்டால் கருப்பாசயம் சுருங்காமல் இரத்தப்
பெருக் கெடுத்துக்கொண்டு யிருப்பதுந்தவிர சூனும்வயருபட்டுப்
போய் பார்ப்பதற்கு விகாரமா யிருக்கும்.

சிசு வெளிவந்த உடன் கோழைமுதலியவைகளை எடுத்து
திரேகத்தின் மேல் ஒட்டியிருக்கும் பசபசப்பை சிசு பொருக்கும்படி
யான சூடுள்ள நீரால் கழுவி சுத்தம்செய்து பால்கொடுக்கும்படி
விடவேண்டும்.

சிலசமயம் குழந்தை வெளிவந்த உடன் பிராணவாயு தாராள
மாய் விடாமலும் அழாமலு மிருப்பது உண்டு. இதற்கு குழந்தை
யினுடைய புட்டத்தில் அடித்து அழச்செய்தும் வெந்நீரிலும் தண்
ணீரிலும் தோய்த்தும் அழச்செய்யலாம்.

நாபிக்கொடியை அதிக ஜாக்கிரதையாக பார்த்துக்கொண்டு வரவேண்டும். ஒருசமயம் இரத்தமும் வரும் அப்படி வாராதபடி வயற்றில் துணிகட்டிவைப்பது நலம் இன்னமும் மற்றொரு முடிப்பு பிடலாம் பிறகு சிலதினங்களில் நாபிக்கொடி விழுந்துவிடும் விழுந்த வுடன் காற்றுபோய் நுழைந்துக்கொள்ளாமல் துணிகளை கட்டி வைத்தல் நலம் சீழும் பிடித்துக்கொள்ளும் அப்படி சீழு பிடிக்காத வண்ணம் ஜாக்கிரதையாய் சுத்தம் செய்யவேண்டும். பிரசவ ஸ்திரீ யுக்கு தூரம் இரேகத்திற்கு தக்கவாராக சில வாரங்கள் வரையில் காணும் இத்துடன் சுகப்பிரசவம் முடிவு பெற்றது.

சுலோசனா:—தெகட்டாத இனிக்கும் முக்கனிரசமே! பிரசவத்தைப் பற்றி தாங்கள் சொல்லுகையில் ஒருசமயம் இறும்பூதும் இன் னொருசமயம் மகிழ்ச்சியும் மற்றொரு சமயம் திகிலும் வியம்பும் கடவுளின் அருட்சக்தியின் சிறப்பும் நினைந்து நினைந்து சொல் லொணாத மனப்பான்மை வாய்ந்தவளாகி விட்டேன் கடை சியாக சொன்ன விஷயத்தில் சந்தேகம் வந்து குடிகொண்டது அதையும் விவரித்தல் வேண்டும். அதாவது தாங்கள் கடைசி யாக சொன்னதாவது இத்துடன் சுகப்பிரவசம் முடிந்தது என்றீர்களே அதைப்பற்றியதுதான் கஷ்டப்பிரசவம்.

வசந்தன்:—நாகக்கன்னிகையோ என்று சந்தேகங் கொள்ளும்படி வனப்பு வாய்ந்த சதியே! பிரசவமானது பலதிரப்படும் அவை களை ஒழுங்குப்படுத்தி நான்குவிதமாகக்கூறலாம். அவையாவது, சுகப்பிரசவம் கஷ்டப்பிரசவம் சுகாதீதப்பிரசவம் விபரீதப்பி ரசவமாம் இவற்றுள் சுகப்பிரசவம் மேலே கூறியது இனி கஷ் டப் பிரசவத் தைப்பற்றி கூறுவாம் கவனம் வைத்து பயப்பிரா ந்திக்கொள்ளாமல் கேட்பாயாக. கஷ்டப் பிரசவமானது பிரசவ நோய்கண்ட 24-மணி நேரத்திற்குமேற்பட்டு அதிக நோயுடன் வெளிப்படும் சிலவேளைகளில் ஆயுதப்பிறயோகம்செய்யவேண்டி யதாயும் ஏற்பட்டுவிடும் இவ்விதக் கஷ்டம் யேர்ப்படுவதின் காரணம் என்னவெனின் கருப்பகாலத்தில் யாதொரு வேலையும் செய்யாமலிருப்பதே முக்கிய காரணமாகும் இதனால் கருப் பாசயம் வலிவற்றுப்போகிறது பிரசவகாலத்தில் இந்த கருப் பாசயம் தன் வேலையாகிய சுருங்கக்கூடிய வினையை செய்யமு டியாமல் மிகவும் கஷ்டத்துடன் செய்ய ஆரம்பிக்கும் கருப்பா சயத்தின் வாயோ; சுருங்கலுக்குத் தக்கனமாதிரியாக திறக்கும் ஆதலால் நோய் நீடித்து நின்று கஷ்டம் அதிகம் கொடுத்து

அதிக நேரங்கழித்து தலை கருப்பாசயத்தின் வாயில் சிக்கலடைந்து வெளிவரும். கருப்பாசயத்தின் வாயில் சிக்கலடைந்து வெளிவராமல் அப்படியே நின்றுவிடுவதும் உண்டு. இந்தப்படி நின்றுவிட்டால் கைதேர்ந்த டாக்டர்களைக்கொண்டு ஆயுதப் பிரயோகத்தால் உயிருடனாவது கூடாதபக்ஷத்தில் துண்டித்தாவது வெளிப்படுத்த வேண்டும். இந்த விதமான கஷ்டப்பிரசவமான பிறகு சுகப்பிரசவமானவர்களைக் காப்பாற்றுவதைப் பார்க்கினும் அதிக ஜாக்கிரதையாயும் பத்திய விஷயாதிகளில் கவனித்தும் நடக்கவேண்டும். இன்னும் வேறுகாரணங்களாலும் கஷ்டப்பிரசவ மேற்படுவதுண்டு அவைவருமாறு;

கருப்பையில் சிசு சிக்கலடைந்திருத்தல் கருப்பாசயம் இயற்கைக்கு மாறாய் புரண்டிருத்தல் பனிக்குடம் ஏற்படாமல் போதல் பனிக்குட நீர் அளவிற்கு அதிகமாயிருத்தல் பனிக்குடஜவ்வு கெட்டியாயிருத்தல் தான் வெளியாகும் காலத்திற்கு முந்தியே வெளிப்பட்டுவிடுதல் சிசு பெரியதாயிருத்தல் சிசுவின் தலை எலும்புகள் உறப்பாயிருத்தல் முதலிய காரணங்களினாலும் கஷ்டப்பிரசவ மேற்படும். மற்றொருவிதங்களாலும் கஷ்டப்பிரசவமேற்படுவதுண்டு, அவை தான் சிரசு உதயமாவதற்குப் பதிலாக முகம் உதயமாவது, நெற்றி, உதயமாவது, பாதம் உதயமாவது புட்டம் உதயமாவது முழங்கால் உதயவமாது, கை உதயமாவதாகிய முறைகேடாகபிரசவமாவது இந்தப்படி முறைகேடாக ஆகும் பிரசவத்திற்கே சுகாதீதப் பிரசவமென்றும் பெயர்படும். ஆதலின் அதை சுகாதீதப் பிரசவமென்ற தலைப் பெயரிட்டு வரைகுவாம்.

சுகாதீதப் பிரசவம்.

முகஉதயம்=சிசுவின் தலை முன்பக்கம் மடங்கி பிரசவமாவதற்கு பதில் பின்பக்கம் அதாவது பிடரி முதுகெலும்பை ஒட்டி முகம் அதிகமாய் கீழே இறங்கி முன்தோன்றி பிரசவமாகும், இஃது சிசுவானது கருப்பாசயத்தி லிருக்கும்போது முகவாய்க்கட்டையின் கீழ் புயம் மடங்கியிருப்பதினாலும் நாபிக்கொடி கழுத்தில் பலவிசை சுற்றிக்கொள்வதாலும் சிசுவின் பிடரியில் நரம்புப் பிடிப்பு யிருப்பதாலும் நீண்டு ஒடுங்கிய தலை உள்ள சிசுவாலும் கூபகமானது குறுகியிருந்தாலும் முகஉதயப் பிரசவமாகும் இவ்விதமாக முகஉதயப் பிரசவத்தில் அங்குல பரிக்ஷை செய்கையில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஏனெனில் அங்குல பரிக்ஷையில் வாயானது

ஆசனமென்று நினைத்து காரியங்களை நடத்துவதும் தவிர கண் முத லியவைகளுக்கு அபாயம் ஏற்படும் ஆகலின் பரிக்ஷை வெகு ஜாக் கிரதையாய் பார்த்து வாயை ஆசனமென்று நினைக்காமல் வாயிலிருக் கும் ஈரலை கவனித்து முகம் என்று அறிந்து நடக்கவேண்டும். புட்ட உதயமானல் பரிக்ஷையில் ஆசனத்தைச் சுற்றி சுருக்குச்சதை தென்பட்டு கெட்டியாயிருக்கும். முகஉதயப் பிரசவமானது தானுய் எவைகளின் சகாயமின்றி பிரசவமானல் தாயாருக்கும் குழந்தைக் கும் யாதொரு கஷ்டமில்லாமலும் அபாயமில்லாமலு மிருக்கும் இப் படிக்கின்றி மருத்துவச்சியின் சகாயமும் ஆயுத உதவியும் வேண்டு மானல் அபாயங்களும் பிராணச்சேதமும் உண்டு.

முகஉதயமான சிசுவுக்கு இரண்டொருதினம் வரையில் முகம் வீக்கமாயிருந்து பிறகு வாடும்.

நெற்றி உதயம்=தலையானது மடங்காமலும் நீளாமலும் மத்திய நிலையில் தலையிறங்கினல் நெற்றி உதயமாகும் இது மிகவும்

கடினமானது முகஉதயத்தைக் காட்டிலும் கஷ்டமுள்ளது அபாயமானது பிரசவவேதனைக்கக் கூடியது இந்தநெற்றி உதயப் பிரசவத்தில் சிறுபான்மைதாயுக்கும் பெரும்பான்மை சிசுவுக்கும் பிராணபாயம் ஏற்படும் நெற்றி உதயத்தில் 5 - அங்குல நிகளமுள்ள கருப்பாசய உள்வாய் ரேகையில் இறங்குவது ரொம்பவும் கஷ்டமாகி விடும் ஒரு சமயம் கருப்பையானது கிழிந்துபோகவும்கூடும் இஃது தானாய்இயல்பாகப்பிரசவமாகாது ஆயுதப்பிரயோகத்தால் பெரும்பாலும் பிரசவமாகும் இப்பிரசவமானது சிரசுதயங்களில் மிகமிகக்கடினமானது.



புட்டப் பிரசவம்=பிரசவகாலத்து முதலாவது தலை உதயமாவதற்கு பதிலாய் புட்டம் உதயமாவதற்குப் புட்டப் பிரசவமென்று பெயர்படும். இது பனிநீர் அதிகமாயிருப்பதினாலும் கூபகம் சிறியதாயிருப்பதினாலும் கருப்பைசாய்ந்து போவதாலும் இரட்டைப் பிள்ளை ஜனிப்பதாலும் புட்டப் பிரசவமேற்படும் முன்பக்கமாயிருக்

கும்] புட்டம் கீழே இறங்கி பாகாஸ்தியினடியில் பொருந்தும் பின்புறத்திய புட்டம் பீடிகை எலும்பில் சரிந்து வெளிவரும் பின்புறத்திய புட்டம் வெளிவந்த பிறகு பாகாஸ்தியின் அடியில் பொருந்திய முன்புட்டம் நழுவி உடல் வெளிவரும் பிறகு குழந்தையை மருத்துவச்சி தாங்கிக்கொள்ள வேண்டும். அதுபோது வெளிவந்த உடலானது சுழலும் அப்போது தலை குறுக்குரேகையில் கூபத்திலிறங்கிச் சுழன்று பின்னுச்சிப்பிதுக்கம் பாகாஸ்தியின் கீழேவந்து முகம் பீடிகை எலும்பின் பள்ளத்தில் சுழன்று தலைபாகங்களாகிய முக வாய்க்கட்டை முகம், நெற்றி, உச்சி இவைகள் முறையே ஒன்றின்பின் ஒன்றாய் வெளிவரும் இந்த புட்ட உதயப் பிரசவத்தில் குழந்தைக்கு உயிர்ச்சேதமாகும்படியான அபாயங்கள் நேரிடும்.



1. புட்ட உதயப்பிரசவத்தில் சிசுவுக்கு உயிர்ச்சேதமாவதின் காரணம், உடல் வெளிவந்து தலைஉள்ளிருக்கும்போது நாபிக்கொடி

சிசுவின் தலைக்கும் கூபகத்திற்கும் நாப்பண் நசுக்கப்பட்டு இரத்த வோட்டம் நின்றுபோகும்.

இவ்விதம் நசுங்காதபடி நாபிக்கொடியை கீழே மெதுவாயி ழுத்து நசுங்காதவிதமாய் வெகு ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளு தல் வேண்டும். அன்றேல் நாபிக்கொடி நசுக்கப்பட்டு இரத்தவோட் டம்நின்று பிராணஹானியேற்படும்.

2. உடல் வெளிவந்த பின் குளிர்ந்தகாற்று பட்ட உடன் சிசு உள்ளிருக்கும்போதே மூச்சை இழுக்க ஆரம்பிக்கும் இதனால் பனி, நீர், சளி, திரவம் முதலானதுகள் நெஞ்சுக்குள்போய் நெஞ்சு அடைப் படும் துரிதமாக சிரசு வெளியாகாது போனால் உயிர்ச்சேதமாகும்.

3. உடல் வெளிவந்தபிறகு தலையின் மேல் கருப்பை கெட்டி யாய் சுருங்குவதால் இடையிலிருக்கும் மாயை நசுக்குண்டு இரத்த ஓட்டம் நின்றுவிடும் இவைகளினால் இந்தப் புட்டப்பிரசவத்தில் சிசுவுக்கு பிராணஹானி ஏற்படுவதுண்டு இந்தப்பிரசவம் உடல்வரை யில் பெரும்பாலும்.சுகமாய் நடைபெறும் அதன்மேல் தலை வெளிவ ருவது கடினமாகயிருக்கும் நாபிக்கொடியில் நாடி நடையிருந்தால் காத்துக்கொண்டிருக்கலாம் அல்லது நாடியில்லாதிருந்தாலும் மிக வும் மந்தமாயிருந்தாலும் மருத்துவச்சி சகாயத்தால் தலையை வெளிக் குக் கொண்டுவரவேண்டும் இப்பிரசவத்தில் பாதமாவது முழங்கால் முட்டியாவது கீழ் இறங்கி முதலுதயமானால் பாதப்பிரசவமென்றும் முழங்கால் பிரசவமென்றும் சொல்லப்படும் மற்றப்படி பாதம் முழங்கால் பிரசவத்திற்கும் புட்டப் பிரசதத்திற்கும் யாதொரு வித் தியாசமுமில்லை.

குறுக்குதயப் பிரசவம்—சிசுவின் தலையாகிலும் புட்டமாகிலும் உதையமாகாமல் குறுக்கு வசத்தில் கை, முழங்கை, புயம் உதயமாகும் இதற்கே குறுக்குதயமென்று பெயர். என்ன காரணத்தினால் புட்ட உதய மேற்படுமோ அதேகாரணந்தான். குறுக்கு உதயத்திற்கும் தலை ஓரிடுப்பு எலும்பு பக்கத்திலும், புட்டம் வேறோரிடுப்பு பக்கத்திலும், சிசுவின் முதுகோ முன்புறமாகிலும் பின்புறமாகிலும் இருக்கும். பெரும்பாலும் முன்புறமே யிருக்கும் இந்த குறுக்குதைய பிறசவத்தை அங்குல பரிசைக்ஷ செய்யாமலே மேல்பார்வையில் தெரிந்துக்கொள்ளலாம். சிசுவின் தலையும் புட்டமும் எதிரெதிரே இடுப்பினெலும்புகளில் அமைந்திருப்பதால் கருப்பை அகன்றுநெஞ்சக்குழியின் கீழ் மிகவும் தாழ்ந்திருக்கும் இப்பிரசவத்தில்தாயிக்கும் சிசுவுக்கும் அபாய மேற்படும் சிசு தானே பிரசவமாகாது. ஆங்கில வைத்தியர்களைக் கொண்டு குறுக்கு உதயப்பிரசவத்தை மாற்றி புட்ட உதயப்பிரசவமாகச்செய்து வெளியாக்க வேண்டியது இவ்விதமாக மாற்றமுடியாவிட்டால் சிசுவை பங்கப்படுத்தி வெளியாக்க

வேண்டியதுதான் அன்றேல் பிரசவ ஸ்திரீயை இன்னும் சிறிதுகாலம் உலகத்தில் பார்க்கமுடியாமல் போய்விடும் இதுவரையில் சுகாதீதப்பிரசவத்தைச் சொல்லி முடித்தேன், இனி விபரீதப்பிரசவமென்பது இன்னது என்றும் அதன் விவரமும் சொல்லுகிறேன் கேட்பாயாக.

விபரீதப் பிரசவம்.

விபரீதப்பிரசவமாவது = எதிர்ப்பாராதவிதமாய் இரண்டு சிசுக்கள் பிரப்பதற்கும் குஜத்திற்கும் குய்யத்திற்கும் இடையிலிருக்கும் விடபம் பிதுக்கத்தில் கிழிந்து போவதற்கும் விபரீதப்பிரசவமென்று பெயர் பெரும். இரட்டைப் பிள்ளை உற்பத்தி யாவதைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறேம் கருப்பகாலத்திலே சில காரணங்களால் இரட்டைப்பிள்ளை எனயூகித்தாலும் அவை சந்தேகமானவைகளே

ஒரு குழந்தை வெளிவந்த பிறகு கருப்பைசுருங்காததினால் இன்னொருசிசு இருக்கிறதென்று அப்போதுதன் சந்தேகமறதெரிந்துக் கொள்ளலாம் சிசுக்கள் மெலிந்ததாகவேயிருக்கும் ஒவ்வொரு சிசுவுக்கும் மாயை பனி நீர் நாபிக்கொடி தனித்தனியே யிருக்கும் ஏகமுறையில் இரண்டும்வெளிப்படாது ஒன்றுவந்த சிலநிமிஷங்களுக்கெல்லாம் மற்றொன்றும் வந்துவிடும் ஆனால் பிரசவமோ முறைகேடாக இருக்கும் ஒன்று புட்ட உதயமும், மற்றொன்று சிரசு உதயமும், குறுக்கு உதயமும், புட்டஉதயமும், சிரசுஉதயமும், புட்டஉதயமுமாக இருக்கும். பிரசவநோயோ இரட்டிப்பு பிரசவமோ இரட்டிப்பு சிசுவோ இரண்டு ஆதலினால்தான் இதற்கு விபரீதப் பிரசவமென்று பெயர் கொடுத்துளர். இரண்டு சிசுக்களும் சில நாழிகைக்குள் முன் பின்னாக பிறக்கும் பிறகு முதல் குழந்தையின் நஞ்சுக்கொடியும் இரண்டாவது குழந்தையின் நஞ்சுக் கொடியும்முறையே வெளிவரும் அல்லது முதல் குழந்தை பிறந்ததும் அதனுடைய நஞ்சுக் கொடியும் அதன் பின்னால் இரண்டாவது குழந்தையும் அதனுடைய நஞ்சுக் கொடியும் வெளியாகும். முதல் குழந்தை வெளிவந்த பிறகு இரண்டாவது குழந்தையினுடைய அமைப்பை செவ்வையாய் அறிந்துக் கொள்ள வேண்டும். ஒருசமயம் குறுக்காயுமிருக்கும் அப்படி இருந்தால் எப்படி சாத்தியப்படுமோ அப்படி நிலையை மாற்றி வெளியாக்க வேண்டும் இரண்டு கொடிகளின் இரத்த வோட்டம் மாயையில் கலந்திருப்பதால் மாயையின் பக்கத்தில் கொடியைக்கட்டி முடிபோட வேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால் இரண்டாவது குழந்தை உதிரநஷ்டத்தால் இறக்கும்.

இந்த இரட்டைப்பிரசவத்தில் பனிநீர் அதிகமாயிருக்கும் பிரசவமோ நிதானமாக ஆகும் சிசுக்கள் வெளியான உடன் கருப்பை விகாரப்படுவதால் இரத்தம் அதிகப்பட்டு நஷ்டமாகும். விஷஜுரம் உண்டாகும். இரண்டாவது உதயமாகும் குழந்தைக்கு மருத்துவச்சியின் சகாயம் அவசியமாகும் முதல் உதயமாகும் குழந்தைக்கும் உதவி வேண்டியதாயுமிருக்கும் எதற்கெனில் இரண்டு சிசுக்களின் தலைகள் ஏககாலத்தில் கூபகத்தில் பிரவேசித்து மாட்டிக்கொள்ளுவதாலும் முதற்சிசுவின் சிரசு உதயமாகும் போது இரண்டாவது சிசு குறுக்காயிருந்தால் முதல் குழந்தையின் தோள் இரண்டாவது குழந்தையின் கழுத்தில் தடைப்பட்டு பிரசவமாகாமல் நிற்கும் இன்னும் பலவிதமாக நசுக்குண்டுபோவதால் பிரசவம் தடைப்படும் ஆதலினால் மருத்துவச்சியின் சகாயம் அவசியம் வேண்டியிருக்கின்

றதை இப்பிரசவத்தை மிகவும் கவனிக்கவேண்டியது மருத்துவச்சியின் கடைமையாகும். இப்பிரசவத்திலும் கஷ்டப்பிரசவத்திலும் சுகாதீதப்பிரசவத்திலும் குஜத்திற்கும் குய்யத்திற்கு மிடையிலிருக்கும் விடபம் பிதுக்கத்தினால் தாங்கமுடியாமல் கிழிந்து உபதகிரவம் அதிகப்படும் இதற்கும் விபரீதப்பிரசவமென்று சொல்லப்படும். இந்தவிதமாக பிதுக்கத்தில் விடபம் கிழியாதிருக்கும்படி. மருத்துவச்சி அதிகமாய் அழுத்தாமல் சேர்த்துப்பிடிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் விடபம் கிழியாமலிருக்கும் இத்துடன் விபரீதப்பிரசவமும் முடிந்தது.

சுலோசனு:—நாதா! பிரசவ விருத்தாந்தத்தைக் கேட்டு மகிழ்ந்தேன் பிரசவித்தபிறகு குழந்தையைபோஷிக்கும்விதத்தை சற்றுவிரிப்பீர் என ஆவலுடன்கேட்கின்றேன்.

குழந்தையைப் பேணுதல்

வசந்தன்:—சுலோசனு! பிரசவ விருத்தாந்தத்தை கேட்ட நீ பிரசவம் என்பது புனற்சென்மம் என்பதை கவனித்துக் கவலையுராது சிசுவை போஷிக்கும் வகையைப்பற்றி எவ்வளவு விரைவில் கேட்டனையோ அதேமாதிரித்தான் பிரசவ ஸ்திரீயும் பிரசவகாலத்தில் எவ்வளவுதான் கஷ்டப்பட்ட போதிலும் குழந்தை வெளிவந்தவுடன் அவை யனைத்தும் மறந்து சிசுவை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமா யிருப்பார்கள் இதனாலன்றோ ஆன்றோரும் இகழ்ச்சியாய் பிரசவ வைராக்கியம் எனநாமம்புனைந்துநிலையில்லா வைராக்கியமாகியமுவ்வைராக்கியத்துள் ஒன்ருய்வைத்துளார்கள் இனிநீகேட்டகேள்விக்கு பதில் உரைப்பாம் கவனமாய் கேட்பாயாக.

குழந்தை பிறந்தவுடன் பாலை ஜீரணிக்க சக்தியில்லாமல் இருக்கும் தாயிக்கும் மூன்று நாள் வரையில் பால் சுரக்கிறதில்லை இது வரையில் ஸ்தனத்தில் மஞ்சள் நிறமான திரவம் சிறிது சுரக்கும் இத்திரவத்தை குழந்தையானது உண்ணுக் கொண்டிருக்கும் பிறகு பால் சுரக்கும் குழந்தையும் அதைக்குடித்து ஜீரணித்துக்கொள்ள அப்போது தயாராயிருக்கும் கடவுளின் அமைப்பு இவ்விதமாக விருக்கிறது சிலருக்கு பால் அதிகமாயும் சிலருக்கு குறைவாகவுமிருக்கும் பால் அதிகமாயிருக்கிறவர்கள் குழந்தைக்கு போதுமான

வரையில் ஊட்டவேண்டும் அதை எப்படி தெரிந்துகொள்ள வேண்டுமெனின் குழந்தை பத்துநிமிஷம்குடித்தபோது அதிகமானால் கக்கிவிடும் அதுதெரிந்து மறுதடவையில் இரண்டொரு நிமிடம் குறைவாய் ஊட்டவேண்டும் பாலில்லாத குழந்தைகளுக்கும் புட்டிப் பாலை நாலுபாலாடை ஊத்திகக்கினால் மறுதடவையில் மூன்று பாலாடை ஊத்துவது நலம் பால்குறைவா யிருக்கிறவர்களுக்கு குழந்தைக்கும் குறைவாகபாலிருந்தால் குழந்தைஅழும் இதற்குகூடியவரையில் தாய்ப்பால்கிடைத்த பிறகு ஒருபங்கு பசுவின் பாலை இரண்டு பங்கு ஜலத்திற்கலந்து கொஞ்சம் வார்க்கலாம்.

குழந்தை பிறந்த 24-மணி நேரத்திற்குள் பால் இரண்டுதரமூட்டலாம் பிறகு 24-மணி நேரத்திற்குள் பகலில் மூன்று விசையும் இரவில் ஒரு முறையும் ஊட்டவேண்டும் தாயிக்கு பால் சுரக்காத மூன்று தினத்திற்குள் குழந்தை தாகத்தால் அழுதால் சுத்தமான ஜலத்தை ஒரு தேக்கரண்டி அளவு வார்க்கலாம், மூன்று நாளும் இவ்விதம் கழிந்தபிறகு குழந்தைக்குப் பகலிலும் முன்னிரவிலும், சேர்ந்து ஒன்பது விசையும் பின்னிரவில் ஒருதடவையும் பால் கொடுக்கவேண்டும் அதாவது காலை 6. 8. 10. 12. மணிகளிலும் மாலை 2. 4. 6. மணிகளிலும், முன்னிரவில் 8. 10. மணிகளிலுமாக பகலில் ஒன்பது முறையும், பின்னிரவில் 2. மணிக்கு ஒருவிசையும் கொடுக்கலாம் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தால் எழுப்பிக்கொடுக்கலாம், சிலகுழந்தைகள் எழுப்பிக்கொடுத்தால் பாலுண்ணாது மற்றும் சில குழந்தைகள் பகலெல்லாம் தூங்கி இரவெல்லாம் விழித்திருக்கும் இந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும் குழந்தை அழும்போதெல்லாம் முறைதவராகப் பாலூட்டப்படாது அப்படி ஊட்டினால் அஜீரணப்பட்டு பிணிக்கு இடமாகும் பாலூட்டும்போது ஸ்தனத்தை குழந்தை முகத்தின் மீது அழுத்தி மூச்சுவிடாதபடி செய்யக்கூடாது, சுயநலம் பாராட்டி தன் சரீர போஷணார்த்தம் பால் கொடுக்க சம்மதமில்லாதவர்கள் கைபாலாவது பசுவின்பாலாவது தாதிப்பாலாவது ஊட்டவேண்டும். தாதிகளை வைத்து பால் ஊட்டுவதாயிருப்பின் தாதிகளை முக்கியமாய் கீழ்காணும் விஷயங்களில் கவனிக்க வேண்டும்.

1. தாதிகள் எந்தவிதத்திலும் அசௌகரியமில்லாமல் முற்றிலும் ஆரோக்கிய முள்ளவர்களா யிருக்கவேண்டும்.

2. ஏராளமாய் பால் சுரக்கக்கூடியவளாயும் அதற்கு தகுந்த ஸ்தனமுடையவளாயு மிருக்கவேண்டும்.

3. நல்ல நடவடிக்கையுள்ளவளாயும் பேராசை யில்லாதவளாயு மிருக்கவேண்டும்.

4. இருபது முதல் முப்பத்தைந்து வயதிற்குட்பட்டவளாயும் சாந்தகுணமுள்ளவளாயு மிருக்கவேண்டும்.

5. தன்னுடைய குழந்தைக்கு பால் மறக்கடிக்க சித்தமுள்ளவளாயும் அந்த குழந்தை அவளுடைய பாலால் ஆரோக்கிய ஸ்திதியி லிருப்பதாயு மிருக்கவேண்டும்.

இவ்விதமான தாதிகளாய்ப் பார்த்து குழந்தைகளுக்கு பாலூட்டவேண்டும். அல்லது பசும்பாலாகிலும் கைப்பாலாகிலும் குடிக்க வைப்பது மெத்தவும் நலம் இவைகள் யாவும் தாய்ப்பாலுக்கு வாங்கல்தான் சுயநலம் பாராட்டாமல் குழந்தையின் சௌக்கியத்தைக் கவனித்தவளா யிருப்பின் குழந்தை நாளுக்கு நாள் நல்ல வலிவுள்ளதாயும் புஷ்டியாயும் தேஜசாயும் சரீர ஆரோக்கிய முடையதாயு மிருக்கும் பால் கொடுக்கும் தாயானவள் மிதமாய்ச் சாப்பிடவேண்டும் கீரைவகையறாக்களை அதிகமாய் உபயோகப்படுத்தவேண்டும். சாப்பிடுகையில் தண்ணீரை அதிகமாய் உபயோகப்படுத்தலாம், மலச்சிக்கல் இல்லாமல் இருக்க பழவர்க்கங்களையும் நிறம்பவும் புசிக்கலாம் இதனால் யாதொரு கெடுதலையு மில்லை. பால்வற்றினால் ஆமணக்கிலையை நெருப்பில் வாட்டி ஸ்தனத்தில் போடவேண்டும். தண்ணீரை ஏராளமாய் குடிக்கவேண்டும், இப்படி செய்தால் பால் நிற்காமல் விர்த்தியாகும் பால் கொடுப்பதற்கு முன்பும், கொடுத்த பிறகும் ஸ்தனத்தை தண்ணீரால் கழுவி சுத்திசெய்யவேண்டும், பால் கொடுத்தபிறகு குழந்தையின் உதடுகளில் பால்கறை கட்டாமல் படி துடைத்துவிடவேண்டும் அன்றேல் உதடு கறுத்துவிடும் குழந்தைகள் பிறக்கும்போதே ஆரோக்கிய முள்ளதாகவும் திடகாத்திர முள்ளதாகவும் பெரும்பாலு மிருக்கும் துற்கட்டத்தை உள்ளவர்களுக்கும் "விந்துவிட்டவன் நொந்து கெட்டான்" என்றதற்கு இணங்க, விந்துவை அதிகமாய் அபரிமிதமாய் செலவழித்தவர்களுக்கே பலயீனமான குழந்தைகள்பிறக்கும் இவைகளும்பிறக்கும்போது ஆரோக்கிய முள்ளவைகளாகவே யிருக்கும் நாளாக ஆக பிணிகளுக்கு உள்பட்டு அவஸ்தைக் குள்ளாகும்.

குழந்தைகள் பிறந்த இரண்டு நாள் வரையில் கறுகிறமாக மலம் வெளியாகும். அதற்குமேல் மாமூலாக இளகலாக மஞ்சள் நிறமாக மாறி ஒரு நாளைக்கு இரண்டு மூன்றுதரம் வெளிப்படும். இந்த மலம்

அற்ப நாற்றமுடையதாயு மிருக்கும் பிறந்த பன்னிரண்டு மணிவரையில் மலசுத்தியாகாமலிருந்தால் மருத்துவச்சியினிடம் விஷயத்தைச் சொல்லி மலத்தை வெளியாக்க வேண்டும்.

சிறுநீரானது வெண்மையோடு மஞ்சள் கலந்த நிறமாகவும் நாளொன்றுக்கு ஆறுதடவைக்கு மேற்பட்டு பலதடவை விசர்ச்சனம்செய்யும் சிறுநீர் விட்ட பிறகு அழ ஆரம்பிக்கும் அழுகிறதே என்று பால் முறைகேடாக ஊற்றப்படாது. தேக ஆரோக்கியமுள்ள குழந்தைகள் உரத்த சத்தத்துடன் அழும் விடாமல் 10, 15-நிமிஷம்வரையில் அழும் அடுத்தடுத்துப் பலதடவையாக அழாது. இந்தப்படி அழுவதால் அஜீரண மேற்படாது தேகாரோக்கிய முள்ளவைகளாயிருக்கும்.

பாலை முறைகேடாகக் கொடுக்கப்படாது அதனால் அநேகம் தீங்குகள் நேரிடும் ஆகையால் கீழ்வரும் மாதிரியாக குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் குழந்தை பிறந்த முதல் நாள் ஒரு அவுன்ஸ் அளவுள்ள பாலை ஆறு மணி நேரத்திற்கு ஒரு தடவையாக நான்கு முறையும் இரவில் ஒருதடவையும் கொடுக்க வேண்டும்.

இரண்டாம் நாள் = ஒரு அவுன்ஸ் அளவுள்ள பாலை நாலுமணி நேரத்திற்கு ஒரு தடவையாக ஆறு முறையும் இரவில் ஒரு தடவையும் கொடுக்க வேண்டும்.

மூன்றாவது நாள் முதலாக பதினான்காவது நாள் வரையில் = ஏழு எட்டு தினங்கள் வரையில் ஒன்றரை அவுன்ஸ் அளவுள்ள பாலை இரண்டு மணிக்கொரு தடவையாக பத்து தடவையும் அதற்குமேல் இரண்டவுன்ஸ் அளவுள்ள பாலையும் உபயோகிக்கவும் இரவில் இரண்டு தடவையும் கொடுக்க வேண்டும்.

மூன்றாவது நான்காவது வாரங்களில் = மூன்றாவது வாரத்தில் இரண்டவுன்ஸ் அளவுள்ள பாலையும் நான்காவது வாரத்தில் இரண்டரை அவுன்ஸ் அளவுள்ள பாலை இரண்டு மணிக் கொருதரமாக பத்து தடவையும் இரவில் இரண்டு முறையும் கொடுக்க வேண்டும்.

மூன்று மாதங்கள் வரையில் மூன்று அவுன்ஸ் அளவுள்ள பாலையும் நாள் அதிகமாக நாலரை அவுன்ஸ் அளவு வரையில் அதிகப்படுத்தியும் இரண்டரை மணிக்கு ஒரு தடவையாக எட்டு தடவையும் இரவில் ஒரு முறையும் கொடுக்க வேண்டும்.

ஐந்து மாதங்கள்வரையில்=நாலவுன்ஸ்முதல் ஐந்தரை அவுன்ஸ் அளவுள்ளபாலை மூன்று மணிக்கு ஒரு தடவையாக ஏழுமுறையும் இரவில் ஒருதடவையும் கொடுக்கவேண்டும்.

ஒன்பது மாதங்கள் வரையில்=ஐந்தரை அவுன்ஸ் முதல் ஏழு அவுன்ஸ் அளவுள்ளபாலை மூன்று மணிக்கு ஒரு தடவையாக ஆறு விசையும் கொடுக்கவேண்டும். ஆறுமாதத்திற்குமேல் இரவில்நிறுத்தி விடவேண்டும் அதன்பிறகு.

பன்னிரண்டாவது மாதம் வரையில்=ஏழரை அவுன்ஸ் முதல் ஒன்பது அவுன்ஸ் அளவுள்ள பாலை மூன்ரை மணிக்கொரு தரமாக ஐந்து தடவையும் கொடுக்க வேண்டும், அதன் பிறகு பாலை மறக்கப் பண்ண வேண்டும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் தாயிக்கு வலிவு குறைந்து விடும் தாய்பால் கொடுப்பதை எவ்வளவு சீக்கிறத்தில் குறைக்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் குறைத்து கைப்பாலை ஊட்டவேண்டும். அதுவும் சில மாதத்திற்குள் நிறுத்தி விடவும் வேண்டும் இவ்விதம் நிறுத்துவதற்கு முன்னுடியே சாதமும் பாலுமாக பழகிய பிறகு சாதத்தையே ஊட்டிக் கொண்டு வர வேண்டும்.

குளிர் காலம் மழை காலம் தவிர மற்றகாலங்களில் நல்ல சுத்த மான காற்றுவீசக்கூடிய இடங்களில் குழந்தையையெடுத்துக்கொண்டு போய் உலாவவேண்டும் வீட்டிலிருக்கும்போது காற்று வராதபடி ஜன்னல்களை மூடி வைக்காமல்படி கதவுகளையும் ஜன்னல் களையும் திறந்து வைக்கவேண்டும் இராக்காலத்தில் தீபம் கொளுத்தி வைக்க வேண்டும். காலையில் வெளிச்சத்தைப் பார்க்கும்படியாய் தாழ்வாரம் முதலிய வெளியிடங்களில் படுக்கவைக்கவேண்டும்.

ஒரு தினம் பொறுத்து ஒரு தினம் ஸ்நானமும் மற்ற தினங்க ளில் கண்ட ஸ்நானமும் அல்லது பிரதிதினம் ஸ்நானமும் செய்விக்க வேண்டும் குழந்தைக்கு ஸ்நானம் செய்விக்கும் ஜலமானது கை பொறுக்கக்கூடிய அளவு சூடு உள்ளதா யிருக்கவேண்டும் ஸ்நானம் செய்தபின் மிருதுவான குட்டைகளைக்கொண்டு ஒத்திஒத்தி ஈரத்தை வாங்கவேண்டும் தலையில் மெதுவாய்த் துடைத்தும் கழுத்து, அக் குள், முழங்கை, தொடைச்சந்து, புட்டம், முழங்கால் முதலிய இடுக்கான இடங்களையும் ஈரம் தங்காமல்துடைத்து நல்லதும் உயர்ந் ததும் மிருதுவான அதாவது குறைந்த மணமுடையதுமான குழந் தை மாவுகளைத் தூவவேண்டும் இதனால் குழந்தைகளுக்குத் தோலைப்பற்றும் வியாதிகள் வாராதபடி காக்கும்

குழந்தைகளை அடிக்கடி எடுத்து வைத்துக்கொள்ளும் பழக்கத்தை அற நீக்கவேண்டும். அதன் வேலைகள் ஆனபிறகு தன் சக்திக்குத் தகுந்தவாறு தொட்டிலிலாகிலும் ஏணையிலாகிலும் படுக்க வைக்கவேண்டும்.

குழந்தைகள் மலமூத்திராதி அணிகளை அப்போதிக்கப்போது நீக்கி சுத்திசெய்ய வேண்டும். அப்படி செய்ய தாமதிக்கின் குழந்தைகள் புட்டமானது புண்ணாகிவிடும் ஆதலின் அடிக்கடி சுத்திசெய்ய வேணும்.

குழந்தைகள் படுக்கை அறையானது மிகவும் விசாலமானதும் காற்று நடமாட்டமுள்ளதும் அலங்காரமானதுமாக இருக்கவேண்டும் இரவில் விளக்கெண்ணெய் தீபம் வைத்திருக்கவேண்டும் இரவில் முன்னமே தூங்கவைக்கவேண்டும், தூங்கவைக்கும்போது சந்தோஷகரமாக யிருக்கவேண்டும், அழுதுக்கொண்டிருக்கும் போது தூங்கவைக்கக் கூடாது அழுதுக்கொண்டே தூங்கிவிட்டால் புத்தியானது கலக்கமடைந்துப் போகும் இவ்விதம் கலக்கமாக தூங்குவதால் துயில்விட்டெழும்போது சந்தோஷமான பார்வையும் உற்சாகமும் இல்லாது அழுதுக்கொண்டும், சோம்பலாகவும் எழுந்திருக்கும் தாய்மார்கள் குழந்தைகள் தூங்கும் கால (தூக்கக்கண்ணால் அழுகிறது என்று சொல்லக்கூடியதற்கு முன்னமே) அறிந்து தூங்க வைக்கவேணும் தூங்கிய பிறகு சந்தடிசெய்தல் தீபத்தை முகத்தின் றுகாமையில் கொண்டுபோதல் எழுப்புதல் முதலியவை ஒருபோதும் கூடாவாம். அன்றேல் கலவரமடைந்து தீங்குக்கு இடமேற்பட்டுவிடும் சுகத்திற்கு இடஞ்சலேற்படுவதும் தவிர திடிரென்று எழுந்திருக்கும்போது திரேகம் இருந்தாப்போலிருந்து அசைவதால் அதனுடைய இளகிய நிரம்புகள் சமாளிக்க முடியாமல் பிசகிப்போவதுமுண்டு இதனால் கை, கால், கழுத்து முதலிய உருப்புகளுக்கு அபாயம் ஏற்படுவதுண்டு ஆதலினால் குழந்தை தூங்கும்போது அதை எழுப்பவாவது அல்லது அந்த இடத்தில் யாதொரு சேஷ்டைகள் செய்யவாவது கூடாது தூங்கும்போது வாயைத் திறந்துக் கொண்டும், குறட்டை விட்டுக்கொண்டும் தூங்கும் இப்படியே விட்டுவிட்டால் குறட்டைவிடுவது பழக்கமாகிவிடும் ஆதலினால் குழந்தை தூங்கும்போது மெதுவாக வாயை மூடிவிடவேண்டும். இந்தப்படிக்கு சில நாட்கள் செய்துவரின் மூச்சானது வாய்வழியாய் போவது நின்று மூக்கின்வழியாய் போகும் குறட்டையும் நின்று போகும்.

குழந்தைக்கு மூன்று மாதமான பிறகு கவிழ்ந்துக் கொள்ளும் அதன் பிறகு தலை நிற்கும் இதற்குள் குழந்தையை எடுப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் எடுக்கவேண்டும் அன்றேல் ஓரம் என்று சொல்லக்கூடிய நரம்பு பிசகி சுளுக்கு பிடித்துக்கொள்ளும் இச்சுளுக்கை மருத்துவச்சிகள் பக்குவமாய் எடுத்துவிடுவார்கள். குழந்தைகளுக்கு சுளுக்குபிடித்துக்கொண்டால் மிகவும் கஷ்டப்படும். இரவில் தூக்கமிராதெந்நேரமும் அழுதபடியே யிருக்கும் ஆறு மாதத்திற்குமேல் கீழ்ப்பல் முளைக்க ஆரம்பிக்கும். ஏழு மாதங்களுக்குமேல் முட்டிபோட ஆரம்பிக்கும் எட்டு ஒன்பதா மாதங்களில்உட்காரவைக்கவேண்டும். இப்படி உட்காரவைகரும்போது குழந்தைகளுக்குஅதிக கஷ்டம் கொடுக்கக்கூடாது. பன்னிரண்டு மாதங்களுக்கு மேல்நிற்க ஆரம்பிக்கும் அதன்பிறகு இரண்டொருவாரங்களுக்குமேல் நடக்க ஆரம்பிக்கும் இதுவரையில் குழந்தைகளுக்கு பருவங்களாகிய பத்துக்குள் காப்புப்பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப்பரும், முத்தப்பருவம் வருகைப்பருவம் ஆக பருவங்கள் 6. முடிவுபெறுகிறது அதன்பிறகு நான்கு மாதங்கள் வரையில் அம்புலிப்பருவம் பருவங்கள் எல்லாவற்றிலும் இந்த அம்புலிப்பருவமே மேலானதும் முக்கியமானதுமானது அதாவது குழைந்தைகளிடத்தில் சந்திரனை விளையாட அழைக்கும்காலமாம் இதற்குமேல் பெண் குழந்தைகளுக்கு வேறுவிதமாகவும் ஆண்குழந்தைகளுக்கு வேறு விதமாகவும் பருவங்களின் பெயர்கள் மாறி அதன்பிரகாரம் நடைகளும் மாறிவிடுகிறது, ஆண்குழந்தைகளுக்கு சிற்றிற் பருவம் சிறுபறைப்பருவம் சிறுதேர்பருவம் என்றும் அம்மானைப்பருவம்நீராடற்பருவம் ஊசற்பருவம் என்று பெண்குழந்தைகளுக்கும் முறையே இரண்டு மூன்று நான்கு வருஷங்களுக்கும் பெயர்கொடுத்து பருவங்கள் பத்துக்குள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வருஷம் நான்கும் சென்று அதற்குமேல் கல்வி பயிற்றுவித்தல் முதலான காரியங்கள் முறையே நடத்துவிக்க வேண்டும்

சுலோசனு:—நாதா! தாங்கள் சிசு சம்ரக்ஷணையைப் பற்றி சொன்ன விடயங்களாவற்றையும் சரிவர உணர்ந்தேன், ஆயினும் பிரசவித்த ஸ்திரீயை காப்பாற்றும் விதத்தைப்பற்றிக் கேழ்க்க ஆவலுள்ளவளாய் யிருக்கிறபடியால் அது விடயத்தைப்பற்றியும் சொல்லக்கோருகிறேன்!

பிரசவித்த ஸ்திரீயின் சவரக்ஷணை.

வசந்தன்:—பெண்கள் நாயகமே! இப்பொழுது நீ கேட்ட கேள்வியானது முன்னமே கேட்டிருக்க வேண்டும். மதலைகள் பேரில் இருக்கும் வரைகடந்த அன்பானது இக்கேள்வியை கேட்காது தடைப்படுத்தி சிசுக்களை காப்பாற்றும் விதத்தைப் பற்றி முறைகேடாகக்கேட்க தூண்டிவிட்டதுபோலும், நானும் அது சந்தர்ப்பம் உன் மனப்பான்மையை அறிந்து உனது கேள்விக்கு விடைபகர்ந்தேன் இப்போது நீ தெளிந்து கேட்ட வினவுக்கு விடைசொல்லுகிறேன் கேட்பாயாக.

பிரசவித்த ஸ்திரீக்கு மூன்று நாள் பரியந்தம் அர்ரோருட் மாவு கஞ்சி, பார்லிகஞ்சி, கோதுமைக்கஞ்சி இவைகளுடன் பால் சேர்த்து கொடுக்கலாம். கொகோ, டீ முதலியவையும் நெருப்பில் வதக்கின ரொட்டியும் காலை 10-மணிக்கு ஒருதடவையும் மாலை 5-மணிக்கு ஒருதடவையும் கொடுக்கலாம். அதன்பிறகு சாதமும் மிளகு ரசமும், பருப்புத் துவையலும், சேர்த்துக்கொள்ள வேண்டும் பிரஸ்ர்த்திக்கிரமமா யிருக்கும்பக்ஷத்தில் நாளாவட்டத்தில் வழக்கமான ஆகாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்துக் கொள்ளலாம் அன்றேல் வயித்தியரை யனுசரித்து நடக்கவேண்டும். பிரசவித்த ஸ்திரீ மூன்று நாள் வரையில் படுக்கையிலேயே இருப்பது நல்லது. தேகத்தை அசைக்கவும் எழுந்துஉட்காரவுமாகிய சிரமம் எடுத்துகொள்ளக்கூடாது பிறகு ஒருவாரம்வரையில் அதிகமாய் யாருடனும் பேசக்கூடாது நடக்கக்கூடாது தூரம்படும் நாள்வரைக்கும் வீட்டுவேலைகள் ஒன்றும் செய்யக்கூடாது மூன்றுமாதம்வரையில் புருஷ சம்பந்தம் கூடாது புருஷ சம்பந்தம் ஏற்படின் திரேகம் பலவீனமடைந்து கருப்பாசயமும் சக்திபற்று குழந்தையின் போஷணையும் குறைந்துவிடும் குழந்தைக்கு பால் பிறந்தவுடனே கொடுப்பதால் அனேக நன்மை தாய்க்குண்டுபண்ணுவதும் தவிர நாளாவட்டத்தில் பாலை கிரமமாய் குடித்துவந்தால் கருப்பாசயம் சுருங்கி இரத்தப் பெருக்கும் நின்று பால் கட்டுவதும் தவிர்த்து பால் ஓட்டம் நன்றாய் நடைபெறும். சில தாய்மார்களுக்கு பால் ஏராளமாய் வருகிறது அன்னவர்களுடைய பாலானது மிகவும் நீர் கலந்ததாயிருக்குமாகையால் வற்றச்செய்து போதுமான அளவுக்கு நிறுத்த ஏற்பாடு செய்வது நலம்.

பிரசவித்தவுடனும் அதன்பிறகும் மயக்கம்தரக்கூடிய லாகிரி வஸ்துக்களாகிய பீர், பிராந்தி, சாராயம், ஒயின் முதலான வஸ்துக்களை உபயோகப்படுத்துகிறார்கள் இது மிகவும் கெட்ட பழக்கம் இதை ஒருபோதும் உபயோகப்படுத்த யோக்யதை யில்லாத வஸ்துக்களை நாளாவட்டத்தில் பழக்கமாகி கெடுதல் செய்வதும் தவிர தாய்ப்பாலையும் அசுத்தப்படுத்தி குழந்தைகளையும் இம்சைக்குள்ளாக்குகின்றது.

இரவில் போஜனம்செய்தல் தண்ணீரைக்குடித்தல் முதலானதுகளையும் இரண்டொரு மாதம் நீக்கிவைக்கவேண்டும் ஒவ்வொரு தினமும் திரேகத்தை சுத்தம் செய்துக்கொண்டே வரவேண்டும் வெந்நீரில் நனைத்துபிழிந்த துணியால் திரேகத்தை சுத்திசெய்ய வேணும் ஆடைகளை அடிக்கடி மாற்றிக்கொண்டும் வரவேண்டும் குளிர்காற்று வீசக்கூடிய இடத்தில் நிற்கக்கூடாது இராக்காலத்தில் யாதொரு கலக்கமுமின்றி தூங்கவேண்டும் திரேகத்தை சூடு உண்டாக்கிக்கொண்டே வரவேண்டும் வழக்கப்படி பதினோராவது நாள் ஸ்நானம் செய்வித்து வீட்டிற்கு அழைத்துக்கொள்ளலாம். ஸ்நானம் செய்தபிறகு திரேகத்தின்மேல்நோக்கம்வைத்து ஜீரணிக்கக்கூடியதும் வலிவுதரக்கூடியதுமான ஆகாரம் புசித்து வரவேண்டும்.

சுலோசனு :—ஆருயிர்ப்பதியே ! நீவிர் கூறிவந்த சிற்றின்ப விஷயங்கள் யாவும் உணர்ந்தேன். இதனில் மாதர்கள் கற்புநிலையைப் பற்றி சில விஷயங்கள் கேழ்க்க விருப்புற்றிருக்கிறேன் அதனையும் சிறிது கூறி என் விருப்பத்தைத் தணிக்கவும்.

கற்பு.

வசந்தன் :—கற்பரசியாகிய நீயே கற்பின் இலக்கணத்தைக் கேழ்க்க விரும்பினல் நான் என்னவென்று கூறுவது, ஆயினும் கற்பின் உருவாகிய உன்னிடத்தில் கூறுவதால் பிறர் அதை அறிந்து நடப்பார்கள் என்ற நோக்கம் என்னிடம் உதிப்பதால் இயம்புகிறேன் கேழ்ப்பாயாக.

“கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை ”என ஔவைபிராட்டியார் ‘சுருங்கச்சொல்லல்’ என்னும் அழகுபற்றிக்கூறினர். அதிவீரராமபாண்டியனார்தான் இயற்றுகின்ற காசிகாண்டத்தில் கற்பிலக்கணத்

லைதக்கூறு மத்தியாயத்தில் வகுத்துக்காட்டல் என்னும் உத்தியால் அஃதின்ன தென்பதை விரித்துரைக்கின்றார்.

"தொழுத னுண்டபின் றுனுணுங் கொள்கையும்
விழி துயின்றபின் றுஞ்சலும் மென்றுயில்
லெழுதன் முன்ன மெழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே."

என்ற பாட்டின் கீழ்வரும் பாக்களால் கண்டு தெளியலாம்.

மாதர்கள் புருஷன்வார்த்தைக்கு எதிர்பேசாது அவர் சொன்ன சொற்களை தலைமிசைக்கொண்டு நடத்தல் வேண்டும் அவர் மனங் கோணாமல்படி அவர் ஏவுதற்கு முந்தியே குறிப்பறிந்து அக்காரியங்களை நடத்துவதும் புருஷன் போஜன முண்டபின் உண்பதும் உறங்கியபின் உறங்குவதும் துயிலொழியுமுன் எழுதலும் காலைகடன் முடித்து திருநுதலில் குங்குமம் அணிந்து புருஷன் நித்திரை செய்யுமிடத்து வந்து அவரது காலில்விழுந்து சேவித்து அடிவருடி துயில் கலையச்செய்து படுக்கைவிட் டெழும்போது தனது புன்னகை ஒளிர் வதனத்தை முதல் தரிசிக்கச்செய்து பிறகு பாதம் விளக்கி விளக்கியநீரைக் கங்காதீர்த்தமாக தனது சிரசில் தெளித்துக்கொண்டு சமையல் அரையுட் புகுந்து தங்கள் சக்திக்கேற்ற (வரும்படிக்குத் தக்க) வாறு அறுசுவை உண்டிசமைத்து புருஷனுக்கு முதல்படைத்துப் புசிப்பிக்கச் செய்து பிறகு தன் புருஷன் உண்ட உச்சிட்டத்தைத் தேவாமிருதமாக பாவித்து அதை தான் உண்டு போஜன மருந்த வேண்டும்.

இதுவுமன்றி,

" அழகின் வீக்கஞ் சிறிதில ராயினும்
ஒழிவின்றேய் நிரம் புற்றன ராயினும்
கிழவுத் தன்மைய ராயினுங் கேள்வரை
பழுது சொல்கலர் பண்பின் முயங்குவார் "

(காசிகாண்டம்.)

தான் வரித்த புருஷன் சிறிதேனும் அழகு மின்மையனாயினும் சதா காலமும் தீராநோயுடையோனாயினும் நரை, திரை, மூப்பு முதலான கிழத்தன்மை யுடையோனாயினும் அவர்களை அறுவறுத்துக் குற்றங் கூறாது நற்குணத்தோடு அணைந்து மன சந்தோஷத்தோடு வாழ்வார்கள்.

தற்காலம் நாகரீகம் நாகரீகம் என்று சொல்லக்கூடிய அநாகரீகத்தில் அழுந்தி சோப்பு முதலானவைகளை தேய்க்காமல் நமது ஆன்றோர்களால் வாலாயமாய் நடத்திக்கொண்டுவரும் மஞ்சளேயே பூசிவரவேண்டும் பழைய காலத்திய நடையே நாமும் நடந்துவரவேண்டும் அது எப்போதும் அழிவில்லாதது குணமுள்ளது நீடித்திருக்கக்கூடியது மேலானது. செல்வம் அழியக்கூடாததுமாக ஏற்பாடு செய்துளார்கள். தற்காலத்தியதோ மாறக்கூடியது பிரயோஜனமற்றது அசத்தானது விரயமாகக்கூடியது. ஆகையால் தற்கால நாகரீக ஒழுங்கங்களை அற ஒழித்து பண்டை காலத்திய நமது பெரியோர் நடந்துவந்த முறையே நடந்து வரவேண்டும். பெண்கள்தான் அந்த மாதிரி நடந்துவரவேண்டு மென்றும் ஆண்மக்கள் எப்படி யிருந்தாலும் பரவாயில்லை என்று கூறுவதாக நினைக்கப்படாது ஆண்மக்களும் பண்டை காலவழக்கத்தை அனுசரிக்கவேண்டும் இருவர்களும் ஒத்து உழைக்கவேண்டும் அப்போதே நமது இந்திய நாடு பழைய நிலைமைக்கு வந்து இந்துமாதாவும் நம்மை வாழ்த்தி கற்புநிலைமையும் ஓங்கி நிற்கும் அதுகாலத்து எல்லாம் சரிவரவந்து நிற்குமென அறிவாயாக.

கற்புள்ள மாதர்கள் தங்கள் கணவன் விகார ரூபமுள்ளவர்களாயினும், பெருநோய் பிடித்தவனுயினும், சக்தி யில்லாதவனுயிருப்பினும் அவனையன்றி அன்னிய புருஷனை கண்ணெடுத்தும் பாராமல் தங்கணவனையே பதினறு வயதுள்ள பாலகன் என்றும் அழகில் மன்மதசொருப னென்றும், திரண்ட செல்வமுடையவ னென்றும், பீமனுக்குச் சமதையுடையவ னென்றும் மதித்து நடப்பதும் தவிர இவனே தனக்கு கடவுளென்றும் நினைப்பார்கள்.

பிறர் தன் சரீரவாய்மையைக் கண்டு ஆசைப்படாதவண்ணம் தன் புருஷன் இல்லாதசமயங்களில் அலங்கரித்துக்கொள்ளாமலிருப்பதும் புருஷன் இருக்குங்காலத்தில் தன்னை அலங்கரித்துக்கொள்ளுவது அவர் பார்த்து மகிழவேண்டும் என்ற நோக்கத்துடனேயும் தன் கற்பை தானே யாதொரு பங்கமும்நேரிடாதபடி பெண்கள் காப்பாற்றிக்கொள்ளவும் வேண்டுவதும் தவிர தன் புருஷனை அவ்விதமான அதாவது தன்னையன்றி பிற பெண்களிடத்தில் போகாதவண்ணம் செய்யவும்வேண்டும் இந்த மார்க்கமே கற்பிற்சிறந்தது. இவ்விதவாழ்வே கற்புள்ளவாழ்வு என்றுசொல்லப்படும். அவர்கள் சந்ததியும் கற்பை அனுசரித்து நடப்பதும் தவிர நோயில்லாமல் வாழ்வார்கள் இவ்விதவாழ்வன்றோ குறைவுஅற்ற செல்வம்எனக்கூற இடமுண்டு.நமது முன்னேர்களாகிய தாய்மார்கள், புருஷன் கைதேர்ந்த ஓவியக்காரர்க

ளால் வரையப்பட்ட சித்திரக்கூடமண்டபத்திற்கு போகலாம்என்று கூப்பிட்டால் அந்தோ அச்சித்திரங்களை நான்பார்க்கயோக்கியதையுள் ளவளல்லள் என் கண்முன்னேநிற்கும் நீரே எனக்குசித்திரமும் ஆன ந்தமும் வியப்பும் சந்தோஷமும் பூரிப்பும் கடவுளும் நீரே உம்மை யன்றி யான் ஒருவரையும் என் கண்ணால் பாரேன் அவ்விடத்தில் வரைந்துகிடக்கும் ஆண்வுருவங்களையும் பாரேன் ஆகையால் நான் வர சம்மதிக்கிலேன் நீங்கள் போகவும் விடைகொடுக்கவுமாட்டேன், அவ்விடத்தில் வரைந்துகிடக்கும் மாதர்களை நீங்கள் பார்க்க என் மனம் பொறாது அனலில்பட்ட மெழுகுபோல் உருகும் ஆதலின் என் வதனத்தைப் பார்த்த உமது நேத்திரமானது பிறமாதர்களை யும் உருவங்களையும் பார்க்கப்படாது எனக் கூறியிருக்கின்றனர்.

ஓவியர்நீள் சுவரெழுது மோவியத்தைக்
கண்ணுறுவரன்
தேவியையா மழைத்திடவான் சித்திரமேல்
நான்பாரேன்
பாவையர்தம் முருவெனினீர் பார்க்க மனம்
பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின்
வற்புளதால்.

இந்தவிதமாக கற்பு நிலைத்திருந்தநம் இந்திய நாடானது நமது சகோதரிகளால் மென்மேலும் முன்னிருந்ததைக்காட்டிலும் விருத்தி அடைந்து வருமாறு எதிர்ப்பார்க்கப்படுகிறது எல்லாம் பெண்களால் தான் நடைபெறுகின்றன நமது சகோதரிகள் இந்திய நாட்டை பழைய நிலைமைக்கு தற்கால அநாகரீகத்தை ஒழித்து பழைய வழக் கத்திற்கு கொண்டுவர மனம் வந்தால் அதுவே போதுமானது அப் போதே நமது இந்தியநாடானது செழிப்புற்று ஓங்கிநிற்கும்.

தம்முடைய புருஷன் வார்த்தையை ஒருபோதும் எந்த முகாந் தரத்தைக்கொண்டும் தடுக்கலாகாது பண்டைகாலத்தில் அநுசூயை நளாயனி, சாவித்திரி, தமயந்தி, திரௌபதை, சீதை, சந்திரவதி, வாசுகியம்மை இத்யாதி கற்புடைய அரிவையர்கள் தன் கற்புநிலை யைக் காப்பாற்றவேண்டி செயற்கரிய காரியங்களை யெல்லாம் செய்து தம்மை காத்திருப்பதை புராண இதிகாசங்களில் படித்தும் கேட்டு மிருக்கின்றோமன்றோ கற்புடைய மாதர்களின் மகிமையை யாரால் இயம்பற்றிரன் ஆயினும் ஓர் சிறிய உதாரணம் கூறுகின்றேன் கேட் பாயாக.

காவிரிப்பூம் பட்டணத்திலே வணிகர் குலத்திலே உதித்தவரும் இல்லறத்தை மேற்கொண்டொழுகுபவரும் சிவச்சின்னங்கள் அணிந்த சிவனேயச் செல்வர்கள் யாது விரும்பி இவரிடம் வரினும் இல்லை என்று சொல்லாமல் அளிப்பவருமாகிய இயற்பகை நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். நாயனர் தான் மேற்கொண்ட ஒழுக்கத்தினின்று வழுவாது நடந்துவருநாளில் இவர் மெய்த்தொண்டினருக்கு கொடுக்குந் தன்மையின் சிறப்பை ஞாலத்தாருக்கு அறிவிக்கும் வண்ணம் சபாநாயகர் காமுகருக்குரிய வேடந்தாங்கி திருநீற்றை மெய்யினில் அணிந்து பிராமணராக அன்னுயனர் வீட்டிற்கு எழுந்தருளினர் இதுகண்ட நாயனர் விரைந்து ஓடோடியும் வந்து அன்புடன் எதிர்கொண்டு முறைப்படி அருச்சித்து தேவரீர் சிறியேன் இல்லத்திற் முகமுன் வந்துற்றது யான் முற்பவத்தில் செய்த மாதவப்பயனுபோலும் என்று ஆனந்தமுற பகர்ந்து ஆசனமளித்து அமரச் செய்தனர்.

வஞ்சனையோடு வந்த அந்தணரோ இயற்பகையை நோக்கி சிவனடியார்கள்பால் அன்பு மிகுந்து நீவிர் அன்னவர் எவற்றைக்குறித்துக் கேட்பினும் அவற்றை மறுக்காது சந்தோஷத்தோடு கொடுக்கும் வாய்மையை செவியுற்று யாமும் நின்பால் ஒருபொருளை வேண்டியே இன்று இங்கு வந்தனன். நான் கேட்கும் பொருளை நீர் அளிப்பதாய் வாக்குறுதி செய்யின் அப்பொருள் இன்னதென்று பகர்கின்றோம் என்ருர். அவ்வுரைகேட்ட நாயனர் எப்படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்திருப்பின் அதுஎம்பிரான் அடியார்களுக்குறியதே தேவரீர் இதுவிடயத்தில் சிறிதும் ஐயுற வேண்டாம் வேட்ட பொருளைத்தடையின்றி நமது திருவாக்கால் அருளிச்செய்வீர் என மறையோர் சொன்னவுடன் வந்த கபடவேஷதாரியாகிய ஈசன் "மன்னுகாதலுன் மனைவியை வேண்டி வந்த திங்கெனம்" என்ருர். இதைக் கேட்ட அடியார்முன்னிலும் அதிகமாக மகிழ்ந்து வணங்கி தேவரீர் என்னிடத்துள்ள பொருளையே தாங்கள் விழைந்து கேட்டது நான் செய்த புண்ணியப்பலன் என்று சொல்லி விரைவாக உள்ளே நுழைந்து கற்பரசியாகிய தன் மனைவியை விளித்து "இன்று உனையிம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்" என்ருர். எதிர்நோக்காத இச் சொல்லைக் கேட்ட மனைவியார் பதில் வார்த்தை யாதொன்றும் பேசாமல் தங்கொழுநரை விட்டு வாழவேணுமே எனக் கலங்கிப் பின் தேர்ந்து தம்பதிசொன்ன வார்த்தையை தான் சிறமேற் கொள்ளும் செய்கை யுடையவளாதலாலும் தன்னிஷ்டப்படி யாதொரு காரியத்தையும் செய்யக்கூடாமையும் தெளிந்து தங்கணவரை இறைஞ்சி

தாழ்ந்து தங்கோன் சொல்லை மேற்கொண்டு மாதவன்பால் போக விடைபெற்றுக்கொண்டு மாதர்க்கரசியாகிய அம்மையார் மறையவரிடம் சென்று பணிந்து எழுந்து திகைத்து நின்று,

இன்றுநீ ரெனக்கருள் செய்த திதுவே
லென்னுயிர்க்கொரு நாதநீ ருரைத்த,
தொன்றை நான்செயு மத்தனை யல்லா
லுரிமை வேறுள தோவெனக் கென்று,
தன்றி ணிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்,
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்துநின் றனள் டிருவினும் பெரியாள்''

(தொண்டர் புராணம்

பிறகு இயற்பகையார் மனைவியை மாதவன் அழைத்துப்போக பெண்வீட்டார்கள் சண்டைக்கு வந்தனர், அதனை இயற்பகையார் வென்றார். உலகத்தில் இவர் கொடைத்திறமை கண்டனர். பிறகு சதிபதிகள் இருவருக்கும் எக்காலத்தும் அழியாத தன் பாதாரவிந்தமாகிய மோக்ஷபதவியைக் கொடுத்தருளினார். இதன்விரிவை புராணத்தில் கண்டு தெளிக. சகோதர சகோதரிகளே இது விடயத்தை இல்லறத்தோராகிய தலைவன் தலைவிமாரும் சிந்திக்கவும் அம்மையாரின் கற்பு நிலைமையும் நாயனாரின் கொடைத்திறத்தையும் கண்டுய்க.

மாதர்கள் கற்பு நிலைமையை தெரிந்துக்கொள்ள கல்வி முக்கியமானது பூர்வீகத்தில் நமது தாய்மார்கள் கல்வியில் சிறப்புற்றிருந்தார்கள். ஔவையார், நாயனார் மனைவியாகிய வாசுகி யம்மையார், பூதப்பாண்டியன் தேவியார், பெருங்கோட்டப் பெண்டு சைவ எல்லப்ப நாவலர் தேவியார், அதிவீரராமபாண்டியன் மனைவியார் முதலானவர்களும், உமாபாதபங்கசாட்சியார் பாரிமகளிர், பேய்மகள் இளவெயினி, வெறிபாடிய காமக்கண்ணியார், நீலகேசி, வீணாகாண' புரக் கோண நாயகி யம்மையார் வித்தியாகுரோசம் அஞ்சனாக்ஷி' சண்பகவடிவிதேவியாகிய இன்னும் கணக்கற்ற பேர்கள் கல்விகற்றுத் தேர்ச்சியடைந்திருப்பதாக தெரியவருகிறது. கல்விக்கு அதிதேவதையாகிய சரஸ்வதியே பெண்பால் அல்லவோ ஆதலின் நமது முன்னோர்கள் வழக்கம்பற்றி தற்காலம் நாமும் நமது சகோதரிகளுக்கு இந்துபாஷையை மேன்மேலும் கற்றுக்கொடுக்கலாம். ஆனால், இக்காலத்து பைபில் பெண்களிடத்தில் நமது பெண்களை கல்வி பயில

விடப்படாது. அந்தோ அதனால் வரும் கெடுதிகள் கணக்கற்றது. உற்றார், பெற்றார், சுற்றத்தார் முதலானவர்களையும் இழந்து ஜாதி பிரஷ்டமாகி அன்னிய மதத்தைச் சார்ந்து குடிக்கும் குலத்திற்கும் நமது நாட்டிற்கும் விரோதமாவதுந் தவிர சாட்சாத் இறைவனுக்கே பெருந்தீங் கிழைத்தவர்களாகிவிடுகின்றனர் ஆதலின் எந்த முகாந்திரத்தைக்கொண்டும் அவர்களிடத்தில் கல்வி பயில ஒருபோதும் விடப்படாது. நமது சகோதரிகளுக்கும் பெண்குழந்தைகளுக்கும் நமது சுயபாஷையைத்தவிர அன்னிய பாஷையைக் கற்றுக்கொடுப்பதைக்காட்டிலும் மடமை வேறெதுவுமில்லை. அன்னியபாஷை எதற்காக நமது சுயபாஷையிலேயே எல்லாவற்றையும் தெரிந்துக் கொள்ளலாம். நமது சுயபாஷையே அறம், பொருள், இன்பம், வீடு முதலிய புருஷார்த்தங்களை போதிக்கக்கூடியது கற்பைப்பற்றியும் இல்லற விவகாரத்தைப்பற்றியும், ஒழுக்க வழக்கங்களைப்பற்றியும், ஞானமார்க்கத்தைப்பற்றியும், தத்துவங்களைப்பற்றியும் இன்னும் நாம் என்ன அறியவேண்டுமோ அவைகள் ஒன்றுவிடாமற்படிக்கு தெரிந்துக்கொள்ள நமது தாய்பாஷையில் பரக்கயிருக்கின்றது. அப்படியிருக்கும்போது நாம் ஏன் அன்னியபாஷைகளை நமது பெண் மக்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். நமது பாஷையைப்போல் பிற பாஷைகள் அநாதியா யுண்டானதில்லை எல்லாம் இடையில் வந்தவைகளே. இதற்கு நிகர் எதுவுமில்லை ஆராய்ச்சிக்காரர் துணிபும் இதுவே ஆகையால் தாய்பாஷையைத்தவிர அன்னிய பாஷையை எந்த காரணத்தைக்கொண்டும் நமது பெண்குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்படாது. நமது தாய்பாஷையை ஒவ்வொருவரும் கற்க வேண்டிய தவஸியம் என அறிவாயாக.

கடின சித்தமுள்ள சில புருஷர்கள் தன்பத்தினிமார்களை வேலைக்காரிகளைப்போல் நடக்கிறார்கள் பெண்கள் புருஷன்மாரிடத்தில் எவ்வளவு பக்ஷமாய் நடக்கிறார்களோ அதேமாதிரி மனைவிமார்களிடத்திலும் புருஷன் நடந்துக்கொள்ளவேண்டும் வீட்டு விவகாரங்கள் யாவுக்கும் மனைவியே தலைவியாயிருக்கவேண்டுமே யொழிய இதறகு புருஷாள் தலையிட்டுக்கொள்ளக்கூடாது ஆனால் மேல் பார்வை வைக்கவேண்டும் தனது சுகத்தில் மனைவிக்கு பாதி பகர்ந்துவிடவேண்டும் சிலர் சுயநலத்தையே பாராட்டுகிறார்கள். மனைவியை தன் சௌகரியத்திற்காக பணிவிடை செய்யவந்த வேலையாளாக மதிக்கிறார்கள். போஜனாதி விடயங்களிலும் தனக்கு ஒரு மாதிரியும் மனைவிக்கு ஒரு மாதிரியுமாக நடை பெறுகிறது அந்தோ

இந்த கொடிய அக்கிரமத்தை பஞ்சமாபாதகங்களில் ஒன்முய் வைக்கலாம், பாணிக்கிரஹணகாலத்தில் என்னுடைய சுகதுக்கங்களில் பாதியிவளுடையது என்று தேவர்கள் முன்னிலேயில் வதுவையில் சொல்லி கலியாணம் செய்த மனைவியை இவ்வித அக்கிரமத்திற்குள்ளாக்கலாமா அவர்கள் மனமெறிய உண்டுகளிப்பது போஜனமாகுமா தான் சாப்பிடுவதைப்போலவே சற்றேனும் குறைவுபடாமல் அறுசுவை அன்னம் வைத்து நடத்தவேண்டுமல்லவா இவையாவும் தெரிந்து அவர்களிடத்தில் இனிமையாகவே இருக்கவேண்டும். ("மாதற்கினிமை" என்றுஆன்ரோர்கள் கூறியிருப்பதை இவ்விடத்து கவனிக்கத்தக்கது) எப்போதும் அவர்கள் மனம் சந்தோஷமாகவே இருக்கவேண்டும் அவர்களை எக்காலத்தும் அடித்தல் என்ற விஷயத்திற்கே போகப்படாது, இதுகளை அறிந்து புருஷாள் நடக்கவேண்டும்.

ஸ்திரீகள் தாயார்வீட்டில் எவ்வளவு நல்லமாதிரியாக யிருந்திருப்பார்கள் தாய், தந்தை, அண்ணன், தம்பி, தமக்கையார் முதலிய பந்துக்களைப் பிரிந்து புருஷனே கதியென்று வந்தவர்களை வஞ்சனை துரோகம் முதலிய குற்றத்திற்கு உட்படுத்தலாமா இதை கொஞ்ச நேரமாவது சிந்திக்கவேண்டாமா பத்துமாதம் சுமந்து கஷ்டப்பட்டு பெற்றெடுத்து ஈ, எறும்பு, நாடாமல் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்த்து தனக்கில்லாவிட்டாலும், அதன் மனதிற்கு திருப்தியாய் நடந்துக்கொண்டு அதன் நன்மையையே கவனித்து அதன் சௌகரியத்திலேயே கண்ணும் கருத்தும் வைத்து நடத்தி அதற்கு வேண்டியதை அதன் மனங்கோணுமல்படி தன் சக்திக்கேற்றவாறு முடித்து உபசரணையோடு வைத்திருந்த தாயைப் பிரிந்து புருஷனுடன்கூடவந்த பெண்மக்களை கடினமாக நடத்தலாமா இது தருமமாகுமா, நியாயமாகுமா, தன்குலத்திற்கு ஒழுங்காகுமா, தனக்கில்லாவிட்டாலும் அவர்களை கவனிப்பதன்றே தருமம் நியாயம் ஒழுங்கு என்று சொல்லப்படும், சிலர் மனைவியர்களின் மேல் சுல்ப குற்றத்திற்கெல்லாம் மனத்தாங்கல்வைத்துக் கொள்கிருர்கள். இதுவும் கண்டிக்கக்கூடியவிஷயமே, நண்பர்களே நன்கு உணர்வீர்களாக. மனைவியர் மனக்கஷ்டப்பட நாம் ஒருநாளும் நடந்துகொள்ளப்படாது அதேமாதிரி புருஷன் மனக்கஷ்டப்பட மனைவியர் நடந்துக்கொள்ளப்படாது இல்லறச்சகடமாகிய நம்வாழ்க்கைக்கு புருஷன் மனைவி என்றஇரண்டு சக்கரங்களும் மனமொத்து நடந்தால்தான் சகடமானதுசேர்பட ஓடுமென்றதை ஒவ்வொரு இல்

வாழ்பவராகிய சதிபதிகள் அறிந்து, சிந்தித்து, கருத்தூன்றி ஆராய்ந்து நடக்கவேண்டுமாறு பிரார்த்திக்கப் படுகிறது.

கற்புள்ளமாதர்கள் தங்கேள்வரையும் தம்மக்களையும் சுற்றத்தாரையும் விருந்தினரையும், மாமி மாமன்மாரையும் யாதொரு குறையின்றி மேன்மையாய் நடத்துவார்கள். இப்படிப்பட்ட கற்புள்ள மாதர்கள் வசிக்கும் வீடே இந்திரலோகத்திற்கு சமானம். அன்றேல் கடும்புலிவாழுங் காட்டிற்கு சமானமாம்.

வெண்பா.

மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

மேல் கூறியவண்ணம் கற்பமைந்த அரிவையர்களை அடைவதன்றோ பாக்கியம்.

... எல்லாம் முற்பவத்தில் செய்தவினைக்கீடாக வந்துக்கூடுமாதலின் இப்பவத்தல் நம்மன சாக்ஷிக்கு விரோதமின்றி நடந்தால் மறுபிறப்பிலாகிலும் சுகமாய் வாழலாம், அன்றேல் இப்பிறவியைக் காட்டினும் இன்னும் கீழ்க்கே போகவேண்டி வரும். அப்படி கீழ்படிக்குப் போய் விட்டால் மறுபடியும் தற்போது அடைந்திருக்கும் நிலைமைக்குவர எந்தகாலமோ, அதை வரையறுத்து யாராலும் கூறமுடியாது நாம் இப் பவ (ஜனன)ப் பிணியை ஒழிக்க வேண்டுமாயின் நம்மால் நமது மனசாக்ஷிக்கு விரோதமன்னியில் ஆகாமியம் என்ற ஆசையை ஒழித்து நடந்து வந்தால் இறைவன் சில பிறவிகளுக்குள் நம்மை நல்வழிப்படுத்தி மோக்ஷமென்னும் பதவியை கொடுத்து ரக்ஷிப்பார்.

ஆகையால் நாம் நன்னடைக்கையுடையவராய் நடப்பதும் தவிர நிராசையுள்ளவனுயு மிருக்க வேண்டும் என அறிவாயாக.

சுலோசனு:—உல்லாசமாய் காலங்கழித்த புருஷரேறே தாங்கள் இது பரியந்தம் கூறிவந்த இன்பவிஷயங்கள் யாவற்றையும் கேட்டு ஆனந்த பரவசமானேன்; ஆயினும் இவைகள்யாவும் அநித்தியமே நித்தியமாக உள்ள பரம்பொருளை அடைய வேண்டுமாயின் அதற்கு மார்க்கம் கூறியருளல் வேண்டும் மேல் கூறிவந்த யாவும் இதற்கு நிகரில்லாத விடயங்களாகையால் அவசியம் விவரப்படும்படி கூறியருளல் வேண்டும்.

மாதரைப் பழித்தல்

வசந்தன்:—ஞானமார்க்கத்தை கேழ்க்க விரும்பிய காதலி நான் பூர்வீகத்தில் என்ன புண்ணியம் செய்தேனோ அறிகிலேன் எவ்விதமான அருமைவாய்ந்த கேள்விகளை எல்லாம் கேழ்க்கின்றனை, இது விடயத்தில் வியப்புற்றேன் அதிசயம் கொண்டேன் ஆனந்தமடைந்தேன் பரவசமானேன் உனதுவினாவுக்கு விடைபகருகின்றேன் கோட்டீஸ்வரப் பிரபுவாகிய பட்டிணத்தடிகள் ஒரு நிமைப் பொழுதில் தன் திரவியங்களை எல்லாம் யாவரும் இரும்பூதடையும் வண்ணம் விலக்கி சுற்றத்தாரையும் தாயாரையும் துறந்து வெளிவந்த திருவெண்காடர் தாம்கூறிய நான்காவது அகவல் ஒன்றே போதுமானது நினது கேள்விக்கு ஆயினும்இவையும்மற்றவையும் கூறி விடையத்தை முடிப்பாம்.

கச்சித் திருவகவல்.

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானிடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும்
மானுடற் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுடை நாறுங் கிடுநிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமும் ஜலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்து முன்னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற உலர்ந்துள் ளூறுங்

நருவார்க் கிடமாய் நாற்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தை மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றாய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியும் நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்து கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையுமெண் ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்கத் தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்து சீப்பாயும்
காமப்பாழி, கருவிளை கழனி
தூமைக் கடைவழி தொலைபெறு வாசல்
எண்சா ணுடம்பு மிழியும் பெருமழை
மண்பாற் சாமங் கழிக்கு மறைவிடம்
நச்சுக் காமுக நாய்நா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் திருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலை பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி
உண்ணீர் பாயு மோசைக் கெழும்புண்
மூல்கொண் டழியா மாந்தர் புகும்வழி

நோய்கொண் டொழியா துண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செறுக்கிய காமுகர் சேறுஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாசற் கருகே
சலஞ்சொரிந் திழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமும்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

என்று கூறியதற்கிணங்க இல்வாழ்க்கையை ஒழித்து பரத்தின் மேல் மனதை நிறுத்தி ஞானமார்க்கத்தை அடைய வேண்டும் இவ்விதம் சொன்னோமென்று இல்வாழ்க்கையை துறந்து காட்டிற்கு சென்று கடுந்தவம் செய்யவேண்டுமென்ற கருத்தன்று இல்வாழ்பவர் இல்லற வாழ்க்கையிலிருந்தே மோக்ஷத்தை அடையவேண்டுமென்ற கருத்தாகும் எப்படி யெனின் இல்வாழ்பவர் இல்லறவாழ்க்கை என்ற சேற்றினில் அழுந்தி மனைவியின்மேல் அதிககாதல் கொண்டு அவள் சுகமே மோக்ஷமென்று கருதி முள்ளினுங் கல்லினுங் கரடு முரடான இடங்களில் நடந்து செல்லக்கூடிய காலைப்பார்த்து செம்பஞ்சைப் போன்ற அவ்வளவு மிருதுவான காலை உடையாளே! நீ மிகவும் நடப்பதினால் பாதம் வாடி நின்றதோ கஷ்டப்பட்டதோ என்று சொல்லியும் பார்வைக்கு விகாரத்தோற்றமுடைய வெள்ளெலும்பால் கூடிய கணைக்காலைப்பார்த்து பார்வைக்குரமணீகரம் கொடுக்கக்கூடிய விதமாக துள்ளித்துள்ளி ஓடும் வரால் என்று சொல்லிபோற்றியும் மேற்கூறிய விதமான எலும்புகளாலும் சுத்தி செய்யாவிட்டால் நாற்றம் வீசக்கூடிய தசை பெரும்பாலும் சேர்ந்து திரண்டு கிடக்கும் துடையைப்பார்த்து ஆ என்ன குளிர்ச்சி என்ன மெதுவு எவ்வளவு மிருது இதையன்றோ வாழைத்தண்டு என்று சொல்லவேண்டும் இது கிடைத்தாலல்லவா நாம் கைலாயம் போய் சேர்ந்தமாதிரி என்றுசொல்லியும் பெரியஉடலைத்தாங்கி சுமந்து எக்காலமும் அவஸ்தைப்பட்டு கஷ்டத்திற் குள்ளாயிருக்கும் இடையைப்பார்த்து உடுக்

கையைப்போன்ற இடையென்றும் மெல்லிய நூலைப்போன்ற இடையென்றும் சித்திரம் எழுதப் புகுவோராகிய ஓவியர்களிடத்தில் இவ்விதமான இடையை யெழுத அன்னவர்களிடத்திலும் கூட இதற்கு தக்கனமாதிரி மிகவும் சிறியதாகிய எழுதுகோல் கிடையாதென்று சொல்லித்துதித்தும் யாவரும் வெறுக்கக்கூடிய மலங்களும் சிறுநீரும் நிறைந்து கிடக்கும் குட்டையாகிய வயிற்றைப்பார்த்து உலகரக்ஷகராகிய விஷ்ணுபகவான் பிரளயகாலத்தில் படுத்துறங்கிய ஆலிலைக்கு நிகரென்றும் சிலந்தி போலத்துளிர்த்து முன்னுக்கெழுந்து வட்டமாக திரண்டு பூரித்து இரத்தக்கட்டியாகி, இவ்விதமான இரத்த தசைக்கட்டியை நகத்தால் கீற சீழும் இரத்தமும் ஒழுகி பிறகு காய்ந்து, வாடி, கருத்தூன்றி நோக்குபவர்க்கு நகைப்புக்கிடமாய் நாற்றமுண்டாகி கடைசியாக வற்றி துவண்டு தொங்கி கேவலமாகக்கூடிய ஸ்தனத்தைப் பார்த்து பிரமித்து மயங்கி சோர்ந்து இளகி வாடிநின்று ஆ இதுவன்றோ என்னைப்போன்ற இளைஞோரையும் மற்றவர்களையுங்கூட எதிர்த்து மருட்டுகிறது, இதின்குணம் எவ்விதமாக யிருக்கிறது. உருவோ? பார்ப்போர் சொக்கும்படி செப்புக்குடத்தைப்போலும் கோமள மலையைப்போலும் தாமரை மொக்கைப்போலும் தேமல் படர்ந்து உருண்டு திரண்டு இருக்கிறதென்றும், நீட்டவும் முடக்கவும் பொருள்களை வாங்கவும் கொடுக்கவும், ஊட்டவும் பிசையவும் முதலான காரியங்களை செய்யும் கையைப்பார்த்து எவ்வளவு மிருதுவானது தாமரைக்கு நிகராக இருக்கின்றதே அந்தவிதமான கையானது எனது திரேகத்தின்மேல் சதா பட்டுக்கொண்டிருக்காதா என்று நினைத்தும் வேர்வையும் வேர்வையால் உண்டாகக்கூடிய அழுக்கும் நிறைந்து படிந்து கிடக்கும் கழுத்தை பூவுலகினில் இனிமையாகிய கமுகென்று சொல்லக்கூடிய பாக்குமரத்தைப்போ லிருக்கிறதென்றும் அந்தோ! நாற்றம் வீசக்கூடியதும் ஊத்தையும் நிறம்பவுள்ள வாயை பவளத்திற்கு நிகராய் சிவந்து பரித்து சாப்பிடக்கூடிய விதமாக யிருக்கிறதென்றும் சாதத்தையும் பதார்த்த வகைகளையும் மென்று ஜீரணகருவிக்கு சற்று சுலபமாக யிருக்கும்படிக்கு பதம்செய்து அனுப்பும் பற்களை மாலையைப்போல் கோர்த்த முத்துக்கோர்வை என்றும் நீரும் சளியும் இருந்திருந்து ஒழுகிக்கொண்டிருக்கும் மூக்கைக் குமிழம் பூவென்று சொல்லியும் தண்ணீரும் பீளையும் கழித்துக்கொண்டிருக்கும் கண்ணைப்பார்த்து கழுநீர் பூவென்றும் குரும்பி வெளிவரும் காதை வள்ளையிலை என்றும் தண்டென்றும் சொல்லி ஆசிகூறியும் எண்ணெயைப் போட்டு சிக்கெடுத்து சீர்படுத்தாது விடின் பேன்கள்

நிறைந்த (தலையோட்டினில் முளைத்தெழுந்த சிக்குகள்போட்டு) வெளுத்தமயிரை நெறிக்கி சூல்கொண்ட மேகத்தைப்போல் கருநிறம் வாய்ந்த அளகாபார முடையவளென்றும் இன்னும் பலபலவிதமாக உருப்புகளுக்கு உபமானம் செய்துக்காட்டி தனது ஆசையை மென்மேலும் விருத்திசெய்து துதித்து அவர்களே தெய்வமென்றும் அவர்களிடத்தில் அனுபவிக்கக்கூடிய அற்பசுகமாகிய சிற்றின்பமே பேரின்பமென்று நினைத்து தசையாலும் தோலாலும் நெருங்கி விஷம் கக்கக்கூடிய நரகவாயிலாகியும் காமம் என்ற ஆசையை உண்டாக்கக்கூடிய சாகரமும் சிசுக்கள் உற்பத்தியாகக்கூடிய கழனியும் எண்சாணுடம்பு வெளிவரும் பெருவழியாகியும் துற்கிருத்தியங்கள் வெளிவரும் மறைத்துவைத்திருக்கிற மறைவிடமும் பரத்தின் உண்மையான அடியார்கள் அல்லாத மற்றவர்கள் நாய்க்கு வீடென்று காமுகனாகியவர்கள் சதா நினைவுகொண்டு ஏக்கமுறக்கூடிய பெருவழியும் எந்த நாளும் ஆறுதபுண்ணென்று பதினாறு முழமுள்ள புடவையால் மூடியும் சிறுநீர் வெளிவரக்கூடிய சிறுநீர்க் காவாயும் காமமயக்கம் கொண்டு நல்லது கெட்டது என்று அறியாதார் புகுந்து சீர்குலையும் வழியும் அறியாததன்மையால் நோய்வருவித்துக்கொள்ளும் புத்தி நுட்பமில்லாதவர் போகக்கூடிய வழியாயும் கெர்வங்கொண்டும் வீண் குதர்க்கங்கள் பேசும் காமுகர் அடையும் படுகுழியாயும் சிறுகுழியாயும், ஆணும் பெண்ணும் பிறக்கும் பெரியவழியாயும், மலம் வெளிவரக்கூடிய ஆசன வாய்க்கருகே சலம் வெளிவரக்கூடிய வழியாயுமிருக்கக்கூடிய பெண்குறியிடத்தில் ஆசைவைத்து கெட்டு பவப்பிணியை மென்மேலும் விருத்திசெய்யாது,

"மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கு மாசையினைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுங் கதி"

என்ற வெண்பாவிற்கிணங்கி மாதர்களின் மேல்வைத்திருக்கும் வரைகடந்த அன்பை யறவொழித்து இல்லறமென்ற சாகரத்தில் தாமரையிலையில் தங்கிய தண்ணீரைப்போலும் புளியம்பழத்தின் ஓட்டைப்போலும் சேற்றினில் காந்துறையும் பிள்ளைப்பூச்சிபோலும் பற்றற்று கந்தமூலாதிகள் கலந்துபுசித்த அன்னங்கனியாயினும் கக்கிவிட்டமாத்திறத்தில்எவ்வளவு வெறுப்புதோன்றுகிறதோ அதுமாதிரி வெறுத்து இல்லறத்திலிருந்தே சாதியற்று குலமற்று பிறப்பு யிறப்பு என்ற பவவினையற்று பந்தமற்று உருவற்று நாமமற்று மானிடர்களுக்குண்டா

இயது எதுவுமின்றி எல்லாவஸ்துவுக்கும் எந்தயிடத்திலும் நீங்காமல் நிறைந்து நிற்கும்சோதியாகிய வெட்டவெளியாம் பரம் பொருளின்மேல் மனதைநாட்டி இல்லறதருமமாகிய பிறரிடத்தில் மிகவும் அன்பாக யிருத்தலும் தனது வீட்டிற்கு வந்தவிருந்தினரை எந்த விதத்திலாயினும் மனங்கோணுது உபசரித்தலும் கடின மாகவும் முரட்டுத்தனமாகவு வார்த்தையாடாது யாராயிருப்பினும் இனிமையாகவும் தாழ்ந்தகுரலோடு பேசலும் பிறர்செய்தநன்றியை தன்னுயிர் உள்ளளவும் மறக்காது சமயம் வரும்போது பதில்நன்றி செய்தலும் உபகாரம்செய்யும் காலத்து யீடெக்கீடு என்று கருதாது சதா பிறருக்கு உபகாரபுருஷனையும் தான்செய்த நன்றியை அந்த நிமிஷமே மறந்துபோகவும் ஒருதலை பக்ஷமாகபேசாது நடுவுநிலைமையினின்று சற்றேனும் வழுவாது "தானடங்க தன்குலமடங்க" என்ற மூதுரைப் படி அடக்கமாகவும் பிறர்பார்த்து மெச்சிக்காத விதமாக வீண்டம்பமாக நடந்துக்கொள்ளாதும் ஒழுங்கீனமில்லாது ஒழுக்கமுடையவனாகவும்,

"ஆதத மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே" (திருமந்திரம்.)

என்றபடி செடிதனில் காய்ச்ச பலாவின் சுளைகளானது வீட்டிலிருக்க முக்கனியி லொன்றாகிய இதை உண்ண மனமில்லாமல் யாவரும் வெறுக்கக்கூடிய உருசியில்லாத முள்ளினும் கல்லினும் சென்று எடுக்கக்கூடிய கேவலமாகிய ஈச்சம்பழத்தைச் சாப்பிட பிரியப்படுவதைப்போல் தன் மனையாளை தன்வீட்டில்விட்டு பிறன்மனைவியையிச்சித்து கஷ்டப்பட்டும் துற்குணத்தை ஒழித்து தன் மனையாளிடத்தும் பற்றற்றும் சாந்தமுடையவனாகவும் அக்கம்பக்கமுள்ளவர்கள் நன்றாக வாழ்கின்றார்களே என்ற பொறாமை குணமில்லாமலும் பிறர் பொருளின்மேல் ஆசை வைக்காமலும் பொய்பேசாமலும் சூதுவிளையாடாமலும், லாகிரிவஸ்துக்களை உபயோகப்படுத்தாமலும் பிறவுயிர்களை இம்சிக்காமலும் ஜீவகாருண்ய முடையவனையும் ஒருவன் முன் ஒருமாதிரியும் பிறகு ஒருமாதிரியும் பேசும் புறங்கல் என்றதற்குட்படாமலும் சீர்கெடாமல் வாழவும் வேண்டும் தவிரவும்,

"தீவினைவிட் டீட்டல் பொருள்"

என்றதற்கிணங்க நல்லவழியில் பலமுகாந்திரத்தில் பொருளை சம்பாதித்து,

" கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூறி
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின்பத் தாழ்வார். "

சம்பாதித்த பொருளை அதுகாலத்தே தேவாலய திருப்பணிக்கும் தேவாலயம் சீர்படுவதற்கும் பொருளைக் கொடுத்து ஒழுங்குபடுத்தியும் உண்மைப் பொருளை எடுத்து சொல்லக்கூடிய புராண இதிகாசங்களை கேட்டுவந்து அன்னவர்களுக்கு அவர்கள் மனங்கோணாது பொருளைக்கொடுத்துதவி யாசகர்க்கீந்து நற்கதி அடைய விரும்பவேண்டும்.

இல்லறவாசிகளெனும் நாம் இல்லற தருமமாகிய மேல்கூறிவந்த யாவற்றையும் கடைபிடித்து ஒழுங்குபெற நடப்பார்களாயின், ஆதியந்தமில்லாத ஈசன்றன் திருவைக்குள்ளாகி நாம் கடைதேர்ந்து மோக்ஷமென்னும் சாம்ராஜ்யத்தை அடைவோம். நாமெடுத்துக் கொண்ட இல்லற ஒழுக்கத்தினில் யாதொரு குறைவுபடாமல் சீர்பட நடப்போமாயின் மோக்ஷத்தைக் கொடுப்பது இறைவன்பொறுப்பாகி விடுகிறது. ஆதலின், இல்லற தருமத்தையே செவ்வனேநடத்துவோமாக.

சுலோசனு:—தாங்கள் கூறிவந்த இல்லறதருமத்தைக் கேட்டு மகிழ்ந்தனனாயினும், இன்னும் சற்று விரிவாய் ஒவ்வொரு அங்கங்களையும் சொல்லுவீர்களாகில் மிகவும் நன்மை பயக்குமென எனக்குத் தோன்றுகிறபடியால் தங்கள் சம்மதத்தை எதிர்பார்க்கிறேன்.

வசந்தன்:—சுலோசனா! நீ கேட்டபடியே இல்லற தரும அங்கத்தைச் சிறிது விரிவாய்க் கூறுகிறேன் கேட்பாயாக.

அன்புடைமை.

இல்லறத்தோன் தன்னைப்போன்றவரிடத்தும், செல்வர்களிடத்தும், வறியரிடத்தும் அழுக்காறு கொள்ளாமல் பிரியமுடையவனாயிருத்தல்வேண்டும். தன்னுயிர்போல் மன்னுயிரையும் கருதி நடக்கவேண்டும். எல்லாப் பொருள்களையும் தனக்கே என்று சொந்தம் பாராட்டாமல் பிறர்க்கும் பயன்படுமாறு குரியனைக்கண்ட தாம

ரையைப்போல்முகமலர்ந்து விருப்பத்தோடு உபயோகப்படுத்தவேண்டும். வரைகடந்த அன்பே சிவமென பெரியோர்களால் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வித சிறப்பு வாய்ந்த அன்பை இல்லறவாசிகள் கையாண்டுவரின் இருடிகளாலும் காணக்கூடாத சாக்ஷாத் பரசிவத்தினை அன்பினுள்ளே கண்டு பேரின்பம் அடைவார்கள்.

" அன்பு சிவமு மிரண்டென்பா ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

கண்டேன் கமழ்தரு கொன்றையி னணடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கமலமெ னன்பினுள் யானே." (திருமந்திரம்)

ததீசிமாமுனிவரும் அறத்தின் பகுதியாகிய அன்பு மேற்கொண்டொழுகி மோக்ஷ மடைந்திருப்பதாக திருவிளையாடற் புராணத்துள் இந்திரன் பழிதீர்த்த படலத்தில் கண்டு தெளிக.

விருந்தோம்பல்.

இல்லறத்தோன் தன் மனைவிபாற் விகற்பமில்லாத மனமுடையவனும் மனைவியும் கணவன்பாற் வேறுபாடில்லாத மனமுடையவளாயும் ஒருமித்து அன்போடுக்கூடி தமது இல்லத்திற்கு வந்த விருந்தினரை உபசரித்து,

"மருந்தாயினும் விருந்தோடுண்"

என்ற ஔவை சொற்படி தேவாமிருதத்திற்கு நிகரான உணவாயினும் வந்த விருந்தினரை வஞ்சனை செய்யாமல் அவர்களுக்கும் பகிர்ந்து போசனம் புசிக்கச்செய்து பிறகு இல்வாழ்வோர் புசிக்க வேண்டும். அன்றேல்,

" ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்,
முப்பழமொடுபா லன்னம் முகங்கடுத் திடுவராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே."

மனவிகாரமடைந்து கௌரவத்திற்காகவும் பெருமைக்காகவும் விருந்தினரை உபசரித்தால் யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது. ஆதலின், மனப்பூர்வமாக தனக்குக் கிட்டியவரையில் வஞ்சனையில்லாமல் விருந்தினருக்கு அளித்து புசிக்கவேண்டும். இவ்வித விருந்தோம்பலானது ஐந்து பிரிவினையாக பிரிக்கப்படும்.

அவையாவது:—தென்புலத்தோரை (நமது முன்னோர்களை) ஓம்பல்-இஃதுபுனல் முகாந்திரமாய்ச்செய்யப்படுவது இதனால் நமது முன்னோர்கள் க்ஷேமார்த்த மடைவார்கள்.

2. தெய்வத்தினை யோம்பல்:—இது வேள்வி முகாந்திரமாய் தேவர்களுக்கு அவிர்ப்பாகம்கொடுப்பது இதனால் தேவர்கள் திருப்தி அடைந்து வேண்டிய பொருளைக் கொடுத்து போகாதிகளை அடையச்செய்து ஆசிகூறி மென்மேலும் விருத்தி யடையச் செய்வார்கள்.

3. விருந்தினர்:—பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆகிய இம்மூவர்களுக்கும் மனங்கோணாமல் உபசரித்து உண்ணீர் உண்ணீர் என்று பலவிதங்களாகவும் அவர் மனம்திருப்தி ஆகும்படி புசிப்பிக்கச் செய்தலாம்.

4. சுற்றந்தார்:—உறவினர் தாழ்ந்தகாலத்து அவர்களை அந்த நிலைமையில் இருக்கச்செய்யாது பொருளைக்கொடுத்து காப்பாற்றுதலாம். இவை யிரண்டினாலும் மென்மேலும் விருத்தி யடைந்து யாவருக்கும் நல்லவனாயிருந்து நற்கதி யடைவர்.

5. தான்:—தன் பொருளை நல்லவழியில் சம்பாதித்து வாளாய் துன்மார்க்கருக்கு பயன்படுமாறு வைக்காமல் ஆத்ம திருப்தியாய் உண்டு களித்து நல்ல காரியங்களுக்கு முபயோகப்படும்படி செய்து வைக்க வேண்டும். ஆத்மதிருப்தி என்று சொன்னேமென்று கொலை புலை முதலிய விடயங்களுக்குப் புகுந்துவிடப்படாது. நியாயமான வழியில் ஆத்மதிருப்தி செய்யவேண்டும்.

இல்வாழ்க்கையை மேற்கொள்ளுவது பெரும்பாலும் ஐவகையோரை காப்பாற்றும்பொருட்டே. ஆதலினால், இல்வாழ்வோர் இந்த விருந்தோம்பலை தங்கள் முதல் வேலையாகக் கவனித்து நடக்கவேண்டும்.

“ இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
* வேளாண்மை செய்தற் பொருட்டு” (முப்பானூல்)

---

* வேளாண்மை-உபசாரம்.

இனியவை கூறல்.

சுற்றத்தார், விருந்தினர், நண்பர், பகைவர், தாழ்ந்த குலத்தினர், மற்றுமுள்ள யாவரிடத்தும் பேசுங்காலத்து கடினமாகவும் கோபமாகவும் பெருத்த குரலோடும் படபடப்பாகவும் பேசாது, சாந்தமாகவும் அன்பாகவும் தாழ்ந்த குரலோடும் உண்மையாகவும் நிதானமாகவும் வாஞ்சையோடும் பேசவேண்டும். இவ்விதம் வசனிப்பதற்கே இனியவை கூறல் எனப்படும். மேலே சொன்னவர்களை நாம் எந்தவிடத்தும் எக்காலத்தும் காண நேர்ந்த காலத்து அகமகிழ்ந்து முகமலர்ந்து முகமன்கூறி அவர்கள் செவிக்குக் குயிலின் சப்தம் கேட்பதுபோல் இனிமையாகிய சொற்களுடன் வார்த்தையாடவேண்டும். இத்தகைய இனிமையான வார்த்தைகளை வசனிப்பவனுக்கு கோட்டிமுதல் தொண்டமான்வரையுமுள்ள யாவத்திராளும் மித்திரர்களாகி அதனால் எல்லாச் செல்வங்களும் பெற்று துன்பமணுகாதவனாய்ச்சுகமுற்றிருப்பான் இனிமையாகியசொற்குத்துணையாயிருக்கும் வணக்கத்தையும் சேர்த்து உபயோகப்படுத்த வேண்டும். அன்றேல் பெரியோர்கள் வசைமொழிக்கு இலக்காகி கஷ்டத்திற்குள்ளாவோம்.

செய்நன்றி யறிதல்.

பிறர் செய்த உபகாரத்தை மறவாது தான் பிரதி உபகாரம் செய்வதற்கு எப்போது காலம் கிட்டுமோ என காலத்தை எதிர் நோக்கியவண்ணமாக யிருந்து அக்காலங் கிட்டியபோது பிரதி உபகாரம் செய்வதற்குச் செய்நன்றியறிதல் என்று சொல்லப்படும். பிறர் நமக்கு நன்றி செய்தால்தான் நாம் அவர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்று நடக்கக்கூடாது. மேகமானது ஜலங்களால் பிரதி உபகாரம் வேண்டாது நமக்கு மழையைக் கொடுத்து நன்மைபயக்குகின்றதே, அதுபோல் நாமும் பிரதி பலன் வேண்டாது உதவிசெய்தல் வேண்டும். நம்மால் பிறருக்கு உதவி செய்ய சக்தியில்லாவிடின் இடைஞ்சல் செய்யாமலிருந்தால் அது போதுமானது. இஃது பேருபகாரம் செய்ததற்கு சமானமாம்.

உபகாரம் செய்வோர் நான் அது செய்தேன்; இது செய்தேன் நான் இல்லாவிட்டால் இவ்வளவு மேன்மைக்கு வந்திருக்கமுடியாது.

நான்செய்வதைப்போல் இதுவரையில் யாவரும் செய்ததில்லை என்று வெளிக்கு யாருடனும் சொல்லவும் கூடாது. அன்றேல் அப்பிரயோ ஜனமாகிவிடும்.

நடுவுநிலைமை.

சினேகிதர் என்றும், பகைவர் என்றும், உறவினர் என்றும், அயலார் என்றும், வேற்றுமை பாராட்டி ஒருவர்பால் நட்பும், மற்றவர்பால் பகைமையும் கொண்டு நியாயத்தை அநியாயமாயும், அநியாயத்தை நியாயமாகவும் செய்து காட்டி வீண் குற்றத்திற்குள்ளாக்காமல் யாவத்திரானையும் சமமாக பாவித்து நடத்தவேண்டும்.

அடக்கமுடைமை.

தான் செல்வந்தனாகவும், கல்வியாளனாகவும், தருமிஷ்டியாகவும், பெருந்தன்மை யுடையவனாகவும், விருந்தினரை உபசரிப்பவனாகவும் இருப்பானாயின், தன்னை யறியாமலே செருக்கு உண்டாகிவிடுகின்றது. இந்த செருக்கை கண்டறிந்து அவ்வக்காலங்களில் அடக்கி செல்வத்திலும், கல்வியிலும், தருமத்திலும், பெருந்தன்மையிலும், விருந்தோம்புதலிலும் நம்மைக்காட்டிலும் பதின்மடங்கு மேம்பட்டவர் இருக்கின்றனர். அவர்களுக்கு நாம் எம்மாத்திரம் என எண்ணி அடங்கி ஒடுங்கி தான் இருக்குமிடமும் தெரியாத விதமாக அடங்கி வாழவேண்டும். எவ்வளவு நாம் அடங்கி வாழ்கின்றோமோ அவ்வளவுக்கு நாம் நல்பலனை அடையலாம.

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்." (பொய்யாமொழி)

ஒழுக்கமுடைமையைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறது,

பிறனில் விழையாமை.

அன்னிய ஸ்திரியின்மேல் காதல் வைத்து அதன்பொருட்டு பிரயத்தனம் செய்யாமல் இருப்பதற்கு பிறனில் விழையாமை என்று

சொல்லப்படும். இல்லறவாசிகள் இவ்வித துற்நடக்கையை மேற்கொண்டு நடப்பார்களாயின் பயம், இராஜதண்டனை, பாவம், எமதண்டனை முதலானதற்கு உள்ளாகி ரௌரவாதி நரகங்களை தனக்கு உறைவிடமாகக் கொள்ளநேரிடும். இல்லற தருமநெறியாளர் தன் மனையாளிடத்தில் அனுபவிக்க வேண்டிய சுகபோகங்களை அனுபவித்து இல்லறதருமத்தை செவ்வனே நடத்தவேண்டும்.

சலந்தரன் மனைவியாகிய பிருந்தை என்னும் பெண்ணின்மேல் விஷ்ணு காதல்கொண்டு அவளை வஞ்சித்துப்புணர்ந்தமையினால் அவள் வசை மொழியால் இராமாவதாரத்தில் அவர்பட்டபரடு தெரிந்தவையே ஸ்ரீமந்நாராயணமூர்த்தி ஓர் காரணத்தைக்கொண்டு பிருந்தையின் கற்பை அழித்ததற்கே அவர் பட்டபாடு சொல்லொணாததாயிருக்க, இல்லறவாசிகளாகிய நாம் எம்மாத்திரம்.

"பொற்புறு கணவனைப் போல வந்தெனைப்
பற்பகல் புணர்ந்தனை பஙகவர் மாயையாற்
கற்புடை மனைவியைக் கவர்ந்து போகநீ
சொற்படு பழியினைச் சுமத்தி யாலென்றாள்."

(கந்தபுராணம்)

இதுமாத்திரமன்று பிறன்மனைவியை இச்சித்த கொடியவர்கள் அடுத்த பிறவியில் அலியாய்ப்பிறந்து யாவத்திராளும் இகழ வாழ்வார்கள்.

செம்மை யொன்றின்றிச் சிறியா ரினித்தராய்க்
கொம்மை வரிமுலையர் டோன்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யலியாகி யாடி யுண்பார். (நாலடியார்)

இல்லறவாசிகள் பிறனில் விழையாமையை மேற்கொண்டு ஒழுக வேண்டும். மற்றுமுள்ள பொறையுடைமை, வாய்மை, ஜீவகாருண்யம், அழுக்காறுமை, புறங்கூறுமை, தீவினையச்சம் முதலிய இல்லற தருமத்திற்கு சற்றேனும் மாறுபடாமலும், அதனின் வழுவாமலும் நடந்துவரவேண்டும். இல்லாதபக்ஷத்தில் நரகத்திற்குள்ளாகி கஷ்டப்படவேண்டிவரும். ஆனதினால், இல்லறநண்பர்கள் அடாத காரியங்களை ஒழித்து நடக்கவேண்டும்.

சுலோசனா:—மஹா ஞாபாதிபதியே! சதிபதிகளின்பொருத்தலக்ஷண வைபவங்களைச் செவிவரக் கேட்டதினாலே மானிட ரகவி

மென்பதின் உண்மை பூரணமாய்த் தெரிந்தேன் மனம் புளகாங்கிதமுற்றது. சொல்லற் கருமையாயினும், இகலோக பிராப்தியே யீதெனலாம். இனி, பரலோக பிராப்திக்குரிய ஞானத்தை விளக்கும்படி வேண்டுகிறேன். அடியாள் பேதமையாதலால், சில நினைவில் நில்லாதிருக்கலாம். பின்னும் கேட்க விருப்பம்.

ஞானசாதன நிலை.

வசந்தன்:—தேவேந்திரன் மிகுந்த ஆசையுடையவனும் இந்திராணியெனத்தழுவவருமதிருபவதியே! மனச்சோர்வின்றிபரலோக பிராப்திக்குரியதான ஞானபாலையுண்டு மகிழ்ந்திருக்க வேட்கையுற்றவளாய்த் தன் அமுத வாயைத்திறந் தினியமொழியால் என் செவியிலோதக்கேட்டு அளவுகடந்த ஆனந்தமெய்தினேன் இனி யான் புகலப்புகும் விடயங்களைத் தெளிவாயுணருதி.

இதுவரையில் அகத்திலக்ஷணமாகிய இகலோக சுகபோகங்களை யுணர்ந்து அதன்படிசெவியுற்றுவந்த முறையே, புறத்திலக்ஷணமாகிய பரலோக சுகபோக விஷயங்களை யறிவிப்பதாகும் விஷயமாவது, சுரோத்திராதிய ஞானேந்திரியங்களால் அநுபவிக்கப்படுவது ஞானசாதனம், சற்குருவழியாக நின்று சன்மார்க்க போத விருத்தியடைந்து அகம் புற ஆராய்ச்சியினால் அஞ்ஞானத்தைப் போககி ஆத்ம சொரூபத்தை யறிவிப்பது ஞானமேயாம். சாக்ஷாத்கார ஈஸ்வரமயமா யிருப்பது பதிஞானமென்றும், ஜீவாத்மமயமா யிருப்பது பசுஞானமென்றும், மூன்றின்மயமா யிருப்பது பாசஞானமென்றும் சொல்லப்படும். முற்கூறிய சரியை, கிரியை, யோகங்களைக் கடந்ததே ஞானநிலை. யாவனொருவன் ஞானத்தையடைய விரும்புகின்றானோ அவன் சூரியனைப் போன்றவனால் பாவ இருளை ஒழிக்கக்கூடியவனாகின்றான். அகத்துப் பரிபூரண ஞானமில்லாதார் புறத்துச் செய்யும் வைராக்கியம் நன்கல்லவென்பதற்கு,

"ஞானமில்லாத வயிராக்கி நன்றல்ல
கானவர்க்கு நோவினர்க்குங் கள்ளர்க்கு—மானதுவே
னெங்கிலக்கே நின்றாலே னெவ்விடயத் தோய்ந்தாலென்
றன்னிழப்பே யின்பாக் தலம்."

எனவே ஒழிவிலொடுக்கத்திற் கூறியவண்ணம் அகத்து வைராக்கியமில்லாமற் புறத்திற் செய்யும் வைராக்கியமானது மூலபலாதிகளைப் புசித்தலும், தழையுடுத்தலும், இரவு பகலாகக் காட்டில் சஞ்சரித்தலும், காற்று, மழை, பனி முதலியவைகளைப் பொறுத்தலும் வேடர்களின் வைராக்யமாதலாலும், வனிதாதி விஷயபோகங்களைத் துறந்திருத்தல் விடா நோய்ப்பிணியாளரின் வைராக்கியமாதலாலும், பகையாளர்க்கு அச்சமின்றித் தம் உடலை இகழ்ந்து இருளிற்போதல் திருடருக்குரிய வைராக்கியமாதலாலும் இவர்களது வைராக்கியங்களாய் போத இழப்பும் இன்பமும் இல்லாதாயினபோல் புறத்து ஞான வைராக்கிகளுக்கும் போத இழப்பும் இன்பமும் இல்லையாதலின் வேடர், நோயினர், கள்ளர் முதலானவர் வைராக்கியத்திற்கும் புறத்து வைராக்கியத்திற்கும் யாதொரு பேதமுமின்றாம். அகத்து ஞான வைராக்கியமுடையார்க்கு யாது நிலையில் நிற்பினும், யாது விடயங்களைப் புசிப்பினும் அவற்றையந்தப் பரிபூரண ஞானத்தால் நோக்கி யழித்தலின் அவற்றோடு தாக்கற்று நின்று போத இழப்பும் போத இழப்பால் பேரின்பத்தை யடைவர் என்று முநிபோரால் கூறப்படுகின்றது.

பேரின்பமாகிய பரிபூரண ஞானத்துறவறத்தானன்றி இல்லறத்தானும் அடையக்கூடும். துறவுபூண்டு ஞானத்தை யடையாவிடினும் இல்லறத்திலிருந்தபடி சன்மார்க்கத்தை அடைந்து தானம், ஒழுக்கம், தவம், புகழ், அருள், வாய்மை, அறிவு, புலால் மறுத்தல், கொல்லாமை, பொறுமை, அன்பு முதலான சாத்வீகத்தை யுடையராயிருத்தல் வேண்டும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" (குறள்)

"விலையுறுதி யாசார மொழுக்கஞ் சீலம்
நிறையறிவு கருணைதவ நெறிநி லாயற்
கொலைகளவு கட்காம முதலா யுள்ள
கொடும்பவமே தவமாகக் கொள்ளுந் தீயோ
ருலகிலருஞ் சுவனருணூ லோத லாகா
தோதினுமங் கவருரைகொள் ளொணாது நீலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே."
(சிவஞானதீபம்)

உள்ளபடி தீவினைக் கஞ்சி விலக்கியவை யாவும் விலக்கி அநுசரித்து மோக்ஷத்திற்கேதுவான ஞானவிருத்தியை யடையவேண்டும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய மெனும் பஞ்ச பூதங்களாலாக்கப்பட்டுத் தொண்ணூற்றாறு தத்துவங்களை தம்முளடக்கித் தேகமெனும் ஓர் சிறந்த கூடாக்கி யதில் வாசஞ் செய்யாநின்ற இவ்களப் பொருளை ஞானக்கண்ணினாலன்றி ஊனக் கண்ணினால் பார்க்கக்கூடியதாயில்லை.

பிறவிகளிற் சிறந்ததாயுள்ள மானிடவகுப்பினும் அரிதெனில்,

"ஊமைசெவி டொடுபேடு குருடுகூ னின்றியே யுலகிற்செனித்தலரிதாம், ஒருவப் புன்குலமற வின்றியுயர் குலமதிலுதித்தலதுதனினு மரிதாம், வாய்மைமிகு கல்வியோ டவதரி தாற்செல்வ வாழ்வ ததினு மரிதாம்; வணக்கமு மொழுக்கமு வாய்ப்பதரி தார்தர்ம வாழ்வ ததினு மரிதாம், ஆயினு மத்துவித நெறியுணர்ந் தாசா னனுக்ரகம் பெறுவ தரிதாம், அட்டாங்க யோகமெய்ஞ் ஞானமுங் கிறைந்திடுத லதினுமரி தரிது கண்டாய், காமசிவ காமியபி ராமிமதி சாமியே கற்பகவி ராச மேவுங், கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே கபிலையங் கிரி வாசனே."

என்பதனால் ஞானசாதனம் பெறுவது மேலான கடமையாகும். இம்மானிட ரகஸ்ய சம்சார விடயாதி குணமான்மிய சதிபதிகளின் இலக்ஷண ஞான அமைதிப்படி இன்பந்துய்த் திருப்பாராயின்,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

என்புழி நற்குணங்களை யுடைய மக்களை யுடையவராய், பேரின்பஞானத்தை யடையக் கூடியவராய், சத்புருஷ திலகராய், நல்ல ராசிகளைப் பொருந்தினவராய், சாது வைராக்கியமுடையவராய், வித்வகலை வரப்ரசாதராய், பக்திமுத்தராய், ஞானசிரிய சம்பன்னராய், புகழுடையவராய், மாசிலா மனமுடையவராய், இலக்குமி கடாக்ஷமுடையவராய், மாண்பு மிகுந்தவராய், சித்தி பெற்றவராய், நன்மை பயக்கும் பெரும் பாக்கியங்களை இம்மையிலே யடைவர். இஃதன்றி,

விசேட ஞானம்.

சரீர தேவ சந்நிதானமாயுள்ள நாற்சதுரத்துள் முக்கோண வடிவமைந்த பீடத்தி லாதிவஸ்துவின் திருவருளை யடைவதற்கு ஐம்புலச் சேட்டையை யொடுக்கி மூலாதாரத்தில் மனதை நிறுத்தி ஓம் என்னும் மந்திரத்தை யுச்சரித்து வந்தால் விநாயகக் கடவுள் தரிசனமாவர்.

மூலாதாரத்திற் கருகரான பிரம சந்நிதானமாயுள்ள சுவாதிஷ்டானத்திலே, நாற்கோணமான பதியிலே மனதைச்செலுத்தி நகாரமெனும் மந்திராட்சரத்தை நாடிப்போக பிரமசொரூபதரிசனமாவர்.

சுவாதிஷ்டானத்திற் கருகரான விஷ்ணு சந்நிதானமாயுள்ள மணிபூரகத்திலே, பிறை சந்திர கோணத்திலே மனதைச் செலுத்தி மகாரமெனும் மந்திராட்சரத்தை நாடிச்செல்ல விஷ்ணுபெருமான் தரிசனமாவர்.

மணிபூரகத்திற் கருகரான உருத்திர சந்நிதானமாயுள்ள அனாகதத்திலே, முக்கோண வீட்டிலே மனதைச்செலுத்தி சிகாரமெனும் மந்திராட்சரத்தை நாடிப்போக உருத்திரக்கடவுள் தரிசனமாவர்.

அனாகதத்திற் கருகரான மஹேஸ்வர சந்நிதானமாயுள்ள விசுத்தியிலே அறுகோண தலத்திலே மனதைச் செலுத்தி வகாரமெனும் மந்திராட்சரத்தை நோக்கிச் செல்ல மஹேஸ்வர தரிசனமாவர்.

விசுத்தியிற் கருகரான சதாசிவ சந்நிதானமாயுள்ள ஆக்கினை தலத்திலே வட்டவீட்டிலே மனதைச் செலுத்தி யகாரமெனும் மந்திராட்சரத்தை ஜெபித்து நோக்கிடில் சதாசிவன் தரிசனமாவர்.

ஆறுதாரத்தினும் ஆறு வீடுகளும் தெய்வங்களுக்குரிய சத்தி மகத்துவமும் 'ஓம் நமசிவய' எனும் நகார, மகார, சிகார, வகார, யகார வெழுத்துக்களின் முறையே 11, 10, 8, 19, 3 ஆக ஐம்பத்தோராட்சர லக்கங்களாகவும் காண்பர்.

"ஆமப்பா பிரம்மனுடன் மாலும்ருத்ரன் அதற்குமேல் மயேஸ்வரனுஞ் சதாசிவன்தான் கேளும், ஓமப்பா ஐந்துபேர் தனக்கும்பாரு ஓரெழுத்தாய் சடாக்ஷரமா யுதித்தமூலம், தாமப்பா கணபதியே சத்திரூபம், சடாதார பீடமா யாறுமொன்றாய் வாமப்பா விந்துவிலே நாதரூப மகத்தான கன்னியடா சிபிட்டி மாட்டே."

"ஐம்பதெழுத்தே யமர்ந்த வேதங்கள்
ஐம்பதெழுத்தே யாக மாதிகள்
ஐம்பதெழுத்தி னறிவை யறிந்ததன்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத் தாமே,"

இவ்வித தெய்வகோலத்துடன் உடலமானது கட்டுப்பட்டிருப்பதால்,

சிவவாக்கியம்.

"நவ்விரண்டு காலதாய் நவின்ற மவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்த வவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதா யமைந்ததோ ருடலினுள்
செவ்வை யொத்து நிற்குமே சிவாயமஞ் செழுத்துமே."

என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குமிச் சரீர அமைப்பைப்பற்றிச் சிந்தித்து ஞான நிலையை யடையுமாறு இவ்வரிய மானிட ரகஸ்ய சாஸ்திரத்தை இகலோக மஹா புருஷோத்தமருக் குபகாரமாக விருக்கும்பொருட்டும், இல்லறத்தை வழுவாது நடத்தும்பொருட்டும் பெருந் துணையாக நிற்குமென் றறிவாயாக.

சுலோசனு:—பிராணபதி முன்செய்த புண்ணியவசத்தால் உமக்கு நற்றுணைவியாகக் கிடைக்கப்பெற்று இல்லற துறவறத்தினியல்பையும், வேறுபாடுகளையும், ஞான சாதனங்களையும் முறையே கேட்டுவந்ததில் நம்மிருவருக்குமுள்ள குறைவுகளெல்லாம் நீங்கியதுமன்றி அளவற்ற மகிழ்ச்சியும் அடையப் பெற்றோம். இனி எனக்குப் போதித்துவந்த பெருங் கருணையினால் தங்களைச் சற்குருவாகக்கொண்டு பரமானந்த பிராப்தியை யடைய விரும்புகிறேன்.

வசந்தன்:—சுலோசனு! இல்லற ஒழுக்கத்தினின்று முத்தியடைந்த திருவள்ளுவ வள்ளலின் மனைவியாகிய வாசுகியம்மையாரோடு வாழ்ந்திருக்கவும், இனி மறுபிறவிக்காளாகாமல் முத்தியாகிய பரமானந்த சுகத்தில் நீடித்திருக்குமாறும், இப்புத்தகத்தை வாங்கியதன்படி நடப்பவருக்கும் பேரின்பம் வாய்ப்பதாக என்றும் கடவுளை தியானித்துவரத் திருவருளுண்டாகுமாக என்றும் ஞானசாதன நிலையோடு முற்றுப்பெற்றது.

சுலோசனு:—காட்டினில் சென்று கடுந்தவம் புரிந்து யோகம்செய்து பனி, வெயில், மழை முதலானதுகளால் வருந்தி காற்றைப் புசித்து கஷ்டப்படுவோர்க்கும் கிடைக்காத முத்திஸ்தானத்தை இல்லறத்திலிருந்தே அடையக்கூடிய சுலபமான மார்க்கங்களை சொல்லியருளிய என்னுயிர்நாதா! நாம் வீட்டைவிட்டு இவ்விடம் வந்து நெடுநேரம் ஆகிவிட்டது; நான் ஐயுற்றிருந்த யாவற்றையும் நான் செய்த தவப்பலனால் தங்களால் ஐயமற உணர்ந்தேன் தெளிவுகொண்டேன் உமது பொற்பாத கமலங்களில் எனது சிரசுபடவிழுந்து சேவிக்கின்றேன். (சுலோசனு பாதத்தில் விழுந்து சேவிக்கின்றாள்; வசந்தன் ஆசிகூறி எழுப்புகிறான்.)

வசந்தன்:—ஒவ்வொரு விடயமும் ஐயந்திரிபறக் கேட்டுத் தெளிந்த சுலோசனு! நமது வினு விடைகளுக் கிடையே காலம் நம்மையறியாது போய்க்கொண்டே யிருந்து விட்டது; இப்போதோ மணி எட்டுக்கு சமீபமாயிருக்கும். ஆதலால், இல்லம் போய்ச் சேர்வோம் வீணையை எடுத்துக்கொள்.

உடனே சுலோசனை வீணையை எடுத்துக்கொண்டு சந்திரனின் வெளிச்சத்தில் வசந்தன் முன்னாகவும், தான் பின்னாகவும் சென்று வீடுபோய்ச்சேர்ந்தார்கள். சிறிதுகாலத்திற்குள் ஓர் ஆண்மதலையைப்பெற்றுக் கொஞ்சிக் குலாவி ஆனந்தசாகரத்தில் அழுந்தி, இல்லறதருமத்தை செவ்வனே நடாத்தி ஒழுங்குபெற நடந்து வந்தார்கள்.

சதிபதிகளின் மர்மம்

அல்லது

மானிட ரகஸ்ய சாஸ்திரம்

முற்றிற்று.

சதிபதிகளின் மர்மம் அல்லது
மானிட ரகஸியசாஸ்திர அர்ப்பணம்.

இப்பிரபஞ்சவாழ்வை அற்பமாகமதித்துத் தமக்குத்தாமே உள்ள நற்பயனை வருவித்துக் கொள்ளாமல் வீணே தேகத்தைப் பலவந்தப்படுத்தி அதிகாமித்வ மிதபோக துற்பயனை விளைத்து நரகவேதனையையனுபவித்துக் கொள்ளாதிருக்க, நெடுநாளாகக் கண்களைத் திறக்கவொட்டாமல் மூடிக்கொண்டிருந்த பிறவிக்குருடனுக்குத் திடீரென தெய்வ சங்கற்பத்தால் தன்னிருகண்களும் திறக்கப்பட்டுப் பிரகாசம் உண்டானதுபோல் இந்நூலைக்கண்ட ஒவ்வொருவருக்கும் இல்லறத்திலேற்படுந் துன்பங்களொழிந்து பேரின்பத்தையடைவிக்கும். இதனோடு, பெரியோர்கள் வாக்கிய முறைகளைத் தழுவிப் பெரிய தாயுள்ள விடயங்களைச் சுருக்கமாகப் புத்திக்கெட்டியவரையிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், உலகமோசவழியில் நில்லாதபடி பூலோகரகசியம் அல்லது மதிமோசக்களஞ்சியம் எனும் நூலும், மனைவசியஞ் செய்துக்கொள்ளக்கூடிய அந்தரங்க விஷயங்களை அருமையாயெழுதப்பட்ட ஹிப்நாடிஸ மெஸ்மரிசமெனும் வாயுவேக மனைவசியசாஸ்திரமும் அச்சிடப்பட்டு விற்பனையாகிவருகிறது கனவான்களியாவரும் உடனேவருவித்து நன்மையை யடையும்படியாகக் கோருகிறேன்.

இங்ஙனம்,

ஞான காளமுனி.

ஏன் இன்னும் வாங்கி வாசிக்கவில்லை?

எல்லோரும் எதிர்பார்த்திருந்த மஹா அருமை வாய்ந்த

இப்

சீக்கிரம்
வரவழைத்துப் பாருங்கள்
பார்த்து
அதன் கருத்தை
யுணருங்கள்

உணர்ந்து
மோசங்களுக்கு
விலகி நில்லுங்கள்
நின்று தரும
வழியில் செல்லுங்கள்.

எனும்

பூமிமோசக்களஞ்சியம்

மேற்படி புத்தகம் இனிய செந்தமிழ் விகட நடையில் அச்சிடப்பட்டு யிருக்கிற படியால் ஒவ்வொரு குடும்பத்திலும் விருத்தர், குமாரர் பாலர் பெண்கள் முதலி யோர் இடத்தில் அவசியம் இருக்கவேண்டிய ஓர் ஒப்பற்ற நூலாகும் இந்நூல் கையில் இருப்பின் மோசமென்னும் இருள் சூழ்ந்த கடலில் மூழ்காமல் களஞ்சியம் என்னும் இக்கப்பலைக்கொண்டு தரும நெறி யென்னும் கரையை யடைந்து இன்ப மென்னும் கன நிம்மதியுடன் வாழலாம். விபரீத மோசங்கள் 114-அடங்கியதும் சில இடங் களில் அழகிய படங்களும், வெண்பாக்களும் விருத்தங்களும், சேர்க்கப்பட்டிருக்கின் றனம் படிப்போர் மனதை இரமிக்கச் செய்யும். விலை ரூபா 1.

ஹிப்னடிஸம் மெஸ்மரிஸமெனும்

வாய்வுவேக

மனோவசிய சாஸ்திரம்.

இதை வாசித்து வந்தால், இறந்தகாலம், நிகழ்ந்தகாலங்களில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அறிந்துக்கொள்ளவும், நமது முன்னோர்களுடன் பேச வும், பிறர் கண்களுக்கு தோற்றப்படாமல் மறைந்துக்கொள்ளவும், நோய்களை நீக்கும் வகை, ஞான திருஷ்டி நோக்கம், விரலைக்காட்டி தூங்கவைத்தல், தூக் கத்தில் நடிக்கும் விநோதக்காக்ஷி, இப்னடிஸ வைத்தியம், சில்வாய்வு சிகிச்சை, காந்த வைத்தியம், பிராணயாம அப்பியாஸம், நீட்டியகைகளை மூடக்காமல்படி மிருகாதி வசியம், அனேகரை ஒரே முறையில் தூங்கவைப்பது, தீக்குழிபாய் தல், பாட்டுக்கச்சேரி, தூரத்திலிருப்பவர்களை வரவழைப்பது, உயிர்பிரயாணி களை வசியம் செய்தல், ஆஞ்சநேயர் மூலமந்திரமும், உபாசனையும், தரிசனமும், ஆத்மயோக மனோவசியம், ஏகாந்தநிலை கர்மாதி துற்குணங்களைப்போக்கல், பொதுஜென வஸ்யமுறை, மானிடவஸ்யம், வஸ்ய திருஷ்டி பலவகைகள் சுமார் 120 - மர்மவிஷயங்களடங்கியதும், அழகிய விசித்திர விநோத படங்களுடன்,

1-க்கு விலை ரூபா 1 8 0

விலாசம்:—ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன். மதராஸ்.